

# தகவல் அறியும் உரிமையும் ஊடகப் பயன்பாடும்


CPA
Centre for Policy Alternatives

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடு

# தகவல் அறியும் உரிமையும் ஊடகப் பயன்பாடும்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடு

**தகவல் அறியும் உரிமையும் ஊடகப் பயன்பாடும்**

முதற் பதிப்பு : டிசம்பர் 2020

ISBN : 978-955-4746-95-4

**ஆசிரியர் : லயனல் குருகே**

**தமிழ் பதிப்பாசிரியர் : எஸ். சிவகுருநாதன்**

**பக்க வடிவமைப்பு : வாக்யா ரூ**

**வெளியீடு : மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்**

பெட்ரிக் நியூமான் மன்றத்துடன் (FNF) இணைந்து இப்பிரசுரம் வெளியிடப்படுகின்றது. சுதந்திரம் பொறுப்புடைமை என்பவற்றின் விழுமிய மதிப்பீட்டுடன் இம் மன்றத்தின் நடவடிக்கைகள் குவிமையப்படுத்தப்பட்டுள்ளன. புதிய கருத்திட்டங்களின் ஊடாக பெட்ரிக் நியூமான் மன்றம் (FNF) அனைத்து மக்களின் சுதந்திரம், மானுட மாண்பு என்பவற்றுடன் சமாதானமாக வாழக்கூடிய உலகை சிருஷ்டிப்பதற்கு பங்களிப்புச் செய்கின்றது.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் என்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல் மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

| | |
|---|---|
| முகவரி | : 6/5, லெயாட்ஸ் வீதி, கொழும்பு–05 |
| தொலைபேசி | : 011 2370803/4 |
| ∴பக்ஸ் | : 011 2370801/2 |
| இணையதளம் | : www.cpalanka.org |
| மின்னஞ்சல் | : info@cpalanka.org |

# உள்ளடக்கம்

**லயனல் குருகே**

தகவல்களை அறியும் உரிமையும் ஊடகப் பயன்பாடும் 5

**ஜயசிரி ஜயசேக்கர**

தகவல் அறியும் உரிமையும் வெகுஜன ஊடகங்களின் கடமையும் 7

**ராஹுல் சமந்த ஹெட்டியாராச்சி**

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களின் போது 99% சுகாதார விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன. எவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 13

தீர்வு இல்லாத மனித – யானை மோதலுக்கு தீர்வு காண்பதற்காக மில்லியன் கணக்கான பணத்தை வீணடித்த யானை வேலி 21

சமுர்த்தி அரசியல்மயப்படுத்தல்: 1.5 மில்லியன் ரூபாவுக்கு டீசேர்ட் கொள்வனவு ஒப்பந்தம் 29

மூன்று கோடி ரூபாய் செலவு செய்து தயாரிக்கப்பட்ட அம்பலாந்தோட்டை வாந்துருப்ப வீதி தர நிர்ணயங்களுக்கு அமைய உருவாக்கப்படவில்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டம் அனைத்தையும் அம்பலமாக்கியுள்ளது 35

நாட்டில் நெல் தட்டுப்பாடு இல்லை. அரிசி மாஃபியாவின் உண்மைக் கதை 37

**லக்மால் கே. பதுகே**

துறைமுகத்திற்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தை இரகசியமாய் விழுங்கும் இரு கம்பனிகள் 43

**தரிந்து ஜயவர்தன**

சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கும் சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் 51

சுச்சீ பாடசாலை அதிபரின் மரணத்திற்கு கல்வி அதிகாரிகள் பொறுப்புக் கூற வேண்டும் 59

உடற்கல்விப் பணிப்பாளர் முறையற்ற வகையில் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளமை 61

சுற்று நிருபங்களை மீறி அமைச்சர் ரிஷாட்டுக்கு மேலதிகமாக 7 வாகனங்கள் 63

**பிங்குன் மேனக/தரிந்து ஜயவர்தன**

சிங்கராஜ காட்டினூடாக அமைக்கப்படும் வீதி பற்றிய உண்மையைக் கண்டறிதல் 65

அமைச்சில் அரசியல் அடிவருடிகளின் பேயாட்டம் 73

**லசந்த த சில்வா**

கூட்டாளிகளுக்கு சொகுசு வாகனம் கொடுத்த வரவு செலவுத் திட்ட சுற்றுநிருபம் 81

**சீ. தொடாவத்தை**

தகவல் உரிமை அதிகாரத்தால் நுகர்வோர் போராட்டமொன்றுக்கு வெற்றி. குடிநீர் போத்தலில் விலை குறிக்கப்பட்ட கதையின் பின்னணி 86

**சாமர சம்பத்**

குப்பை முகாமைத்துவம் வீணாகிவிட்டது 89

**நாமினி விஜேதாச**

பால்நிலை பிரச்சினையின் காரணமாக புகையிரதம் தடம் புரண்டது 93
2015 முதல் லக்விஜயவின் அலகு 1 அரைவாசி நேரமும் வலு குறைந்தேயுள்ளது 95
பிரதம நிறைவேற்று அதிகாரியின் சம்பளம் மீதான தகவலை வெளியிடுவதற்கு ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸின் மறுப்பினை தகவலுக்கான உரிமை ஆணைக்குழு நிராகரித்தது 98
நிலத்தடி நீர் கண்காணித்தலுக்கு பாரிய ஒப்பந்தத்தை டச்சு நிறுவனம் பெற்றது 101
சிரேஷ்ட குடிமக்கள் வைப்புக்கள் : ரூ.22.92 பில்லியனை வங்கிகளுக்கு திறைசேரி கடன்பட்டுள்ளது 104

**சந்துன் ஜயவர்தன**

தண்டவாளங்கள் மீது ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்படுகின்றனர் 106
தொல்பொருளியல் திணைக்களத்தில் உச்சநிலையிலிருந்து அடிமட்டம் வரை ஊழியர்கோப்பின் பாரிய வெற்றிடங்கள் 109
இலங்கையின் சிறைச்சாலைகள் ஊழலின் குகைகள் என அறிக்கை காட்டுகின்றது 114

**எஸ். ரூபதீசன்**

சட்டவிரோத மீன்பிடித்தல் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் உதவியால் சண்டே ரைம்ஸ் அடித்தளத்திற்கே சென்றது 118
ஒரு பில்லியன் ரூபா பெறுமதியான தங்க நகைகள் விரைவில் உரிமையாளர்களுக்கு மீள வழங்கப்படும் 120
தனது பொலன்னறுவைக்கு ரூபா. 25 பில்லியனுக்கு மேற்பட்டதை சிறிசேன உறிஞ்சினார் 122

**சாந்தனி கிரிந்தே**

2012 கொழும்பு கச்சேரி தீ : பொலிஸ் புலனாய்வாளர்கள் இன்னும் தனல்களிலிருந்து சாம்பலை சலித்தெடுக்கிறார்கள். 124
2012 நவம்பரில் வெலிக்கடைச் சிறை படுகொலை பற்றிய அறிக்கை 126

**திலீப் அமுதன்**

ஊடகவியலாளர்கள் மீதான புலனாய்வு அறிக்கைகளை இலங்கை இராணுவம் சேகரிக்கின்றது 130

**பா.நிரோஷ்**

எதுவிதச் செலவும் இன்றி 557 தடவைகள் ஆகாயத்தில் பறந்த மைத்திரி 133
சரணடைந்த புலிகளுக்கு பொறுப்புக்கூற வேண்டியது யார்? 135

**கே. பிரசன்னா**

அமைச்சரின் உணவுக்கும் நிதி ஒதுக்கப்படுகிறதா? 138
கழிப்பிடமாகும் ஹட்டன் பஸ் நிலையம் 141
பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களின் சந்தா பணத்துக்கு என்ன நடக்கிறது ? 144

**செல்வராஜா ராஜசேகர்**

பெருந்தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட வருடாந்த தொழிற்சங்கச் சந்தாக் கட்டணம் பற்றிய தகவலை தொழில் திணைக்களம் வெளியிட மறுத்தது 149

தகவல் அறியும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஒரு சில தீர்ப்புகள் 153
2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டம் 211

# தகவல்களை அறியும் உரிமையும் ஊடகப் பயன்பாடும்

தகவல்களை அறியும் உரிமை பற்றிய கலந்துரையாடல் 2016 வரை நீடிக்கப்படுகிறது. ஆனால், சகல மனிதர்களுக்கும் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு தகவல்கள் அவசியமாகும். ஆளுகையின் போது தகவல்கள் மக்களுக்கு அத்தியாவசியமாகும். பொதுமக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்படும் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளும் அரச அதிகாரிகளின் சேவைகளை மீண்டும் கேள்விக்குட்படுத்துவதற்கும் மக்களுக்கு உரிமையுண்டு.

இலங்கையின் தகவலறியும் சட்டம் பற்றி நாட்டின் அனைத்து மக்களும் அறிந்த ஒரு விடயமாக நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறாயினும் செயற்பாடு கொண்ட ஒரு பிரிவினருக்கு இது பற்றிய ஓரளவு புரிதல் உண்டு. மக்களின் தேவைகளுக்கு ஏற்ப தகவலறியும் சட்டம் பற்றிய கலந்துரையாடல் மெல்ல மெல்ல மக்கள் மத்தியில் ஒரு கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படுகிறது. அவ்வாறாயினும் அது பற்றிய முழுமையான புரிதல் அநேகமான பிரஜைகளுக்குக் கிடையாது. நாம் பல ஆண்டுகளாக பொதுமக்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும், அரச அதிகாரிகளுக்கும், உள்ளூராட்சி அதிகார சபைகளின் பிரதிநிதிகளுக்கும் தகவல் அறியும் உரிமையை எடுத்துக் கூறியுள்ளோம். இப்புரிதலை ஏற்படுத்துவதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பாரிய அர்ப்பணிப்பைச் செய்துள்ளது.

தொடர்ந்தும் இச்சேவையை முன்னெடுப்பதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம். தகவல் அறியும் உரிமை பற்றிய பல சிறு நூல்களையும் துண்டுப் பிரசுரங்களையும் நாம் சிருஷ்டித்துள்ளோம். தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் இச்சட்டத்தின் நடவடிக்கைகளை ஆய்வு செய்வதற்கு சேவையை ஒரு தொலைபேசி சிவில் சமூகத்தைச் சார்ந்த நாமே அமுல்படுத்தி வருகிறோம். அதே சமயம் தகவலறியும் உரிமைச்சட்டம் பற்றி பல வானொலி நிகழ்ச்சிகளை நாம் ஒழுங்கு செய்தோம். தகவலறியும் உரிமைச் சட்டத்தின் தொடர் நடவடிக்கைகள் தொடர்பான பல்வேறு ஆய்வு அறிக்கைகளை நாம் சமூக மயப்படுத்தியுள்ளோம். அதே சமயம் தகவல்களைக் கோரும் இச்செயற்பாட்டினை

தகவலறியும் ஆணைக்குழு வரை பல சந்தர்ப்பங்களில் பொது மக்களின் சார்பில் நாம் மேற்கொண்டுள்ளோம்.

தகவல்களை அறியும் ஊடகப் பயன்பாடு பற்றிய கலந்துரையாடலை நாம் நீண்ட காலத்திற்கு முன்னரே ஆரம்பித்தோம். ஊடகவியலாளர்களில் குறிப்பிடப்பட்ட நபர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி மிக முக்கியமான சமூக நற்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக இதனை நாம் கண் கூடாகக் காண முடிகின்றது. ஆனால், அநேகர் பயன்பாட்டின்போது இச் சட்டத்தை இணைத்துக்கொள்ளவில்லை என்பதையும் காண முடிகிறது. எனவே விரல் விட்டு எண்ணக்கூடிய ஊடகவியலாளர்கள் மேற்கொண்ட முயற்சியை பாராட்டும் வகையில் இந்நூலைச் சிருஷ்டிப்பதற்கு நாம் தூண்டப்பட்டோம். இதன் பொருட்டு பங்களிப்புச் செய்த ஊடகவியலாளர்கள் மிக விருப்பத்துடன் தமது கட்டுரைகளை வழங்கி எம்மை ஊக்குவித்தனர். அதே சமயம் இது தொடர்பான ஒரு முகவாசகத்தை எழுதி இதனைத் தொகுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சிரேஷ்ட ஊடகவியலாளர் திரு ஜயசிரி ஜயசேக்கர அவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

இந்நூலுக்கான கட்டுரைகளை வழங்கிய பத்திரிகையாளர்கள் தமது விடயப்பரப்பினை சிறப்பாக அடையாளம் கண்டமையை காணக்கூடியதாக உள்ளது. ஒரு சில தகவல்களின் ஊடாக ஊழல்கள் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன. அதே சமயம் சமூகத்தில் நிலவும் பல்வேறு சிக்கல்கள் பற்றி பொதுமக்களினதும் ஆட்சியாளர்களினதும் கவனத்தை ஈர்ப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். வடக்கிலும், தெற்கிலும் மலையகத்திலும் உள்ள பல்வேறு பிரச்சினைகளை அவர்கள் மிகச் சிறப்பாக எடுத்துரைத்துள்ளனர். அனேகமான ஊடகவியலாளர்கள் தகவலறியும் உரிமைச் சட்டத்தினூடாக பல்வேறு தகவல்களின் மூலதாரங்களைக் கண்டுபிடித்துள்ளனர். இந்த மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு ரீதியாக தகவல்கள் முன்வைக்கப்படுவதன் மூலம் கட்டுரைகளை வழங்கிய எழுத்தாளர்கள் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களாகவே இருக்கின்றனர். ஏனைய ஊடகவியலாளர்களின் உற்சாகத்தின் மீதும் அர்ப்பணிப்பின் மீதும் இச்சமூகச் செயற்பாட்டை வலுப்படுத்துவதற்கு அவர்களைத் தூண்டுவது ஒரு குறிக்கோளாகும். மும்மொழிகளிலும் இந்நூலை வெளியிடுவதன் மூலம் பரந்துபட்ட ஒரு கலந்துரையாடலை சமூகத்தில் உருவாக்குவது எமது குறிக்கோளாகும்.

இந்நூலின் உள்ளடக்கத்தை மேலும் செழுமைப்படுத்துவதற்கு ஆணைக்குழுவினால், மேற்கொண்ட ஒரு சில தீர்மானங்களையும் தகவலறியும் உரிமைச்சட்டத்தையும் அதனோடு இணைந்த ஒரு சில விண்ணப்பங்களையும் இந்நூலில் இணைத்துள்ளோம்.

இக்கட்டுரைகளை வழங்கிய கட்டுரையாசிரியர்களுக்கும் மொழிபெயர்ப்பாளர்களுக்கும், பல்வேறு வகைகளில் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள். மிகச் சிறந்த பரந்துபட்ட பொதுமக்கள் கலந்துரையாடலை உருவாக்குவதற்கு இந்நூல் பங்களிப்புச் செய்யும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

**லயனல் குருகே**
சிரேஷ்ட ஆய்வாளர்
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# தகவல் அறியும் உரிமையும் வெகுஜன ஊடகங்களின் கடமையும்

தவறற்ற தகவல்களை பெறாத ஒரு தேசம் என்றோ ஒரு நாள் ஏனையோரின் அடிமையாக மாற நேரிடும் என ஹெரல்ட் லெஸ்கி குறிப்பிட்டுள்ளார். எனவே தகவல்களுக்கான உரிமை என்பது அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படும் திறவுகோளாகும். இத்திறவுகோள், அண்மைக்காலம் வரை ஏழு வாசல்களுக்கு அப்பால் ஒரு கூடத்தில், பூட்டுப் போடப்பட்டு 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் மேற்படி திறவுகோள் பொதுமக்கள் மயப்படுத்தப்பட்டது. தற்போது இலங்கையை எந்தவொரு பிரஜையும் இத்திறவுகோளை எடுத்து இதுவரை சாதாரண மக்கள் புகமுடியாதவாறு தடை செய்யப்பட்டிருந்த அலுமாரியை திறந்து அங்கு என்னென்ன விடயங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது என தற்போது கண்டறிய முடிகிறது. மறைக்கப்பட்டுள்ள விடயங்களைத் தேடுவதைத் தொழிலாகக் கொண்டுள்ள ஊடகவியலாளர்களுக்கு இது சிறப்புரிமையாகும் என்பதை புதிதாகக் கூறவேண்டிய அவசியமில்லை.

மேற்படி சட்டம் 2017 பெப்ரவரி 03 ஆம் திகதி முதல் அமுலாக்கப்பட்டது. இற்றைவரை நான்கு ஆண்டுகள் கடந்துள்ளன. இலங்கையின் ஊடகவியலாளர்கள் இத்திறவுகோளை பயன்படுத்தியமைக்கான ஓர் மாதிரியாக இக்கட்டுரைகளின் தொகுப்பைக் கருத முடியும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஊடகத் துறையில் ஈடுபட்டுள்ள ஊடகவியலாளர்கள் ஓர் கருவியாகப் பயன்படுத்தி ஆர்வத்தைச் செலுத்திய ஒரு சில ஊடகவியலாளர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் இத்தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இலங்கை ஊடகவியலாளர்களின் நேரடியான பயன்பாடு பற்றி இத்தகையதோர் தொகுப்பை வெளியிடுவது இது முதன் முறையாகும்.

தகவல்களை அறியும் உரிமை உலகிற்கு புதிய அனுபவம் அல்ல. ஆசிய பிராந்தியத்தை நோக்கினாலும் இது விடயமாக இலங்கை மிக பின்னடைந்த நிலையிலேயே இருந்தது. அயல்நாடான இந்தியா இதுபற்றிய ஒரு முன்னிலை பாத்திரத்தை வகித்தது. அநேகமான நாடுகளில் தகவல்களை அறியும் உரிமையை வென்றெடுக்கும் தேவை பிரஜைகள் மத்தியில் இருந்தே எழுந்தது. இந்தியாவில் தகவல அறியும் உரிமைக்காக, சமூகத்தின் கீழ்மட்டத்தில் உள்ளோரின் ஆர்ப்பாட்டங்கள் பாரியளவில் உருவாகின. இதற்குச் சமாந்தரமாக சமூக அமைப்புக்களும், சமூகத் தலைவர்களும், தொழில்வாண்மையாளர்களும்,

ஊடகத் துறைகளும் இதுபற்றி பாரிய போராட்டங்களில் ஈடுபட்டனர். தகவல்களைக் கோரி நீண்டகாலமாக ஆர்ப்பாட்டம் செய்த பொதுமக்களுக்கே இந்தியாவில் தகவலறியும் உரிமை முதலில் கிட்டியது. தகவலறியும் உரிமையின்றியும் அவர்கள் ஊழல் மிகுந்த நிறுவனங்களைச் சுற்றி வளைத்து, பல நாட்களாக பகிஷ்கரிப்புச் செய்து நடத்திய ஆர்ப்பாட்டங்களின் மூலமே தகவல்களைப் பெற முடிந்தது.

ஆனால், இலங்கையின் அனுபவங்கள் இதைனை விட வித்தியாசமானது. தகவல்களை அறியும் உரிமை சாதாரண மக்கள் மத்தியிலோ அல்லது சிவில் சமூகங்களின் கோரிக்கையாகவோ அமையவில்லை அதே சமயம் 1987 பிரதேச சபைச் சட்டம் போன்ற சட்டதிட்டங்களினால் அரச நிர்வாகத்தின் போது பிரஜைகள் இடையீடு செய்வதற்கு உள்ள மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்களைப் பயன்படுத்தும் கலாசாரம் உருவாகவும் இல்லை. இதற்கு முரணாக கூட்டுறவுச் சங்கங்களைப் போன்ற ஒட்டுமொத்தமாக பிரஜைகளின் ஆட்சியின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் கூட அதிக அளவில் கட்சி அரசியலில் ஈடுபாடு கொண்டவையாக அமைந்தன. பிரஜைகளுக்கு தகவலறியும் உரிமை இல்லாவிட்டாலும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுகின்ற பிரதிநிதிகளுக்கு இவ்வுரிமை இருந்தது. பாராளுமன்றத்தில் விடயத்துறைக்கு பொறுப்பான அமைச்சரிடம் பதிலை எதிர்பார்த்து வினாக்களைத் தொடுப்பதன் மூலம் தகவல்களைப் பெறுவதற்கு அன்று அது பிரபல கருவியாகக் காணப்பட்டது. ஆனால், பா.உ. க்கள் இப்பயன்பாட்டை மிக மட்டுப்பாடுகளுடனேயே பயன்படுத்தினர். பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் பிரஜைகளுக்கோ அல்லது பிரஜைகளின் உரிமைகளுக்காகத் தோற்றும் சிவில் சமூகத்திடமிருந்தோ அது பற்றிய ஊக்குவிப்பு இருக்கவும் இல்லை.

இலங்கையில் தகவலறியும் உரிமை பற்றிய கலந்துரையாடல் ஊடக சமூகத்தை முன்னணியாகக் கொண்ட, அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் பற்றி ஆர்வம் செலுத்திய சிவில் சமூகத்தின் ஈடுபாட்டுடனேயே ஆரம்பிக்கப்பட்டது. அதுவும், ஒரு சில அமைப்புக்களும் தனிநபர்களும் இணைந்தே இம்முயற்சியை மேற்கொண்டனர். வெகுஜன ஊடகச் சமூகம் என்று கூறும் போது இக்கலந்துரையாடல் 1998 இல் ஊடகச் சுதந்திரம் மற்றும் சமூகப் பொறுப்பு பற்றிய கொழும்புப் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு, சுதந்திர ஊடக இயக்கத்தை முன்னணியாகக் கொண்ட சில அமைப்புக்களுக்கு மட்டும், இம்முயற்சி வரையறுக்கப்பட்டது. சுதந்திர ஊடக இயக்கம் ஊடக மறுசீரமைப்புப் பற்றி முன்வைத்த யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு கோரிக்கையின் மூலமே தகவல் அறியும் உரிமை முதன்முதலாக 1994 இல் சந்திரிக்கா குமாரதுங்க அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றிய வரைபு முதன் முதலில் 2003 ஆம் ஆண்டிலேயே தயாரிக்கப்பட்டது. பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட சிவில் அதிகாரிகள், சட்டத்தரணிகள், பத்திரிகை ஆசிரியர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் கல்வியியலாளர்களை உள்ளடக்கிய மேற்படி குழு தயாரித்த ஓர் வரைபிற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த போதிலும், பாராளுமன்றத்தில் அது அங்கீகரிக்கப்படவில்லை. பின்னர் கரு ஜயசூரிய பா.உ. தனிநபர் பாராளுமன்ற உறுப்பினரது பிரேரணையாக இது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டாலும் அது அங்கீகரிக்கப்படவில்லை. பின்னர், 2015 இல் மேலும் முன்னேற்றமடைந்த ஒரு சட்டமாக இது தயாரிக்கப்படுவதற்கும், 2003 இல் உருவான வரைபு அடிகோலியது. (இது பற்றிய விரிவான விவரணம், சட்ட வரைபின்போது

பங்களிப்புச் செய்த சிரேஷ்ட சட்டத்தரணி கிஷாலி பின்டோ ஜயவர்தன எழுதிய சுதந்திர ஊடக இயக்கத்தின் 25வது வருடாந்த நினைவு மலரில் குறிப்பிட்டுள்ளார். நல்லாட்சி அரசாங்கம் தனது பகிரங்கப்படுத்திய நிகழ்ச்சி நிரலில் இருந்து திசை திரும்ப முன்னர், பதவிக்கு வந்து ஓராண்டு காலத்திற்குள் இச்சட்டம் அங்கீகரிக்கப்பட்டு, 2015 பெப்ரவரி 03 ஆம் திகதி அமுல்படுத்தப்பட்டது. ஏற்கனவே, முன்கூட்டியே அமைந்திருந்த ஓர் வரைபு இருந்தமையினாலேயே இது சாத்தியப்பட்டது. அவ்வாறு இருக்காவிடின் நல்லாட்சி அரசாங்கத்தின் உத்தேச அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஏற்பட்ட நிலைமையை இதற்கும் ஏற்பட்டிருக்கும்.

## வெகுஜன ஊடகங்களினதும் சிவில் சமூகத்தினதும் வகைப்பொறுப்பு

இப்பின்னணியை ஞாபகப்படுத்துவது முக்கியமாகும். இலங்கையில் தகவல் அறியும் உரிமையை அர்த்த புஷ்டியாக்குவதற்கும் அதனைப் பாதுகாப்பது தொடர்பாகவும் வெகுஜன ஊடகத் துறைக்கு விசேட பொறுப்பு உண்டென்பது வலியுறுத்தப்பட வேண்டும். ஏனெனில் இந்தியாவைப் போல தகவலறியும் உரிமையைக் கோரிய அதனை தமது முயற்சியால் வென்றெடுத்த உரிமையாகக் கருதும், அச்சட்டத்தின் மூலம் பணியாற்றுவதற்கும் அதனை பாதுகாப்பதற்கும், அர்ப்பணித்த பிரஜைகள் சமூகம் இலங்கையில் இல்லாமையாகும். பிரஜைகள் சமூகம் இதனைக் கோராமலே பெற்ற சிறப்புரிமையாகும். இதன் பெறுமதியைப் புரிந்துகொண்ட பிரிவினர் மிகச் சிலரே. கடந்த நான்கு ஆண்டு காலத்திற்குள் பல்வேறு நிறுவனங்களுக்கு முன்வைக்கப்பட்ட தகவலறியும் உரிமை பற்றிய கோரிக்கைகளை எண்ணிக்கை ரீதியாக ஆராய்ந்து பார்க்குமிடத்து இது தெளிவாகிறது. பண்பு ரீதியாக கவனிக்கும்போதும் இது பற்றிய விளக்கம் திருப்திகரமாக இல்லை. எனவே தகவல் அறியும் உரிமை பற்றி சனசமூகத்திற்கு அறிவூட்டுவதும், அதனை அர்த்த புஷ்டியுள்ளவாறு பயன்படுத்துவது பற்றியும் சமூகத்திற்கு முன்னுதாரணம் வழங்குவது வெகுஜன ஊடகங்களுக்கும் சிவில் சமூக அமைப்புக்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள பாரதூரமான பொறுப்பாகும்.

அதே சமயம் இவ்விரு தரப்பினரதும் செயற்பாடு இன்னுமொரு வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது. அதாவது, தகவல்களை வழங்குவதற்குப் பதிலாக அவற்றை வழங்காதிருக்க நீண்டகாலமாக பழக்கப்பட்டும் பயிற்றப்பட்டும் இருக்கும், அரச சேவையும், தகவல்களை வழங்கும் கலாசாரத்திற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டியுள்ளது. மிகச் சரளமான தகவல் கோரிக்கையிலிருந்து, மிகச் சிக்கலான அல்லது இலகுவில் பெற முடியாத தகவல்கள் வரை பரந்துபட்ட வகையில் கோரிக்கைகளை முன்வைப்பதற்கும், நிறுவன மட்டங்களில் தகவல்கள் வழங்குவது புறக்கணிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மேன்முறையீடு செய்யும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி மேற்படி தீர்மானங்களுக்கு சவால் விடுப்பதும் இதன் மூலம் கருதப்படுகிறது. மேற்படி சட்டத்தின் வாசகங்களின் வலிமையின் கீழ் மாத்திரமல்லாது, அதைப்பயன்படுத்துவது பற்றிய பிரபலமான முன்னுதாரணத்தை வழங்குவதும், இதில் முக்கிய பாத்திரம் பெறுகிறது. இவற்றின் மூலமே தகவல்களை வழங்கும் உரிமை பிரஜைகளின் பலம்வாய்ந்த உரிமையாக உறுதிப்படுத்தப்படுகிறது. உதாரணமாக இலங்கையில் அடிப்படை உரிமைகள் மீது மிகவும் பரந்துபட்ட சக்திவாய்ந்த ஒரு துறையாக அமைவதற்கும் தகவல் அறியும் உரிமை முக்கிய பங்கு வகிக்கிறது. தனிப்பட்ட பிரஜைகளால் இதனை பயன்படுத்துவதற்கு அப்பால் சென்று சிவில்

சமூக அமைப்புக்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் இதனுடைய வெற்றிக்கு காரணமாக அமையும். தகவல் அறியும் உரிமை பற்றியும் ஊடக மற்றும் சிவில் அமைப்புக்களின் பணிகளும் இவ்வாறாகவே அமைகிறது.

தகவல் அறியும் உரிமை அதிகார சபைகளுக்கும் அதிகாரிகளுக்கும் பகைமையாக அமையாது மதிப்பாய்வு செய்வதற்கே காரணியாக அமையும் என்ற வகையில் மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் மேற்கூறிய இரு தரப்பினரும் பங்கேற்க முடியும். குறிப்பாக அழுத்தங்களைக் கருத்திற்கொள்ளாது சட்டத்திற்கு அமைவாக செயற்படுவதற்கு இதன் மூலம் அதிகாரிகள்பலம் பெறுகின்றனர். ஏனெனில் தகவல் அறியும் உரிமை பிரஜைகளுக்கு உரித்தானதாகும். எந்தவொரு சந்தரப்பத்திலும் தமது நடவடிக்கைகள் பற்றிய தகவல்களும் பிரஜைகளின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட முடியும். அழுத்தங்களை நிராகரிப்பதற்கு அவர்களுக்கு அது நியாயமானதும் பலம் வாய்ந்ததுமான விடையாக அமைத்துக்கொள்ள முடியும். இத்தகைய இடையீடுகளை சுலபமாக்குவதன் மூலம் இந்நிலைமையை உறுதிப்படுத்த முடியும். அதே சமயம் முன்னேற்றகரமான தகவல்களை வெளிப்படுத்துவதன் மூலம் அது குறித்து ஆர்வம் செலுத்தும் நிறுவனங்கள் மற்றும் அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடகங்கள் என்பவற்றை உள்ளடக்க முடியும். ஊடகங்களுக்கு பொது அதிகார சபைகளுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் நட்புறவு ரீதியான உறவுகளை மேம்படுத்த முடியும்.

அவ்வாறாயினும், தகவலுக்கான உரிமையை பாதுகாப்பதும் வலுப்படுத்துவதும் சிவில் சமூகமும் ஊடகமும் மாத்திரம் நடைமுறைப்படுத்த முடியாது. சட்ட ரீதியாக மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ள மேற்படி உரிமை நடைமுறை ரீதியாகவும் நிரந்தரமாகவும் மக்கள் மயப்படுத்துவதற்கு இடைப்பட்ட பணிகளும் அவர்கள் மீது சுமத்தப்படுகிறது. தகவல் அறியும் உரிமை பற்றி பிரஜைகளுக்கு அறிவூட்டுவது, தமது தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் சமூகம் தொடர்பான பிரச்சினைகளின் போது தகவலறியும் உரிமையை பயன்படுத்துவதற்கு அவர்களை ஊக்குவித்தல் மற்றும் வழிகாட்டல் என அதற்கு அப்பால் சென்று பிரஜைகளை ஊடக மயமாக்கலின் பொருட்டு அவர்களை ஊக்குவித்தல், தகவல் அறியும் உரிமையைப் பயன்படுத்தி பொது மக்களால் அடையக்கூடிய வெற்றிகளை ஊடகங்களில் அரங்கேற்றுவது, மேற்படி பொதுக் குறிக்கோள்களுக்காக தகவலறியும் உரிமையை பயன்படுத்தும் செயற்பாடுடைய பிரஜைகளை வலுப்படுத்துவது போன்ற நடவடிக்கைகளின் சார்பில் அவற்றை முன்னெடுக்க முடியும். ஏற்கனவே சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் ஊடகங்கள் இதற்கு சமாந்தரமான செயற்பாடுகளை முன்னெடுத்த போதிலும் சமூகத் தேவைகளோடு ஒப்புநோக்கிப் பார்க்கும் போது மேற்படி இடையீடு மிகக் குறைவு என்றே தோன்றுகின்றது.

## நூலின் உள்ளடக்கம்

எனவே தற்போது இப்பின்னணியிலிருந்து கடந்த நான்கு ஆண்டுகளில் தகவல் அறியும் உரிமையை அடிப்படையாகக் கொண்டு ஊடகவியலாளர்கள் மேற்கொண்ட தொழில்வாண்மைச் செயற்பணி மீது மிகத் திறந்த மனதுடன் கவனம் செலுத்த முடியும். ஏற்கனவே குறிப்பிட்டுள்ளவாறு, இந்நூ லில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல் அறியும் உரிமைக்காகப் பயன்படுத்திய சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் தமது பங்களிப்பை செய்துள்ளதோடு சமூக செயற்பாட்டாளர்களும் பங்களிப்புச் செய்துள்ளனர். குறுகிய காலத்தில் கட்டுரைகளைப் பெற நேர்ந்தமை,

கொவிட் தொற்று நிலைமை காரணமாக அலுவலகங்களுக்கு வெளியே தங்கியிருந்து செயற்படும் சில ஊடகவியலாளர்களுக்கு ஏற்புடைய கட்டுரைகளும் மூலாதாரங்களும் உள்ளடங்கிய கோப்புகளில் பிரவேசிப்பது முடியாதுவிட்டாலும் அதற்குக் காரணமான ஒரு சில விசேட கட்டுரைகளை இதன் பொருட்டு பயன்படுத்த முடியவில்லை. எனவே இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள கட்டுரைகளுக்கு உரிய ஆசிரியர்களின் மிகச் சிறந்த கட்டுரைகளாக இவை அமையாது இருக்கலாம் என்பதை முன்கூட்டியே கூறி வைக்க வேண்டும். இக்கட்டுரைத் தொகுப்பு இலங்கையில் தகவல் அறியும் உரிமை தொடர்பான மிகச் சிறந்த உதாரணங்களின் தொகுப்பு எனக் குறிப்பிட முடியாது. உடன்பட்டு வழங்கிய கட்டுரைகள் மாத்திரமே இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இத்தருணத்தில் சேகரிக்கக்கூடிய கட்டுரைகள் மாத்திரமே இங்கு பிரசுரிக்கப்படுகின்றன. எனினும் கடந்த நான்கு ஆண்டுகளில் இலங்கையில் தகவல் அறியும் உரிமைப் பயன்பாடு மூலம் மேற்கொண்ட ஊடகச் செயற்பாட்டின் இயல்பு, அவற்றின் விடயப்பரப்பு மற்றும் போக்குகள் என்பவற்றைப் புரிந்துகொள்வதற்கு இம் முயற்சி மூலம் முடிந்துள்ளது. அதே சமயம் ஊடகவியலாளர்களைப் போலவே ஊடகவியலைக் கற்கும், அதன்மீது ஆர்வம் செலுத்தும் நபர்களுக்கும் இதனை விமர்சன ரீதியாக நோக்க முடியும். அதே சமயம் தமது நடவடிக்கைகளின் போது இவற்றை முன்னுதாரணமாகப் பயன்படுத்தவும் முடிகிறது.

ஒரு தகவலறியும் உரிமைக்கான விண்ணப்பத்தினூடாக அவ்வளவு கடின முயற்சியின்றி பெற்றுக்கொண்ட அறிக்கையின் உள்ளடக்கத்தை வாசகர் முன்னிலையில் அம்பலப்படுத்தும் கட்டுரைகளிலிருந்து நீண்டகாலம் எடுத்து நூற்றுக்கணக்கான தகவல் உரிமை விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து நூற்றுக்கணக்கான பல்வேறு நிறுவனங்களுக்கு அவற்றை அனுப்பி, சில வேளைகளில் நீடித்த மேன்முறையீட்டு செயல்முறையினூடாக பெற்றுக்கொண்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்து வரையப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரை பரந்து விரிந்த எல்லையில் இவற்றை காணக்கூடியதாக உள்ளது. இவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று மரபு ரீதியாகவே முக்கியத்துவம் பெறுகின்றது. மேற்படி தகவல்களைப் பெறுவதற்கு கட்டுரை ஆசிரியர் மேற்கொண்ட போராட்டம் சில கட்டுரைகளின் உள்ளடக்கத்தில் தோன்றிய விசேட அம்சங்களாகும். தகவல் அறியும் உரிமையின் நடைமுறைப் பயன்பாடு தொடர்பான யதார்த்த ஓவியத்தை இதன்படி காண முடியும். நிறுவனங்களினதும் அதிகாரிகளினதும் மனப்பாங்குகள் தகவல் அறியும் உரிமைகள் பற்றிய ஆணைக்குழுவின் பலன், மட்டுப்பாடுகள் ஆகியவற்றை புரிந்துகொள்ள முடியும்.

அரச கரும மொழிக்கொள்கை உரிய முறையில் செயற்படுத்தாமை பற்றிய பிரச்சினைகள் தமிழ் மொழி மூலம் மேற்கொண்ட தகவல் கோரும் உரிமை தொடர்பான பிரதிபலிப்புக்கள் எடுத்துக்காட்டுகின்றன. இத்தகவல் கோரிக்கை சிங்களம் அல்லது ஆங்கில மொழியில் சமர்ப்பித்திருந்தால், இந்த யாதார்த்தம் வெளிவந்திருக்கமாட்டாது.

ஊடகங்களின் பொறுப்பு தகவல் அறியும் உரிமையை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றிய பரந்துபட்ட புரிதலையும் பெற முடியும். தகவல் அறியும் உரிமையை அடித்தளமாகக் கொண்ட ஊடகம் பற்றிய பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகளின் போது கலந்துரையாடப்பட்ட, சர்வதேச மட்டத்தின் முன்னோடிகரமான ஊடகங்கள் ஊடகவியலாளர்கள் மீது சாதகமான அழுத்தங்களைக் கொடுத்துள்ள முறைமை என்பன போன்ற மிகக் கஷ்டமான முயற்சிகள் மூலம் இது தெளிவாகிறது. அதே சமயம் இத்தகைய பாரிய உதாரணங்களின் நிமித்தம், தகவல்

அறியும் உரிமையை ஓர் கருவியாக பயன்படுத்தி அறிக்கையிடும் முறைமை எப்போதும் ஒரு பாரிய பின்புலத்தை கொண்டதாக இருக்க வேண்டும். இந்த மனப்பாங்கு ஊடகவியலாளர்களில் எவ்வாறு அழுத்தம் செலுத்தியுள்ளது என்பது பற்றி பல சந்தேகங்கள் எழுந்துள்ளன. எனவே அன்றாட அறிக்கையிடுவதற்கு ஏற்புடையதாய் இருப்பினும் தகவல் அறியும் உரிமையை பயன்படுத்தக்கூடியவாறு இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் விசேடமாக பயிற்சி பெறும் ஊடகவியலாளர்களுக்கு உற்சாகமூட்டும் காரணியாக அமைகிறது. தகவல் அறியும் உரிமையின் பயன்பாடு அறிக்கையிடும் பெறுமானங்களை மதிப்பாய்வு செய்யும் ஒரே சாதனமாக அமைந்துள்ளது. அதே சமயம் அதன்பொருட்டு மேற்கொள்ளப்படும் மிகக் கடினமான உழைப்பு இதன்போது பிரதிபலிக்கப்படுவதில்லை. நீங்கள் கண்டறிந்த விடயம் முக்கியத்துவம் வாய்ந்ததாயின், அது இலகுவான முயற்சியின் பெறுபேறாக அமைந்தாலும் அதன் பெறுமதியில் குறைவில்லை.

## ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

இலங்கையில் தகவலறியும் உரிமையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அறிக்கையிடல் பற்றி விசேடமாக காணக்கூடிய அவதானிப்பு பின்வருமாறு: இதனை மிகச் சிறு எண்ணிக்கையிலான ஊடகவியலாளர்களே பயன்படுத்துகின்றனர். இவர்களுடைய ஆர்வத்தின் ஊடக நிறுவனங்களின் ஒப்படைகளோ அல்லது ஊக்குவிப்புகளோ காரணமாக அமைவதில்லை மேற்படி ஊடகவியலாளர்களின் தனிப்பட்ட முயற்சியே உந்துசக்தியாக அமைகிறது. சில குறிப்பிட்ட ஊடக நிறுவனங்கள் மேற்படி முயற்சிகளையேனும் ஊக்குவிக்காது அதற்கு பிரதிபலிப்பாக அவற்றை தமது ஊடகங்களில் பிரசுரிக்காமை பெரும் கவலைக்குரிய விடயமாகும். தமது ஊடகச் செய்திகளின் உள்ளடக்கத்தை பண்புரீதியாக உயர்த்தும் தேவை. இயலாமை (ஊடக நெறிமுறைகள் தொடர்பான பிரச்சினையோடும் இது பிண்ணிப் பிணைந்துள்ளது) இதன்போது சிறப்பாகத் தோற்றும் காரணமாக அமைந்துள்ளது. மறுபுறம் தனது சொந்தச் செலவில் பல கஷ்டங்களை எதிர்நோக்கி மேற்கொண்ட ஆய்வு பற்றியேனும் போதியளவு கவனிப்போ அல்லது பாராட்டுதல்களையோ வழங்காமை பெரிதும் கவலைக்குரிய விடயமாகும். இதற்குப் போதிய உதாரணங்களும் உண்டு. தகவலறியும் உரிமை பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கும் அது பற்றி ஊடகவியலாளர்களைப் பயிற்றுவிப்பதும், தகவலறியும் உரிமையைப் பயன்படுத்தி அறிக்கையிடும் பணிகளில் அவர்களை ஈடுபடுத்துவதற்கும், அவர்களுக்கு ஊக்கமளிப்பதற்கும் பல்வேறு ஊடக அமைப்புக்களும் சிவில் சமூக அமைப்புக்களும் செயற்படுகின்றன. இதன் காரணமாக தகவலறியும் உரிமை என்பது அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெறும் கருத்திட்டமாகக் கருதி ஊடக நிறுவனங்களின் மாற்றாந்தாய் மனப்பான்மைக்கும் ஆளாக வேண்டிய ஒரு சில ஊடகவியலாளர்களின் அனுபவம் எமக்குண்டு. அண்மையில் அறியப்பட்ட மற்றுமோர் கவலைக்கிடமான தகவல் ஒன்றுண்டு. RTI என்பது கடந்த அரசாங்கத்தின் ஒரு கருத்திட்டமாகக் கருதி சில அரச மற்றும் அரசாங்கக் கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும் ஊடகங்கள் RTI அறிக்கையிடலை அதைரியப்படுத்த முன்வந்துள்ளன.இத்தகைய சகல சவால்களைப் பற்றியும் பகிரங்கமாகக் கலந்துரையாட வேண்டும். தகவல் அறியும் உரிமையைப் பேணிப் பாதுகாப்பதற்கும் பிரஜைகளை இதன் மீது அதிகளவில் ஈடுபடுத்துவதற்கும் இது காரணமாக அமையும்.

**ஜயசிரி ஜயசேக்கர**



*www.washingtontimes.com*

## தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களின் போது 99% சுகாதார விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன

# எவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை

கொரோனா பரவும் அவதானம் காரணமாக கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருந்த கடந்த பாராளுமன்றத் தேர்தலை நடாத்த இறுதி நேரத்தில் தீர்மானிக்கப்பட்டது. சுகாதார விதிமுறைகளுக்கமைய ஒரு சில வரையறைகளை நிர்ணயித்த பின்னரே இது இடம்பெற்றது. ஆயினும் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் சுகாதாரத் துறையினர், பொதுமக்களது வாழ்க்கைப் பாதுகாப்பிற்காக மேற்கொண்ட பாரதூரமான பொறுப்பையே கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால், நடைமுறையில் குறித்த பொறுப்பை எந்தளவிற்கு நடைமுறைப்படுத்துவதற்கு குறிப்பிட்ட அதிகாரிகள் உற்பட அரசு சித்திபெற்றுள்ளது என்பதே பிரச்சினை அது குறித்து அரசாங்கத்திற்கும் உரிய அதிகாரிகளுக்குமுள்ள மதிப்பீடு என்ன?

துரதிஷ்டவசமாக, தேர்தல் இம்பெற்று நீண்ட நாட்கள் கழிந்த பின்னரும் அதைப் பற்றி  உரிய தரப்பினர் ஆராயவில்லை. நாட்டின் பிரஜை என்றவகையில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்த கோரிக்கையாளரால் மேற்கொள்ளப்பட்ட கடின முயற்சியில் வெளியான தகவல்கள் நம்ப முடியாத புதினங்களாகும்! இவ் வனைத்தையும் சுருக்கமாகக் கூறினால்,

தேர்தலொன்றின் போது சுகாதார விதிமுறைகளை 1 சதவீதமானவர்களே பின்பற்றியிருந்தனர். இதை வேறுவகையில் குறிப்பிட்டால் சுகாதார விதிமுறைகள் பின்பற்றப்படாமை 99% ஆகும். அவ்வாறு சட்டதை மீறியமைக்கு எதிராக நடவடிக்கை எடுத்தமை சைபர் வீதம் ஆகும்.

இக்கட்டுரையின் நோக்கம், குறிப்பிட்ட அபாயகர நிலையைப்பற்றி அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் பொது மக்களுக்கும் அறிவிப்பதாகும். அது எதிர்காலத்தில் இவ்வாறான துரதிர்ஷ்டவசமான நிலை ஏற்படாமலிருக்கச் செய்வதே அதன் முக்கிய நோக்கமாகும்.

## அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்

கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது விளம்பர விவகாரங்கள் தொடர்பில் 2020.07.20 ஆம் திகதி தனிமைப்படுத்தல், நோய்த்தடுப்பு பற்றிய கட்டளைச் சட்டம் 2, 3 ஆம் வாசகத்திற்கமைய இலக்கம் 2184/34 கொண்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. அதற்கமைய கூட்டங்கள் நடத்தப்படும் போது பின்பற்ற வேண்டிய அறிவுரைகள் தீர்மானிக்கப்பட்டதுடன் 9 வது வாசகத்திற்கமைய ஒன்றிலிருந்து ஏழு வரையான வாசகங்களின் மூலம் வெளியிடப்பட்டுள்ள விடயம் யாதெனில், தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியின் நியமங்களாகும். எல்லாக் கூட்டங்கள் தொடர்பிலும் உரிய சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகத்திற்கு அறிவிக்க வேண்டுமென்பது முக்கிய நிபந்தனையாகும்.

இந்த ஆய்வின் போது நாட்டின் அனைத்து மாவட்டங்களினதும் 362 சுகாதார அதிகாரிகள் அலுவலகங்களுக்கும் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 14 மாவட்டங்களினது 155 சுகாதார அதிகாரிகள் அலுவலகங்களால் குறிப்பிட்ட தகவல்கள் வழங்கப்பட்டன. எத்தனை கூட்டங்கள் தொடர்பில் குறிப்பிட்ட அலுவலகங்கள் தெளிவூட்டப்பட்டதென இங்கு ஆராயப்பட்ட முக்கிய விடயமாகும்.

அதற்கமைய மாத்தறை, காலி, அனுராதபுரம், பொலன்னறுவை, கொழும்பு, களுத்துறை, புத்தளம், பதுளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகங்களால் தகவல் சட்டத்திற்கமைய தகவல் வழங்க மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

## சட்டத்தை மீறிய தேர்தல் கூட்டம்.

அதற்கமைய 14 மாவட்டங்களின் சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து மேலும் ஆராய்ந்த போது வெளியான விடயங்களுக்கமைய யூலை 20 ஆம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் 02 ஆம் திகதி வரை 12 நாட்கள் வரை மாத்திரம் குறிப்பிட்ட 14 மாவட்டங்களில் இடம்பெற்ற கூட்டங்கள் மற்றும் சுகாதார பரிந்துரைகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இலங்கை பொதுஜன பெரமுன 50,620 கூட்டங்களை நடத்தியதுடன் அதில் 570 கூட்டங்களையே சுகாதார அதிகாரிகள் அலுவலகத்திற்கு அறிவித்திருந்தது. தேசிய மக்கள் சக்தி 11,100 கூட்டங்களை நடத்தியதுடன் அதில் 110 கூட்டங்களை மட்டுமே சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவவலகத்திற்கு அறிவித்திருந்தது. ஐக்கிய மக்கள் சக்தி 33,515 கூட்டங்களை நடத்தியதுடன் அதில் 190 கூட்டங்களை மட்டுமே சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவவலகத்திற்கு அறிவித்திருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி 21,055 கூட்டங்களை நடத்தியதுடன் அதில் 95 கூட்டங்களை மட்டுமே சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவவலகத்திற்கு அறிவித்திருந்தது. அத்துடன் வடகிழக்கு தமிழ் மற்றும் முஸ்லிம்


கட்சிகள் உட்பட சுயாதீன குழுக்களால் 7,014 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதுடன், அவற்றின் 346 கூட்டங்கள் தொடர்பில் மட்டுமே சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தன.

அத்தகவல்களுக்கமைய கடந்த பாராளுமன்ற தேர்தல் காலங்களான யூலை 20 தொடக்கம் ஆகஸ்ட் 02 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 123,304 அரசியல் கூட்டங்கள் நடத்தப்பட்டாலும் அது குறித்து 2020.07.20 ஆம் திகதிய தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்ட இலக்கம் 2184/34 அதி விசேட வர்த்தமானியின் 2வது வாசகத்திற்கமைய செயற்பட்டு கூட்டங்களை நடத்துவதற்கு 24 மணித்தியாலயங்களுக்கு முன்னர் மேற்படி கூட்டம் தொடர்பில் சுகாதர வைத்திய அலுவலருக்கு எழுத்து மூலம் அறிவித்து நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை 1,311 என அறியக்கிடைத்துள்ளது. அதன் விகிதம் 1% ஆகும். அதற்கமைய நூறு கூட்டங்கள் நடத்தப்பட்டால் சுகாதார விதந்துரைகளுக்கமைய ஒரே ஒரு கூட்டம் மட்டுமே நடத்தப்பட்டுள்ளது.

இதன் போது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மாத்திரம் 2020.07.17 ஆம் திகதி தொடக்கம் ஆகஸ்ட 02 ஆம் திகதி வரை பிரதான அரசியல்வாதிகளால் மட்டும் 6,814 இற்கு அதிகமான கூட்டங்களை நடத்தியுள்ளதுடன், குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின் 2 வது வாசகத்திற்கமைய செயற்பட்டு கூட்டம் நடத்துவதற்கு 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் குறிப்பிட்ட கூட்டம் தொடர்பில் சுகாதார வைத்திய அலுவலருக்கு எழுத்து மூலம் அறிவித்து 202 கூட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டுள்ளதென தகவல் அறியும் சட்டத்தின் மூலம் தெளிவானது.

அத்துடன் 3.2 வாசகத்திற்கமைய கூட்டங்களுக்கு பங்குபெறச்செய்யக்கூடிய

**MOH அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்ட 2020 பாராளுமன்றத் தேர்தலின் போது 14 மாவட்டங்களில் இடம்பெற்ற கூட்ட விபரங்கள்**




| | வேறு | ஐக்கிய தேசிய கட்சி | தேசிய மக்கள் சக்தி | ஐக்கிய மக்கள் சக்தி | இலங்கை பொதுஜன பெரமுன |
|---|---|---|---|---|---|
| நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை | 7014 | 21055 | 11100 | 33515 | 50620 |
| MOH அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்ட எண்ணிக்கை | 346 | 95 | 110 | 190 | 570 |

நபர்களின் எண்ணிக்கை 300 என வரையறை செய்திருந்தாலும் இங்கு நடத்தப்பட்ட 50 இற்கு அதிகமான கூட்டங்களில் 500 இற்கு அதிகமானவர்கள் பங்கேற்றிருந்தனர். அவ்வாறு பங்கேற்கக்கூடிய எல்லையை மீறி நடத்தப்பட்ட கூட்டங்கள் தொடர்பில் எவ்வித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படாததுடன் அதற்குப் பதிலாக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின் 4 வது வாசகத்திற்கமைய கூட்டத்திற்கு வருகை தந்தவர்களது பெயர்ப்பட்டியலொன்றை குறிப்பிட்ட ஏற்பாட்டாளரால் பேணவேண்டுமென கட்டளையிடப்படிருந்தது. குறிப்பட்ட வாசகத்தின் (அ) பிரிவின் கீழ் கூட்டத்தில் பங்குபற்றுபவர்கள் கைகழுவுவதற்கு போதிய வசதிகளை ஏற்படுத்தித் தரப்படவேணடுமென குறிப்பிடப்பட்டிருந்தாலும் கூட்டங்கள் நடத்தப்பட்ட இடங்களில் அவ்வாறான வசதிகள் போதுமான அளவு வழங்கப்பட்டிருக்கவில்லை. அனேகமானோர் அவற்றை பயன்படுத்தவில்லையென காணமுடிந்தது.

### ஒரு மீட்டர் இடைவெளியை பேணாமை

குறிப்பிட்ட வர்த்தமானியின் 4 (இ) தொடக்கம் (ஈ) வரையான வாசகங்களின் ஊடாக பொதுமக்கள் அரசியல் கூட்டங்களுக்காக ஒன்றுகூடும் போது ஒரு மீட்டர் இடைவெளியை பேணவேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தாலும் அது அனேகமான சந்தர்பங்களில் பேணப்படாததுடன், குறிப்பிட்ட வேட்பாளர் உணவுப்பொருட்களை வழங்குதல், உபசாரம் போன்ற சந்தர்பங்களில் மக்கள் வரிசையாக மிக நெருக்கமாக இருத்தல் மற்றும் முகக்கவசம் அணிந்திருக்காமை என்பவற்றைத் தெளிவாகக் காண முடிந்தது.

இவ்வாறு சுகாதார வழிகாட்டல்களின்றி, தேர்தல் கூட்டங்கள் நடத்தப்பட்டாலும் அவ்வாறாக சுகாதார விதி முறைகளை மீறியவர்கள் எவரும் தேர்தல் கூட்டங்களின் போது கைது செய்யப்படவில்லையென பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களில் தெளிவானது.

எவ்வாறாயினும் இவ்வாறாக தனிமைப்படுத்தல் சட்ட திட்டங்களுக்கமைய தேர்தல் பிரச்சார கூட்டங்களை நடத்த முடியாது போனது குறித்து மேற்கொள்ளப்பட்ட தேடலின் போது விருப்பு வாக்குகளுக்கு அடிமையாகிய பல வேட்பாளர்கள் அரசியல் கட்சி பேதமின்றி சுகாதார வழிகாட்டல்களுக்கமைய செயற்படவில்லையென்பது தெளிவாகின்றது.

அத்துடன் அனேகமான சிறு கூட்டங்கள் கிராமிய மட்டங்களில் செயற்படும் பிரதேச ஏற்பாட்டாளர்களால் ஒழுங்கு செய்யப்படும். இவர்களில் அனேகமானோர் மேற்படி வர்த்தமானிக்கமைய கூட்டங்களை நடத்த 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் கூட்டம் தொடர்பில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டுமென்பதை அறியாதிருந்தனர் என சில கட்சிகளது அமைப்பளர்களிடம் கேட்ட போது தெளிவானது.

“அவ்வாறு தெளிவூட்ட வேண்டுமென நாம் அறிந்திருக்கவில்லை. ஆயினும் முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் தனிமைப்படுத்தல் சட்டத்திற்கமைய கூட்டங்களை ஏற்பாடு செய்ய நாம் நடவடிக்கை மேற்கொண்டோம். ஆயினும் கூட்டத்திற்கு வருகைதரும் மக்கள் அது குறித்து பெரிதாக அக்கறை காட்டவில்லை. காட்சியாளர்களுடன் பகைகொள்ள முடியாதமையினால் நாங்களும் அது குறித்து அதிக அக்கறை செலுத்தவில்லை.” என ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாந்தோட்டையில் சில பிரதேச




கூட்டங்களை ஏற்பாடு செய்த திரு. ஆர்.பீ. பிரியந்த அவர்கள் தெரிவித்தார்.

“நாங்கள் பொலிசாருக்கு அறிவித்தே கூட்டங்களை நடத்தினோம். ஆயினும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு அறிவிக்கவில்லை.” பெயரை வெளிப்படுத்த விரும்பாத இலங்கை பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் குறிப்பிட்டார்”

அத்துடன் இவ்வாறு வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானிக்கமைய சுகாதார அலுவலர் அலுவலகத்தை தெளிவூட்டாது கூட்டம் நடாத்துதல் தொடர்பில் சில கட்சிகளில் வேட்பாளர் சிலரிடம் தகவல் கோரினோம்.

இலங்கை பொதுஜன பெரமுண வேட்பாளரான அமைச்சர் மகிந்த அமரவீர -

“எழுத்து மூலம் இல்லாவிட்டாலும் நாங்கள் பல சந்தர்ப்பங்களில் அறிவித்துள்ளோம். அத்துடன் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களுக்கு சுகாதார வைத்திய அலுவலர் காரியாலயத்திற்கு அறிவித்து கூட்டங்களை நடத்துமாறு பணித்துள்ளோம். அத்துடன் நூற்றுக்கு நூறு வீதம் இல்லாவிட்டாலும் ஓரளவு சுகாதார வழிகாட்டல்களுக்கமையவே கூட்டங்கள் நடத்தப்பட்டன.”

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக போட்டியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலீப் ஜயவீர

“நாங்கள் உரிய முறையில் நேர்த்தியாக சுகாதாரச் சட்டங்களுக்கமைய கூட்டங்களை நடத்தினோம். ஆயினும் ஆளும்கட்சியினர் அனேகமான தேர்தல் கூட்டங்களை சட்டத்தை மீறியே மேற்கொண்டனர். எனினும் முடியுமான சந்தர்பங்களில் அனுமதி பெற்றே கூட்டங்களை நடத்தியிருந்தோம்.”

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரான நிஹால் கலப்பத்தி அவர்கள் தெரிவிக்கையில்.

“நாங்கள் அனைத்து கூட்டங்கள் தொடர்பாகவும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்காவிட்டாலும் முடியுமானவரை சுகாதார வழிமுறைகளுக்கமைய கூட்டங்களை நடத்த நடவடிக்கை மேற்கொண்டோம். ஆளும் கட்சியினர்

சட்டத்தை மீறி மக்களை திரட்டியே கூட்டங்களை நடத்தினர். ஆயினும் எந்தவொரு அலுவலரும் அது குறித்து கவனம் செலுத்தவில்லை. நான் ஒரு சில தடவைகள் குறிப்பிட்ட அலுவலர்களுக்கு முறைப்பாடு செய்தாலும் அவர்களுக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்படவில்லை."

எவ்வாறாயினும் இடம்பெற்ற நிலைமைகளுக்கமைய இந்தத் தேர்தலின் பிரச்சார கூட்டங்களை நடத்தும் பொது சுகாதாரத் துறையினரின் நடவடிக்கைகள் தொடர்பில் அம்பாந்தோட்டை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி. எ.டி.எம்.டி.படபதிகே அவர்களிடம் விசாரித்த போது தாம் அலுவலர்களை தெளிவூட்டித் தேர்தல் பிரச்சார கூட்டங்களில் அவற்றை பேணவேண்டிய முறை தொடர்பில் ஆலோசனை வழங்கி செயற்பட்டுள்ளேன் எனத் தெரிவித்தார்." நாங்கள் அது குறித்து தெளிவூட்டிய கூட்டங்களுக்காக சுகாதார வழிகாட்டல்கள் வழங்குதலையே மேற்கொண்டோம். அதை பின்பற்றவில்லையென்றால் அதைப் பற்றி தேடியறிய வேண்டும். பொலிசாருக்கு பின் சட்டத்தை அமுல்படுத்த இருந்தது" என அவர் மேலும் தெரிவித்ததார்.

## தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் கண்காணிப்பு அமைப்புக்களின் பொறுப்பு

இது குறித்து சில தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் சிலவற்றிடம் கருத்துக்களை வினவினோம். அதன் போது கருத்து தெரிவித்த பெப்ரல் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி அவர்கள் " இந்த கோவிட் பிரச்சினை ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்திலிருந்து இந்தத் தேர்தலில் சட்டதிட்டங்களை அமுல்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடல் மிகவும் தாமதப்படுத்தப்பட்டது காரணம் இதனால் அவர்களுக்கு தேவையான வகையில் தேர்தலை நடத்த முடியாது என்பதால் அவ்வாறானது. அதை தொடர்ந்து வர்த்தமானி அறிவித்தலை வெளியிடப்பட்ட பின்னர் வர்த்தமானிக்கு அமைய தமது தேர்தல் பிரச்சாரங்களை நடத்தி வந்தனர். அதிர்ஷ்டவசமாக இன்றுபோல அன்றைய சூழ்நிலை காணப்படாததால் பாரிய விளைவுகள் ஏற்படவில்லை. "என அவர் தெரிவித்தார்".

அத்துடன் இவ்வாறாக தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி இடம்பெற்ற தேர்தல் கூட்டங்கள் தொடர்பில் 600 க்கு அதிகமான முறைப்பாடுகள் தமது கண்காணிப்பு நிலையத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தேர்தல் காலத்தில் அமுல்படுத்தாதிருந்து பின்னர் பொது மக்கள் மீது மாத்திரம் சட்டத்தை பிரயோகித்தல் தொடர்பில் குறித்த துறையினரிடம் விசாரித்தாகவும் ரோஹன ஹெட்டியாரச்சி அவர்கள் தெரிவித்தார்.

அத்துடன் தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையத்தின் அழைப்பளர் மஞ்சுள கஜநாயக்க அவர்களிடம் இது குறித்து விசாரித்த போது "இவ்வாறு தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி நடத்தப்பட்ட கூட்டங்கள் தொடர்பில் தமது அமைப்பிற்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதுடன், இது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்ததாகத் தெரிவித்தார். அத்துடன் தேர்தலின் பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழு இது குறித்து வலுவாக செயற்படாமை மற்றும் தமது நவடிக்கைகள் தொடர்பில் பின்னூ ட்டல் செய்யாமை எதிர்வரும் காலங்களில் தேர்தல் செயன்முறையை சரியான முறைக்கு இட்டுச்செல்லத் தடையாக அமையுமென தெரிவித்தார்."

தேர்தல் காலங்களில் தேர்தல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாளர் (அதிகாரமுடையவர்) தேர்தல் ஆணைக்குழு ஆகும். தேர்தலுக்கு அழுத்தம் ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் பரந்தளவிலான



www.thehindu.com

அதிகாரமுடைய பொலிஸாரும் இக்காலகட்டத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கமையவே செயற்படும். சுகாதார ஆலோனைகளுக்கமைய கூட்டங்களை நடத்தும் பிரச்சினை குறித்து தேர்தல் ஆணையாளர் நாயகம் ஸ்ரீ ரத்னாயக அவர்களிடம் கேட்டோம்.

“தேர்தலின் போது எமது 25 மாவட்டங்களின் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு, கைது செய்யும் மற்றும் வழக்கு தாக்கல் செய்யும் அதிகாரத்தை வழங்குமாறு நாங்கள் நீதித்துறை அமைச்சருக்கு கோரிக்கை விடுத்தோம் ஆயினும் அது கிடைக்கவில்லை. எவ்வாறாயினும் தேர்தல் அலுவலர்களுக்கு மாத்திரம் எல்லா இடங்களுக்கும் செல்லக்ககூடிய ஆற்றல் இல்லை. எனவே அவ்வாறானதொரு முறைப்பாடொன்று எமக்கு கிடைத்தவுடன் நாம் பொலிசாருடனேயே செல்ல வேண்டியுள்ளது. உண்மையில் இது பொலிசாரின் கடமையாகும்.” என தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

**பொலிஸ் அதிகாரத்தை பிரயோகிக்கவில்லை.**

எவ்வாறாயினும் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கமைய சுகாதார வழிகாட்டல்களைப் பேணாது அரசியல் கூட்டங்கள் நடத்தப்பட்டாலும் அக்கூட்டங்களில் குறிப்பிட்டவாறான தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய எவரும் கைது செய்யப்படவில்லையென 42 பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்களிடம் தகவல் கோரியிருந்தும் 6 பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்களிலிருந்து தெளிவாகியது. ஏனைய பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்கள் தகவல் சட்டதிற்கமைய தகவல் வழங்குவதை மறுத்தன.

கொரோனா சட்டத்திற்கமைய தேர்தலின் போது பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் உள்ளடங்கிய வர்த்தமானி அறிவித்தலின் கட்டளைகளை நடைமுறைப்படுத்த பொலிசாருக்கு அதிகாரம் உள்ளதென சட்டத்தரணி ஜகத் லியனாராச்சி அவர்கள் தெரிவித்துள்ளார். “தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தொற்றாமை கட்டளையின் இரண்டாம் வாசகத்தின் கீழேயே இக்கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. குறிப்பிட்ட சட்டத்தின் ஆறாவது வாசகத்திற்கமைய சட்டத்தின் கீழ் தவறுசெய்த நபரொருவரை தடுத்தல் மற்றும் தடுப்பில் வைப்பதற்கும் பொலிஸ் அலுவலர் ஒருவருக்கும், சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் ஆய்வாளருக்கும் அதிகாரமுண்டு.” எனவும் தம் முன்னே சட்டத்தை மீறினால் அதைத் தடுப்பதற்கு பொலிஸ் அலுவலருக்கு முறைப்பாடொன்று கிடைக்க வேண்டியதில்லை என சட்டத்தரணி ஜகத் லியனாராச்சி தெரிவித்தார்.

“தேர்தலை நடத்துவதற்கான தேவை அனைத்து கட்சிகளுக்கும் இருந்தாலும்

இந்த நிலை சுகாதார ரீதியான சிக்கலொன்று இருப்பதாலே சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட குழுவினர் ஒன்றிணைந்து வழிகாட்டல்களை தயாரித்து சுகாதார சட்டதிட்டங்களை விதிமுறைகளை பின்பற்றுமாறு விதிக்கப்பட்டது. ஆயினும் குறிப்பிட்ட வழிகாட்டலில் உள்ள விடயங்கள் அரசியல் தேவைகளுக்காக மாற்றப்பட்டது." என சட்டதரணி ஜகத் லியனாராச்சி வலியுறுத்தினார்.

இரண்டாம் அலையென முன்பை விடவும் மிக வேகமாக கொரோனா நோய் நாடு முழுவதிலும் பரவிவருகின்றது. அத்துடன் குறிப்பிட்ட சட்டங்களை மீறும் நபர்கள் கைது செய்யப்படுவதாக அறிக்கையிடப்படுகின்றது. ஆயினும் மேற்படி விடயங்களை கருத்திற்கொள்ளும் போது கடந்த 2020 பாராளுமன்றத் தேர்தல் காலப்பகுதியில் கொரோனா கட்டுப்பாட்டிற்காக விதிக்கப்பட்டிருந்த சட்டதிட்டங்கள் தேர்தல் பிரச்சாரங்களின் கூட்டங்களுக்கு பொருந்தாதெனவும் இது அரசியல் காரணியொன்று என்பதால் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. தேர்தல் கூட்டங்களின் போது தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய எவரையும் கைது செய்யாமையில் மேலும் இது உறுதியாகின்றது.

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களின் போது தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோரை கைது செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை தொடர்பில் பிரதி பொலிஸ் மா அதிபர், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண அவர்களிடம் கேட்கப்பட்ட போது இது குறித்து தேர்தல்களுக்கு பொறுப்பாக செயற்பட்ட சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் பிரியந்த விஜேசூரிய அவர்களிடம் கேட்குமாறு தெரிவித்தார்.

அதற்கமைய அவரிடம் கேட்கப்பட்ட போது அவர் பின்வருமாறு தெரிவித்தார்.

" தேர்தல் காலங்களில் வெளியிடப்பட்ட இதை (2020.10.15 வெளிவந்த வர்த்தமானி அறிவித்தல்) முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. அத்துடன் அன்று காணப்பட்ட கொரோனா நிலை இன்று இல்லை. ஆகையால் பெரிதாக பிடித்துக்கொள்ள வேண்டிய விடயமல்ல. குறைபாடொன்று உள்ளது ஆகவே அதை பிடித்துக்கொண்டு எமக்கு பின்நோக்கிச்செல்ல முடியாது. அத்துடன் நாங்களும் டிவிசன்களை (பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம்) தொடர்பு கொள்கின்றோம் ஏன் அப்படியானதென அவர்களிடம் கேட்கின்றோம்" என பிரதி பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய அவர்கள் தெரிவித்தார்.

சுகாதார விதிமுறைகள் விதிக்கப்பட்டாலும் அவற்றை சரியான முறையில் நடைமுறைப்படுத்தும் கட்டமைப்பு காணப்படாமை இந்தத் தகவல்களின் ஊடாக தெளிவானது குறிப்பிடத்தக்கது. அத்துடன் அதிகாரமுடைய அனைத்து அலுவலர்களும் பொது உடன்பாட்டிலிருந்து சட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் வலுவற்ற செயன்முறையை பின்பற்றியுள்ளமை தெரிகின்றது,

ஒருலட்சத்து இருபத்து மூவாயிரத்துக்கு அதிகமான கூட்டங்களில் 99% ஆனோர் குறிப்பிட்ட சட்டத்தை மீறியிருந்தும் ஒரு குற்றவாளிக்கேனும் எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்காமை, வியப்புக்குரிய விடயமாகவுள்ளது, எதிர்காலத்தில் அல்லது அது குறித்து சட்ட ரீதியான நடவடிக்கை செய்ய எதிர்பார்கவில்லையெனவும் பொலிஸ் அதிகாரிகள் அது குறித்து கொண்டுள்ள அக்கறை அவர்கள் வழங்கிய பதில்களில் தெளிவாகின்றது. இது மிக மோசமான எடுத்துக்காட்டாகும்.

**இராகுல் சமந்த ஹெட்டியாரச்சி**
**2020.11.19 "அத" பத்திரிகை**




## தீர்வு இல்லாத மனித - யானை மோதலுக்கு தீர்வு காண்பதற்காக மில்லியன் கணக்கான பணத்தை வீணடித்த

# யானை வேலி

**இலங்கையின் 1340 கிலோமீற்றர் கடற்கரையோரத்தை நீங்கள் நடந்து சென்று கடப்பதாக இருந்தால் அதற்கு மனோதிடம் தேவையாகும். இலங்கை போன்றதொரு சிறிய தீவுக்கு அது பெரிய தூரமாகும். இருப்பினும் இந்தத் தீவின் சுற்றளவையும் விடக் கூடியளவு தூரத்தைத் தாண்டியதாக 4400 கிலோமீற்றர் தூரத்துக்கு யானை வேலி அமைக்கப்பட்டுள்ளது என சொன்னால் நீங்கள் ஆச்சரியமடையலாம். அந்த தூரம் நாட்டை மூன்று தடவை சுற்றிவருவதற்கு சமமான தூரமாகும். அதாவது இலங்கையிலிருந்து சீனாவுக்கு வேலி அமைப்பதற்குச் சமமான தூரமாகும்.**

இன்று நாட்டில் தீர்வு காண முடியாதளவு பிரச்சினை என்று கூறக்கூடிய அளவுக்கு மனித - யானை மோதல் தீவிரமடைந்துள்ள நேரத்தில் எவ்வளவுதான் யானை வேலிகளை அமைத்த போதிலும், பெரும்பாலான பிரதேசங்களில் அந்த யானை வேலிகள் இயங்கு நிலையில் இருக்காமை காரணமாக யானைகள் கிராமங்களுக்குள் நுழைகின்றன. இவ்வாறான பின்னணியில் இலங்கையின் யானை வேலிகள் தொடர்பான தகவல்களை ஆய்வு செய்வதற்காக தகவல் அறியும் சட்டத்தின் கீழ் வன சீவராசிகள் திணைக்களத்திலிருந்து பெற்ற தகவல்கள் மூலம் இந்த யானை வேலி தொடர்பான தகவல்களைப் பெறக்கூடியதாக இருந்தது.


மாவட்ட அடிப்படையில் அமைக்கப்பட்ட யானை வேலிகளின் நீளம்




1970 தசாப்தத்தின் இறுதிப்பகுதியில் நாட்டில் உருவாக்கப்பட்ட துரித மகாவலி அபிவிருத்தித் திட்டமே இலங்கையில் மனித - யானை மோதல் ஏற்பட்டதற்கு காரணமாகும் என்பதனை அறிந்து கொள்ளலாம். சரியான திட்டமிடல் இன்றி ஆரம்பிக்கப்பட்ட அந்த அபிவிருத்தி செயற்பாடுகள் காரணமாக இடம்பெற்ற காடழிப்பினால் காட்டு யானைகள் உள்ளிட்ட விலங்குகளின் வாழ்விடங்கள் இழக்கப்பட்டன. அத்துடன் அவற்றுக்கான உணவுத்தட்டுப்பாடும் ஏற்பட்டது. காடழிப்பு காரணமாக இயற்கையான நீரோடைகள் வற்றிப்போனதனால் விலங்குகளுக்கான குடிநீரும் இல்லாமல் போனது. யானைகள் கடக்கும் பாதைகள் தடைப்பட்டன. அவ்வாறான பல விடயங்கள் காரணமாக யானைகள் கிராமங்களுக்குள் செல்லத் தொடங்கின. உணவு தேடி விளைநிலங்களுக்கு வந்தன. தற்போது இலங்கையில் மகாவலி வலயங்களிலேயே அவ்வாறான மனித - யானை மோதலகள் தீவிரமடைந்துள்ளன.

### முறைகேடான அபிவிருத்திக் கருத்திட்டங்களும் மனித யானை மோதல்களும்

அவ்வாறு காட்டு யானைகள் தமது வாழிடங்களை இழப்பதனால் அவை தொடர்ச்சியாக கிராமங்களுக்குள் நுழைகின்றன. அந்த நிலமை தற்போது மேலும் தீவிரமடைந்துள்ளது. இருப்பினும், காட்டு யானைகள் ஊருக்கு வருவதாக சிலர் சொன்னாலும், அது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கும் போது யானைகள்




இருந்த காடுகளை துப்பரவு செய்து மகாவலி மற்றும் ஏனைய அபிவிருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களிலுள்ள கிராமங்களுக்கே யானைகள் செல்வது தெரிய வருகிறது. தாம் வாழ்ந்த இடங்களை கைவிட்டு செல்வதற்குக் காட்டு யானைகள் இன்னும் விரும்பவில்லை என்பதை அதன் மூலம் அறிந்து கொள்ளலாம். அதன் காரணமாகவே மனித - யானை மோதலகள் ஏற்படுகின்றது.

அத்தமீறிய காடழிப்பை மேற்கொண்டு மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கை காரணமாகவும், இன்னொரு வழியில் யானைகளின் வாழ்விடங்கள் பறிக்கப்பட்டுள்ளன. அந்த பயிர்சசெய்கை பிரதேசங்களில் யானைகளுக்குத் தேவையான சுவையான உணவும், குடிநீரும் உள்ளன. அவற்றை இலகுவாக பெறக்கூடியதாக இருப்பதனால் காட்டு யானைகள் அந்த விவசாயப் பிரதேசங்களுக்குத் தொடர்ச்சியாக வருகின்றன. மரக் கிளைகள் மற்றும் பட்டைகள், புல் போன்றவற்றை உணவாகக் கொண்ட எமது நாட்டு காட்டு யானைகளுக்கு அவற்றின் வாழ்விடங்களை துப்பரவு செய்து பயிரிடப்பட்டுள்ள பல்வேறு விதமான சுவையான உணவுகள் காரணமாக யானைகள் அவற்றை உணவாக உட்கொள்ளப் பழகிப் போயுள்ளன. மனிதர்களின் சுயநலமான செயற்பாடுகளே இந்த பிரச்சனைகள் அனைத்துக்கும் காரணமாகும் என்பதனை சுட்டிக்காட்ட வேண்டும்.

இந்த வகையில் மகாவலி வலய பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி துப்பரவு செய்யப்பட்டு மேற்கொள்ளப்படும் பாரிய அளவான வர்த்தக ரீதியான பயிர்ச்செய்கை மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளே அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மனித - யானை மோதல் கூடுதலாக நிலவுவதற்கான காரணம் ஆகும். அலுவலர்களின்தும் ஆசீர்வாதத்துடன் மேற்கொள்ளப்படும் இந்த காடழிப்பு தொடர்பாக தகவல் அறியும் சட்டத்தின் மூலம் தகவல் அறியும் ஆணைக்குழு வரை சென்று மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்தும் அந்த அனைத்து காடழிப்புகளும் சட்டவிரோதமானவை என்பது தெரியவந்துள்ளது.

அவ்வாறு மனித - யானை மோதல் தீவிரமடைந்து வரும் வேளையில் அதற்கு தீர்வு காண்பதற்காக இலங்கையின் முதலாவது யானை வேலி அம்பாந்தோட்டை மாவட்டத்தின் லுனுகம்வெகர தேசியப் பூங்கா பகுதியில் 1992 ஆண்டு இருபது கிலோ மீற்றர் (20) நீளத்துக்கு பாதுகாப்பு மின்சார வேலி அமைக்கப்பட்டது.

அன்று தொடக்கம் இலங்கையில் மனித - யானை மோதல் உள்ள 16 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து யானை வேலிகளினதும் மொத்தத் தூரம் 4,349.1 கிலோமீற்றர் ஆகும். அவற்றில் ஆகக்கூடிய அளவான யானை வேலி பொலநறுவை மாவட்டத்திலேயே அமைக்கப்பட்டுள்ளன. அந்த மாவட்டத்தில் மட்டும் 524 கிலோமீற்றர் நீளமான 52 யானை வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதுகூட பருத்தித்துறையில் இருந்து தெய்வேந்திர முனை வரையான இலங்கையின் ஆகக்கூடிய நீளத்தை விடவும் கூடுதலான நீளமாகும்.


அவற்றில் திருகோணமலை மாவட்டத்தில் அமைக்கப்பட்ட இலங்கையின் மிக நீளமான யானை வேலி 2018 செப்ரெம்பர் 19 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களது தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. அதன் நீளம் 30 கிலோமீற்றராகும். அது 193 இலட்சம் ரூபா செலவிடப்பட்டு கோமரங்கடவல தொடக்கம் மதவாச்சி வரை அமைக்கப்பட்டுள்ளது.

## மாவட்டங்களுக்கு அமைய அமைக்கப்பட்டுள்ள யானை வேலிகளின் நீளம்

(மூலம் - தகவல் அறியும் சட்டத்தின் மூலம் வன சீவராசிகள் திணைக்களத்திலிருந்து பெற்ற தகவல்)

அத்துடன் அந்த யானை வேலிகளை அமைப்பதற்காக பெருமளவு நிதி செலவிடப்பட்டுள்ளது. பொதுவாக அண்மைக்காலத்தில் ஒரு கிலோமீற்றர் யானை வேலி அமைப்பதற்காக ரூபா 1,360,606.37 செலவிடப்படுகிறது. அவ்வாறு யானை வேலிகள் அமைப்பதற்காக 2013 ஆண்டிலிருந்து 2017 ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட செலவு வன சீவராசிகள் திணைக்களம் அந்த ஆண்டுகளில் சுற்றுலாத் துறை ஊடாக உழைத்த பணத்தின் நூற்றுக்கு பத்து வீதம் (10%) அளவில் யானை வேலி அமைப்பதற்காக செலவிடப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக மேற்படி தகவல் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முல்லைத்தீவு, நுவரெலியா, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்கள் தவிர ஏனைய 13 மாவட்டங்களில் 2021 ஆண்டளவில் பல்வேறு நீள அளவுகளை கொண்ட யானை வேலிகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அந்த யானை வேலிகளின் மொத்த நீளம் 2256.1 கிலோமீற்றர் எனவும் தகவல் அறியும் சட்டத்தின் மூலம் வன சீவராசிகள் திணைக்களத்திலிருந்து பெற்ற தகவல்களிலிருந்து தெரியவருகிறது. அதற்கமைய 2021 ஆண்டளவில்




இலங்கையின் மொத்த யானை வேலிகளின் நீளம் 6,605.2 கிலோமீற்றர் வரை அதிகரிக்கும்.

காட்டு யானைகளின் வாழ்விடங்கள் நாளுக்கு நாள் துப்பரவு செய்யப்பட்டு, மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி செயற்பாடுகளும், அனுமதியற்ற காடழிப்புமே இன்றும் கூட யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதற்கான காரணமாகும். அவை நுழைவதனை தடுப்பதற்காக வெற்றிகரமான தந்திரோபாயமாகக் கருதி, பெருமளவு செலவு செய்து இவ்வாறான யானை வேலிகள் ஆண்டுதோறும் அமைக்கப்பட்ட போதிலும், அதன் மூலம் சிறந்த பயனை இதுவரை பெற முடியாமைக்குக் காரணமாகும். இருப்பினும் வன சீவராசிகள் திணைக்கள அலுவலர்களின் தெளிவுபடுத்தலுக்கு அமைய சில பிரதேசங்களில் கிராம மக்களின் தவறுகள் காரணமாக அந்த மின்சார வேலிகள் உரிய வகையில் இயங்குவதில்லை. பிரதேச வாசிகள் அதனை தமது பொறுப்பாக கருதி செயற்படுவதனையும் காண முடியவில்லை.

## மின்சார வேலிகளை தாண்டிச்செல்லும் யானைகள்

மின்சார வேலிகள் செயலிழந்திருப்பதாக உடனுக்குடன் வன சீவராசிகள் திணைக்கள அலுவலர்களுக்கு அறிவித்தாலும், அந்த அலுவலர்களின் அலட்சியப் போக்கு காரணமாக அதனை மீண்டும் திருத்தியமைக்க முடியாத வகையில் அவை யானைகளால் சேதமாக்கப்படுவதாக யானைகள் ஊருக்குள் நுழையும் பிரதேசங்களிலுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

சிரேஷ்ட சூழலியலாளர்கள் யானை வேலி தொடர்பில் இனங்கண்டுள்ள தந்திரோபாயங்களில் மிகச் சிறந்த தீர்வான யானை வேலி முறையை அரசு இன்றும் ஏற்றுக்கொண்டுள்ள பின்னணியில், அதற்கு மில்லியன் ரூபா கணக்கில் செலவிடப்பட்டு

அமைக்கப்பட்டுள்ள போதிலும், சில பிரதேசங்களில் யானைகள் மின்சார வேலிகளைத் தாண்டி கிராமங்களுக்கு வரும் நிலையும் ஏற்பட்டு வருகிறது. யானைகள் அந்த மின்னதிர்வுக்கு தாக்குப் பிடிக்கும் நிலைக்கு இசைவாக்கம் அடைந்துள்ளதாக அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் மூலம் தெரியவருகிறது. அதற்கமைய மின்சார வேலித் தடையை கருத்திலெடுக்காமல் யானைகள் கிராமங்களுக்குள் நுழையும் நிலை ஏற்பட்டு வருகிறது.

நாட்டு மக்களின் பெருமளவு நிதியை செலவிட்டு திருகோணமலை மாவட்டத்திலுள்ள வில்கம்விகாரை கிராமத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட மின்சார வேலியின் பற்றரி, வேலி அமைக்கப்பட்டு மூன்று மாதங்களுக்கு உள்ளேயே செயலிழந்து போனதனால் அந்த மின்சார வேலி வெள்ளை யானையாக மாறியுள்ளமை தொடர்பில் அலுவலர்கள் மௌனம் காத்து வருவதாக கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

**"நாம் பல ஆண்டுகள் அகதி முகாம்களில் இருந்து மீளக் குடியேறிய பின்னர் காட்டு யானை பிரச்சினைக்கு தீர்வு வழங்குமாறு மட்டுமே கோரிக்கை விடுத்தோம். நாம் தொன்றுதொட்டு வசித்து வந்த பாரம்பரிய விவசாயிகள் ஆவோம். நாம் எதற்காகவும் எவரையும் எதிர்பார்ப்பதில்லை. நாமே உழுதுண்டு வாழ்ந்து வந்தோம். எமது கோரிக்கைக்கு அமைய வன சீவராசிகள் திணைக்களத்தால் யானை வேலி அமைப்பதற்கான தூண்கள் கொண்டு வந்து போடப்பட்ட பின்னர் தான் இந்த பிரச்சினை உருவானது. இது அமைக்கப்பட்டு இரண்டு, மூன்று மாதங்களாவது இயங்கியிருந்தால் கவலைப்பட்டிருக்க மாட்டோம். இப்போது யானைகள் கிராமத்துக்குள் வருகின்றன" என வில்கம்விகாரை கிராமத்தின் முதிய விவசாயியான திரு.எஸ்.ஏ. ஹேமச்சந்திர தெரிவித்தார்.**

மாற்றுத் திறனாளியான ஹேமச்சந்திர தனது சுய உழைப்பில் தற்போது மூன்று ஏக்கர் காணியில் பயிர்ச்செய்கை மேற்கொண்டுள்ள போதிலும், தற்போது அந்தப் பயிர்களை யானைகளே அனுபவித்து வருவதாகத் தெரிவித்தார். இரண்டு ஏக்கர் காணியில் பயிரிடப்பட்ட பப்பாசி பயிரில் அரைவாசிக்கு மேல் யானைகளால் அழிக்கப்பட்டு விட்டன. தென்னை மற்றும் வாழைப் பயிர்களும் அழிவடைந்துள்ளன.

## வில்கம்விகாரை கிராமீய மின்சார வேலி

வில்கம்விகாரை கிராமீய மின்சார வேலி தொடர்பில் நாம் தகவல் அறியும் சட்டத்தின் மூலம் திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரதேச செயலகத்திலிருந்து பெற்ற தகவலுக்கு அமைய அதற்காக 3,711,128 ரூபா செலவிடப்பட்டுள்ளது. 11.2 கிலோமீற்றர் நீளமான அந்த மின்சார வேலியினால் வில்கம்விகாரை கிராமத்தில் வசிக்கும் 109 குடும்பங்கள் பாதுகாப்புப் பெறுகின்றன. மனஹர லங்கா எனும் பெயருடைய நிறுவனத்தினால் அந்த மின்சார வேலி அமைப்பு வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வன சீவராசிகள் திணைக்களத்தின் அனுமதியும் அதற்கு கிடைத்துள்ளது.

**"இப்போது அந்த மின்சார வேலிக்கு மின்சாரம் இருக்கிறதா? என அறிந்து கொள்வதற்காக எல்.ஈ.டி பல்ப் பொருத்தப்படுகிறது. மொரவேவ பகுதியிலும் அவ்வாறான நிலமையே. இருப்பினும், எமது கிராமத்தில் அவ்வாறு பொருத்தப்படவில்லை. மின்சாரம் இருக்கிறதா என எவ்வாறு தெரிந்து கொள்வது என நாம் கேட்ட போது ஒரு புல்லை எடுத்து கம்பியில் உரசிப் பாருங்கள் என அந்த கம்பனியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தார்கள். அடுத்த விடயம் சீமெந்து தூண் போடாமல் இரும்பு குழாய்கள்**

**போடப்பட்டதனால் மாடு பாயும் போதே அந்த குழாய்கள் வளைந்து விடுகின்றன. அந்த குழாய்களை வாங்குவதற்கான பண வசதி எம்மிடம் இல்லை. கம்பி முறிந்தால் அதனை மாற்றுவதற்கான மேலதிக கம்பி இருக்கவில்லை. அதனால் வேலி முழுவதும் செயலிழந்து போகிறது. பற்றறிக்கு ஐந்து ஆண்டுகள் உத்தரவாதம் இருப்பதாகச் சொன்ன போதிலும் மூன்று மாதத்தில் அது செயலிழந்து போனது. பணத்தை சேர்த்து எங்களையே பெற்றறியைப் போடுமாறு கம்பனி தெரிவித்தது. அவ்வாறு பல பிரச்சினைகள் இருக்கின்றன." என திருமதி. சஞ்ஜீவனி தெரிவித்தார்.**

அத்துடன் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மதுனாகல உள்ளிட்ட பல பிரதேசங்களில் உள்ள மின்சார வேலிகளும் இந்த வகையிலேயே செயலிழந்து இருப்பதனால் விவசாயிகள் நாளுக்கு நாள் கடும் அழுத்தத்துக்கு உள்ளாகியிருப்பதாக திரு. மதுனாகல சுமனாநந்த தெரிவித்தார்.

**"இந்த யானை வேலி அமைக்கப்பட்டு ஒரு மாதம் செல்லவில்லை. யானைகள் யானை வேலியை உடைத்து அழித்து விட்டன. இப்போது ஒரு கம்பி கூட இல்லை. எப்போதும் யானைகள் ஊருக்குள் வருகின்றன. மனிதர்களை தாக்குகின்றன. பயிர்களை அழிக்கின்றன. நாம் வாழ வழியின்றி இருக்கிறோம்" எனவும் திரு. சுமனாநந்த தெரிவித்தார்.**

இவ்வாறு பெருமளவு மக்களின் பணத்தைச் செலவிட்டு யானை வேலிகள் அமைக்கப்பட்ட போதிலும், அவை முறையான பராமரிப்பு இன்மை காரணமாக செயலிழந்து காட்டில் மறைந்து போகின்றன. அதனால் காட்டு யானைகள் ஊருக்குள் வந்து பயிர்களை சேதப்படுத்துவதுடன், சொத்துக்களுக்கான இழப்பு மற்றும் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. யானைகளும் உயிரிழக்கும் நிலை உருவாகியுள்ளது. சூரியவெவ மதுனாகல யானை வேலி அதற்குச் சிறந்த உதாரணமாகும். அது ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் 75 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டது. யானை வேலி அமைக்கப்பட்டு சில மாதங்களில் செயலிழந்துள்ளது. தற்போது ஆங்காங்கே சில தூண்கள் மட்டுமே எஞ்சியுள்ளன.

அத்துடன் அம்பாந்தோட்டை லுணுகம்வெஹர பிரதேச செயலகப் பிரிவில் உள்ள அகுணுகொல வெவ மின்சார வேலி அமைக்கப்பட்டு இரண்டு மாதம் செல்வதற்குள் அங்கிருந்த மின்சாரக் கம்பிகள் அனைத்தும் கழட்டப்பட்டிருந்ததாகவும், அதற்குரிய சூரிய மின்கலங்கள் அனைத்தும் தற்போது திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கிறார்கள்.

அகுணுகொல வெவ கிராம அலுவலர் பிரிவில் மட்டும் காட்டு யானைகளால் பாதிக்கப்படும் 110 குடும்பங்களுக்காக வன சீவராசிகள் திணைக்கள நிதி ஒதுக்கீட்டில் 30 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு அகுணுகொல வெவ தொடக்கம் குமாரகம வரையான 12 கிலோமீற்றர் தூரத்துக்கு யானைகளின் பிரச்சினைக்கு தீர்வாக யானை வேலி அமைக்கப்பட்டது. ஆனால் அதுவும் நிதி வீண் விரயத்தை மட்டுமே ஏற்படுத்தியதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

தரமான யானை வேலிககளை இதுவரை இலங்கையில் தான் காணவில்லை என மாத்தளை மாவட்டத்தில் நிலவும் யானை - மனித மோதல் நிலையை ஆய்வு செய்வதற்காக **2018 ஜூலை 08 திகதி** மேற்கொண்ட கள விஜயத்தின் போது வன சீவராசிகள் மற்றும் பேண்தகு அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்திருந்தார்.

### யானைகளுக்கும் உணவு தேவை

குறிப்பாக தமது வாழ்விடங்கள் அழிக்கப்பட்டதனால் அவற்றுக்கு தேவையான



உணவு மற்றும் தண்ணீரைப் பெற முடியாமை காரணமாகவே இவ்வாறான மின்சார வேலிகளையும் முறியடித்து காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைகின்றன என சூழலியலாளர் திரு. சஜீவ சாமிக்கர சுட்டிக்காட்டுகிறார்.

காட்டு யானைகள் தமக்கேயுரிய நடத்தை பாங்குக்கு அமைய ஆகக்குறைந்தது நாளொன்றுக்கு 5 தொடக்கம் 8 கிலோமீற்றர் தூரத்துக்கு உணவு தேடி நடக்கின்றன. அதற்கமைய யானைகள் தோட்டத்துக்கு வருவதனை தடுக்க வேண்டும் எனின் அவற்றின் உணவுப் பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டும். அந்த விடயத்தை கருத்திலெடுத்து யானைகள் ஊருக்குள் நுழைவதனை தடுப்பதற்கும், அவற்றின் உணவுப் பிரச்சினையை தீர்ப்பதற்குமான முறைமையை கண்டுபிடிக்க வேண்டும். எவ்வாறு கிழிந்த காற்சட்டைக்கு துணி வைத்து தைப்பது போன்று பெருமளவு பணத்தை செலவிட்டு யானை வேலிகளை அமைப்பதனால் மட்டும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது.

“யானை வேலிகள் தொடர்பாக நிலவும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக புதிய செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதனை ஓர் ஆண்டில் நிறைவு செய்யலாம்.” என யானை வேலிகள் தொடர்பான இந்த பிரச்சினை தொடர்பில் விசாரித்த போது வன சீவராசிகள் பணிப்பாளர் நாயகம் திரு. எம். ஜீ.சீ. சூரியபண்டார தெரிவித்தார்.

**- ராஹுல் சமந்த ஹெட்டியாராச்சி**
**2018.10.26 “ரெச” பத்திரிகை**



## சமுர்த்தி அரசியல்மயப்படுத்தல் :

# 1.5 மில்லியன் ரூபாவுக்கு டீசேர்ட் கொள்வனவு ஒப்பந்தம்

ஜயந்த ஹேவாமான்னவிற்கு சமுர்த்தியால் வழங்கப்படும் கொடுப்பனவுகளைப் பெற தகுதியிருந்தும் அவருக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அது வழங்கப்படவில்லை. அவரது சிறுநீரகம் செயலிழந்திருப்பதால் பல வருடங்களாக அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைக்கு சென்று வருகிறார். நான்கு பிள்ளைகளுக்கு தகப்பனான அவர், தலசீமியா நோயால் பாதிப்புக்குள்ளாகிய தனது இரட்டைக் குழந்தைகளுக்காக மாதாந்தம் எட்டாயிரம் ரூபா செலவு செய்கின்றார்.

**“நானும் நோயுற்றிருப்பதால் எந்தவொரு தொழிலையும் செய்ய முடியாதுள்ளது. ஆகையால் சமுர்த்தி கொடுப்பனவை பெற்றுக்கொள்ளும் நோக்கில் அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தின் குறிப்பிட்ட அலுவலரிடம் விண்ணப்பமொன்றை சமர்ப்பித்துள்ளேன்.** ஆயினும் எனக்கு சமுர்த்தி கொடுப்பனவு வழங்காமையினால் இன்றைக்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் அது குறித்து மேன்முறையீடொன்றை தாக்கல் செய்துள்ளேன். ஆயினும் இதுவரை எனக்கு சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்படவில்லை. எனினும் வசதிபடைத்தவர்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.” என அம்பாந்தோட்டை, சிரிபோபுர, 12 ஆம் பிரிவில் குடியிருக்கும் ஜயந்த ஹோவாமான்ன (வயது38) தெரிவித்துள்ளார்.

ஹேவாமான்ன போன்ற தகுதியுடைய ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் சமுர்த்தி பயன்கள் கிடைக்கப்பெறாது ஒதுக்கப்பட்டுள்ளதுடன், சமுர்த்தி செலவுகள் தொடர்பில் நடத்தப்பட்ட ஆய்வின் போது அதிகாரிகளால் 2019 ஆம் ஆண்டு முதல் ஒன்பது மாதங்களுக்குள் சமுர்த்தி கொடுப்பனவு வழங்கும் வைபவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காகவும், வைபவத்திற்கு வருகை தரும் பயனாளிகளுக்கு டீ சேர்ட் வழங்குவதற்காக மூன்று மாதங்கள் சமுர்த்தி வழங்கக் கூடியவாறான தொகை செலவாகியுள்ளமை தெளிவானது.

கடந்த அரசாங்கத்தின் சிறுகைத்தொழில் மற்றும் சமூகமேம்பாட்டு அமைச்சின் கீழ் இடம்பெற்ற சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் வறுமையை ஒழிப்பதற்காக எனக்கூறி நாட்டு மக்களின் பணத்தில் நூற்று எழுபத்து ஒன்பது கோடியே தொண்ணூறு லட்சத்து இரண்டாயிரத்து ஐநூற்றுப் பதினைந்து (1,799,002,515/=) ரூபா எனும் தொகை 2019 ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் செப்டெம்பர் மாதம் வரை சமுர்த்தி கொடுப்பனவு வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், அதில் குறிப்பிட்ட வைபவத்திற்கு வருகை தந்தவர்களுக்கு **"டீ சேர்ட்டை"(T Shirt) வழங்குவதற்காக நூற்று நாற்பத்து ஒன்பதுகோடியே பத்தொன்பது லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து ஐநூறு ரூபாவும் (1,499,197,500/=) , இருபத்தொன்பது கோடியே தொண்ணூற்று எட்டு லட்சத்து ஐயாயிரத்து பதினாறு ரூபா (299,805,016) வைபவங்களுக்காகவும் செலவிடப்பட்டுள்ளதென** தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொண்ட தகவல்களில் தெளிவானது.


2018 வருடத்தின் போது சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கும் வைபவம் மற்றும் ஊடக பிரச்சாரங்களுக்காக ஒருகோடியே ஆறுலட்சத்துக்கும் அதிகமான (10,672,695/=) தொகை செலவிடப்பட்டுள்ளது. அத்துடன 2017 ஆம் ஆண்டிலும் 2016 ஆம் ஆண்டிலும் வைபவங்களுக்காக எவ்வகையிலும் பணம் செலவிடாது வறுமையான மக்களுக்கு தேவையான சமுர்த்தி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாக தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களில் வெளிவந்துள்ளன.

### அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற சமுர்த்தி கொடுப்பனவு வழங்கும் வைபவம்

குறிப்பிட்ட இந்தத் தொகையை இங்கு குறிப்பிடப்பட்ட தொகை மூலம் மூன்று மாதங்களுக்கு அம் மக்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவு வழங்கியிருந்ததுடன் அது வழங்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் 5% மட்டுமே. சமுர்த்தி கொடுப்பனவாக அரசாங்கத்தால் ஒரு குடும்பத்திற்கு மாதம் 1500 ரூபா தொடக்கம் 3500 ரூபா வரை வழங்கப்படுவதுடன் அது சமுர்த்தி பயன்பெறும் பயனாளிகளது குடும்ப எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்படுகின்றது.

2019 ஆண்டின்போது சமுர்த்தி கொடுப்பனவு வழங்கும் வைபவத்திற்காக அதிகளவிலான நிதி அங்கு வருகைதந்திருந்த பொதுமக்களுக்கு டீ சேர்ட்டை விநியோகிக்க செலவிடப்பட்டிருந்த்தது. comfort International Lanka (Pvt) Ltd எனும் தனியார் நிறுவனத்துடன் குறிப்பிட்ட கொள்வனவு ஒப்பந்தம் செய்யபட்டதென தகவல் அறியும் சட்டத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களில் தெளிவானது.

எவ்வாறாயினும் டீ சேர்ட்களுக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதென தெரிவிக்கும் இரத்மலானை பிரதேசத்தில் comfort international Lanka (Pvt) Ltd எனும் தனியார் நிறுவனம் தொடர்பில்




நாம் தேடியறிந்த போது அவ்வாறான நிறுவனமொன்று தொடர்பாக தகவல் திரட்டிக்கொள்ள முடியாதுபோனதுடன், பின்னர் இணையத்தளத்தில் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கமைய அதில் குறிப்பிடப்படிருந்த தொலைபேசி இலக்கத்தை பெற்றுத் தொலைபேசி அழைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டபோதும் அந்த இலக்கம் பயன்பாட்டில் இல்லாமையால் நாங்கள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிப் பிரிவிடம் தகவல் கோரியபோது குறிப்பிட்ட டீ சேர்ட்கள் உற்பத்தி செய்தமை தொடர்பிலும், மேலும் சில விடயங்கள் தொடர்பிலும் கணக்காய்வொன்று நடத்துவதற்காக குறிப்பிட்ட ஆவணங்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளதால் குறிப்பிட்ட நிறுவனம் தொடர்பில் சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையில் எந்தவொரு தகவலுமில்லையென அதன் அலுவலரொருவர் தெரிவித்தார்.

**“இது குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது கணக்காய்வாளர் திணைக்களத்தில் சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபைக்கு பொறுப்பாக கடமையாற்றும் கணக்காய்வு அத்தியட்சகர் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் கடந்த ஆட்சியின்போது மேற்கொள்ளப்பட்ட டீ சேர்ட்களை வழங்குதல், மேலும் சில விடயங்களுக்காக கணக்காய்வொன்று நடத்துவதாகவும் அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் கணக்காய்வு நடவடிக்கைகள் தற்சமயம் நிறைவடைந்துவருதாகவும் தெரிவித்தனர். ஆயினும் அதன் இரகசியத்தன்மையை பாதுகாக்க வேண்டியுள்ளதால் தன்னால் குறிப்பிட்ட தகவலை வழங்க முடியாதென கணக்காய்வு அத்தியட்சகர் தெரிவித்தார்.**

எவ்வாறாயினும் இவ்வாறான பாரிய தொகையை சமுர்த்தி கொடுப்பனவுகளை வழங்கும் வைபவத்தின் பல்வேறு நடவடிக்கைகளுக்காக செலவிடுதல் குறித்து கடந்த அரசாங்கத்தில் ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சிற்குப் பெறுப்பாக இருந்த முன்னால் அமைச்சர் தயா கமகே அவர்களிடம் அது குறித்து விசாரித்த



போது இந்த டீ சேர்ட் ஒன்று அண்ணளவாக ரூபா 450 ஐ விட குறைந்த தொகைக்குப் பெற்று அதை சமுர்த்தி பயனாளிகளுக்கே வழங்க நடவடிக்கை மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

ஆயினும் முன்னால் அமைச்சர் தெரிவிக்கையில் டீ சேர்ட்களை அச்சிட்டு ஒரு மாவட்டத்தில் ஐயாயிரம் (5000) நபர்கள் என்ற அடிப்படையில் 25 மாவட்டங்களில் 125,000 சமுர்த்தி பயனாளிகளை தெளிவூட்டுவதற்காகவே இந்நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது. அவரின் கருத்துக்கமைய இதன் செலவு ஐந்து கோடியே அறுபத்திரெண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவாகும் (56,250,000). ஆயினும் அதற்காக 149 கோடி ரூபா செலவிடப்பட்டமை தொடர்பில் தாம் அறிந்திருக்கவில்லையெனவும் தெரிவித்தார்.

டீ சேர்ட் கொள்வனவு ஒப்பந்தக்காரரான comfort international (Pvt) Ltd எனும் தனியார் நிறுவனத்தை எவ்வாறு தெரிவு செய்தனர் மற்றும் அவர்களுக்குப் பணம்செலுத்தப்பட்ட விதம் தொடர்பில் தனக்கு தெரியாதெனவும் முன்னால் அமைச்சர் தயாகமகே தெரிவித்தார். இது குறித்து தகவல் அறிவதற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலர்களைத் தொடர்பு கொண்ட போதிலும் அவர்கள் பதிலளிக்க மறுத்தனர்.

அத்துடன் குறித்த 2019 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏனைய நிதிச்செலவுகளைச் செய்தமை தொடர்பான விடயங்களை வினவிய போது சமுர்த்தி பயனாளிகளுக்கு சமுர்த்தி கொடுப்பனவு வழங்கும்போது வைபவத்திற்காக இருபத்து ஒன்பது கோடியே பன்னிரெண்டு லட்சத்து பத்தாயிரத்து நாணூற்று முப்பத்து நான்கு ரூபா (291,210,434/=) செலவிடப்பட்டுள்ளது. அதே சமயம் சுவரொட்டி, பதாதைகள் என்பவற்றிற்காக எண்பத்தொரு லட்சத்து தொண்ணூராயிரம் (8,190,000/=) ரூபா செலவு செய்துள்ளதாகத் தெளிவாகியுள்ளது. அத்துடன் இந்த வைபவத்திற்காக பத்திரிகை அறிவித்தல் உட்பட ஊடக அறிவித்தலுக்காக நான்கு லட்சத்து நாலாயிரத்து எண்ணூற்று எண்பத்து ஒரு ரூபா (404,581/= செலவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான பாரிய தொகை கடந்த கால அரசாங்கத்தின் மூலம் சமுர்த்தி கொடுப்பனவு வழங்கும் வைபவத்திற்காக செலவு செய்தாலும் கடந்த வருடங்களில் கொடுப்பனவு வழங்கப்பட்டவர்களது எண்ணிக்கை தொடர்பிலும் அதற்காக வழங்கப்பட்ட தொகையின் பெறுமதி தொடர்பிலும் கருத்திற்கொள்ளும் போது முன்னைய வருடங்களில் சமுர்த்தி கொடுப்பனவுகளை

வழங்குவதற்காக செலவு செய்த தொகையை விடக் குறைந்த தொகையையே இந்த காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் ஒரு குடும்பத்திற்கு சமுர்த்தி கொடுப்பனவு 10.6 % ஆல் குறைந்துள்ளதென உத்தியோகபூர்வ அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. அதன் போது 2018 ஆம் ஆண்டு சமுர்த்தி பயனாளி குடும்பம் ஒன்றிற்கு ஒப்பீட்டளவில் 2363 ரூபா வழங்கப்படுள்ளதுடன் சமுர்த்தி கொடுப்பனவு தொகை 2019 ஆம் ஆண்டின் போது 2114 வரை குறைவடைந்துள்ளது.

2019 ஆம் ஆண்டில் ஒன்பது மாதங்களுக்கு ஒப்பீட்டளவில் கடந்த 2016 ஆம் ஆண்டு தொடக்கம் முறையாக 2018 ஆம் ஆண்டு வரை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக இவ்வாறான முறையில் சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதுடன், 2019 ஆண்டு ஜனவரி தொடக்கம் செப்டெம்பர் மாதம் வரை சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தாலும் அதில் வழங்கப்பட்ட தொகை ஏனைய வருடங்களைவிட குறைந்த தொகையிலேயே வழங்கப்பட்டது.

**(தகவல் அறியும் சட்டத்தில் மூலம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்ளத்தால் பெற்றுக்கொண்ட தகவல்கள்)**

**வறுமையை ஒழித்தல் மனித உரிமையை பாதுகாக்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் சமுர்த்தி கொடுப்பனவு வழங்கும் செயன்முறையில் தமது அதிகாரத்தை மேம்படுத்த நாட்டு மக்களின் வரி பணம் இவ்வாறாக நாசம் செய்யப்படுவதால் நாட்டு மக்கள் மென்மேலும் கடன் சுமைக்குள்ளாகி வறுமையடையச் செய்கின்றது.**

“தமது பணத்தை தாம் செலவு செய்வது மற்றும் மற்றவர்களது பணத்தை செலவு செய்தலுக்கிடையில் சிக்கல்கள் மேலெழுந்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். நாட்டின் அரசாங்கமென்றின் வருமானம் செலவுடன் ஒப்பிடும் போது பயனற்ற செலவுகளுக்கும் வீண் செலவுகளை குறைத்துக்கொள்வதற்கான முயற்சியும் செலவிடும் அனைத்து ரூபாவிற்கும் அதைவிட பெறுமதி சேரும் வகையில் செலவுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.” என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறையின் பேராசிரியர் சிரிமல் அபேரத்தன அவர்கள் தெரிவித்தார். “ஆயினும் இவ்வாறு செலவு செய்வதன் நோக்கம் அனேகமாக பொருளாதார நோக்கமற்றதெனவும், அது ஏனைய நோக்கங்களுக்காக பயன்படுத்திக்கொள்ளப்படுவதன் ஊடாக எந்தவொரு நாட்டினதும் பொருளாதாரத்திற்கு அழுத்தம் ஏற்படக்கூடும்.

இந்த வகையில் பாரிய தொகையை செலவு செய்து வைபவங்களை நடத்துவதால் சமுர்த்தி கொடுப்பனவு வழங்கும் வைபவம் நடத்தப்பட்டாலும் அன்றைய தினம் குறிப்பிட்ட கொடுப்பனவு ஒரு அடையாள நிகழ்வாகவே இடம்பெறும். அதைத் தொடர்ந்து பிரதேச மட்டத்தில் அரசியல்வாதிகளால் மீண்டும் சமுர்த்தி பயனாளிகளை பிரதேசச் செயலகத்திற்கு அழைத்து குறிப்பட்ட சமுரத்தி கொடுப்பனவுகளை வழங்குவதைக் காணக்கூடியதாக இருந்தது. சமுர்த்தி பயனாளிகளுக்கு பிரதான வைபவத்தின் பின்னர் குறிப்பிட்ட தொகையை பெற்றுக்கொள்ள மீண்டும் மீண்டும் வைபவங்களுக்கு பங்குபற்ற வேண்டியதாயிற்றென சமுர்த்தி பயனாளிகள் தெரிவித்தனர்.

**சமுர்த்தி கொடுப்பனவு**

ஒருவரால் கோரப்பட்டால் அதற்கான செயன்முறையொன்று காணப்படுகின்றது. அங்கு குறிப்பிட்ட கோரிக்கையாளர் தனது கோரிக்கையை கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு பொறுப்பாக இருந்து செயற்படும்

சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், பிரதேச செயலாளர், பிரதேசச் செயலகத்திற்கு, மாவட்டச் செயலகத்திற்கு அல்லது சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதானச் செயலகத்திற்கு முன்வைக்க முடியும். அதற்கமைய குறிப்பிட்ட கோரிக்கை தொடர்பில் குழுவொன்றின் ஊடாக பகுப்பாய்வு செய்து பிரதேச செயலாளரின் பரிந்துரைகளுடன் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பளர் நாயகத்தின் அனுமதிக்கமைய சமுர்த்தி கொடுப்பனவை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் கிடைக்கப்பெற்ற தகவல்களில் தெளிவானது.

அதன்போது சமுர்த்தி கொடுப்பனவொன்றை வழங்குவதற்கான தகைமைகள் யாது என்பது குறித்து ஆராயும் போது, குடும்ப அங்கத்தவர்களது எண்ணிக்கை, பெண் தலைமைத்துவ குடும்பங்கள், பெற்றோரை இழந்தவர்கள், இயற்கை அனர்த்தங்களுக்கு தொடர்ச்சியாக உட்படுபவர்கள், போன்ற விடயங்கள் தொடர்பில் சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாடுகளுக்கு முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். அதற்காக பிரதேச செயலாளர், உப பிரதேச செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் குழுத்தலைவர், சமுர்த்தி மத்திய நிலைய முகாமையாளர், சமுர்த்தி பிரதேச அமைப்பின் பணிப்பாளர் நாயகத்தால் பெயரிடப்படும் அங்கத்தவர்கள் மூவர் அடங்கிய பிரதேச குழுவின் ஊடாகவும், கிராம உத்தியோகத்தர் பிரிவின் குழுவின் ஊடாகவும் இந்தத் தெரிவு இடம்பெறுமென சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களில் தெளிவானது.

**ஆயினும் இது குறித்து மேற்கொள்ளப்பட்ட தேடலின் போது சமுர்த்தி கொடுப்பனவு பெறப்பட வேண்டிய குடும்பங்களுக்காக குறிப்பிட்ட கொடுப்பனவு கிடைக்கப்பெறவில்லையெனும் தகவல் தெளிவாகியுள்ளது. இதற்கு குறிப்பிட்ட பிரதேசத்தில் சமுர்த்தி பயனாளிகளை தெரிவு செய்யும் போது ஆளும்கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதிநிதிகளால் சமுர்த்தி கொடுப்பனவு வழங்குவதற்கு தயாரிக்கப்பட்ட பட்டியல் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி குழுவினாலும், இந்த அரசியல் பிரதிநிதிகளாலும் தெரிவு செய்யப்பட்ட பட்டியலுடன் இரண்டு பட்டியல்கள் காணப்படும் நபர்களுக்கு மட்டும் சமுர்த்தி கொடுப்பனவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.** இதன் போது தமது அரசியல் கட்சிக்கு சார்பானவர்களுக்கு மட்டும் சமுர்த்தி கொடுப்பனவு கிடைக்கப்பெறும். இது குறித்து நாட்டில் சில மாவட்டங்களில் சில பிரதேசச் செயலாளர்கள், சில கிராம உத்தியோகத்தர்களிடம் விசாரித்த போது அவர்களால் தயாரிக்கப்பட்ட குழுக்களில் இல்லாத நபர்களுக்கு சமுர்த்தி கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அதில் இருந்த அனேகமானோருக்கு சமுர்த்தி கிடைக்கப்பெறவில்லையென தெரிவித்தனர்.

இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சமுர்த்தி கொடுப்பனவு கிடைக்கவேண்டிய குடும்பங்களில் அனேகமான குடும்பங்களுக்கு கடந்த காலங்களில் சமுர்த்தி கிடைக்கப்பெறாததால் பல்வேறு எதிர்ப்புகள் காணப்பட்டன.

**“இந்த சூரியவெவ நபத கஸ்பேவ பிரிவான எங்கள் ஊரில் வயல் காணிகள் உள்ள அனைவருக்கும் சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் எனது பெயர் மற்றும் எனது கிராமத்தின் சிலரது பெயர்கள் தெரிவுசெய்யப்பட்ட போதும் அவர்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்படவில்லை.”** என அம்பாந்தோட்டை சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவின், பிரியந்தி அவர்கள் தெரிவித்தார்.

**இராஹுல சமந்த ஹெட்டியாரச்சி**



# மூன்று கோடி ரூபாய்

## செலவு செய்து தயாரிக்கப்பட்ட அம்பலாந்தோட்டை வாந்துருப்ப வீதி தர நிர்ணயங்களுக்கு அமைய உருவாக்கப்படவிலலை. தகவல் அறியும் உரிமைச் சட்டம் அனைத்தையும் அம்பலமாக்கியுள்ளது.

அம்பலாந்தொட்டை வாந்துருப்ப வீதி தயாரிக்கப்பட்டு ஒரு சில மாதங்கள் கடந்து செல்ல முன்னர் இடத்துக்கிடம் குழிகளாக மாறியுள்ளன. இவ்வீதி ஏற்புடைய தரநிர்ணயங்களுக்கு அமைய உருவாக்கப்படவில்லை என பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அம்பாந்தோட்டை மாவட்டச் செயலாளர் அலுவலகத்தின் விலைமனுகோரல் மற்றும் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவ்வீதியைத் தயாரிப்பதற்கான அரசின் மதிப்பீட்டுத் தொகை 35775611.54 ரூபா ஆகும். ஆனால் கொந்தராத்துக்காரரால் மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை 29123711.00 என தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை வழங்கிய தகவல்கள் வெளிப்படுத்தியுள்ளன.

இதற்கு அமைவாக மேற்படி நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2017.10.30 ஆம் திகதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட அம்பலாந்தோட்டை **வாந்துருப்ப வீதியின் நீளம் 1 கிலோ மீற்றர் 600 மீற்றராகும். அகலம் மீற்றர் 6,5,4 என்ற வகையில்** வீதி தயாரிக்கப்பட்டுள்ளது.

தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திஸ்ஸமஹாராம பிராந்திய பொறியியலாளரின் மேற்பார்வையின் கீழ் அமைக்கப்பட்ட இந்த வீதி முறைகேடாக உருவாக்கப்பட்ட வீதிக்கு மற்றுமோர் உதாரணமாகும். இதற்கான முக்கிய காரணி விரிக்கப்பட்ட காபற்றின் கனளவு இடத்துக்கிடம் ஏற்புடைய தரநிர்ணயங்கள் இன்றி, இடையிடையே மேடுகளையும்

பள்ளங்களையும் உருவாக்கியுள்ளது. அதே சமயம் வீதியின் இரு மருங்கிலும் போடப்பட்ட மணல் தரநிர்ணயம் இன்றி போடப்பட்டுள்ளமையால் இவ்வீதியில் பயணிக்கும் பயணிகள் பல்வேறு கஷ்டங்களையும் சிரமங்களையும் எதிர்நோக்குகின்றனர்.

**எவ்வாறாயினும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கேற்ப தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களுக்கமைய, புதிதாக அமைக்கப்பட்ட காப்பற் படலத்தின் கனஅளவு 50 மில்லி மீற்றருக்கு மேற்படாதவாறு அமைய வேண்டும். வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக பெற்றுக்கொண்ட தகவல்களுக்கமைய குறைந்த பட்சம் 33 மில்லி மீற்றர் கனஅளவிற்கு குறையக் கூடாது என குறித்துரைக்கப்பட்டுள்ளது.**

ஆனால், இவ்வீதி புனரமைக்கப்பட்டு ஒரு சில நாட்கள் கடந்து செல்ல முன்னர் இவ்வீதி ஆரம்பிக்கப்படும் அமைவிடமான அம்பலாந்தோட்டை நகரத்தின் அருகே நீர் வழங்கல் சபையினால் நீர்க்கசிவை சீரமைப்பதற்கு இவ்வீதியில் மேற்கொள்ளப்பட்ட பழுதை பரிசீலனை செய்த போது மேற்படி அமைவிடத்தின் காப்பற் கனளவு 10 மில்லி மீற்றருக்கும் 12 மில்லி மீற்றருக்கும் இடையே அமைந்திருந்தது. இதற்கமைய இவ்வீதியின் காப்பற்றின் கனளவு இருக்க வேண்டிய அளவை விட 20 மில்லி மீற்றர் குறைவாகவே அமைந்திருந்தது. அனேகமான இடங்களில் இக்குறைபாடு காணப்பட்டது.

எவ்வாறாயினும் இரண்டு கோடியே 91 இலட்சம் ரூபாய்க்கு (29123711.00) மேலதிகமான பணம் செலவிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வீதி பொதுவாக கொந்தராத்து முடிந்தவுடன் அரசு தக்க வைத்துக்கொள்ளும் பணத்தைத் தவிர மற்றைய சகல நிதியும் விடுவிக்கப்பட்டிருந்தது, என தகவல்கள் மூலம் அறிய முடிந்தது. அதே சமயம் இவ்வீதி தொடர்பாக இத்தகைய குறைபாடுகள் இருந்த போதிலும் இது சம்பந்தமான மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எதுவிதமான தகவல்களும் அறிக்கையிடப்படவில்லை எனவும் பெற்றுக்கொண்ட தகவல்கள் அம்பலப்படுத்தின.

இப்பாதை அமைத்து முடிந்த பின்பு பிராந்திய பொறியியலாளரைப் போலவே, மாவட்டப் பொறியியலாளர்களும் இரசாயன ஆய்வுகூட உதவியாளர் ஒருவரும் வீதியின் தரநிர்ணயத்தை பரிசீலனை செய்துள்ளார்கள். ஆனால், மேற்படி குறைபாடுகளை அவர்கள் அறிந்திருக்கவில்லை. இது பெரும் ஆச்சரியத்திற்குரிய விடயம் என பிரதேச மக்கள் எடுத்துரைக்கின்றனர்.

இது தொடர்பாக தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அம்பாந்தோட்டை மாவட்ட பொறியியலாளரிடம் விசாரிக்கப்பட்டது. அதன் போது இது தொடர்பாக தனக்கு எதுவிதப் பதிலும் கூற முடியாது எனவும் தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளரிடம் இது பற்றி விசாரிக்குமாறும் கூறப்பட்டது. இதற்கமைய தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளரான திரு. உபாலி லியனகேவிடம் விசாரித்த போது, தனக்கு இவ்வீதியின் குறைபாடுகள் பற்றி எதுவித முறைப்பாடோ அல்லது அறிக்கையோ கிடைக்கவில்லை எனவும், எதிர்காலத்தில் இது தொடர்பாகத் தேடலில் ஈடுபட முயற்சிப்பதாகவும் கூறினார்.

அதே சமயம் இவ்வாறாகப் பாரிய நிதியை செலவு செய்து அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள் உரிய தரநிர்ணயத்ததுடன் அமைக்கப்பட்டுள்ளனவா என கண்டறியப் போவதாகவும் அவ்வாறு தரநிர்ணயங்கள் இல்லாத கருத்திட்டங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு உரிய அதிகாரிகளை அறிவுறுத்துவதாகவும் கூறினார். இது பற்றி அமைச்சர் மஹிந்த அமரவீரவும் மேற்கண்ட தகவல்களையே வழங்கினார்.

**ராஹுல் சமந்த ஹெட்டியாராச்சி**



*http://staging.globalpressjournal.com/*

# நாட்டில் நெல் தட்டுப்பாடு இல்லை

## அரிசி மாஃபியாவின் உண்மைக் கதை

2015 சிறுபோகத்திலிருந்து 2019-2020 பெரும்போகம் வரை ஒட்டுமொத்த நெல் உற்பத்தியில் 1.88% ஐ மட்டுமே அரசாங்கம் கொள்வனவு செய்தது.

கொரோனாத் தொற்றின் முன்னிலையில் உலகின் பல நாடுகளைப் போன்றே, இலங்கையும் மிகக் கஷ்டமான நிலைக்கு ஆளாகியுள்ள தருணத்தில், அதனூடாகப் பெரும்பாலான துறைகள் மீது பாரிய தாக்கம் விளைவிக்கப்பட்டுள்ளது. அவற்றிடையே நெற்செய்கைத் துறையும் ஒன்று. எவ்வாறாயினும் நெல்லைப் பயிரிடுவோர் முகங்கொடுக்கும் நிலைமை இன்று நேற்றுத் தோன்றியதல்ல. இந்த நாட்டை ஆண்ட பெரும்பாலான அரசாங்கங்கள், இதற்கான பல்வேறு வேலைத்திட்டங்களைப் போன்றே ஆலோசனைகளைக் கொண்டு வந்த போதும், அதற்கான உண்மைத் தீர்வொன்று இதுவரை கிடைக்காத பின்னணியில் நெல் மற்றும் அரிசியின் விலைகள் தொடர்பிலான தீர்மானமெடுத்தல்கள், அந்தந்தக் காலங்களில்

காணப்பட்ட அரசியல் விடயங்களுக்கு மட்டுமே மட்டுப்பட்டுள்ளது.

குறிப்பாக நெல்லைக் கொள்வனவு செய்வது தொடர்பில் 2020ம் ஆண்டு முதற் காலாண்டில், பெரியளவில் பேசப்பட்டாலும் அதுவும் நடைமுறைச் சாத்தியமின்றிப் போனது என விவசாய அமைப்புகளைப் போன்றே, விவசாயிகளும் சுட்டிக் காட்டுகின்றனர். குறிப்பாக இங்கு கொள்வனவுக்கான நிர்ணயிக்கப்பட்ட விலையாக 50 ரூபாவை அரசாங்கம் விதித்திருந்தாலும், பல நெல் ஆலை உரிமையாளர்களால், நெல் சுமார் முப்பது, முப்பத்தைந்து ரூபாவுக்கே கொள்வனவு செய்யப்பட்டது என விவசாய அமைப்புகள் சுட்டிக் காட்டுகின்றன.

**எவ்வாறாயினும் அரசியல் வாக்குறுதிகளில் ஒன்றாகவும் இருந்த நெல்லுக்கான நிர்ணய விலையைப் பெற்றுத் தருவதற்காக செயற்பட்ட அரசாங்கத்திடம், தமது நெற் தொகையை சந்தைப்படுத்தும் ஆற்றல் இல்லாதிருந்த பின்னணியில் அதற்கான தீர்வாக அரசாங்கத்தால், நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு உதவியாக, நெல்லைக் கொள்வனவு செய்வதில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டது. ஆனால், இங்கு அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட அதிகபட்ச நிர்ணய விலைக்கு பெரிய அளவிலான நெல் ஆலைகளின் உரிமையாளர்கள் இணங்காததால் மீண்டும், பெரிய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களால் விதிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள நேர்ந்தது.**

**வெளிநாடுகளிலிருந்து அரிசியைத் தருவிப்பதற்கான தேவை அரசாங்கத்திற்கு இல்லாதவாறு நாட்டில் நெல் உற்பத்தி இடம்பெற்றாலும், இந்த வகையில் உற்பத்தியில் நூற்றுக்கு 94 வீதத்திற்கு அதிகமான அளவிலான கொள்வனவை தனியார் துறையின் நெல் ஆலை உரிமையாளர்கள் மேற்கொள்வதால் அரசாங்கத்திற்கு அரிசியின் விலையைப் போன்றே நெல்லின் கொள்வனவு விலையையும் கட்டுப்படுத்த முடியாமற் போயுள்ளது. இவ்வாறு, நெல் குறைவின்றியிருந்தாலும், நெல்லைக் கொள்வனவு செய்யும் பெரும்பான்மையானது, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு வெளியிலிருப்பது அரிசியின் விலை இந்தளவுக்கு உயர்வதற்குப் பிரதானமான காரணமாகும். அதனூடாக நாட்டில் பாரிய அரிசி மாஃபியாவொன்று உருவாகியுள்ளது.**

கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர முடியாத மட்டத்தில், நாட்டில் காணப்படும் அரிசியின் விலையை கட்டுப்படுத்திக் கொள்வதற்கும், அவ்வாறே, அரிசித் தட்டுப்பாட்டை உருவாக்குமளவுக்கு பாரிய அளவில் தனியார் அரிசி ஆலை உரிமையாளர்களின் ஏகபோகம் பேணப்பட்டு வருமளவுக்கு இலங்கையின் நெற் கொள்வனவு செயற்பாடு தனியார் துறையிடம் காணப்படுகிறது என தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் மூலமும், கமத்தொழிற் சேவைகள் திணைக்களத்தின் ஊடாகவும் பெற்றுக்கொண்ட, கடந்த சில ஆண்டுகளுக்குரிய தகவல்களின் மூலம் தெளிவாக வெளியாகியுள்ளது.

அத்தகவல்களுக்கு ஏற்ப, **கடந்த 2015ம் ஆண்டிலிருந்து 2020 வரை** நாட்டில் நெல் உற்பத்திச் செயற்பாடு தொடர்பில் ஆராய்ந்து பார்க்கும் போது, இப்போது நாட்டில் காணப்படும் **ஒட்டுமொத்த வயல் நிலங்களின் அளவான 1,944,112 ஏக்கர் அளவில்** அண்ணளவாக வருடாந்தம் மாற்றத்துடன் கூடிய சிறுபோகம் மற்றும் பெரும்போகத்தில் நெல் பயிரிடப்படுகின்றது. இவ்வாறு பயிரிடப்படும் நெல்பயிர்ச் செய்கையின் மூலம் சிறுபோகம் மற்றும் பெரும்போகங்களில், பெற்றுக்கொள்ளப்பட்ட அறுவடையின் அளவு முதலாவது குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

### நெல் மற்றும் அரிசிக்கான சந்தை

இவ்வாறு நாட்டில் நெல் உற்பத்தியொன்று இடம்பெற்றாலும், அந்நெல் உற்பத்தியின் மூலம் நெல் சந்தைப்படுத்தற் சபையால் வருடாந்தம் கொள்வனவு செய்யப்படும் நெல்லின் அளவு மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதன் மூலம் பெரிய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களால் சந்தையில் அதிகமாக நெல் மற்றும் அரிசியின் இருப்புகளை தம்வசப்படுத்தி ஏகபோகத்தைப் பேணி வருகின்றன.

| | பயிரிடப்பட்ட அளவு ஏக்கர் | பெற்றுக் கொண்ட அறுவடை (மெட்ரிக் தொன் MT) |
|---|---|---|
| 2015 சிறுபோகம் | 1,103,861.87 | 1,942,408 |
| 2015-2016 பெரும்போகம் | 1,169,137.27 | 2,902,693 |
| 2016 சிறுபோகம் | 1,268,174.52 | 1,517,392 |
| 2016-2017 பெரும்போகம் | 1,394,574.43 | 1,473,832 |
| 2017 சிறுபோகம் | 676,944.29 | 909,321 |
| 2017-2018 பெரும்போகம் | 1,568,684.28 | 2,396,926 |
| 2018 சிறுபோகம் | 868,029.33 | 1,532.905 |
| 2018-2019 பெரும்போகம் | 1,638,013.21 | 3,072,581 |
| 2019 சிறுபோகம் | 760,830.60 | 1,519,475 |
| 2019-2020 பெரும்போகம் | 1,655,256.94 | 3,196.752 |
| | | 1,95,54,964 |

குறிப்பு 1

*(மூலம்: சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தாலும் கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலமும் தகவல் அறியும் சட்டத்திற்கேற்ப பெற்றுக் கொண்ட தரவுகளாகும்)*

குறிப்பாக இங்கு அரிசிக்கான சந்தையில் அரசாங்க நிறுவனங்கள், நுகர்வோர், நெல் பயிரிடுவோர், தனியார் நெல் மற்றும் அரிசி விற்பனையாளர்கள், சிறிய மற்றும் நடுத்தர, பெரிய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் ஆகியோர் உள்ளடங்குவர். குறிப்பாக அரிசிக்கான கேள்வியானது சிவில் வாடிக்கையாளர்கள், முப்படையினர் மற்றும் அரசாங்க நிறுவனங்களிடமிருந்தே ஏற்படுகின்றது. **அரசாங்கத்தால் 6 முதல் 8% அளவில் மட்டும் நெல் கொள்வனவு செய்யப்படுவதுடன், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களாலும் கூட்டுறவு நிறுவனங்களாலும் 10%ம் மட்டில் கொள்வனவு செய்யப்படுகின்றது.** எஞ்சிய நெல்லின் அளவு பெரிய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களால் கொள்வனவு செய்யப்படுகின்றது.

கீழுள்ள தரவுகளுக்கு ஏற்ப, 2015 சிறுபோகத்திலிருந்து 2019/2020 பெரும்போகம் வரையான காலத்தில், நாட்டில் ஒட்டுமொத்த நெல் உற்பத்தி 19,554,964 (ஒரு கோடியே தொன்னூற்றைந்து லட்சத்து ஐம்பத்துநாலாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்துநான்கு) மெட்ரிக் தொன்னாகக் காணப்படுவதுடன், அதிலிருந்து, 369,183.8 (மூன்று லட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து நூற்றியென்பத்து மூன்று) மெட்ரிக் தொன்களே அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.  அது அக்காலப் பகுதியில் இடம்பெற்ற ஒட்டுமொத்த நெல் உற்பத்தியின் 1.88% மாகும்.

இதற்கேற்ப, நாட்டின் ஒட்டுமொத்த நெல் உற்பத்தியில் அதிகமான அளவு தனியார் வியாபாரிகளின் வசமுள்ளது என்பது தெரிகிறது. அவ்வாறே அறுவடைக் காலத்தில் பெருமளவிலான நெல், பெரிய அளவிலான ஆலைகளின் உரிமையாளர்களால் கொள்வனவு செய்யப்படுகின்றது. நாட்டில் பெரும்பான்மையான அரிசித் தொகையும் அவர்கள் வசமே உள்ளதென்பதைக் குறிப்பிட்டுக் கூறத் தேவையில்லை.

**அரசாங்கம் கொள்வனவு செய்துள்ள நெல்லின் அளவு (மெட்ரிக் தொன்)**


| | |
|---|---|
| 2015 | 130,529.8 (6.72%) |
| 2016 | 157,429 (3.56%) |
| 2017 | நெல் கொள்வனவு செய்யப்படவில்லை |
| 2018 | 6,687 (0.23%) |
| 2019 | 48,869 (1.12%) (மாவட்டச் செயலாளர்களால்) |
| 2019/2020 | பெரும்போகம் 25,869 (0.85 %) |
| 2020 சிறுபோகம் | நெல் கொள்வனவு செய்யப்படவில்லை |
| மொத்த அளவு | 369,183.8 |

**அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதிலுள்ள சிரமங்கள்**

நெல் சந்தைப்படுத்தல் சபையிடமுள்ள நாட்டின் 21 மாவட்டங்களில் 307 நெற் களஞ்சியப்படுத்தற் தொகுதிகள் காணப்படுவதுடன் அக்களஞ்சியசாலைகளில் **310,040 (மூன்று லட்சத்து பத்தாயிரத்து நாற்பது) மெட்ரிக் தொன்** அரிசியைக் களஞ்சியப்படுத்தும் வசதிகள் இருந்தாலும், அக்களஞ்சிய வசதிகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் போதுமானதாக இல்லாமை காரணமாக நெல் சந்தைப்படுத்தற் சபை நெல்லைக் கொள்வனவு செய்வதை மட்டுப்படுத்த நேர்கிறது. அவ்வாறே உரிய காலங்களில் அரசாங்கத்தால் பணம் வழங்கப்படாத காரணத்தால் நெல் சந்தைப்படுத்தற் சபைக்குப் பொருத்தமான காலத்தில் நெல்லைக் கொள்வனவு செய்ய முடியாமற் போவதால், ஏற்கனவே இருக்கின்ற நெற் களஞ்சியசாலைகளைக் கூட நிரப்ப முடியாமற் போகின்ற நிலைமை காணப்படுகின்றது.

**அவ்வாறே நெல் சந்தைப்படுத்தற் சபை அதிக விலைக்கு நெல்லைப் பெற்றுக் கொண்டாலும் அவர்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு உலர்த்திய நெல்லை விவசாயியால் வழங்கும் ஆற்றல் இல்லாத பின்னணியின் நன்மையை பெற்றுக் கொள்ளும் தனியார் அரிசி ஆலை உரிமையாளர்கள் விவசாயிகளிடமிருந்து அந்நெல்லைக் கொள்வனவு செய்து**

நெல் சந்தைப்படுத்தல் சபையினால் 2015 தொடக்கம் 2020 வரை வருடாந்தம் கொள்வனவு செய்த நெல்லின் அளவு




**தம்மிடமுள்ள நெல் உலர்த்தும் இயந்திரங்களைக் கொண்டு (dryer) உலர்த்திக் கொள்கின்றனர். எனினும் அவ்வாறான தொழில்நுட்ப வசதிகள் இல்லாதிருப்பதும் நெல் சந்தைப்படுத்தற் சபைக்குப் போதுமான நெல் இருப்புக் கிடைக்காதிருக்கக் காரணமாகியுள்ளது.**

**நெல் சந்தைப்படுத்தற் சபையால் 2015 முதல் 2020 வரை வருடாந்தம் கொள்வனவு செய்யப்பட்ட அளவு.**

**'அதிக விலைக்கு நெல் சந்தைப்படுத்தற் சபைக்கு நெல்லை விற்க நாம் விரும்புகிறோம். ஆனால், அவர்கள் கேட்கும் விதத்தில் நெல்லைக் கொடுக்க முயற்சிக்கும் போது விவசாயிகள் என்ற வகையில் நாம் பெரும் சிரமங்களுக்கு ஆளாகின்றோம். தனியார் ஆலை உரிமையாளர்கள் அருகில் வந்து நெல்லை**



www.facebook.com

**எடுத்துச் செல்கின்றனர். அது எங்களுக்கு வசதியானது"** என அம்பாந்தோட்டை பந்தகிரிய பிரதேச விவசாயியொருவரான **திரு. பிரியந்த கமகே** குறிப்பிட்டார்.

இதற்குச் சிறந்த உதாரணமாக **2020 சிறுபோகத்தில் 10,000 மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்படுவதற்காக அரசாங்கத்தால் 5000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும்** விவசாயிகளால் நெல் சந்தைப்படுத்தற் சபைக்குப் போதுமான நெல் வழங்கப்படாமையால், அரசாங்கத்தின் நெல் இருப்பும் குறைந்துள்ளது. அவ்வாறே பெற்றுக் கொள்ளப்படும் நெற்தொகையானது உரியவாறு விநியோகிக்கப்படாத சூழலில் கடந்த காலத்தில் பாரிய அளவிலான நெற்தொகையானது விலங்குணவாக மாற்றப்படவும் அழிக்கப்படவும் நேர்ந்த காரணத்தால் அரசாங்கத்திற்கு மில்லியன் கணக்கிலான நட்டமும் ஏற்பட்டது.

நெற் தொகைகளை விநியோகிப்பது தொடர்பிலும் நெற் சந்தைப்படுத்தற் சபைக்குப் பாரிய பிரச்சனை ஏற்பட்டுள்ளது. இதில் பெரும்போகத்திற்கான நெல்லின் கொள்வனவு மார்ச் மற்றும் மே மாதங்கள் வரை இடம்பெறுகின்றது. அவ்வாறு கொள்வனவு செய்யப்படும் நெற்தொகைகள், ஜுன், ஜுலை மாதங்களில் விநியோகிக்கப்பட்டு, மீண்டும் சிறுபோகத்தில் நெற்தொகைகளைக் கொள்வனவு செய்வதற்கான உரிய வேலைத்திட்டமொன்று நெல் சந்தைப்படுத்தற் சபையால் தயாரிக்கப்படவில்லை. பொதுவாக இலங்கைச் சந்தையில் டிசம்பர் முதல் ஜனவரி வரையான காலப்பகுதியில் நெல்லுக்கு உயர்ந்த விலை காணப்படும். அக்காலத்தில் நெல் சந்தைப்படுத்தற் சபையிடம் நெற்தொகை இருக்குமாயின் நெல் சந்தைப்படுத்தற் சபையால் இலகுவாக அந்நெற் தொகையை விற்பனை செய்யும் வாய்ப்பு ஏற்படலாம். ஆனால் நெல் சந்தைப்படுத்தற் சபையால் இனங்காணப்படாத இவ்வியாபாரச் சந்தர்ப்பங்களைத் தனியார் நெல் ஆலை உரிமையாளர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பாரிய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் ஒரு இயக்கமாகவும் இதனை நடத்தி வருகின்றனர்.

எவ்வாறாயினும் இதனுள் தனியார் ஆலை உரிமையாளர்கள் பாரிய இலாபம் பெற்றாலும் அவ்விலாபம் நுகர்வோருக்குக் கிட்டாத பின்னணியில் அரிசியின் விலை அதிகரிப்பும் தனியார் ஆலை உரிமையாளர்களின் தேவைகளுக்கு ஏற்பவே இடம்பெறுகின்றன. அது இப்போது அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட முடியாத மட்டத்திற்கு வந்துள்ளது.

**'இப்போது பெரிய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் சிலர் அரிசி மற்றும் நெற் சந்தைகளைக் கையாளுகின்றனர். அதனைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்தின் ஏற்புடைய அமைச்சு தலையிடுவதில்லை. அவர்களும் இதற்குள்ளே தனியான வியாபாரமொன்றைச் செய்கின்றனர்".** என இது தொடர்பான விசாரணையொன்றின் போது அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் ஏற்பாட்டாளர் திரு. நாமல் கருணாரத்ன அவர்கள் குறிப்பிட்டார்.

**'எங்களுக்கு ஒரு வருடத்திற்கு 36 இலட்சம் மெட்ரிக் தொன் நெல்லே தேவைப்படுகின்றது. ஒரு மாதத்திற்கு எடுத்துக் கொண்டால், 03 இலட்சம் மெட்ரிக் தொன் நெல்லே தேவைப்படுகின்றது. கடந்த காலத்தில் சுமார் 60 இலட்சம் மெட்ரிக் தொன் நெல் சேர்ந்தது. அந்த நிலைமையில் எந்தவகையிலும் அரிசித் தட்டுப்பாடு வர வாய்ப்பில்லை. ஏனெனில் அடுத்த ஆண்டுக்கும் போதுமான நெல் இருந்தது. நெல் ஆலை உரிமையாளர்கள் இந்த போகத்தில் எடுக்கின்ற நெல்லை**

**இந்த போகத்திலேயே அரைப்பதில்லை. 06 மாதங்கள் வரை பழமையாக்குகின்றனர். ஏனெனில் பழையதாகும் போதுதான கேள்வி உருவாகும். ஆனால் பெரும்பான்மையானோர் அந்நெல்லை சுமாரி நாற்பது ரூபாய்க்கு வாங்கினர். இப்போது அவர்கள் அரிசித் தட்டுப்பாடொன்றைச் செயற்கையாக உருவாக்கி, நெல்லின் விலையை அதிகரிக்கின்றனர். அப்போது நெல் தட்டுப்பாடு காரணமாகவே அரிசி விலை அதிகரிக்கின்றது என வாடிக்கையாளர் நினைக்கிறார்."**

**'அவ்வாறே நாற்பது ரூபாய் மட்டில் எடுத்த நெல்லை ஐம்பது ரூபாயளவில் எடுத்ததாகச் சொல்லி எழுபது ரூபாய்க்கு விற்கும் போது இப் பாரிய அளவிலான நெல் ஆலைகளின் உரிமையாளர்கள் பெரும் இலாபமீட்டுகிறார்கள்"** என திரு நாமல் கருணாரத்ன சுட்டிக் காட்டுகின்றார்.

**அவ்வாறே நாட்டில் அரிசித் தட்டுப்பாடு இல்லையெனவும், அது உருவாக்கப்பட்ட ஒன்று எனவும், இந்நிலைமை காணப்பட்ட ஒவ்வொரு அரசாங்கத்திலும் இடம்பெறுகின்ற விடயம் எனவும் இந்நிலையை இல்லாதொழிப்பதற்காக அரசாங்கம் நெல் உற்பத்தியில் நூற்றுக்கு 20 வீதத்தையாவது பெற்றுக் கொண்டு இருப்பொன்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்** எனவும் அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் ஏற்பாட்டாளர் **திரு. நாமல் கருணாரத்ன** குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் செய்யப்பட்ட நேர்காணல் ஒன்றில் கருத்துத் தெரிவித்த **நெல் சந்தைப்படுத்தற் சபையின் தலைவர் கலாநிதி ஜட்டால் மான்னப்பெரும** அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்:

**'அடுத்த போகத்திலிருந்து உர மானியம் பெற்றுக்கொள்ளும் விவசாயிகளிடமிருந்து நெல் சந்தைப்படுத்தற் சபைக்கு நெல்லைப் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனையொன்று உள்ளது. அதில் நாம் ஒரு ஹெக்டாயரை விட அதிகமான வயற்காணிகளையுடைய விவசாயிகளிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட விலையில் 1000 அல்லது 500 கிலோ நெல்லைப் பெற்றுக்கொள்வதற்கான ஆலோசனையே கொண்டுவரப்பட்டுள்ளது. அவ்வாறே விவசாயிகள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உலர்த்தித் தரும் நெல்லை எடுப்பதால் நாம் தனியாக புதிய தொழில்நுட்பத்தை விருத்தி செய்யத் தேவையில்லை. அவ்வாறே, இப்போதிருக்கும் நெற் களஞ்சியங்களை நிரப்பிக் கொண்டால் எமக்கு அவை போதுமானதாகும். சந்தையைக் கையாள முடியும்."**

அவ்வாறே எதிர்காலத்தில் பி.எம்.பி. அரிசியை இதைவிடப் பத்துமடங்குக்கும் அதிகமாக சந்தையில் விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் ஜட்டால் மான்னப்பெரும் குறிப்பிட்டார்.

**செய்ய வேண்டியது என்ன?**

குறிப்பாக அரசாங்கத்தின் உதவி ஒத்தாசைகளுடன் அரசாங்கத்தால் வழங்கப்படும் உர மானியத்தையும் பெற்றுக் கொண்டும் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் நெற் பயிர்ச்செய்கையாளர்களின் விளைச்சலில் ஒரு பகுதியை நெல் சந்தைப்படுத்தற் சபைக்குக் கட்டாயமாக வழங்கும் விதிமுறையொன்றை உருவாக்க வேண்டும். அவ்வாறே தனியார் நெல் ஆலை உரிமையாளர்களைப் போன்று, விவசாயிகளிடம் சென்று நெல் சந்தைப்படுத்தற் சபையால் நெல்லைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான விதிமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். மரபுரீதியற்ற புதிய முறைகளை அறிமுகப்படுத்தி நெல் சந்தைப்படுத்தற் சபையின் அலுவலர்களும் அந்நவீன முறைகளுக்குப் பழக்கப்படுத்தப்பட்டு அவற்றை நடைமுறை ரீதியில் செயற்படுத்தக் கூடிய அலுவலர்களை அதில் ஈடுபடுத்த வேண்டும். அவ்வாறே அரசாங்கம், நெற் தொகைகளைப் பேணிச் சென்று இனங்காணப்பட்ட நெல் ஆலைகளின் ஊடாக அவற்றை அரிசியாக மாற்றி பி.எம்.பி அரிசியாக (PMB Rice) சந்தையில் விநியோகிக்கக் கூடிய வேலைத் திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்தும் வரை நாட்டில் காணப்படும் அரிசி மாஃபியாவிற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது.

**ராஹுல் சமந்த ஹெட்டிஆரச்சி**



# துறைமுகத்திற்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தை இரகசியமாய் விழுங்கும்

# இரு கம்பனிகள்

இந்நாட்டு துறைமுகங்களுக்குக் கிடைக்கின்ற பல்வேறு வருமானங்களுக்கிடையே துறைமுகங்களுக்கு வருகின்ற கப்பல்களால், செலுத்தப்பட வேண்டிய துறைமுகத் தொன் அளவுகளுக்கான கட்டணம் பிரதானமான வருமானமாகும். கப்பலொன்றின் ஒரு தொன்னுக்கான கட்டணம் அரை அமெரிக்க டொலராகும். அத்துடன் துறைமுகத்துக்கு வரும் பெரிய, சிறிய சுற்றுலாக் கப்பல்கள், யுத்தக் கப்பல்கள், வர்த்தகக் கப்பல்களைப் போன்றே கருத்திட்டங்களுக்காக வருகின்ற கப்பல்களும் அதனைக் கட்டாயமாகச் செலுத்த வேண்டும்.

**ஏனைய கப்பல்கள் இக்கட்டணத்தைச் செலுத்திக் கொண்டிருக்கும் போது திருகோணமலைத் துறைமுகத்தைப் பயன்படுத்தும் இரண்டு பிரதான கம்பனிகள் அக்கம்பனிகளுக்காக மூலப்பொருள் ஏற்றிவரும் கப்பல்களுக்கு செலுத்த வேண்டிய துறைமுகத் தொன் அளவுகளுக்கான கட்டணத்தைச் செலுத்தாமல் தவறவிட்டதால், துறைமுக அதிகார சபை ஒரு வருடத்தில் இழக்கும் வருமானம் சுமார் 12 கோடி ரூபாவாகும்.**

இந்த நாட்டில் அமைந்துள்ள வர்த்தகத் துறைமுகங்களுக்கிடையே முக்கிய சிறப்புவாய்ந்த திருகோணமலைத் துறைமுகத்திற்குள் நுழையும் அனைத்துக் கப்பல்களும், அவை துறைமுகச்



*பிறீமா லங்கா நிறுவனம்*

சூழலில் மேற்கொள்ளும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக அறவிடப்பட வேண்டிய, ஏற்றுக்கொள்ளப்பட்ட துறைமுகக் கட்டணத்தை துறைமுகத்தைப் பாவிக்கும் இந்திய எண்ணெய்க் கம்பனி மட்டுமே செலுத்திக் கொண்டிருக்கும் போது, அவ்வசதியைப் பயன்படுத்துகின்ற டோக்கியோ சீமெந்துக் கம்பனியும் பிறீமா கம்பனியும் செலுத்த வேண்டிய துறைமுக தொன் அளவுகளுக்கான கட்டணத்தை 16 வருடங்களாகச் செலுத்தாதிருப்பதனால், துறைமுக அதிகாரசபைக்குப் பாரிய நிதியிழப்பு ஏற்பட்டிருக்கிறது என தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக விசாரித்ததில் உறுதிப்படுத்தப்பட்டது.

**30,000 தொன்னுக்கு அதிகமான எடையைக் கொண்டுவரும் கப்பல் ஒன்றுக்கு ஒரு தொன்னுக்கு 32 டொலர்கள் கப்பற் கட்டணமாகவும் துறைமுகத் தொன் அளவுகளுக்கான கட்டணமாக கப்பலொன்றின் ஒரு தொன்னுக்கு அரை டொலரும் தரையிறக்கல் மற்றும் ஒப்படைப்புக் கட்டணங்களாக ஒரு தொன்னுக்கு ஒன்றரை டொலரும் கப்பற்பொருட் காவிக் கட்டணமாக ஒரு தொன்னுக்கு ஐந்து டொலர்களும் அறவிடப்பட வேண்டும்.**

இவ்வனைத்துக் கட்டணங்களையும், திருகோணமலைத் துறைமுகத்துக்கு வரும் ஒவ்வொரு கப்பலும் செலுத்தினாலும், பிறீமா நிறுவனத்திற்கும் டோக்கியோ நிறுவனத்திற்கும் மூலப்பொருட்களைக் கொண்டுவரும் கப்பல்கள் மட்டும் கப்பற் கட்டணங்கள் தவிர்ந்த ஏனைய கட்டணங்களால் முழுநேர விலக்களிக்கப்பட்டிருப்பது வியப்பிற்குரிய விடயமாகும்.

### துறைமுக ஊழியர்கள் விடுக்கும் குற்றச்சாட்டு

துறைமுகமொன்றில் கப்பலொன்று உள்வரும் போது, வெளியேறுவதைப் போன்றே அக்கப்பல் துறைமுகத்தில் தரித்திருந்து மேற்கொள்ளும் அனைத்துச் செயற்பாட்டு நடவடிக்கைகளிலும் அறவிடப்படும் கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டணங்களாக இருப்பதுடன், இந்நாட்டில் அனைத்து துறைமுகங்களிலும் குறித்த கட்டணம் அறிவிடப்படுகின்றது. அது திருகோணமலை துறைமுகத்திற்கும் பொதுவான விடயம். அதற்கேற்ப, துறைமுகத்திற்குச் செலுத்த வேண்டிய கப்பற் கட்டணம், துறைமுக தொன் அளவுகளுக்கான கட்டணம், தரையிறக்குதல் மற்றும்




*டோக்கியோ சீமெந்து நிறுவனம்*

ஒப்படைத்தற் கட்டணம், என்பவற்றுடன் கப்பற் பொருள் காவிக் கட்டணம் எனும் கட்டணங்களுக்கான பணத்தை அறவிடுதல் கட்டாயமானதாகும்.

எனினும் திருகோணமலைத் துறைமுகத்தைப் பாவிக்கும் பிறீமா நிறுவனமும் டோக்கியோ சீமெந்து நிறுவனமும் கப்பற் கட்டணங்கள் தவிர்ந்த ஏனைய கட்டணங்களிலிருந்து முழுநேர விலக்களிக்கப்பட்டுள்ளன என துறைமுக ஊழியர் சங்கத்தின் தலைவர் திரு. நந்தசிரி ரோஹணதீர குறிப்பிடுகின்றார். அவர் மேலும் சுட்டிக்காட்டுகையில், இதனூடாக நாடு இழந்திருக்கும் வருமானம் மிகப் பெரியது என்கின்றார்.

‘கடந்த வருடம் பெப்ரவரி 15ம் திகதி டோக்கியோ நிறுவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட 17,500 மெட்ரிக் தொன் கூட்டுச் சேர்க்கப்படாத சீமெந்தை ஏற்றுவதற்காக வந்த கப்பலுக்குரிய மேலே குறிப்பிட்ட கட்டணங்களின் கீழ், 15,161,749 ரூபா அறவிடப்பட வேண்டும். அவர்கள் அதனைச் செலுத்தாதிருப்பதன் மூலம் ஒரு நிறுவனம், ஒரு கப்பலால் துறைமுகத்துக்கு ஏற்படுத்திய இழப்புத் தொகையை நீங்கள் சிந்தித்துப் பார்க்கலாம் அல்லவா’ என அவர் கேட்கிறார்.

**2018ம் ஆண்டில் மட்டும் இந் நிறுவனங்கள் முன்னர் குறிப்பிட்ட அனைத்துக் கட்டணங்களையும் செலுத்தாததால், துறைமுகம் அண்ணளவாக 47 மில்லியன் அமெரிக்க டொலர்களை இழந்துள்ளது. 2002ல் ரவுஃப் ஹக்கீம் துறைமுக மற்றும் கப்பற்றுறை அமைச்சர் பதவி வகிக்கும் காலத்தில் மேலதிக செயலாளர் ஒருவரால் இந்நிறுவனங்களுடன் கையெழுத்திட்ட ஒப்பந்தமொன்றுக்கு ஏற்ப, அவர்களுக்கு இச்சலுகை உரித்தாகியுள்ளது என்பது ரோஹணதீர அவர்கள் எழுப்பும் குற்றச்சாட்டு.**

மேலதிக செயலாளரொருவரால் கையெழுத்திடப்பட்டதாகச் சொல்லப்படும் ஒப்பந்தமொன்றினால், இந்நிறுவனங்கள் துறைமுகக் கட்டணங்களிலிருந்து முழுநேர விலக்களிக்கப்பட்டிருப்பதால் ஒரு வருடத்தில் நாடு இழக்கும் வருமானத்தை நினைத்துப் பார்க்க முடியாதா? என ரோஹணதீர அவர்கள் மேலும் சுட்டிக் காட்டுகின்றார்.

**உயர் மட்டத்திலான இயற்கைத் துறைமுகம்**

உலகத்தில் அமைந்துள்ள சிறந்த இயற்கைத் துறைமுகங்களிடையே முதலிடம் பெறும் தென்கிழக்காசியாவின்

மிகப் பெரிய எரிபொருள் முனையத்துக்கும் பிறீமா நிறுவனத்திற்குச் சொந்தமான மிகப்பெரிய மா ஆலைக்கும் உரிமைகோரும் **திருகோணமலைத் துறைமுகம் 2011 ஆகஸ்ட் 26ம் திகதி 1720/42ம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் 1630 ஹெக்டாயர் நீர்ப்பரப்பையும் 1984 செப்டெம்பர் 12ம் திகதி 31/10ம் இலக்க வர்த்தமானியின் மூலம் 2255 ஹெக்டாயர் நிலப்பரப்பையும் சட்டபூர்வமாக உரித்தாக்கிக் கொண்டுள்ளது.**

இந்நாட்டில் அமைந்துள்ள துறைமுகங்களுக்கிடையே, ஆழமான இயற்கைத் துறைமுகமான திருகோணமலைத் துறைமுகத்தின் மத்தியப் பகுதி ஆழம் 25 மீற்றராகும். துறைமுக நுழைவுடன் கூடிய நீர்த் தடாகத்தின் அகலம் 500 மீற்றர்களாகும். பாரிய அளவிலான கப்பல்களை வரவழைத்து அவற்றிலிருந்து அதிகமான வருமானத்தை ஈட்டக்கூடிய பாரிய அளவிலான ஐந்து இறங்குதுறைகளும் 30,000 தொண் கொள்ளவைக் கொண்ட 180 மீற்றர் நீளமுடைய ஐந்து கப்பல்களை ஒரே நேரத்தில் நங்கூரமிட்டு வைக்கக் கூடிய பாதுகாப்பான நங்கூரம் பாய்ச்சுமிடத்துடனும் கூடிய துறைமுகமாகும்.

470 ஊழியர்களாலும் ஆறு நிறைவேற்றுத் தர அதிகாரிகளாலும் நெறியாளப்படுகின்ற இத் துறைமுகத்தில் இரவுநேர செயற்பாடுகள் மூன்று தசாப்த காலத்துக்கும் மேல் இடைநிறுத்தப்பட்டிருந்தன. புலிகளின் பயங்கரவாத செயற்பாடுகளே அதற்குக் காரணம்.

துறைமுக முகாமைத்துவம் மற்றும் நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தின் ஊடாக ஜப்பானின் உதவியின் கீழ் கப்பல்களுக்கு வழிகாட்டும் இரவு விளக்கு ஒளிக்கதிர்களுடன் கூடிய போயா தொகுதியொன்றும் 75,000 தொன் கொள்ளளவுடன் கூடிய 230 மீற்றர் நீளமுள்ள பாரிய கப்பல்களைக் கட்டி வைக்கக் கூடிய மரைன் போயாக்கள் இரண்டுடனும், துறைமுகத்திலிருந்த பழைய இரண்டு கலங்கரை விளக்கங்களும் சூரிய சக்தியினால் செயற்படும் வெளிச்சக் கதிர்களுடன் நவீனமயப்படுத்தப்பட்டு, பகல் இரவுச் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான மட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

துறைமுகம் வர்த்தக அலுவல்களுக்காக உயர்ந்த மட்டத்தில் உருவாக்கப்பட்டிருந்தாலும் அதிலிருந்து ஈட்டப்படும் வருமானம் சொற்பமானது என்பது துறைமுக ஊழியர்கள் விடுக்கின்ற குற்றச்சாட்டாக உள்ளது. திருகோணமலைத் துறைமுகத்தையும்

*இந்திய எண்ணெய்க் கம்பனிக்குச் சொந்தமான எண்ணெய்த் தாங்கி*



அதற்குரிய இறங்குதுறைகளையும் பாவித்து தமது உற்பத்திகளை தரையிறக்கல் மற்றும் ஒப்படைத்தல் உள்ளிட்ட கருமங்களை ஆற்றுகின்ற மூன்று நிறுவனங்களில் இரண்டு நிறுவனங்கள், செலுத்த வேண்டிய துறைமுகத் தொன் அளவுகளுக்கான கட்டணத்தைக் கூடச் செலுத்தாமல் இருப்பதே அதற்குக் காரணம்.

**கட்டணங்களைச் செலுத்தாத இரண்டு நிறுவனங்கள்.**

1980ம் ஆண்டு தமது இறக்குமதி, ஏற்றுமதி நடவடிக்கைகளை துறைமுகத்தில் ஆரம்பித்த சிங்கப்பூர் நிறுவனமான பிறீமா லங்கா நிறுவனம் துறைமுகத்தைப் பயன்படுத்துகின்ற பிரதான நிறுவனம். **நாளொன்றுக்கு 3650 மெட்ரிக் தொன் கோதுமையை அரைக்கக் கூடியதும் 350,000 மெட்ரிக் தொன் மாவைக் களஞ்சியப்படுத்தி வைக்கக் கூடியதுமான அந் நிறுவனத்துக்குச் சொந்தமான உலகிலுள்ள மிகப் பெரிய மா ஆலை இதுவாகும்.**

**பிறீமா நிறுவனம் 2018ம் ஆண்டில் கையாண்ட மெட்ரிக் தொன்களின் அளவு 948,546. துறைமுகத்துக்கு வரும் கப்பல்களில் நூற்றுக்குத் 90 வீதமானவை பிறீமா நிறுவனத்துக்குப் பொருட்களைக் கொண்டுவருபவை. அவை கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, மற்றும் ரஷ்யாவிற்குச் சொந்தமான கப்பல்களாக இருப்பதுடன், இந்நிறுவனத்தின் உற்பத்திகள், பல்கேரியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் பாங்கொக் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.**

அவ்வாறே துறைமுகத்தைப் பாவிக்கும் இரண்டாவது நிறுவனம் டோக்கியோ லங்கா தனியார் நிறுவனமாகும். 2018 ஆண்டில் அது 1,466,390 மெட்ரிக் தொன் அளவைக் கையாண்டுள்ளது. சீமெந்து தயாரிப்பதற்குப் பயன்படும் கிளின்க்கல் எனப்படும் மூலப்பொருளை ஏற்றிக் கொண்டு, இந்துனேசியா, இந்தியா மற்றும் ஐக்கிய அரபு எமீர் இராச்சியத்திற்குச் சொந்தமான கப்பல்கள் டோக்கியோ நிறுவனத்தை நோக்கி வருகின்றன.

துறைமுகத்துக்கு வரும் சரக்குக் கப்பல்கள் துறைமுகத் தொன் அளவுகளுக்கான கட்டணத்தைச் செலுத்துவது கட்டாயமென்றாலும், இவ்விரு நிறுவனங்களும் செலுத்தவேண்டிய துறைமுகத் தொன் அளவுகளுக்கான கட்டணத்தை 2003ம் ஆண்டிலிருந்து துறைமுக அதிகாரசபைக்கு செலுத்தமால் உள்ளன. துறைமுகத்தில் அமைந்துள்ள துறைமுகத்தையண்டிச் செய்யப்படும் தமது ஒழுங்குபடுத்தல் அலுவல்களுக்காகச் செலுத்த வேண்டிய துறைமுக தொன் அளவுகளுக்கான கட்டணத்தை உரியவாறு செலுத்தித் தமது ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்ளும் ஒரே நிறுவனம் இந்திய எண்ணெய் நிறுவனம் மட்டுமே என துறைமுக அதிகாரசபை கூறுகின்றது.

**இழந்த வருமானம் 14 மில்லியன் அமெரிக்க டொலர்கள்**

எவ்வாறாயினும் பிறீமா லங்கா நிறுவனத்தால் **2018ம் ஆண்டில் மட்டும் மேற்கொள்ளப்பட்ட 948,546 மெட்ரிக் தொன்களைக் கொண்ட பொருள் இயக்கத்திற்காக துறைமுகத்திற்குச் செலுத்த வேண்டிய ஆனால், செலுத்தாதிருக்கும் துறைமுக தொன் அளவுகளுக்கான கட்டணம் மட்டுமே 474,273 அமெரிக்க டொலர்களாகும். டோக்கியோ சீமெந்து நிறுவனமும் அவ்வாண்டில் கையாண்ட 1,466,399 மெட்ரிக் தொன்களுக்குச் செலுத்தவேண்டிய துறைமுக தொன் அளவுகளுக்கான கட்டணம் மட்டும் 733,195 அமெரிக்க டொலர்களாகும்.** இதற்கேற்ப, 2018ம் ஆண்டில் மட்டும் பிறீமா நிறுவனமும் டோக்கியோ நிறுவனமும் துறைமுக தொன் அளவுகளுக்கான கட்டணத்தை மட்டுமே செலுத்தாமல் எம்மை இழக்கச் செய்திருக்கும் வருமானத்தைக் எண்ணிக் கொள்ளலாம்.

அதற்கேற்ப, பிறீமா நிறுவனம் 2003ம் ஆண்டிலிருந்து 2018ம் ஆண்டு வரை மேற்கொண்ட துறைமுக ஒழுங்குபடுத்துல்களுக்காகச் செலுத்தாதுள்ள

துறைமுக தொன் அளவுகளுக்கான கட்டணம் மட்டும் 6,837,340.73 அமெரிக்க டொலர்களாக காணப்படுவதுடன், டோக்கியோ சீமெந்து நிறுவனம் அக்காலப் பகுதிக்காக 6,809,135.78 அமெரிக்க டொலர்களைச் செலுத்தாதிருப்பதால் 16 வருடங்களாக நாட்டுக்குப் பாரிய வருமான இழப்பொன்று நேர்ந்துள்ளது.

உத்தியோகபூர்வமற்ற மூலாதாரங்களிலிருந்து கிடைக்கும் தகவல்களுக்கு ஏற்ப, இந்நிறுவனங்களுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் காரணமாக அவர்கள் துறைமுக தொன் அளவுகளுக்கான கட்டணங்கள் உள்ளிட்ட ஏனைய துறைமுகக் கட்டணங்களையும் செலுத்தாதிருக்கிறார்கள் என அறிக்கையிடப்படுகின்றது. எவ்வாறாயினும் இந்நிறுவனங்களுக்கான மூலப்பொருட்களை ஏற்றிவரும் கப்பல்கள் கப்பற் கட்டணங்கள் தவிர்ந்த ஏனைய கட்டணங்களிலிருந்து முழுநேர மற்றும் பூரணமாக விடுவிக்கப்பட்டுள்ளன என துறைமுக மற்றும் கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சினால் 2019.08.23ம் திகதி அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சுசந்த புஞ்சிநிலமே அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதமொன்றில் காட்டப்பட்டுள்ளது.

**<u>குற்றச்சாட்டுகளைத் தவிர்க்கும் நிறுவனங்கள்</u>**

செலுத்த வேண்டிய அனைத்துக் கட்டணங்களையும், துறைமுகத்தின் ஒரு பகுதியைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் இந்திய எண்ணெய் நிறுவனம் செலுத்திக் கொண்டிருக்கும் போது, குறிப்பிட்ட துறைமுகக் கட்டணங்களைச் செலுத்தாதிருப்பது ஏன்? என பிறீமா லங்கா நிறுவனத்திடம் கேட்கப்பட்டபோது அந்நிறுவனத்தின் மனிதவள முகாமையாளர் திருமதி. வத்சலா மென்டிஸ் அவர்கள், “செலுத்த வேண்டிய அனைத்து வரிகளையும் நாம் சட்டரீதியாக செலுத்தினாலும், ஏதோவொரு புரிந்துணர்வு அரசாங்கத்துடன் இருக்கிறதா எனச் சொல்வது சிரமம்“ என பொது முகாமையாளர் கூறுகிறார்.

துறைமுக அதிகாரசபைக்கு சட்டரீதியாக அனைத்துக் கட்டணங்களையும் செலுத்துவதாக அவர் குறிப்பிட்டாலும், துறைமுகமும் கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் மூலம் சுசந்த புஞ்சிநிலமே அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிறீமா நிறுவனம் துறைமுக தொன் அளவுகளுக்கான கட்டணம் 16 வருடங்களாக செலுத்தப்படாதுள்ளது எனவும் அதனால் பாரிய வருமானம் இழக்கப்பட்டுள்ளது எனவும் பிறீமா நிறுவனத்துக்கும் விசேட சலுகைகளை வழங்கியிருப்பது என்ன காரணத்துக்காக என்பதைக் கண்டறிவதற்கான ஆவணங்கள் எதுவும் திருகோணமலை துறைமுகத்திடம் இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறே, துறைமுகக் கட்டணங்களைச் செலுத்துவது தொடர்பில் டோக்கியோ சீமெந்து நிறுவனத்துக்கு விடுக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்துவதற்கோ தொலைபேசி அழைப்புகளுக்குப், பதிலளிப்பதற்கோ பொறுப்புவாய்ந்த ஒருவரை முன்னிறுத்துவதற்கு அந்நிறுவனம் நடவடிக்கையெடுக்கவில்லை.

பிறீமா நிறுவனமும் டோக்கியோ சீமெந்து நிறுவனத்தால் கையாளப்படும் பொருட்களுக்கான துறைமுக தொன் அளவுகளுக்கான கட்டணம் உள்ளிட்ட துறைமுகக் கட்டணங்களை அறவிடாமை தொடர்பில் செய்யப்பட்ட விசாரணையில் கருத்துத் தெரிவித்த திருகோணமலை துறைமுகப் பிரதேச முகாமையாளர், திரு.டீ.கே. ஜி.எல். ஹேமச்சந்திர அவர்கள் இது தொடர்பில் தாம் எதையும் சொல்ல முடியாது என்றே குறிப்பிட்டார்.

‘தகவல் கோரிக்கைகள் அனைத்தும் கொழும்பு தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கொழும்பிலிருந்து தகவல்கள் வந்ததும் அவற்றை விரைவாகத் தரமுடியுமென்றாலும் டோக்கியோ நிறுவனம்

எமக்குக் கீழ் நிருவகிக்கப்படாததால் அத் தகவல்களைத் தருவதற்கு வழியில்லை. துறைமுகத்துக்குள் நிறுவனத்தை அமைத்திருந்தாலும் ஒப்பந்தங்களுக்கு ஏற்ப அவர்கள் தான் நிருவகிக்கிறார்கள் என்றே நான் நினைக்கிறேன்' என அவர் மேலும் குறிப்பிடுகிறார்.

ஏதேனுமொரு ஒப்பந்தத்தின் மூலம் துறைமுகத்துக்குச் செலுத்த வேண்டிய ஏனைய கட்டணங்களைச் செலுத்தாதிருக்கும் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டாலும், அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய துறைமுக தொன் அளவுகளுக்கான கட்டணம் செலுத்தப்படுவதைத் தடுப்பதற்கு யாருக்கும் எந்தவகையிலுமான அதிகாரம் இல்லை என துறைமுக ஊழியர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எவ்வாறாயினும் இவ்விரு நிறுவனங்களுக்கும் இவ்வாறான சலுகைகளை வழங்குவதற்கு 2002ல் துறைமுக ஊழியர்கள் சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறச் செய்வதற்காக கொண்டு செல்லப்பட்ட வேலைத் திட்டமொன்றுடன் தொடர்பில் ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய நிதியைத் தேடிக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் பெறுபேறே காரணம் எனவும் சொல்லப்படுகின்றது. அதற்கேற்ப, டோக்கியோ சீமெந்து நிறுவனம் 300 மில்லியன் ரூபா பணத்தை துறைமுக அதிகாரசபைக்குச் செலுத்தியுள்ளதுடன் அதன் காரணமாக துறைமுக தொன் அளவுகளுக்கான கட்டணத்தை அவர்களிடமிருந்து அறவிடுவதை 2003ம் ஆண்டு முதல் நிறுத்தியுள்ளது. டோக்கியோ நிறுவனம் தமது உற்பத்திகளை ஏற்றுவதற்கும் தரையிறக்குவதற்கும் 2003 பெப்ரவரி 20ம் திகதியிலிருந்து துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களை ஈடுபடுத்திக் கொள்வதும், அவர்களால் 160 மீற்றர் நீளமுள்ள இறங்குதுறையொன்று அமைக்கப்பட்டதன் பேரிலும் அதற்கான நியாயாதிக்க நிலையைப் பெற்றுத் தந்து துறைமுக அதிகாரசபை அந் நிறவனங்களுடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்துள்ளதால் கப்பற் கட்டணங்கள் தவிர்ந்த ஏனைய கட்டணங்களிலிருந்து முழுநேர விடுவிப்பைப் பெற அவர்களால் முடிந்துள்ளது என ஊழியர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

**ஒப்பந்தங்களைக் கண்டிராத விடயப்பரப்புக்கு பொறுப்பான அமைச்சர்**

அவ்வாறே இவ்விரு நிறுவனங்களுக்குமான குறித்த சலுகைகள் எந்த அடிப்படையில் இருந்து வழங்கப்பட்டுள்ளன என்பதை தேடுவதற்கான ஆவணக் கோப்புகள் எதுவும் இல்லை என துறைமுக அதிகாரசபை சுசந்த புஞ்சிநிலமே உறுப்பினருக்கு அனுப்பிய கடிதத்தில் காட்டப்பட்டுள்ளதும், ஒப்பந்தம் தொடர்பில் துறைமுக அதிகாரசபையோ பிரீமா நிறுவனமோ அறியாதிருப்பது வியப்பிற்குரிய விடயம். ஒப்பந்தமொன்றோ அல்லது விசேட சலுகைகளை வழங்குவதற்கான குறித்த ஆவணக் கோப்புகளோ இல்லாத நிலையிலும் குறிப்பிட்ட இரு நிறுவனங்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய துறைமுக தொன் அளவுகளுக்கான கட்டணம் 2003ம் ஆண்டிலிருந்து அறவிடப்படாதிருக்கும் காரணத்தால் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய பாரிய வருமானம் இழக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் துறைமுக அலுவல்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் திரு. ஜொன்ஸ்ட்டன் பிரனாந்து அவர்களைக் கேட்டபோது, அவர் சந்திரிக்கா நிருவாகத்தின் போது ஏற்படுத்திக் கொண்ட பாதகமான இரு ஒப்பந்தங்களால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் அவ்வாறு செய்துகொள்ளப்பட்ட இரு ஒப்பந்தங்களும் எவையென்பதைத் தானும் இதுவரை கண்டதில்லை என்றே குறிப்பிட்டார்.

'பிரீமா மற்றும் டோக்கியோ நிறுவனங்களுடன் கையெழுத்திட்டதாகச் சொல்லப்படும் ஒப்பந்தங்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து, அவ்வொப்பந்தங்களில் காணப்படும் நிபந்தனைகளைப் பற்றி சட்டரீதியாக எடுக்கக் கூடிய தீர்மானங்களை எடுத்து குறித்த அவ்வொப்பந்தத்தைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நான் செயலாளருக்குச் சொன்னேன். இந்த

ஒப்பந்தத்தினால் எங்களுக்குக் கிடைக்க வேண்டிய அரசாங்கக் கட்டணம் கூடக் கிடைப்பதில்லை. இது சந்திரிக்கா அரசாங்கத்தில் தரகினைப் பெற்றுக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பாரிய திருட்டைச் செய்த ஒப்பந்தம். இவ்வொப்பந்தத்தில் எங்களுக்கு சாதகமான விடயங்கள் இருக்கும் என நான் நினைக்கவில்லை. எது எப்படியிருப்பினும் நான் இதைப் பற்றி ஆராய்ந்து பார்ப்பேன்.' என விடயப் பரப்புக்குப் பொறுப்பான அமைச்சர் கூறுகிறார்.

அமைச்சரே கூட ஒப்பந்தம் பற்றித் தெரியாது எனக் கூறிய காரணத்தால் இந்நிறுவனங்கள் துறைமுகக் கட்டணத்தைச் செலுத்தாதிருப்பது தொடர்பில் மேலும் விடயங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு தகவல் அறியும் சட்டத்தின் கீழ் சில விண்ணப்பங்கள் துறைமுக அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்பட்டாலும் அதற்கும் உரிய பதில் அளிப்பதற்கு துறைமுக அதிகாரசபை தவறியுள்ளது.

**தகவல்களை வழங்குவதற்கு 102 டொலர்கள்**

சமர்ப்பிக்கப்பட்ட தகவற் கோரிக்கைகளுக்கு ஏற்ப அனுப்பப்பட்ட பதில் கடிதத்தில் கோரப்பட்டுள்ள தகவல்களைப் பெற்றுத் தருவதற்கு 102 டொலர்களைச் செலுத்த வேண்டும் எனக் கூறுகிறார்கள். அத்தகவல்கள் 51 பிரதிகளைக் கொண்டுள்ளதால், அத்தகவல்களை வழங்குவதற்கு ஒரு பிரதிக்கு இரண்டு டொலர்கள் செலுத்த வேண்டும் என தகவல் அலுவலர் பணிப்பாளர் (சேவை வழங்கல்) திரு. உப்புல் ஜயதிஸ்ஸ அறிவித்திருந்தமை.

எவ்வாறாயினும் பிரீமா மற்றும் டோக்கியோ நிறுவனங்கள் செலுத்த வேண்டிய துறைமுகத்தால் 16 வருடங்களாக அறவிடப்படாதிருக்கும் கட்டணங்களுக்கு ஏற்புடையதாக அவர்களுடன் ஏதேனுமொரு ஒப்பந்தம் இருப்பின் அதன் பிரதியொன்றைக் கோரியிருந்தாலும் அது பற்றி எதுவும் கோரப்பட்டுள்ள தகவல்களிடையே இல்லை எனவும் துறைமுக அதிகாரசபை கூறுகிறது.

அறவிடப்பட வேண்டிய கட்டாய கட்டணங்கள் கூட நிறுவனங்களால் அறவிடப்படாமல் ஒரு வருடத்திற்கு 14 மில்லியன் டொலர் பணத்தை நாட்டுக்கு இல்லாமற் செய்துகொண்டிருக்கும் துறைமுக அதிகாரசபை அது பற்றிய தகவல்களைக் கோரிய பிரசைக்கு அத்தகவல்களை வழங்குவதற்கு 102 டொலர்களைச் செலுத்த வேண்டும் எனக் கூறுவது கேலிக்குரியது எனக் குறிப்பிட வேண்டும்.

துறைமுக ஊழியர்கள் குறிப்பிடும் வகையில் அமைச்சின் மேலதிக செயலாளர்களால் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தமொன்றினால் இவ்விரு நிறுவனங்களுக்கும் ஒருவகையான அதிகாரம் கிடைத்துள்ளதாயின் அது எந்தளவுக்கு சட்டரீதியானது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவ்வாறே இந்நிறுவனங்கள் இரண்டுடனும் துறைமுக அதிகாரசபை, ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டிருந்தால் அவ்வொப்பந்தங்கள் திருகோணமலைத் துறைமுகத்திடம் இல்லாதிருப்பது தொடர்பிலும் இந்நிறுவனங்களுக்கு விசேட சலுகைகளை வழங்கி, கிடைக்க வேண்டிய வருமானத்தை 16 வருடங்களாக இல்லாமற் செய்த அலுவலர்கள் தொடர்பிலும் விரிவான விசாரணையொன்றை ஆரம்பிக்க வேண்டும்.

இந்திய எண்ணெய் நிறுவனம் கூட துறைமுக அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய அனைத்துக் கட்டணங்களையும் செலுத்திக் கொண்டிருக்கும் போது, நாட்டுக்கு இவ்வாறான பாரிய வருமானம் இல்லாமற் செய்யப்படுகின்ற ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட, மேலதிக செயலாளருக்கிருக்கும் சட்டரீதியான அதிகாரம் என்ன? என்பதையும் அவ்வாறே இவ்வொப்பந்தம் யாருடைய பணிப்பின் பேரில் எவரது தேவைக்காக மேற்கொள்ளப்பட்டது என்பதை ஆராய்ந்து பார்த்து அதனைச் சீர்செய்வதும் அதிகாரிகளின் கடமையாகும்.

**லக்மால் கே. பதுகே - 2020.02.11**
திருகோணமலை



## சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கும்

# சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள்

சிறியளவிலான நீர்மின் உற்பத்தி நிலைய செயற்திட்டங்கள் தொடர்பில் கடந்த காலங்களில் பாரிய சர்ச்சைகள் எழுந்தன. பல்வேறு பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படவிருந்த சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்களுக்கு எதிராக எதிர்ப்புக்களும் அறிக்கையிடப்பட்டது. சிறிய நீர்மின் உற்பத்தி நிலைய கொள்ளைகளினால் (மாஃபியா) பாரிய சூழல் மாசடைவுகள் ஏற்படுவதாக சூழலியலாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இத்தேடல் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்கள் பற்றியதாகும்.

நாள் 2016 ஒக்டோபர் மாதம் 21ம்ஆம் திகதியன்று. சிறிய நீர்மின் உற்பத்தி நிலையம் காரணமாக தெரணியகல பிரதேசத்தில் பாரிய சூழல் மாசடைவு இடம்பெறுவதாகத் தகவல் அறியப்பட்டதால் அங்கு சென்ற எமக்கு மிகக் குறைந்தளவிலான நீர் வடிந்தோடும் மாகல் ஆற்றை காண முடிந்தது. சிவனொளிபாத மலை அடிவாரத்தில் ஆரம்பமாகும் இந்த

மாகல் ஆறு தெரணியகல பிரதேசத்தில் வடிந்தோடி சீத்தாவ ஆற்றோடு சங்கமிக்கின்றது. இந்த ஆற்றின் வடிந்தோடும் நீர் மிகக் குறைவானதாக தென்பட்டாலும் ஆற்றுக்கு சமாந்திரமாக அமைக்கப்பட்டிருக்கும் கொங்கிரீட் கம்பமொன்றின் ஊடாக பாரிய அளவிலான ஆற்று நீர் வடிந்தோடுவதை காணக்கூடியதாக இருந்தது. (முதலாம் படத்தில் காணப்படுவதே அக் காட்சியாகும்)

சிறிய நீர்மின் உற்பத்தி நிலையம் தொடர்பான கட்டுரைக்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்களின் பெயர்ப் பட்டியல் தேவைப்பட்டதுடன் அந்த நாட்களில் அதாவது 2016 ஆம் ஆண்டு மேற்படி அதிகார சபையினரிடம் கோரப்பட்ட போது குறிப்பிட்ட பட்டியலை வழங்கமுடியாதென தெரிவிக்கப்பட்டது. 2017 பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் தகவல் சட்டம் அமுலானதன் பின்னர் மேற்படி சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் தொடர்பில் தகவல்களைக் கோரி மத்திய சுற்றாடல் அதிகார சபை, மின்சார அமைச்சு, இலங்கை மின்சார சபை, நிலையான மின்வலு அதிகார சபை, கம்பனி பதிவாளர் அலுவலகம் மற்றும் பொது பயன்பாட்டு ஆணைக்குழு போன்ற 08 நிறுவனங்களிடம் தகவல் கோரப்பட்டதுடன், குறித்தளிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு அல்லது அலுவலருக்கு இரண்டு மேன்முறையீடுகளும், தகவல் அறியும் ஆணைக்குழுவிற்கு ஒரு மேன்முறையிடும் செய்யப்பட்டது. அதற்கமைய 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடக்கம் இன்றுவரை 2.5 வருடங்களாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் இக்கட்ரையில் பகுப்பாய்வாய்வு செய்யப்படுகிறது.

**சிறியளவிலான நீர்மின் உற்பத்தி நிலையம்**

சிறிய நீர்மின் உற்பத்தி நிலையமானது 10 மெகா வோட்களுக்கு குறைவான கொள்ளளவை உற்பத்தி செய்யும் நீர்மின் நிலையங்களென பொதுவாக அழைக்கப்படும். இலங்கை பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சிக் காலத்திலிருந்து சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்களுக்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதென கூறப்படுகின்றது. நீர்வீழ்ச்சி, ஆறுகளை இடைமறித்து அணைக்கட்டி அந்த நீரை பாரிய கொன்கிரீட் வடிகால்களின் ஊடாக இரண்டு, மூன்று கிலோமீற்றர் தூரம் வரை கொண்டு சென்று டெர்பைனை சுழற்சி செய்வதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதே இச் செயற்திட்டங்களில் அதிகமாக மேற்கொள்ளப்படுகின்றது. டெர்பைனை சுழலச் செய்ததன் பின்னர் அந்த நீரை மீண்டும் ஆற்றுக்கே வடிந்தோட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஒருசில ஆறுகளில் இவ்வாறான மூன்று அல்லது நான்கு சிறிய நீர் உற்பத்தி நிலையங்கள் காணக்கூடியதாகவுள்ளது.

கொன்கிரீட் வடிகால் ஊடாக நீரை கொண்டு செல்வதனால் அணைக்கட்டிலிருந்து டெர்பைனை சுழலும் அமைவிடம் வரை இரண்டு மூன்று கிலோமீற்றர் தூரம்வரை ஆற்று நீர் மிக குறைந்தளவிலேயே வடிந்தோடும். அதிகமான நீர் கொன்கிரீட் வடிகால் ஊடாகவே வடிந்தோடுகிறது. (கிராபிக்ஸ் படத்தில் காணப்படுவது சிறிய நீர் மின்னுற்பத்தி நிலையத்தின் மாதிரியாகும்)

சிறிய நீர்மின் உற்பத்தி நிலையமொன்று நிர்மாணிக்கும் போது அதை நடைமுறைப்படுத்த வேண்டிய செயன்முறையொன்றுள்ளது. முதலில் சிறிய நீர்மின் உற்பத்தி நிலையம் நிர்மாணிக்கும் போது எந்த நீர் ஊற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளதென்பது குறித்து மத்திய சூற்றாடல் அதிகார சபையை தெளிவூட்டி, அதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதியை பெற்றிட வேண்டும். அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களினதும் அனுமதி பெற வேண்டியுள்ளதுடன், நிலையான மின்வலு அதிகார சபையினரிடமும் அனுமதி பெறவேண்டும். அதனைத் தொடர்ந்து இலங்கை மின்சார சபையில் மின்சாரம் விலைக்கு கொள்வனவு தொடர்பாக



https://electrical-engineering-portal.com/

ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டியதுடன், இறுதியாக நீர் மின் உற்பத்தி நிலைத்தின் மின் பிறப்பாக்கம் செய்வதற்காக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் மின்னுற்பத்தி நிலையத்திற்கான மின் பிறப்பாக்கி அனுமதி பத்திரத்தை பெறவேண்டும். பொது பயன்பாட்டு ஆணைக்குழு சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் தொடர்பாக மின் பிறப்பாக்கல் அனுமதியை பெறுவதற்கு முன் பொது அறிவித்தலொன்றின் மூலம் பொது மக்களை தெளிவூட்டி எதிர்ப்புகள் உள்ளதாவென தேடியறிய வேண்டும். அத்துடன் சுற்றாடல் அனுமதி பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அங்கத்தவர் ஒருவர் எம்மை தெளிவூட்டினார்.

இலங்கை மின்சார சபையினரின் இணையத்தளத்தில் காணப்படும் புள்ளிவிபரங்களுக்கமைய 2016 ஆம் ஆண்டு 4018 மெகா வோல்ட் கொள்ளவை 232 மின் உற்பத்தி நிலையங்களின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அத்தொகையில் 342 மெகா வோல்ட் கொள்ளளவு மின்சாரத்தை 172 சிறிய மின் உற்பத்தி நிலையங்கள் மூலமே பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

2017ம் ஆண்டில் 4087 மெகா வோல்ட் கொள்ளளவு மின்சாரம் 247 மின்னுற்பத்தி நிலையங்கள் வழங்கும் போது 182 சிறிய மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் 354 மெகா வோல்ட் கொள்ளளவு மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளமுடிந்து.

தகவல் அறியும் சட்டத்திற்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரனையின் போது இலங்கை மின்சார சபையினரால் வழங்கப்பட்ட தகவல்களுக்கமைய 2015 ஆம் ஆண்டில் சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் 2015 ஆம் ஆண்டு 1073.91 மெகா வோல்ட் மணித்தியாலயங்களும், 2016 ஆண்டு 856.81 மெகா வோல்ட் மணித்தியாலயங்களும் 2017ஆம் ஆண்டு 2109.97 மெகாவோல்ட் மணித்தியாலயங்களும் விலைக்கு வாங்கப்பட்டுள்ளது.

**சுற்றாடல் மாசடைவு**

சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் தொடர்பான தேடலின் போது மாகல் ஆற்றின் மேற்பகுதிக்கு சென்ற போது பாரிய நீர்த் தொகுதி அங்கிருந்து ஒருசில கிலோமீற்றர் தூ

ரம் கீழ் நோக்கிவரும் போது அந்த ஆற்றை காணக்கிடைப்பதில்லை. ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணையினால் அந்த நீர் தேங்கி நின்றுவிடுகின்து. பின் குறித்த நீரை கொன்கிரீட் வடிகாலின் ஊடாக நீர் மின்னுற்பத்தி நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுவதால் அணைக்கட்டு தொடக்கம் நீர் மின்னுற்பத்தி நிலையம் வரை இரண்டு மூன்று கிலோமீற்றர் தூரம் ஆற்றின் நீர் வற்றிப்போய் இருந்தமையை காணக்கிடைத்தது.

நீர் மின்னுற்பத்தி நிலையங்களிலிருந்து மீண்டும் வழமையான ஆற்றோடு சேறும். அதை தொடர்ந்து குறித்த நீர் அங்கிருந்து இரண்டொரு கிலோமீற்றருக்கு அப்பால் வடிந்தோடியதன் பின்னர் அணையொன்றை கட்டி கொன்கிரீட் வாய்கால் மூலம் அந்த நீர் கொண்டுசெல்லப்படுகின்றது. இது போல் மாகல் ஆற்றில் மாத்திரம் ஐந்துக்கு மேற்பட்ட சிறிய நீர் மின்னுற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

நீர் மின்னுற்பத்தி நிலையங்கள் சுற்றாடலுக்கு பாரிய பாதிப்புகள் ஏற்படுவதாக சூழலியலாளர்கள் தெரிவிப்பதோடு, இலங்கைக்கே உரித்தான நன்னீர் மீனினங்கள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் அழிந்து போகக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதென மேலும் சுட்டிக்காட்டுகின்றனர். இயற்கையாக ஓடும் ஆற்றுநீரை அணைகட்டி தடுத்து வாய்காலூ டாக நீரைகொண்டு செல்வதால் நன்னீர் மீன்களுக்கும் நீர்வாழ் உயிரினங்களின் வாழ்க்கை முறையை நேடியாகவே பாதிக்கச் செய்கின்றது. உதாரணமாக செந்நிற சொண்டுடைய சிறு நன்னீர் மீனின வகைகளைச் சார்ந்த மீன்கள் நன்னீரில் முட்டையிடலானது இடம்பெறுவதுடன் அந்த முட்டைகள் கையின் தாள் பிரதேசங்களுக்கு அடித்து கலப்பு நீரில் இனவிருத்தியாகி மீண்டும் தாய் மீன்களின் வாழ்விடங்களுக்கு செல்ல ஆற்றின் மேல்பகுதிக்கு செல்லும். இவ்வாறான சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்களினால் மேற்படி நீர்வாழ் உயிரினங்கள் அழிந்துவிடக்கூடிய நிலைமை உருவாகலாமென சூழலியலாளரொருவர் தெரிவித்தார்.

கொன்கிரீட் வடிகால்கள் மூலம் நீரை கொண்டு செல்வதால் ஆற்றின் வழியாக வடிந்தோடுதல் குறைவதால் ஆற்றோரங்களில் தாவரங்கள் அழிவதுடன் அதனை அண்டிய பகுதிகளில் ஈரத்தன்மை குறைந்து வரண்ட பகுதிகளாகிவிடும். இதனால் விவசாய உற்பத்தி பொருளாதாரத்திற்கும் பாதிப்பு ஏற்படும். அதேபோல் நீரை கொண்டு செல்ல கொன்கிரீட்டிலான வடிகால்கள் அமைக்கும் போது ஆற்றின் இருபுறங்களிலும் இயற்கையான சூழல் பாதுகாப்பு வலயங்கள் அழிக்கப்படுவதால் அதிலும் இயற்கைக்கு பாரிய அழுத்தம் ஏற்படுவதாக சூழலியலாளர் ஒருவர் தெரிவித்தார். இதற்கமைய சூழல் சமநிலை சிதைவுற்று பொது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பல்வேறு அச்சுறுத்தலாக அமையுமென சூழலியலாளர்கள் மேற்கோள்காட்டியுள்ளனர்.

**மின்சார மாபியாவிற்கு குறையாத சிறியளவிலான நீர்மின் நிலைய மாபியாக்கள்**

இலங்கையில் இருக்கும் மின்சார மாபியாவின் ஒரு பக்கமே 2018 ஒக்டோபர் 17ஆம் திகதி புதன்கிழமை “லங்காதீப” பத்திரிகையின் “உண்மையை தேடல்” என்ற விசேட கட்டுரை மூலம் வெளிக்கொண்டுவரப்பட்டது. சிறிய நீர்மின் உற்பத்தி நிலைய செயற்திட்டங்களிலும் இவ்வாறான மாபியா உள்ளதென சூழலியலாளர்கள் தெரிவித்துள்ளதுடன், அது உண்மையென உறுதிப்படுத்த சில விடயங்களும் எமது தேடலின் போது தெரிய வந்துள்ளது.


இக்கட்டுரையில் முன்னர் குறிப்பிட்டதற்கமைய சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிப்தற்கு முன்னர் சுற்றாடல் தொடர்பான மதிப்பீடொன்றை மேற்கொண்டு மத்திய சுற்றடால் அதிகார சபையிடம் சுற்றாடல் அனுமதியொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனாலும் ஒரு

சில சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கும் போது அவ்வாறான அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பது குறித்து சந்தேகத்துக்கிடமான அநேக சந்தர்ப்பங்கள் உள்ளன. ஒரு சில சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள அனேகமான இடங்களில் இயற்கை எழிலுடைய சூழலில் அதிகளவில் காணப்படும் வலயங்களிலிலேயே இவை அமைந்துள்ளன.

இத்தகைய சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிக்கும் போது குறிப்பிட்ட ஆற்றில் வாழும் மீனினங்கள் மற்றும் அரியவகை தாவரங்கள் தொடர்பான தகவல்களை ஒருசில சிறிய மின் நிலையங்களை நிர்மாணிக்கும் போது சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்படுவதில்லை. சுற்றாடல் மாசடைவு குறித்து கவனம் செலுத்தாது வழங்கப்பட்ட அனுமதியுடன் அனேகமான சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

சிறிய நீர்மின் நிலையங்கள் தொடர்பில் ஒன்றுக்கொன்று முரணான தகவல்களை வழங்கியுள்ளமை தொடர்பில் தகவல் அறியும் ஆணைக்குழுவில் இடம்பெற்ற மேன்முறைப்பாட்டு விசாரணையின் போது  மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் இத்துடன் தொடர்புடைய தகவல்களை தாங்கள் ஆவணப்படுத்த வில்லையென தெரிவித்தனர். தகவல் அறியும் ஆணைக்குழுவின் கட்டளையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் பொது அதிகார சபை என குறிப்பிடப்படுவது மத்திய சுற்றாடல் அதிகாரசபையையே ஆகும்.

பொது அதிகாரசபை கருத்து தெரிவிக்கையில் இவ்வாறான சிறிய அளவிலான நீர்மின் நிலைய செயற்திட்டங்களுக்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபை மட்டும் அனுமதி வழங்குவதில்லையெனவும், அதற்காக வன பாதுகாப்பு திணைக்களம், மகாவலி அதிகார சபை போன்ற நிறுவனங்களும் அனுமதியளிக்கின்றன.



http://www.ft.lk/

அத்துடன் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கும் செயற்திட்டங்களும் இந்த பட்டியலில் உள்ளடக்கப்படவில்லையென பொது அதிகாரசபையினர் மேலும் தெரிவித்தனர்.

அச்சந்தர்ப்பத்தில் தகவல் ஆணைக்குழுவானது இந்த அனுமதியை மத்திய சுற்றாடல் அதிகார சபையும் இணைந்து வழங்கும் அனுமதியா? என்று கேட்டது. பொது அதிகார சபை “ஆம், அப்படியே” என்று ஒப்புக்கொண்டதுடன், அப்படியான செயற்திட்டங்கள் தொடர்பான  பட்டியல் பேணப்படவில்லையென என தெரிவித்தனர்.

சிறிய நீர்மின் நிலையங்களது மாபியாவின் தன்மைகளை விளங்கிகொள்வதற்கும், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இயலாமைக்கும் இது மிகச் சிறந்த உதாரணமாகும். இது குறித்து  பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு கருத்து தெரிவிக்கையில் தாங்கள் அனுமதி வழங்குவது சுற்றாடல் அனுமதி வழங்கியதன் பின்னரேயன்றி, சுற்றாடல் அதிகார சபையினர் சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதென தெரிவத்தது.

**ஒன்றுக்கொன்று முரணான அறிக்கைகள்**

இந்த கட்டுரைக்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதி வழங்கப்பட்டுள்ள சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்களின் பட்டியல் தேவைப்பட்டதுடன், அந்நாட்களில் குறித்த அதிகார சபையினரிடம் கேட்டபோது அந்த

பெயர் பட்டியலை தர முடியாதெனவும் சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்தது. 2017 பெப்ரவரி மாதம் 03ம் திகதியிலிருந்து தகவலரியும் சட்டம் அமுல்படுத்தபட்டதன் பின்னர் 2017 பெப்ரவரி மாதம் 17ம் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு தகவல் கோரிக்கையொன்றை சமர்ப்பித்து 2010 -

2017 வரையான காலப் பகுதியில் அனுமதி வழங்கப்பட்ட சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்களது பெயர் பட்டியல் கேட்டிருந்தோம். அதற்கு பதிலளிக்கும் வகையில் 2016 - 2017 வரையான காலப்பகுதிக்குள் அனுமதியளிக்கப்பட்ட சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் எனும் தலைப்பில் கீழ் 131 பெயர்களை கொண்ட பட்டியலை மத்திய சுற்றாடல் அதிகாரசபை வழங்கியது.

மேற் குறிப்பிட்ட அட்டவணை எமக்கு கிடைத்ததன் பின்னர் அதையொட்டிய மேலும் சில தகவல்களை கோரி இலங்கை மின்சக்தி எரிசக்தி அமைச்சு இலங்கை மின்சார சபை, நிலையான மின்வலு அதிகார சபை, பொது பயன்பாட்டு ஆணைக்குழு ஆகிய நிறுவனங்களுக்கு தகவல் அறிய விண்ணப்பித்தோம். அவற்றின் தகவல்கள் கிடைத்ததன் பின்னர் மீண்டும் 2018 ஜனவரி 22ம் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு தகவல் அறிய விண்ணப்பித்தோம். அதன் பிரகாரம் 2015 ஜனவரி 1 முதல் 2018 வரை அனுமதி வழங்கப்பட்ட சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்களின் பெயர் பட்டியலை கோரி விண்ணப்பித்தோம். அதற்கு பதிலாக தகவல் அலுவலர் இதற்கு முன்னர் 131 இன் பட்டியலையே மீண்டும் எமக்கு அளித்தாலும் தலையங்கம் மாத்திரம் மாற்றியமைக்கப்பட்டிருந்தது. “தங்களால் கோரப்பட்ட தகவல் 2017.03.09 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் தற்போதும் வைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரதியொன்றையும் இத்துடன் முன்வைத்துள்ளேன்.” என்று மத்திய சூற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் முகாமைதுவ மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பதில் கடமையாற்றும் பணிப்பாளர் தெரிவித்திருந்தார்.

இது குறித்து தகவல் அறியும் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடொன்றை தாக்கல் செய்ததுடன் 2018 டிசம்பர் மாதம் 4 திகதி தொடக்கம் அதன் விசாரணைகள் ஆரம்பமானது. இடையில் மீண்டும் ஒருமுறை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு தகவல் கோரல் மனு ஒன்றை அனுப்பி 2019 ஜனவரி வரையான காலப்பகுதிக்குள் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் அனைத்து சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்களினது பெயர்

*எரந்த சிறிய நீர் மின்சாரக் கருத்திட்டம்*



*en.wikipedia.org*

பட்டியலை கோரியிருந்தோம். மூன்று தடவைகளில் சுற்றாடல் அதிகார சபை வழங்கிய தகவல்கள் ஒன்றுக்கொன்று முரணானவையாகவே தென்படுகிறது. சுற்றாடல் அதிகார சபை வழங்கிய அனைத்து தகவல்களையும் பகுப்பாய்வு செய்து கீழ் கண்டவாறு தொகுக்க முடியும்.

2016 இலிருந்து 2017 வரையான காலப்பகுதிக்குள் அனுமதி வழங்கிய சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்கள் முதல் தகவல் கோரலுக்கமயை 131 ஆகும். மூன்றாம் தகவல் கோரலுக்கமைய வழங்கப்பட்ட தகவல்களுக்கயைம 9 ஆகும். 2010 - 2018 வரையான காலப்பகுதியில் அனுமதி வழங்கப்பட்ட சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களின் முதல் தகவலுகளுக்கமைய 131 ஆகும். மூன்றாவது தகவல் கோரலுக்கமைய 115 ஆகும். 2019 ஜனவரி 01 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ள மொத்த சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்கள் முன்றாவது தகவல் கோரலுக்கமைய 240 ஆகும். அந்த கோரலின் பின்னர் ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய இறுதியாக வழங்கப்பட்ட தகவலுக்கமைய 256 ஆகும். மத்திய சுற்றாடல் அதிகார சபை அவ்வப்போது இப்படியான முரண்பாடான தகவல்களை எமக்கு வழங்குவதிலிருந்து தெரியவருவதாவது இந்த விடயத்திற்கான சரியான தகவல்கள், அறிக்கைகள் பேணல் குறித்து அதிகார சபையால் மேற்கொள்ளவில்லை அல்லது வேண்டுமென்றே தகவல்களை ஒழிப்பதாகவே தெரிகின்றது. இது குறித்து நிலையான மின்வலு அதிகாரசபைக்கு அனுப்பபட்ட தகவல் கோரலுக்கு பதில் வழங்கும் வகையில் 2018 ஆகஸ்ட் மாதம் 01 திகதி வரை மின்பிறப்பாக்கம் ஆரம்பித்த சிறியளவிலான நீர் மின்னுற்பத்தி நிலையங்கள் 188 ஆகும் என்பதாகும். மேலும் 80 நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் இன்றும் வேலைகள் நிறைவடையாத தன்மை காணப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய நிலையான மின்வலு அதிகார சபை அனுமதி வழங்கிய சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்கள் 268 ஆகும். அதற்கமைய மத்திய சுற்றாடல் அதிகார சபையினதும், நிலையான மின்வலு அதிகார சபையினதும் தகவல்களில் வேறுபாடுகள் உள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி இரத்தினபுரியில் ஊடகவியலாளர்களை சந்தித்து பேசிய போது நிலையான மின்வலு அதிகார சபையின் மின் புத்தாக்க மின்வலு பணிப்பாளர் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்கள் தொடர்பில் பல விடயங்களை எடுத்துரைத்தார். அவர் கூறியதற்கமைய சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக 3500 விண்ணப்பங்கள் வரை கிடைக்கபெற்றிந்தாலும் 2015 ஆண்டுக்கு பின்னர் எந்தவொரு சிறிய நீர்மின் உற்பத்தி நிலையத்திற்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதை தெரிவித்தார். பணிப்பாளர் ஊடகங்களுக்கு அப்படியானதொரு தகவலை வழங்கி இருந்தாலும், தகவலறியும் சட்டமூலம் நிலையான மின்வலு அதிகார சபையின் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய 2015 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து, 2018 ஜனவரி 1 ஆம் திகதி வரை 26 நீர் மின் உற்பத்தி நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன என்றவாறாகும். அவைகள் எந்த ஆறுகளுக்கிடையில் அமைக்கப்பட்டுள்ளன என்ற விபரங்கள் நிரந்தர மின்வலு அதிகார சபையானது தகவல் அறியும் சட்டத்தின் ஊடக தகவல் வழங்கியுள்ளது. அதன்படி பணிப்பளர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார்.

இலங்கை மின்சார சபை தகவலரியும் சட்டத்தின் ஊடாக வழங்கிய தகவல்களுக்கமைய 2018 ஒகஸ்ட் 01 ஆம் திகதி வரை  இலங்கை மின்சார சபை அவர்கள் அனுமதி வழங்கப்பட்ட சிறியளவிலான நீர்மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை 190 ஆகும். அத்துடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டாலும் அனுமதி வழங்கப்படாத சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை 67 ஆகும். அதற்கமை மொத்த தொகை 257 நீர்மின் உற்பத்தி நிலையங்களாகும்.

பொதுப் பாவனையாளர் ஆணைக்குழுவின் தகவல்கள் சட்டத்திற்கமைய வழங்கப்பட்ட தகவல்களுக்கமைய குறிப்பிட்ட ஆணைகுழுவில் 2010 - 2019 வரை மின் பிறப்பாக்க அனுமதி வழங்கப்பட்ட சிறிய நீர் மின் நிலையங்கள் 209 ஆகும்.

**மாற்று மின்வலுசக்திகளை நோக்கி செல்ல வேண்டும்.**

சூழலியலாளர் கலாநிதி இரவீந்திர காரியவசம்

சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்படுவது இலங்கையில் ஆறுகள் - நதிகள் அண்டிய நீர் மூலவளங்கள் உள்ள இடங்களிலாகும். அனேக தருணங்களில் சூழல் சுற்றாடல் தொடர்பான எந்தொரு சட்டத்தையும் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. இப்பொழுது புதிய நடைமுறை என்னவென்றால் மேற்கத்திய நாடுகள் இந்த சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்களை முற்றிலுமாக அப்புறப்படுத்திக் கொண்டு வருகின்றார்கள். அவர்கள் அதற்கீடாக காற்றாலை மின்னுற்பத்தி, சூரிய மின்சக்தி முதலான (காந்த ஒளி) மூலக் கூறுகளை நாடுகின்றனர். அவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே இலங்கையில் சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் அமையப் பெறுகின்றன. சிறியளவிலான நீர்மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்படுகின்றது.

சிறியளவிலான நீர்மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்படுவதால் இலங்கையில் உள்ள சிறப்பு மீனினங்கள் அழிவுறக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. காரணம் அவைகளின் வாழ்கை முறைக்கு அழுத்தம் ஏற்படுவதனாலாகும். “Bulath hapaya – thal kossa” போன்ற இலங்கைக்கே உரிய மீனினங்கள் இருக்கின்றன. ஏனைய நாடுகளில் இப்படியான நீர் மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கும் போது “மீன் ஏணிகள்” அமைக்கப்படும். நிரோட்டத்தை திசைதிருப்பி டெர்பைன் சுழல்வதற்கு வடிகான்கள் மூலம் அனுப்பப்படுகின்றது. அதன் வழியே செல்லும் மீன்களுக்கு மீண்டும் திரும்பிவர வழி இல்லை. ஏனைய நாடுகளில் மீன்கள் திரும்பிவர மீன் ஏணிகள் அமைக்கப்படும். இப்படியான குறைந்த பட்சமான விடயங்களை கூட கவனத்தில் கொள்ளாமலேயே சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

இப்படியான நீர் மின்னுற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படுவதால் நீர்மூலங்கள் பாரியளவில் அழிவடைகின்றன. எமது நாட்டிற்கு இயற்கையாகவே சூரிய ஒளி கிடைக்கின்றது. சூரிய கலங்களை வீட்டு கூரைகளில் பொருத்தி சூரிய மின்னுற்பத்தி செய்து கொள்ளலாம். அவற்றை வீட்டுத் தேவைக்காக பயன்படுத்தி எஞ்சிய மின்னை பிராதான கட்டமைப்புக்கு சேர்க்கும் முறையொன்றை நாம் உருவாக்கிக் கொண்டால் இலங்கையின் மின்சார தேவைகளை ஓரளவாவது பூர்த்தி செய்யலாம்.

**பொய் குற்றச்சாட்டு**

சிறிய நீர்மின் உற்பத்தி நிலைய உரிமையாளர் ஒருவர்

சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்களினால் இலங்கை பிரதான மின்சார கட்டமைப்பிற்கு மிகப் பாரிய சேவை வழங்கப்படுகிறது. அவசர தேவைகளின் போது இந்த சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து மின்சாரம் விலைக்கு வாங்கப்படுகின்றது. இதன் மூலம் சுற்றாடலுக்கு பாதகங்கள் ஏற்படுகின்றன எனக் கூறுவது முற்றிலும் பொய்யான தகவலாகும். எந்தவிதமான சுற்றாடல் பாதிப்புகளுமின்றியே நாங்கள் மின் உற்பத்தி நிலையங்களை நடத்திவருகின்றோம். அது போலவே நாங்கள் சட்டத்திட்டங்களுக்கமையவே செயற்பட்டு வருகின்றோம். பல்வேறு அரசு சார்பற்ற நிறுவனங்கள் எம்மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருக்கின்றனர் அவர்கள் அப்படி செய்வது பொறாமையினாலன்றி வேறு எந்தவித காரணங்களும் இல்லை.

**தரிந்து ஜயவர்தன**



http://www.gazzan.net/

ஹம்பாந்தோட்டை சுச்சீ பாடசாலையின் முன்பக்கம்

## சுச்சீ பாடசாலை அதிபரின் மரணத்திற்கு

# கல்வி அதிகாரிகள் பொறுப்புக் கூற வேண்டும்

கல்வி அமைச்சின் தேசிய பாடசாலை அதிபர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட சுய மற்றும் நிறுவன ஒழுக்கம் மற்றும் தலைமைத்துவம் தொடர்பான பயிற்சி செயலமர்விற்க்கு நிறுவனமொன்றை தெரிவு செய்தல் கொள்முதல் செயன்முறை தொடக்கம் ஏனைய அனைத்து செயற்பாடுகளும் முறையாக இடம்பெறவில்லையென கல்வி அமைச்சின் விசாரணை பிரிவால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது கண்டறியப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை சுச்சி தேசிய பாடசாலையின் அதிபர் திடீரெனக் கீழே விழுந்து மரணித்தமை இப்பயிற்சியின்போதே இடம் பெற்றது. அதிபரின் மரணம் விபத்தாக அமைந்தாலும் குறிப்பிட்ட பயிற்சி திட்டமிடப்பட்டது.

முதல் விலைமனுக்கோரல், நிறுவன தெரிவு மற்றும் குறிப்பிட்ட பயிற்சி ஏற்பாடு செய்யபட்ட போது குறிப்பிட்ட அலுவலர்களது கவனயீனம், அறியாமை மற்றும் பொறுப்பற்ற தன்மை போன்ற விடயங்களே குறிப்பிட்ட அதிபரின் மரணத்திற்கு மறைமுகமாகத் தாக்கம் செலுத்தப்பட்டுள்ளதாக விசாரணைக் குழு தீர்மானித்துள்ளது.

அதிபரின் மரணம் தொடர்பில் விசாரித்து குறிப்பிட்ட அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஏற்கனவே கல்வி அமைச்சின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்து. அது குறித்து தகவல் அறியும் உரிமை ஆணைக்கழுவில் இடம் பெற்ற மேன்முறையீட்டு விசாரணையின் பின்னர் குறிப்பிட்ட அறிக்கையை வெளியிடுவதற்க்கு கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டிருந்தது

குறிப்பிட்ட அறிக்கைக்கு அமைய தேசிய பாடசாலை அதிபர்களுக்காக இடம் பெற்ற தலைமைத்துவ செயலமர்வின் போது அனைத்து செயற்பாடுகளும் முறையான வகையில் இடம்பெறவில்லை. பயிற்சி வழங்குவதற்காக நிறுவனங்களை தெரிவு செய்ய வேண்டிய செயன்முறை சிக்கலானதென விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தரிந்து ஜயவர்தன**



mapio.net

இசுருபாயவின் முன்பக்கத் தோற்றம்

## உடற்கல்விப் பணிப்பாளர்

# முறையற்ற வகையில் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளமை

கல்வி அமைச்சின் உடற்கல்வி அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பணிப்பாளர் பதவிக்காக கர்னல் மஞ்சுள காரியவசம் நேர்முகப் பரீட்சைக்கான வர்த்தமானி அறிவித்தல் மற்றும் பகிரங்க பத்திரிகை அறிவித்தலின்றி சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டார் என தகவல் அறியும் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தெளிவானது.

குறிப்பிட்ட பதவிக்காக பொருத்தமான ஒருவரை தெரிவு செய்வதற்கான அறிவித்தல் ஐந்து நிறுவனங்களின் அறிவித்தல் பலகைகளில் மட்டும் காட்சிப்படுத்தவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டதாகவும், குறிப்பிட்ட நேர்முகப் பரீட்சைக்கு கர்னல் மஞ்சுள காரியவசம் மற்றும் கே.டபிள்யு. மிஹல் சோமவர்தன ஆகிய இருவர் மட்டும் தோற்றியதாக கல்வி

அமைச்சு தெரிவிக்கின்றது.

தகவல் அறியும் ஆணைக்குழுவில் இடம் பெற்ற மேன்முறையீட்டு விசாரணையின் போது கல்வி அமைச்சு இதனை தெரிவித்தது. கல்வி அமைச்சின் பணிப்பாளர் (உடற்கல்வி அபிவிருத்தி மற்றும் பயிற்சி) பதவிக்காக அலுவலர் ஒருவரை தெரிவு செய்வது குறித்து கல்வி அமைச்சினால் கோரப்பட்ட தகவல் வழங்காமை தொடர்பில் மேற்படி மேன்முறையீடு விசாரணை செய்யப்பட்டது.

குறிப்பிட்ட பதவிக்காக சேவையில் இணைக்கும் செயன்முறை தொடர்பில் கல்வி அமைச்சால் தயாரிக்கப்பட்ட செயன்முறை 2017 யூலை 22 ஆம் திகதி அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் 2017 யூலை 03 ஆம் திகதி அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அது அனுமதிக்கப்பட்டு மீண்டும் கல்வி அமைச்சிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் அல்லது பகிரங்க அறிவித்தல் மற்றும் இணையதளத்தில் வெளியிடுவதன் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டுமென தெரிவிக்கப்படுகின்றது. ஆயினும் கல்வி அமைச்சானது குறிப்பிட்ட ஐந்து நிறுவன அறிவித்தல் பலகைகளில் காட்சிப்படுத்தி விண்ணப்ப படிவங்களை கோரியுள்ளதென தகவல் அறியும் ஆணைக்குழுவின் விசாரணையின் போது தெளிவானது.

இந்தப் பதவிக்காக விண்ணப்பப் படிவங்கள் கோரலுக்குரிய அறிவித்தல் கல்வி அமைச்சின் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்துமாறு 2017 ஜீலை 21 ஆம் திகதி கல்வி அமைச்சின் மேலதிக செயலாளாரின் (நிர்வாக மற்றும் நிதி) கையொப்பத்துடன் தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர், ஜனகலா கேந்திரயத்தின் பணிப்பாளர், கடுவெல பிரதேசச் செயலாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச சபை செயலாளர் மற்றும் கல்வி அமைச்சின் உதவிப்பணிப்பாளர் (திட்டமிடல்) ஆகிய நிறுவன பிரதானிகளிடம் கோரியிருந்தது. தற்சமயம் பதவியில் இணைக்கப்பட்டுள்ள நபர் இங்கு குறிப்பிடப்படும் எந்த நிறுவனத்தையும் பிரதிநிதித்துவம் செய்யவில்லை என ஒரு ஆசியர் சங்கம் தெரிவிக்கின்றது. பணிப்பாளர் (உடற்கல்வி அபிவிருத்தி மற்றும் பயிற்சி) பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட காலம் மூன்று வருடங்களாகும்.

**தரிந்து ஜயவர்தன**




toyota.com.bh



colombogazette.com

## சுற்று நிருபங்களை மீறி

# அமைச்சர் ரிஷாட்டுக்கு மேலதிகமாக 7 வாகனங்கள்

ஜனாதிபதி செயலாளரது சுற்றுநிருபங்களுக்கமைய அமைச்சரொருவரது பயன்பாட்டிற்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் ஒதுக்கப்பட வேண்டிய ஆகக்கூடிய வாகனங்களது எண்ணிக்கை மூன்று. ஆயினும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாட் பதூர்தீன் அவர்களுக்கு குறிப்பிட்ட சுற்றுநிருபத்தை மீறி மேலதிகமாக ஏழு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளமை தெளிவாகியுள்ளது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சிற்கு தாக்கல் செய்யப்பட்ட தகவல் கோரிக்கையின் பிரகாரமே இத்தகவல்கள் கிடைக்கப்பெற்றன. **கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சிற்கு ஜூலை 11 ஆம் திகதி** தகவல் கோரிக்கையை சமர்ப்பித்து குறிப்பிட்ட அமைச்சின் வாகனப் பயன்பாடுகள் குறித்து தகவல் கோரப்பட்டதுடன் அதன் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) டி.டி.பி.எஸ்.பெரேரா அவர்களது கையொப்பம் குறிப்பிட்ட தகவலில் பதிவிடப்பட்டிருந்தது.

ஜனாதிபதி செயலாளரால் வெளியிடப்பட்ட **இலக்கம் சீஏ. /1/17/1 மற்றும் 2010.05.14 ஆம் திகதியுடைய அரச செலவு முகாமைத்துவ சுற்று நிருபத்தின்** மூன்றாம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய அமைச்சர்களது மற்றும் பிரதி அமைச்சர்களது

பயன்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைளுக்காக ஒதுக்கப்பட்ட ஆகக்கூடிய உத்தியோகப்பூர்வ வாகன எண்ணிக்கை மூன்றாகும். இலக்கம் சீஏ. /1/5 மற்றும் 2010.05.19 ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கமைய குறித்த வாகனங்களின் எண்ணிக்கை அவ்வாறாகவே இராஜாங்க அமைச்சர்களுக்கும் பொருந்துமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான பின்னணியில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சருக்கு 10 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளதென தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களில் தெளிவாகின்றது. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்த சாரதிகளின் எண்ணிக்கை எட்டாகும். கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சிடம் 23 வானங்கள் காணப்படுவதுடன் மேலும் 16 வாகனங்கள் அமைச்சின் அலுவலர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அலுவலர்கள் பயன்படுத்தும் இரண்டு வாகனங்கள் குத்தகை அடிப்படையில் பயன்படுத்தப்படும் வாகனங்களாகும்.

குறிப்பிட்ட அமைச்சின் வாகன கொத்தணியிலுள்ள 09 வாகனங்களுக்கு சாரதிகள் இல்லாததுடன், உத்தியோகப்பூர்வ வாகனமுடைய அதிகாரிகளுக்கு ஒதுக்கபட்ட 16 வாகனங்களில் இரண்டு வாகனங்கள் அதிகாரசபை மற்றும் நியதிச் சபையின் சாரதிகளாவர். அமைச்சர்களுக்கு ஒதுக்கபட்ட வாகனங்கள் இரண்டு. வாகனங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள சாரதிகள் மற்றும் பிராந்திய சாரதிகள் இருவருடன் அமைச்சின் சாரதிகளின் மொத்த எண்ணிக்கை 28 ஆகும். அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களுக்கிடையில் சீ.எ.வீ, சீ.எ.ஈ, பி.எம்.கே.வை, மற்றும் கே.ஜீ. எனும் ஆங்கில இலக்கங்களில் ஆரம்பிக்கும் வாகனங்களும் உள்ளடங்கும்.

அரச செலவுகள் முகாமைத்துவ சுற்றுநிருபத்திற்கமைய அமைச்சரொருவரது உத்தியோகபூர்வ வாகனமொன்றுக்கு எரிபொருள் கொடுப்பனவு பின்வருமாறு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | மேல் மாகாணத்திற்கு வெளியில் | மேல் மாகாணத்திற்குள் |
|---|---|---|
| ஒரு பெற்றோல் வாகனத்திற்க | லீட்டர் 750 | லீட்டர் 600 |
| ஒரு டீசல் வாகனத்திற்காக | லீட்டர் 600 | லீட்டர் 500 |

2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் வாகனங்களது எரிபொருள் செலவு மற்றும் பராமரிப்பு செலவுகள் பின்வருமாறு அட்டவணையில் குறிப்பிடப்படுகின்றது.

| வருடம் | எரிபொருள் செலவு | பராமரிப்புச் செலவு |
|---|---|---|
| 2015 | 25,187,335 | 36,555,039 |
| 2016 | 17,143,901 | 33,861,901 |
| 2017 | 16,723,187 | 37,841,376 |

இது குறித்து விசாரிப்பதற்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சரை தொடர்புகொள்ள முயற்சித்த போதும் அது வெற்றியளிக்கவில்லை. அமைச்சரவை செயாலாளர் கே. டி. என். ஆர். அசோக்க அவர்களிடம் இது குறித்து விசாரித்த போது குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு நிர்வாகச் செயலாளரே பொறுப்பு. மேற்படி செயற்பாடுகளுடன் தொடர்புடையவர் அவரே. ஆகவே அவருடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவித்தார். எவ்வாறாயினும் குறிப்பிட்ட இத்தகவல்கள் நிர்வாக செயலாளர் டி.டி.ஆர். எஸ். பெரேரா அவர்களாலேயே வழங்கப்பட்டுள்ளது.

**தரிந்து ஜயவர்தன**



*வீதி அமைப்பது பற்றி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவதானிப்பு விஜயத்தை மேற்கொண்ட போது*

# சிங்கராஜ காட்டினூடாக
## அமைக்கப்படும் வீதி பற்றிய
## உண்மையைக் கண்டறிதல்

ஆட்சி மாற்றத்துடன் கடந்த அரசாங்கத்தின் ஆட்சிகாலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஒருசில ஊழல்கள் மோசடிகள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மனிதர்களுக்கு மட்டுமல்ல பறவை, மிருகங்களுக்கும் பாதிப்பேற்படுத்தும் சுற்றாடல் அநீதிகள் தொடர்பில் இதுவரை எந்தவித விசாரணைகளும் ஆரம்பிக்கப்படவில்லை.

நக்கல்ஸ் பகுதியில் காணிகளை குத்தகைக்கு வழங்க வரைபு தயாரித்தல், சுற்றாடல் பாதிப்பை மதிப்பீடு செய்யாது பாரியளவிலான கருத்திட்டங்களை ஆரம்பித்தல் போன்ற சில சம்பவங்கள் தொடர்பில் அக்காலத்தில் 'உண்மையின் தேடல்' விசேட கட்டுரை மேற்படி விடயங்களை ஆராய்ந்தது. இவ்வாறு உண்மையின் தேடல் விசேட கட்டுரையின் ஊடாக கடந்த ஆட்சியின் போது வரைபு

தயாரித்து தொடர்சியாக மேற்கொண்டுவரும் சுற்றாடல் 'நாசச்செயல்' தொடர்பானது.

உலகில் மழைக்காடுகளின் அளவு மிக குறைவானதே. மழைக்காடுகளின் முக்கியத்துவமென்பது தொடர்சியான மழைவீழ்ச்சி கிடைப்பது மட்டுமல்ல. உலகளாவிய ரீதியில் மழையை கிடைக்கச் செய்வதில் மழைக்காடுகளே பாரிய பங்காற்றுகின்றன. கடந்த வருடத்தில் தீப்பற்றல் மற்றும் காடழிப்பால் உலகின் 40% ஆன மழைக்காடுகள் அழிவடைந்துள்ளதாக சர்வதேச அறிக்கைளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள பிரதான மழைக்காடான சிங்கராஜவனம் உலக மரபுரிமை. சில நிறுவனங்களின் தேவைக்காக உலக மரபுரிமையுடைய சிங்கராஜவனத்தை இரண்டாகப் பிரித்து வீதியொன்றை அமைப்பதால் ஏற்படக்கூடிய பாரியளவிலான அழிவு குறித்து ஒரு சில சூழலியலாளர்கள் குரல் கொடுத்த போதும் கடந்த அரசாங்கமும் அதிகாரிகளும் அதை மறுத்தனர். அது குறித்து ஒருவருடமாக தகவல் அறியும் சட்டத்தினூடக தகவல் திரட்டியதன் ஊடாக தெரியவந்த விடயமாவது கடந்த அரசாங்கத்தினதும் அதிகாரிகளினதும் கருத்துக்கள் பொய்யானதென அறியக்கிடைத்தது. இவ்வார உண்மையின் தேடல் அது குறித்ததே.

இலங்கையில் உள்ள மிகப் பெரிய ஆரம்ப காடொன்றாக கருதப்படும் சிங்கராஜவனத்தில் பாரிய மரங்களை வெட்டுதல் 1971-1972 காலப்குதிகளில் இடம்பெற்றது. அது உத்தியோகபூவர்வமாக மேற்கொள்ளப்பட்டது. அது ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனத்தின் மரப் பலகை தேவைகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்டது. அடர்ந்த காட்டின் நடுவில் சரிந்துகிடக்கும் மரக் குற்றிகளை கொண்டு செல்வதற்காக வீதியொன்று அமைக்கப்பட்டது. அது தயாரிடப்பட்ட அல்லது கொங்ரீட் இடப்பட்ட பாதையல்ல.

எவ்வாறயினும் 1978 ஆம் ஆண்டு சிங்கராஜவனம் உயிர்க்கோள காடொன்றாக யுனெஸ்கோ அமைப்பால் அறிவிக்கப்பட்டதுடன், அப்போது காணப்பட்ட எல்லைகளின் அடிப்படையில் 1989 ஆம் ஆண்டில் சிங்கராஜவனம் உலக மரபுரிமை பூமியாக அறிவிக்கப்பட்டது. அதற்கு 8864 ஹெக்டெயார்கள் உள்ளடக்கப்பட்டன. மேலும் தேசிய மரபுரிமை காணிச் சட்டத்தின் கீழ் 11187 ஹெக்டெயார்களுடன் சிங்கராஜவனம் தேசிய மரபுரிமை காணியாக 1989 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.

ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனத்திற்கு பலகை அறுப்பதற்காகவும், அப் பலகைகளைக் கொண்டு செல்வதற்குமான பாதை சிங்கராஜவனம் உலக மரபுரிமையாக மட்டுமல்லாது தேசிய மரபுரிமை பூமியாக பெயரிடுவதற்கு முன்னரேயே அமைக்கப்பட்டது. அதை தொடர்ந்து காலப்போக்கில் குறிப்பிட்ட பாதையில் மரங்கள் வளர்ந்து மூடப்படிருந்த பின்னணியில் **2004 ஆம் ஆண்டுகளில் நான்கு மீற்றர் அகலத்திற்க்கு பாலமொன்றும் வடிகால் அமைப்புடன் பாதையொன்றும் ஸ்தாபிக்கப்பட்டது.** இது குறித்து பொறுப்புடைய அதிகாரிகள் கருத்து தெரிவிக்கையில் இப்பாதை அமைப்பதற்கான காரணம் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா துறையினரின் வசதிக்காகவே என குறிப்பிட்டனர். உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு இலங்கையில் பார்வையிட பல இடங்கள் காணப்பட்டாலும் உலக மரபுரிமைகளில் ஒன்றான மற்றும் இலங்கையின் பாரிய மழைக்காடான சிங்கராஜவனத் தொகுதியை சுற்றுலா வலயமாக்குவதால் ஏற்படும் நிலை தொடர்பில் பொறுப்புடைய அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை.



*www.tripadvisor.com*

சிங்கராஜவனத்திற்குப் பிரவேசிப்பதற்கு உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கியதன் விளைவாக நம் நாட்டுக்கே உரிய மற்றும் சிங்கராஜ வனத்தின் தனித்துவத்திற்குரிய ஒருசில தாவரங்கள் மற்றும் உயிரினங்களது மரபணுக்களை பிறநாடுகளுக்கு கொண்டு செல்லும் வியாபாரத்திற்கு வழிவகுத்தது. ஆகவே, சர்வதேச மட்டத்தில் இடம்பெறும் மரபணுக் கொள்ளையின் ஒரு மத்திய தளமாக நமது நாடு மாறியுள்ளது. சிங்கராஜவனத்தில் கொள்ளையடிக்கப்பட்ட ஒருசில மரபணுக்களை மேம்படுத்தி அதிக விலையிலான உற்பத்திகளை செய்து அவற்றில் புலமைச் சொத்துரிமையைப் பெற்றுள்ள சில வெளிநாடுகள் உரிமைகொண்டாடும் போது நம் நாட்டு பொறுப்புடையவர்கள் வழமைபோல மௌனம் காத்தனர். ஒருசில சந்தர்பங்களில் சிங்கராஜ வனத்தின் எல்லையை விரிவாக்கம் செய்யும்போது அப்போதிருந்த நுழைவாயில் பாதையும் உலக மரபுரிமையான சிங்கராஜ வனத்திற்கும் அதனுடன் இணைந்த பரிவாரக் காடுகளுக்கும் தொடர்புடையதாயிற்று.

இவ்வாறான பின்னணியில் 2018 ஆம் ஆண்டு உலக வங்கி உதவியுடன் சுற்றாடல் கட்டமைப்பைப் பாதுகாத்தல், முகாமைத்துவ செயற்றிட்டத்தின் ஊடாக சிங்கராஜவனத்திற்காக சுமார் 6.4 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்தே மீண்டும் பிரச்சினை மேலெழுந்தது. சிங்கராஜ வனத்தை அழித்து பாதை அமைக்கப் போவதாகக் கூறி ஒருசில சுற்றாடல் பாதுகாப்பு நிறுவனங்கள் தமது எதிர்ப்பை தெரிவிக்கும் போது கடந்த அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் சிங்கராஜ வனத்தில் ஏற்கனவே இருந்த பாதையை புனரமைத்தல் மட்டுமே இடம்பெறுவதாகத் தெரிவித்தனர். அதை நியாயப்படுத்துவதற்கு வன பாதுகாப்பு திணைக்களத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பின்னர் (2004 தொடக்கம்) இதுவரை கடந்த காலம் வரை அதிக மழையுடன் கூடிய காலம் ஏற்படுவதனால் தொடர்ச்சியாக பாதையின் மண்ணரிக்கப்பட்டு கைவிடப்பட்டுள்ளதுடன் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ள இந்த நுழைவாயில் பாதை பயன்படுத்த முடியாது மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது. இந்த நிலையில் சிங்கராஜ உலக மரபுரிமை வனத்தை பார்வையிட வருகைதரும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், பாடசாலை மாணவர்கள் உட்பட அனேகமானோர் பல சிரமங்களுக்கும், ஆபத்தான நிலையிலேயே இந்த நுழைவாயில் பாதை பயன்படுத்தப்படுகின்றது. இந்தச் சிரமத்துடனும், ஆபத்துடனும், தொடர்ச்சியாக பாதையின் மண்ணரிப்புக்கள் இடம்பெறுவதாலும் மண்சரிவு போன்ற சூழல் அழிவை தவிர்க்கும் நோக்கிலேயே வன பாதுகாப்புத் திணைக்களத்தால் இந்த நுழைவாயில் பாதையின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இங்கு காணப்பட்ட பாதையின் அகலம் அதிகரிக்கப்படவில்லை எனவும் மீண்டும் புனரமைப்தற்காக கல்வேலிகள் (இன்டர் லொக்) மண்சரிவு இடம்பெறக்கூடிய இடங்களில் அதை தடுப்பதற்காக கல்தட்டுகளிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய இந்தப் பாதைகளின் 10 அடியைவிட அகலம் கூடியதாக காணப்படும் பாதையை மீண்டும் புனரமைப்பது மட்டுமே இதனால் இடம்பெற்றுள்ளது. இதன் போது எந்த வகையிலும் பாதையின் அகலம் அதிகரிக்கப்படவில்லை. இந்தப் புனரமைப்பு பணிகளின் போது சூழல் பாதுகாப்பு வழிக்காட்டல்கள் பின்பற்றப்பட்டதுடன், இதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய குறைந்தளவிலான இயந்திரங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுள்ளதுடன் மேலதிகமாக எந்தவொரு மரமும் அகற்றப்படவில்லை.

அதற்கமைய சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்கள் தெரிவிக்கும் வகையில் ஒற்றையடிப் பாதையை பாரிய பாதையாக விரிவாக்குதல் தொடர்பான குற்றச்சாட்டை பொய்யான குற்றச்சாட்டாகவே தெரிவிக்கப்படுகின்றது.

**யுனெஸ்கோவிற்கும் உலக வங்கிக்கும் முறைப்பாடுகள்**

**மேற்படி அத்தியாத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களில் வனபாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்குப் பதிலாக சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் வனபாதுகாப்பாளர் திரு. மஹிந்த செனவிரத்ன 2019 ஜனவரி 04 ஆம் திகதி FD/EC/&ESCAMA/ MISC பிரிவின் மாகாவலி அபிவிருத்தி அமைச்சிற்கு அனுப்பட்ட கடிதமாகும். அந்தக் கடிதத்தை வனபாதுகாப்புத் திணைக்களம் சிங்கராஜ வனத்தில் நுழைவாயில் பாதை அமைப்பதற்காக அனுப்ப வேண்டியதாயிற்று. இயற்கை ஆய்வு மத்திய நிலையம் மற்றும் யுனெஸ்கோ அமைப்பு ஆகிய உலக அபிவிருத்தி வங்கிக்கு அனுப்பிய முறைப்பாட்டிற்கமைய சிங்கராஜ பாதையின் பணிகளை ஆரம்பிக்கப்பட்டதுடன் சுற்றாடல் மற்றும் இயற்கைக் கல்வி நிறுவனத்தின் தேசிய இணைப்பாளர் கலாநிதி காரியவசம் அவர்கள் 2018. டிசம்பர் 26 யுனெஸ்கோவிற்கு கடிதடிமொன்றை அனுப்பி உலக மரபை சீரழித்து சட்டத்திற்கு எதிரான பாதையொன்று அமைக்கப்படுவதற்கு எதிராக முறைப்பாடு செய்தார்.** இவ்வாறு சட்டவிரோதமாக அமைக்கப்படும் பாதைக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டு உலக மரபை பாதுகாத்துத் தருமாறு இயற்கை ஆய்வு நிலையம் முறைபாட்டு கோரிக்கையொன்றை தாக்கல் செய்தது. **இலங்கை யுனெஸ்கோ தேசிய சபையின் செயலாளர் ஜெனரால் பிரேமலால் ரணவீர அவர்கள் 2018 செப்டெம்பர் 28 ஆம்**




*ejatlas.org*

**திகதி குறித்த முறைப்பாட்டை மாகவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அனுர திசாநாயக்க அவர்களுக்கு அனுப்பி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.** சுற்றாடல் மற்றும் இயற்கை ஆய்வு நிலையத்திற்கு மேலதிகமாக எக்டின் ஸ்ரீலங்கா அமைப்பு தேசிய சுற்றாடலை அடிப்படையாகக் கொண்டும், சிங்கராஜ சுமிதுரோ அமைப்பு, சிங்கராஜ உதெசா ஜனபஹூர அமைப்பு என்பன ஒன்றிணைந்த பல சுற்றாடல் அமைப்புக்கள் இந்த சட்டவிரோத பாதை அமைப்பதை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தனர்.

**யுனெஸ்கோவின் கடித்திற்கமைய மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு வனபாதுகாப்புத் திணைகளத்தில் அறிக்கையொன்றைக் கோரியது எனவே, குறிப்பிட்ட அறிக்கையை வனபாதுகாப்புத் திணைக்களம் மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு அனுப்பியது.**

**அதற்கமைய 2019 ஆண்டு ஜனவரி 21 ஆம் திகதி குறிப்பிட்ட அமைச்சு இலங்கை யுனெஸ்கோ தேசிய சபையின் செயலாளர் நாயகத்திற்கு கடிதமொன்றை அனுப்பி பாதை விரிவாக்கப்படவில்லையென அறிவித்திருந்தார்.**

எவ்வாறயினும் இது குறித்து முறைப்பாடுகள் தொடர்ச்சியாக வரத் தொடங்கின. சுற்றாடல் நிறுவனங்களால் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்களும் முன் வைக்கப்பட்டன. குறிப்பிட்ட அதிகாரிகள் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்குப் பதிலாக மேலும் நிதியை வீணடித்து ஒருசில ஊடகவியலாளர்கள் சிங்கராஜ வனத்தின் 'குடுவ கந்தவுர' அமைந்த பிரதேசத்திற்கு அழைத்து செல்லப்பட்டு அவர்களது பார்வையில் விளக்கம் மட்டும் இங்கு இடம்பெற்றது. இச்சந்தர்ப்பதிற்கு அப்போதைய சுற்றாடல் அமைச்சரும், தலைவரும் பங்குபற்றியதாக வன பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆவணங்களை பரிசீலிக்கும் போது தெரியவந்தது. அத்துடன்



*www.rapidadventures.lk*

சுற்றாடல் பாதுகாப்பு நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவற்றை அழைத்து 2019 மே. 13 ஆம் திகதி கலந்துரையாடப்பட்டது.

தகவல் சட்டத்தின் மூலம் இச்செயற்பாடுகளுக்கான ஆவணங்களை தகவல்களாக பெற்றுக்கொண்டதன் பின்னரே பொறுப்புடையவர்களது நிர்வாணம் வெளிச்சத்திற்கு வந்தது.

சுற்றாடல் அமைப்புக்கள் 2018 ஒக்டோபர் மாதம் முதல் இப் பாதை தொடர்பாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றன. அவ்வாறன நிலையில் பாதையின் செயற்பாடுகளுக்காக 2018 நவம்பர் 23 ஆம் திகதி முற்பணமொன்றை வழங்க சுற்றாடல் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. முற்கொடுப்பணவுத் தொகையாக ஒரு கோடியே எட்டு இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று ஐந்து ரூபாயை (ரூபா. 10,874,595.00) விஜேசேகர தனியார் நிறுவத்திற்கு வழங்குதவற்கு ஆவணவங்கள் 2018.11.12 தயாரிக்கப்பட்டதுடன், காசோலை மூலம் செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டது 2018.11.23 ஆம் திகதி முற்கொடுப்பனவானது மொத்த தொகையின் 30% ஆகும். **குத்தகை கம்பனி ஒன்றுக்கு செலுத்தவதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் மொத்தத் தொகை மூன்று கோடி அறுபது இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து அறுநூற்று ஐம்பது ரூபாவாகும். (36,248,650.00)** (முற்கொடுப்பனவு செலுத்தபட்ட 53/11 வவுச்சரின் பிரதி இங்குள்ளது.

கட்டணம் செலுத்துவதற்கு முதல் இந்தச் செயற்திட்டத்தின் செலவு மதிப்பீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. சப்ரகமுவ மாகாண சபையின் பிரதம உதவி செயலாளரால் (பொறியியலாளர் சேவை) இந்தச் செலவு மதிப்பீடு 2018.03.07 ஆம் திகதியே அங்கீகரிக்கபட்டுள்ளது. 1.45 கி.மீ நீளமுடைய சிங்கராஜவன நுழைவாயில் பாதையொன்றை அமைப்பதற்கும் நுழைவாயிலொன்றை புத்தாக்கம் செய்யும் நோக்கத்துடன் குறிப்பிட்ட செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. **பாதையின் தேவையான கட்டுமானங்கள் மற்றும் நுழைவாயில்களை புனரமைத்தல் மற்றும் ஏனைய செலவுகளுடன் மதிப்பீடாக ஐந்து கோடியே இருபத்தொரு இலட்சத்து**

**தொண்ணூற்றொன்பதாயிரமாகும். (52,199,000.00)**

தற்போதுள்ள மரங்களை வெட்டாது உள்ளவாறே பாதையை புனரமைத்தல் மட்டுமே இடம்பெறுமென அதிகாரிகளால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் கருத்திட்டத்தின் (bill of quantity) பரீட்சிக்கும் போது இவர்களது தில்லுமுள்ளுகள் வெளிவந்தன. சிங்கராஜ வன நுழைவாயில் பாதையின் செலவுகளுக்கான மதிப்பீட்டில் இரண்டாம் செயற்பாட்டில் முதலாம் உப செயற்பாட்டின் செலவுகள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

- பாரியளவில் வளர்ந்துள்ள தாவரங்கள் வேரோடு பிடுங்கி அல்லது வெட்டியதன் பின்னர், வேரோடு பிடுங்குதல் அல்லது பெரிய காட்டை சுத்தம் செய்வது.
- அதற்கமைய மரஞ்செடிகொடிகளை வெட்டமாட்டோமென மீண்டும் மீண்டும் தெரிவித்தமை, பாரிய மரங்களை வெட்டி வேரோடு அகற்ற உறுதிப்பத்திரம் தாயாரிக்கப்பட்டிருந்தது. அதுமட்டுமல்ல வடிகால் மற்றும் பக்க கட்டுகள், கொங்கிரீட் கால்வாய்கள் அமைத்தல் மற்றும் வாகன தரிப்பிடமொன்றை புனரமைத்தல் உட்பட அனைத்து புனரமைப்புக்களும் கட்டுமானங்களுக்கும் தேவையான இயந்திரங்கள் உதவியுடன் பாதையை வெட்டுதல் சமப்படுத்தலும், வெடிகள் வைத்து கற்களை தகர்ப்பதற்கும் கொங்கிரிட் இடல் போன்ற பல செயற்பாடுகளுகாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**சூழலியலாளர்களின் கருத்து**

இவ்வாறான பணிகளை மேற்கொள்வதால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பில் கலாநிதி இரவீந்தர காரியவசம் அவரகள் பின்வருமாறு தெளிவுபடுத்தினார்.

'சிங்கராஜ உலக மரபிற்கு மட்டுமே உரித்தான உயிரினங்கள் மற்றும் தாவரங்கள் பல உள்ளன. அதாவது அவை உலகில் மட்டுமல்ல எமது நாட்டிலும் காணக் கிடைப்பதில்லை. அவை சிங்கராஜவனத்தில் மட்டுமே காணப்படுகின்றது. இந்த காட்டின் இயற்கை அமைப்பிற்கு மாறாக செயற்கையான பல மாற்றங்களை செய்யும் போது அதாவது பாதைகள் அமைத்தல், கொங்கிரீட் இடல், வெடிகளை வெடிக்கசெய்வதால் உயிரினங்களும் தாவரங்களும் அழிவடைகின்றன.

அதே போல சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டுமென சிங்கராஜவனத்திற்கு சுற்றுலா பயணிகள் இலகுவாக செல்வதற்காக அமைக்கப்படும் இப் பாதை இறுதியாக சிங்கராஜ வனத்தின் எதிர்முனைவரை பாதை அமைக்கப்பட்டே நிறைவடையும். இன்று இரண்டு கிலோமீற்றர் தூரம் வரை அமைக்கப்பட்டாலும் கட்டம் கட்டமாக நீளம் அதிகரித்துக்கொண்டே செல்லும். இறுதியாக சிங்கராஜ வனம் இரண்டாக்கப்படும். சிங்கராஜ வனம் போன்ற மழைக்காடுகளை பாதுகாத்துக்கொள்வதற்குப் பதிலாக அதிகாரிகள் அதை அழிப்பதற்கான வரைபை தயாரித்து வருகின்றனர்.

சிங்கராஜ வனத்திற்குள் சுற்றுலா பிரயாணிகள் அனுமதிக்கப்பட கூடாது. சிங்கராஜ வனத்திற்கு வரும் சுற்றுலா பிரயாணிகளினால் இலங்கையில் உயிர் அணுக்களின் கொள்ளை அதிகரிதுள்ளது. இதன் மூலம் எமது வளங்களை எமக்கு இல்லாமல் செய்வதே. இது குறித்து நாங்கள் யுனெஸ்கோ நிறுவனத்திற்கு முறையீடு செய்தோம். அதிகாரிகள் யுனெஸ்கோ அமைப்பிற்கும் பொய்யுரைத்திருந்தனர். நாங்கள் அந்த பிரதேசத்திற்கு சென்றிருந்த வேளையில் அங்கு நடக்கும் அழிவை காணமுடிந்தது.

நாங்கள் புகைப்படங்களுடன் விரிவாக யுனெஸ்கோவிற்கும், உலக வங்கிக்கும் இந்த அழிவை பற்றி தகவல் வழங்கியுள்ளோம். இந்த வாரம் உலகவங்கியால் எமது முறைப்பாடு தொடர்பாக விசாரணை செய்ய சிங்கராஜவிற்கு செல்லவுள்ளதாக எமக்கு தெரிவிக்கப்பட்டது. அந்த அழிவின் அனைத்து வரைபுகளையும் அவர்களுக்கு சமர்ப்பிக்க நாங்கள் எதிர்பார்கின்றோம். அழிவை நிறுத்தாவிடின் நாங்கள் நீதி மன்றத்திற்கு செல்லவும் எதிர்பார்கின்றோம்.

சிங்கராஜவை பாதுகாப்போம் எனும் மக்கள் இயக்கமொன்றை தாபித்துக்கொண்ட சில சூழலியலாளர்களால் கடந்த காலம் முழுவதிலும் அந்த பாதை அமைத்தலை நிறுத்துமாறு கோரி அழுத்தம் தெரிவித்தனர். குறித்த அமைப்பின் அழைப்பாளர் சமிந்த ஜயசூரிய அவர்கள் தெரிவிக்கையில் இவ்வாறு சிங்கராஜ வனத்தை அழிக்கும் செயற்பாட்டின் இறுதி பெறுபேறாக மக்களுக்கு சுவாசிக்கத் தேவையான ஒட்சிசனை கொழும்பு கடைகளில் விலைக்கு வாங்கவேண்டிய நிலை ஏற்படலாமென அவர் குறிப்பிட்டார்.

‘சிங்கராஜ வனத்தின் பாதைகள் அமைக்ககும் இடங்களுக்கு நாங்களும் சென்றிருந்தோம். இது குறித்து அமைப்புக்களை அழைத்து கடந்த ஒருசில வாரங்களாக கலந்துரையாடப்பட்டது. அதன் போது தமது திட்டம் பிழையானதென அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர். ஆயினும் எதிர்புகள் காரணமாக அதை சற்று மாற்றி அமைத்து மீண்டும் அது ஆரம்பிக்கப்படுமானால் அதை நாங்கள் எதிர்ப்போம். தற்சமயம் வெட்டப்பட்டுள்ள நிலப்பகுதியால் ஏற்படும் சுற்றாடல் பாதிப்பை குறைத்துக்கொள்ளும் வகையில் அப்பிரதேசங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இவ்வாறு காலத்திற்கு காலம் சிங்கராஜவனத்தை அழிப்பதன் இறுதி பெறுபேற்றை இன்னும் பத்துவருடாங்டகளில் மக்களுக்கு தேவையான ஒட்சிசனை கொழும்புக் கடைகளில் விலைக்கு வாங்கும் நிலை ஏற்படலாம். ஆகவே இந்த அழிவினை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இலங்கையில் இடம் பெறும் ஊழல் மோசடிகள் **அனைத்தையும் பிற நாட்டவர் சுற்றாடல் முன்நிலையில் வைக்கபடும்** மன்னார் காடுகளை அழித்து மக்களை குடியமர்தல் இடம்பெற்றது. வவுனியாவில் காடுகளை அழித்து போகஸ்வெவ உற்பட ஐந்து கிராமங்களை நிர்மாணித்து மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். நாடுபூராகவும் இன்னும் பல காடுகள் பல்வேறு நோக்கங்களுக்காக அழிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு எதிராக சட்டம் அமுல்படுதப்படவில்லை. கடந்த ஆட்சிகாலத்தில் நக்கல்ஸ் உலக மரபிற்குரிய காணிகளை குத்தகைக்கு வழங்க தயாரிக்கப்பட்டிருந்த வரைபுகளை நடைமுறைபடுத்த முடியாமல் போனமைக்கு ஊடகங்களும் சூழல் பாதுகாப்பு அமைப்புக்களும் அது குறித்து தெரியப்படுத்தி மேற்கொண்ட அழுத்தத்தாலே ஆகும். அதை தொடர்ந்து சிங்கராஜ வனத்திற்கே கை வைக்கப்பட்டது. இன்றும் அது நிறுத்தப்படவில்லை. சுற்றாடல் அழிவுகளுக்கு எதிகராக இனம் மதம் பேதமின்றி எதிர்ப்பை தெரிவிக்கவேண்டியது அவசியம். காரணம் அவை அழிந்தால் மனித இனத்தின் அனைத்து இனத்தவர்களுக்கும் வாழ்வதற்கு நாடொன்று மிஞ்சாது.

**தரிந்து ஜயவர்தன**
**பிகும் மேனக**




*srilankamirror.com*

## அமைச்சில்

# அரசியல் அடிவருடிகளின் பேயாட்டம்

சிறைக்காவலர்களுக்கான நேர்முகத் தேர்வின் போது முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகக் கூறி, இறுதி நேரத்தில் நியமனம் வழங்குவதை இரத்து செய்தமை குறித்து முழு நாட்டினதும் கவனம் ஈர்க்கப்பட்டது. சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் சுவாமிநாதன் **2016 நவம்பர் மாதம் இதற்கு** நடவடிக்கை மேற்கொண்டார். இதன் போது அமைச்சர் தெரிவிக்கையில் சிறைச்சாலை பதவிகளுக்கான நியமனங்களை இடைநிறுத்தியுள்ளதாகவும், **350 சிறைக்காவலர்கள் வெற்றிடங்களுக்காக** மீண்டும் நேர்முகத் தேர்வு நடாத்தப்படும் எனவும் அறிவித்தார். மேற்படி நியமனங்களை தடை செய்வதற்கான காரணத்தை அவர் தெரிவிக்கையில் குறிப்பிட்ட நியமனங்களின் போது இலஞ்சம் பெறல் மற்றும் ஏனைய முறைகேடுகளும் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார். அச்சந்தர்பத்தில் ஊடகங்களின் வாயிலாக அமைச்சரும் குற்றம்சாட்டப்படிருந்தார். தெரிவுசெய்யப்பட்ட சிறைக்காவலர் பட்டியலில் **அமைச்சருக்குரிய 150 நபர்களது பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதெனும்** மேற்படி குற்றச்சாட்டை அமைச்சர்

முற்றிலும் மறுக்கவில்லை. அந்த பட்டியலில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோள்களே அவ்வாறு சேர்க்கப்பட்டுள்தென அவர் தெரிவித்தார். ஆயினும், இச்சம்பவத்தைத் தொடர்ந்து அமைச்சின் செயலாளர் தனது பதவியை இழந்தார். செயலாளர் பதவி இழந்தமைக்கு இதுவுமொரு காரணமானது என கூறிய அமைச்சர் சுவாமிநாதன் இரண்டாவது நேர்முகத் தேர்வில் பங்குபற்றிய 6000 பேருக்கும் நேர்முகத் தேர்வொன்றை ஏற்படுத்தி நியமனங்கள் வழங்குவோமென தெரிவித்தார். ஆட் சேர்ப்பு செயன்முறையில் காணப்படும் அரசியல் தலையீடுகள் தொடர்பில் ஆராய்வதற்கு 2017 ஜனவரி மாதம் 5ஆம் திகதி வெளியான உண்மையைத் தேடல் என்ற கட்டுரையின் மூலம் கட்டுரையாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

**விசாரணைக்குழு**

ஆட்சேர்க்கும் அதிகாரமுடைய அரச சேவைகள் ஆணையாளரால் சிறைச்சாலை ஆனையாளர் நாயகத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அச்சந்தர்பத்தின் போதும் சிறைச்சாலை திணைக்களத்திற்கு 1098 சிறைக்காவலர்களும், 164 பெண் காவலர்களுமாக மொத்தமாக 1262 வெற்றிடங்கள் காணப்பட்டன. 2015 இல் 500 பேரும் 2016 இல் 350 பேரும், எஞ்சியவர்கள் 2017 இல் ஆட்சேர்ப்பு செய்வதுமே திணைக்களத்தின் நோக்கமாகும். அரச சேவைகள் ஆணைக்குழு, செயலாளரும் மற்றும் தேசிய வரவு-செலவுத் திட்டத் திணைக்களமும் அதற்கு அனுமதியளித்திருந்தது. 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5 ஆம் திகதி 305 சிறைக்காவலா்களையும், 45 பெண் காவலர்களையும் சேர்த்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியது. அதற்கமைய நாட்டிலுள்ள அனைத்து சிறைசாலைகளுக்குமாக 20758 விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், 305 சிறைக்காவலர்களும் 45 பெண் காவலாளர்களையும் ஆட் சேர்ப்பு செய்வதற்கான நேர்முகத் தேர்வு 2016.10.19 திகதி தொடக்கம் 2016.10.27 ஆம் திகதி வரையான காலப்பகுதிகளில் சிறைசாலைகள் ஊடாக பிரதேச வாரியாக நடைபெற்றது.

ஆயினும், ஆரம்ப தேர்வுகளுக்கமைய ஆரம்ப தேர்வுச்சபை தவிசாளர்கள், அங்கத்தவர்களுக்காக சிறைச்சாலை தலைமையகத்தின் மூலம் முறையான நியமனக் கடிதம் வழங்கப்படவில்லை. எவ்வாறாயினும் கிடைக்கப்பெற்ற ஆலோசனைக்கமைய ஆரம்பத் தேர்வின் இறுதியில் குறிப்பிடப்பட்ட திகதிகளில் தேர்வுகள் இடம்பெற்ற பிரதேச சிறைச்சாலைகள் மூலம் இறுதி தேர்வுக்கான குறைந்தபட்ச தகைமைகளை பெற்ற விண்ணப்பதாரிகளின் பெயர் பட்டியலொன்று சிறைச்சாலை தலைமையகத்திற்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டது. ஆயினும் உரிய முறையில் மேற்படி பட்டியல் சிறைச்சாலை தலைமையகத்திற்கு கிடைத்ததா என்பதையும், அதை உறுதிப்படுத்திக்கொள்ள முறையானதொரு செயன்முறை சிறைச்சாலை தலைமையகத்தால் பின்பற்றப்படவில்லை.

மட்டக்களப்பு சிறைச்சாலையின் ஊடாக 2016 ஒக்டோபர் 23 ஆம் திகதி நடத்தப்பட்டு ஆரம்பக்கட்ட தேர்வின் பின் இறுதி தேர்வுக்கு தகுதிபெற்ற அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் இறுதித் தேர்வுக்கு சமூகமளிக்குமாறு அழைப்புக் கடிதம் அனுப்புதல் விடயப்பொறுப்பதிகாரியினால் அனுப்பப்பட்டமை பின்வருமாறு தவிர்க்கப்பட்டது. இவ்வாறு இடம்பெற்றுள்ளமையை சிறைச்சாலை தலைமையகத்தையும், சிறைச்சாலைகள் அமைச்சையும் தொடர்புகொண்ட பின்னரே தெரியவந்தது.

மட்டக்களப்பு சிறைச்சாலையின் ஊடாக நடத்தப்பட்ட ஆரம்பப் பரீட்சையின்




www.alamy.com

பெறுபேறுகளை ஸ்கேன் செய்து மின்னஞ்சல் ஊடாக சிறைச்சாலை தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தாலும் அந்தப் பட்டியலில் தகுதிபெற்ற விண்ணப்பதாரிகளின் பெயர் விபரங்கள் சிறைச்சாலை தலைமையகத்தின் கணனியில் பதியப்படாது தவிர்க்கப்பட்டுள்ளது. குறைந்த பட்சம் மின்னஞ்சல் மூலம் கிடைக்கப் பெற்ற புள்ளிவிபரம் மற்றும் அதைப்பற்றிய ஆரம்ப ஆவணங்களை சிறைச்சாலை தலைமையகத்திற்கு அழைப்பித்து அதனை ஒப்பிட்டு பார்த்திருந்தால் முறையாக இறுதி நேர்முகத் தேர்வை நடத்தியிருக்கலாம். நாட்டில் ஒவ்வொரு இடங்களிலும் இடம்பெற்ற நேர்முக தேர்வுகளின் பெறுபேறுகளை ஒரே நாளில் சிறைச்சாலைகள் தலைமையகத்திற்கு பெற்றுக்கொள்வதற்கான இயலுமை உள்ளதாக தேர்வுக் குழுவினரும் தெரிவித்தனர். ஆனாலும் அப்படி எதுவும் இடம்பெறவில்லை.

கணனி புள்ளிகளைப் பிழையாகப் பதிவு செய்தல்

மாத்தளை, தங்கல்லை ஆகிய சிறைச்சாலைகள் ஊடாக ஒருவர் வீதமும், கண்டி சிறைச்சாலையின் ஊடாக 6 பேரும் ஆரம்பத்தில் தகுதி பெற்றிருந்தாலும், இறுதி நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படவில்லை. அந்த விண்ணப்பதாரிகள் இது குறித்து சிறைச்சாலை தலைமையகத்திடமிருந்தும் அமைச்சிடமிருந்தும் விசாரிக்கும் வரையில் இப்படியாக தாம் தவிர்க்கப்பட்டுள்ளதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

ஆரம்ப நேர்முகத் தேர்வுக் குழுவினரின் முறையற்ற செயற்பாடே இதற்குக் காரணமாகும். இறுதி நேர்முகத் தேர்வு சிறைச்சாலை தலைமையகத்தில் 18 நேர்முகத் தேர்வாளர்களால் நடத்தப்பட்டது. அது 2016 நவெம்பர் 03, 04, 08, 10 மற்றும் 11 ஆம் தினங்களில் நடை பெற்றதுடன், 12 ஆம் திகதி இடம்பெற்ற நேர்முகத் தேர்வானது 2 குழுக்களால் நடத்தப்பட்டன.

சமமான புள்ளிகள் பெற்றுக் கொண்டதன் காரணத்தால் 287

ஆண் விண்ணப்பதாரிகளும், 38 பெண் விண்ணப்பதாரிகளும் மட்டுமே சிறைக்காவலர்களாக தெரிவு செய்வதற்கான ஒப்பந்தம் செய்வதற்கான அழைப்புக்கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. ஆயினும் ஒரு சில விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த புள்ளிகள் தவறாகக் காணப்பட்டதுடன், சுருக்கமாகக் கூறினால் புள்ளிகளின் கூட்டுத் தொகையும் பிழையாக இருந்தது. குறிப்பிட்ட விண்ணப்பதாரிகளுக்கான இறுதித் தேர்வுக்கான புள்ளிகள் கணனி மயப்படுத்தும் போதும் அதே பிழையான புள்ளிகள் சேர்க்கப்பட்டன.

**அலுவலரின் பணிகளை சிற்றூழியரிடம் பொறுப்பளித்தல்**

திணைக்களத்தின் தரத்தை எடுத்துரைக்கும் மற்றைய அறிக்கையான இறுதி நேர்முகத் தேர்வின் புள்ளி விபரமடங்கிய துணை ஆவணத்தை நிர்வாகப் பிரிவின் பொறுப்புடைய அலுவலர் எவரும் பொறுப்பேற்காததுடன், அவை எந்தவொரு அலுவலரினதும் பொறுப்பிலுமின்றி 11 நிர்வாக உத்தியோகத்தர்களது (பதில் கடமை) மேசை மீது கைவிடப்பட்டிருந்தது. அதற்கமைய முறையாக அனைத்து நடவடிக்கைகளும் நிறைவு பெறும் வரை பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் ஓரிடத்திலிருந்து கணனி மயப்படுத்தப்படவில்லை. அதன் பலனாகவே இறுதி தேர்வுக்கான கணனி மயப்படுத்தப்பட்ட புள்ளிகளின் நம்பகத்தன்மை நிச்சயமற்றதானது. இறுதி நேர்முகத் தேர்வுக் குழுவினர் புள்ளி விபரங்களை கணனி மயப்படுத்தலுடன் தொடர்புடையவர் ஜெ.கே.ஏ.ஆர். குமார் என்பவராவார். அவர் வேறுயாருமல்ல அத்தருணத்தில் சிறைச்சாலை அதிகாரியாக (நிர்வாகம்) கடமையாற்றிய பிரதானியொருவரின் காரியாலய சிற்றூழியராவார்.

இந்த செயன்முறையில் மிக முக்கியமானதும், பாரதூரமான விடயங்கள் வெளிச்சத்திற்கு வருவது இதன் பின்னரே. இறுதி நேர்முகத் தேர்வின் பின்னர் தேர்ந்தெடுக்கப்படுவதாக 45 விண்ணப்பதாரிகளுக்கும கடிதம் அனுப்பபட்டது. இறுதித் தேர்வு நடக்கும் போது புள்ளிகள் வழங்கப்பட்டிருந்த ஆவணங்களில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் அடங்கிய கடிதக் கோர்வை காணாமல் போனது. சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் அவர்கள் இது பற்றி விசாரணை குழுவிற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார். சிறைக் கைதிகள் மதிலுக்கு மேல் பாய்ந்து ஓடுவது போல இந்தக் கடிதக் கோவைகளுக்குப் பாய்ந்து ஓட முடியாது. ஆகவே அவற்றுக்கு ஏதோவொன்று நடந்திருக்க வேண்டும்.

அவர்கள் தெரிவித்ததற்கமைய சிறைச்சாலை தலைமையகத்தில் அவை இல்லாவிட்டால் அல்லது காணாமல் போயிருந்தால் அது சாதாரண விடயமல்ல. ஏனென்றால் சிறைச்சாலை தலைமையகம் என்பது பெட்டிக் கடையல்ல. விசாரணைக் குழுவினர் தங்களது தேடலை முன்கொண்டு வந்து முக்கிய பல விடயங்களை வெளிக்கொண்டு வந்துள்ளனர். அது சிறைச்சாலை தலைமையகத்தின் செயற்பாடுகள் பற்றியதாகும். சிறைச்சாலை தலைமையகத்தில் கடமையாற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களான விடயப் பொறுப்பு இலிகிதர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் போன்றோர் மிக நீண்டகாலமாக ஒரே இடத்தில் கடமையாற்றிவருகின்றனர்.

அவர்கள் தமது மேல்நிலை உத்தியோகத்தினருடன் சிறந்த தொடர்புகளை பேணாததுடன் மேல்நிலை உத்தியோகத்தர்களின் அறிவுரைகளை பின்பற்றாமல் தமது விருப்பதிற்கமைய செயற்படுவதாகவும் விசாரணைக் குழுவினர் தெளிவு படுத்தியுள்ளமை வெறுமனே அல்ல. பிரதம நிர்வாக உத்தியோகத்தர் சீ.என். அமரதுங்க மற்றும் நிர்வாக அலுவலர் 11(ப.க) பீ.டபிள்யு.யு. அமரப்ரேம என்போர் விசாரணை குழுவினர் முன்னிலையில்



*groundviews.org*

வழங்கிய சாட்சிகளுக்கமையவும், சாட்சி வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மேற்படி ஆவணக் கோவையை விசாரணைக் குழு பெறுவதற்கு சிறைச்சாலை தலைமையகத்திற்குச் சென்ற பொழுது அவதானித்த கண்காணிப்புக்கள் பின்வருமாறு மேற்படி நபர்கள் தமது கடமைகள் தொடர்பில் பொறுப்பின்றி செயற்பட்டு நடந்து கொள்ளும் விதம் அவர்களது நடத்தை மற்றும் செயல்பாடுகளின் ஊடாகக் காண முடிந்ததென அவர்கள் மேலும் தெரிவித்தனர். சிறைச்சாலை தலைமையகத்தின் உயர் அதிகாரிகளின் ஒற்றுமையின்மையையே இந்த சம்பவங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றதென தெரிவித்தனர்.

**இந்த நிலைமை சிறைச்சாலை தலைமையகத்தின் உத்தியோகபூர்வ செயல்பாடுகளுக்கு பெரிய தடையாகும். சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் எச்.எம்.எம்.சீ. தனசிங்க அவர்களுக்கு, அடுத்தபடிநிலையிலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் இந்த விசாரணை காலப்பகுதியில் கடமையாற்றிய சிறைச்சாலை ஆணையாளர் (நிர்வாகம்) ஆ.ஏ. குணவர்தன அவர்கள் சிறைச்சாலை அதிகாரி (நிர்வாகம்) ஈ.ஆர். மைாஹெவகே போன்றவர்களுக்கிடையில் சிறந்த ஒத்துழைப்பு இருக்கவில்லை. சிறைக்காவலர்களை ஆட்சேர்பு செய்யும் போது கட்டம் கட்டமாக கண்காணிப்பதற்கு முறையான செயற்திட்டமொன்று காணப்படாமை மற்றும் நிர்வாகப் பிரிவின் சிறைச்சாலை ஆணையாளர் (நிர்வாகம்), சிறைச்சாலை அதிகாரி (நிர்வாகம்) உட்பட்ட பணிக்குழுக்களுக்கிடையில் நல்ல உறவு பேணப்படவில்லை என்பதைக் காணமுடிந்தது.**

ஒட்டுமொத்த ஆட்சேர்க்கும் நடவடிக்கையின் போது குறிப்பிட செயற்பாட்டை முறையாக திட்டமிடல் (Planning) முறைப்படி அமுல்படுத்தல்

(Implementation) முறையாக செயற்படுத்தப்படுகின்றதா? (Monitoring) என்று கண்காணிப்பதுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட விடயங்களின் மதிப்பீடு (Evaluation) செய்யப்படவில்லை என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் சிறைச்சாலை தலைமையகம் என்ன செய்துள்ளது என்பதனையே நாம் கேட்க வேண்டியுள்ளது. மறுபுறம் விமர்சகர்கள் கூறுவதற்கமைய அமைச்சர் பத்திரிகையாளர்களை சந்தித்தபோது கூறியதற்கமைய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளின் போது பணம், ஏனைய முறையற்ற மற்றும் இலஞ்சம் பெற்றுக்கொள்ளப்பட்டதா ? என்பது தொடர்பில் போதுமான சாட்சியங்கள் முன்வைக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது.

**முடிவுகள் மற்றும் பரிந்துரைத்தல்**

- சிறைச்சாலைகள் தலைமையகத்தில் அரிச்சுவடியிலிருந்து வேலைகளை ஆரம்பிக்க வேண்டியுள்ளதென விசாரணைக் குழுவினர் தெரிவித்தனர். சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சிறைச்சாலைகள் தலைமையகத்தின் நிர்வாகப்பிரிவின் அனைத்து அலுவலர்கள், இலிகிதர்கள், முகாமைத்துவ சேவையினர் உட்பட கடமையாற்றும் அனைத்து நபர்களுக்கும், அந்த நபர்களின் கடமை மற்றும் பொறுப்புக்கள் அடங்கிய கடமைப் பட்டியலை எழுத்து மூலமாக மீண்டும் கையளிக்க வேண்டும் என விசாரனைக் குழுவினர் பரிந்துரை செய்துள்ளனர். அத்துடன் குறிப்பிட்ட நபர்கள் தத்தமது கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி அறிந்துள்ளமை தொடர்பிலும், அதற்கமைய செயற்படுவதாகவும் எழுத்து மூலமான கடிதத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

- உத்தியோகத்தர்களின் முறைகேடுகளினால் அனைத்து நேர்முகத் தேர்வுகளும், அதனுடன் தொடர்புடைய ஆட்சேர்ப்பையும் தடைசெய்யுமாறு விசாரணைக்குழு பரிந்துரை செய்தது. சிறைச்சாலைகள் ஆணையாளரை நியமிக்கும் அதிகாரமுடையவர் என்ற வகையில் மேற்படி பரிந்துரையை அமுல்படுத்தியதுடன், இதற்கமைய தகுதியுடையவர்கள் மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர். ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் காலதாமதம் ஆனதால் வயதெல்லையைத் தாண்டிய நபர்களின் வயதை கணக்கில் கொள்ள வேண்டாமென விசாரனைக் குழு பரிந்துரை செய்தாலும், வாழ்க்கையின் பெறுமதி வாய்ந்த இளமைக் காலத்தில் ஒரு வருடத்தை பறித்தமை மறுக்க முடியாது.

- மறுபுறம் 2017 ஆம் ஆண்டு மேற்படி ஆட்சேர்ப்பு தாமதப்படுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டமைக்கு 2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற முறைகேடுகளே காரணமாகும். மீண்டும் அமைச்சின் அனுமதியைப் பெற்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் அவர்கள் 2016 ஆம் ஆண்டிற்கான சிறைக்காவலர்களை ஆட்சேர்ப்பதற்கான தேர்வுக் குழுவை மீண்டும் முறையாக நியமிப்பதற்கும், ஆட்சேர்க்கும் நடவடிக்கையை முறையாக மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொண்டாலும், அதற்கு குறிப்பிடதக்க கால அவகாசம் தேவைப்பட்டது. அரச சேவையாளர்கள் ஒரே இடத்தில் நிலைகொள்வதால் ஏற்படும் துர்முகாமைத்துவம் மற்றும் வினைத்திறனின்மை தொடர்பில் அதிகமாக கல்வித்துறை தொடர்பாகவே பேசப்படுகின்றது. தொடர்ச்சியாக ஆசிரியர்களை குறிவைக்கப்பட்டாலும் அரச சேவையில் அநேகமான துறைகளுக்கும் இந்நிலை பொதுவானதே.

- இந்த அறிக்கை அதற்கு சிறந்த உதாரணமாகும். சிறைச்சாலை தலைமையகத்தின் நிர்வாக உத்தியோகத்தர்கள், இலிகிதர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மிக நீண்ட காலமாக ஒரே

இடத்தில் சேவையாற்றுவது, இங்கு சிறந்த நிர்வாகச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமையினால் தாக்கம் செலுத்தியுள்ளதாக விசாரணைக் குழு தெரிவித்தது. அவர்களது பரிந்துரைகளுக்கமைய மேற்படி நபர்களை இரண்டு கட்டங்களாக சிறைச்சாலை தலைமையகத்திலிருந்து விடுவித்து, குறிப்பிட்ட நிறுவனத்துடன் தொடர்புடைய வேறு தகுதியுள்ள நபர்களை மேற்படி பதவிகளுக்கு நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சிறைச்சாலை தலைமையகத்தின் மற்றும் ஏனைய சிறைச்சாலைகள் நிர்வாகம் மற்றும் அங்கு காணப்படும் குறைபாடுகளை கண்டறியும் வேலைத்திட்டமொன்றை (Admin Inspection) அமைச்சரின் அனுமதியுடன் செயல்படுத்தல், மற்றொரு பரிந்துரையாகும்.

- ஆவணக் கோவைகள் காணாமல் போவது தொடர்பில் விசாரணைக் குழுவின் பரிந்துரை திருப்திகரமானதாக இல்லை. ஆவணக் கோவைகள் காணாமல் போவது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார் என்பது குறித்து விசாரணை குழு யாரை பெயரிட்டுள்ளதென முதலில் தேடியறிய வேண்டும். அதன் போது நேர்முகத் தேர்வு இடம்பெற்று இரண்டு மாதங்களில் 45 ஆவணக் கோவைகள் காணாமல் போவதால் சிறைக்காவலர் பதவிகளுக்கான நேர்முக தேர்வு நடத்தி, தெரிவு செய்யும் செயன்முறைகளை முறையாக திட்டமிடப்பட்டு பாதுகாப்புடனும் மேற்கொள்ள முடியாமை குறித்து சிறைச்சாலை திணைக்களத்தின் எம்.என். சீ.தனசிங்க (சிறைச்சாலை ஆணையாளர் நாயகம்) மற்றும் ஈ.ஏ. குணவர்தன (அப்போதைய சிறைச்சாலை ஆணையாளர் (நிர்வாகம்) பதவி வகித்துள்ளார்) ஈ.ஆர். லமாஹேவகே (அப்போதைய சிறைச்சாலை ஆணையாளர் (நிர்வாகம்)) ஆகியோர் பொறுப்புக் கூறவேண்டும் என விசாரணைக் குழு பரிந்துரைத்துள்ளது. அத்துடன் அமைச்சின் செயலாளர் முன் அழைப்பித்து குறிப்பிட்ட நபர்களை கண்டிக்க வேண்டுமென விசாரணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

ச.எஸ். அமரவிக்ரம (நிர்வாக உத்தியோகத்தர்) பி. டப்ளியு. அமரப்ரேம (தலைமை இலிகிதர், நிர்வாக உத்தியோகத்தர் 1) செல்வி ஈ.எ.பி.டி. எதிரிசிங்க (முகாமைத்துவ உதவியாளர் தரம் 2) ஆகிய மூவரையும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் முன்னிலையில் அழைப்பித்து கடும் எச்சரிக்கை விடுத்து, எச்சரிக்கைக் கடிதம் ஒன்றையும் அவர்களின் சுய விபரக்கோவை இட்டு அதன் பிரதியுடன் மேற்படி நபர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென விசாரணைக் குழுவினர் பரிந்துரை செய்துள்ளனர்.

**விசாரணை அறிக்கையில் சிக்காத விடயங்கள்**

- விசாரணைக் குழு அறிக்கையின் முக்கிய இலக்கு யாதெனில் 45 ஆவணக் கோவைகள் பற்றியதாகும். குறிப்பிட்ட அதிகாரிகள் ஆட்சேர்ப்பினை தாமதப்படுத்தியமை தொழில் பெறுநர்களால் சமர்ப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளாலேயே தெளிவானது. அவர்களின் முறைப்பாடு இந்தக் ஆவணக் கோவைகள் குறித்து முறையாக நேர்முகத் தேர்வுக்கு தோற்றியவர்களை தட்டிக்கழிப்பதற்காக முயற்சிக்கும் ஒரு முடிச்சாகுமென மேலும் தெரிவித்தனர். விசாரணைக் குழுவின் பரிந்துரையை நோக்குகையில் அந்த முறைப்பாடானது மேலும் ஊர்ஜிதமாகின்றது. காரணம் 45 ஆவணக் கோவைகள் காணாமல் போனமையானது முந்திரிக் கொட்டை, பலாக் கொட்டை போன்று எண்ணியெண்ணி பாதுகாக்க வேண்டியவர்களுக்கு எச்சிரிக்கை விடுத்து கடிதம் பெற்றுக்கொள்ளுமாறு விசாரணையாளர்களது பரிந்துரைகள் நம் கவனத்தை ஈரத்துள்ளது. அத்துடன் ஆட்சேர்ப்பு செயற்பாடுகளுக்கு தாக்கம் செலுத்தப்பட்ட அரசியல் நிர்ப்பந்தங்கள் தொடர்பில் விசாரிக்கப்படவில்லை.

- 2016 நவம்பர் மாதம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போது அமைச்சர் அரசியல் பெயர் பட்டியலை முழுமையாக நிராகரிக்கவில்லை. அந்தப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோள்களே உள்ளடக்கப்பட்டுள்ளதென கூறியதுடன் அமைச்சர் நிர்ப்பந்தப்படுத்தல் என்ற வார்த்தையை வேண்டுகோள் என சரளமான வசனமாக தெரிவித்தார். அப்போது தமக்கு ஏற்பட்டுள்ள அநீதிக்கு அந்தந்த சிறைச்சாலைகள் முன்பாக குறிப்பிட்ட விண்ணப்பதாரிகள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன் அவர்கள் தமது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடொன்றை தாக்கல் செய்திருந்தனர். அநேகமானவர்களின் எதிர்ப்புகளுக்கு ஆளாகிய ஒருவரே அமைச்சரின் செயலாளர்களுக்கு கடமையாற்றிய ஒரு நபர். அவர் 2017 ஜூலை 5 ஆம் திகதி வெளியான "உண்மையைத் தேடல்" என்ற கட்டுரைக்கு பதிலளிக்கும் வகையில் ஆணவத்துடன் எதிர்ப்பு தெரிவித்தவர்களுக்கு நியமனம் தரமாட்டோம் என கூறியிருந்தார். விசாரணை அறிக்கை வெளியிடப்பட்டு ஆறு மாதங்களின் பின்னரே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்திருந்தார். இதன் மூலம் தெளிவாவது என்ன? இந்த விசாரணை அறிக்கைக்கு புலப்படாத உண்மைகளும் சிறைச்சாலைகள் அமைச்சில் பேய்களின் மர்ம நடவடிக்கைகள் உலவுகின்றன என்பதேயாகும்.

- நாம் அறிந்த வகையில் இன்றும் இந்த மர்ம நபர்கள் அமைச்சரின் அதிகாரங்களை தமது கைக்குள்கொண்டு நிர்வாக செயற்பாடுகளுக்குள் பேயாடுவதுடன், சிரேஷ்ட உத்தியோகத்தர்களை நிர்க்கதியாக்கி செயல்படுவதானது இவர் போன்றவர்களே.

- ஆகவே, இவ்வாறான செயல்பாடுகளின் போது வெறுமனே சிறைச்சாலை ஆணையாளரையும் அல்லது மற்றைய சில உத்தியோகத்தர்களையும் குற்றவாளிகளாக்கிவிட்டு தாம் கைகளை கழுவிக் கொள்ள முடியாது. அத்துடன் இந்தத் தேர்வு நடவடிக்கைகள் மீண்டும் நடத்துவதற்கான காலம் செலவுகள் தொடர்பில் இந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. நிலவும் நிர்வாக சிக்கல்களை மாத்திரம் விசாரணை செய்ய அதிகாரம் வரையறுக்கப்பட்டமை ஒரு காரணமாகும். எம்மால் அதை விளங்கிக் கொள்ள முடிகின்றது. ஆயினும் பொதுமக்கள் சார்பில் இதைக் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். காரணம் இந்த நேர்முகத் தேர்வை மீண்டும் செய்ய நேரிட்டமை, அதற்கான செலவுகள் சிறைச்சாலை அதிகாரிகளின் தோட்டம் துறவுகளின் மூலம் கிடைக்கப்பெறுவதல்ல.

- இது நாட்டின் பொது மக்களிடம் அறவிடப்படும் வரிப்பணமாகும். இதனால் சிறைச்சாலைகள் அமைச்சுக்கு தெளிவாகவே நிதி நட்டம் ஏற்பட்டுள்ளது. அது எவ்வளவு என்பதை சரியாக தெரிந்து கொள்வதற்கு கணக்காய்வு செய்ய வேண்டும். மறுபக்கதில் உத்தியோகத்தர்களின் தவறுகளால் தண்டனை அனுபவிப்பது விண்ணப்பதாரிகளேயாவர். இத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்தி, அரச நிறுவனங்களை சங்கடத்திற்கு உள்ளாக்கிய நபர்களிடமிருந்தே இப்பணம் அறவிடப்பட வேண்டும் இது நியாயமும் கூட. ஆயினும் விசாரணைக் குழுவினரும் இது குறித்து எதையும் குறிப்பிடவில்லை.

இறுதிப் பகுப்பாய்வின்படி சிறைச்சாலை நிர்வாக செயற்பாடுகள் குறித்த இந்த தேடுதலின் போது அம்பலமான தகவல்களுக்கமைய 45 ஆவணக் கோவைகள் காணாமல் போனதற்கு அப்பால் பெரிதாக ஏதேனும் சிறைச்சாலை தலைமையகத்திலிருந்து காணாமல் போகலாம். அல்லது காணாமல் ஆக்கப்படலாம். அது பற்றி எவரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

**தரிந்து ஜயவர்தன**
**பிங்குன் மேனக**



www.thinappuyal.com

## கூட்டாளிகளுக்கு சொகுசு வாகனம் கொடுத்த

# வரவு செலவுத் திட்ட சுற்றுநிருபம்

2016 மார்ச் 17ம் திகதியிலான அப்போதைய பொதுத் திறைசேரியின் செயலாளராகவிருந்த, ஆர்.எஸ்.எச். சமரதுங்கவின் கையெழுத்துடன் அனைத்து அரச நிறுவனங்களுக்குமான சுற்றுநிருபமொன்று வெளியிடப்பட்டது. அதாவது 01/2016ம் இலக்க தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றுநிருபமே அது. அதனூடாக அரச நிறுவனங்கள் அவற்றுக்குத் தேவையான வாகனங்களைக் கொள்வனவு செய்வதை விட செயற்பாட்டுக் குத்தகை முறையில் பெற்றுக் கொள்வது மேலும் பயனுள்ளது என்பதால், ஏற்புடைய சுற்றுநிருபத்திற்கேற்ப, செயற்பட்டு, எதிர்காலத்தில் தேவையான வாகனங்களை குத்தகை எனப்படும் லீசிங் முறையில் பெற்றுக்கொள்ளுமாறு ஆலோசனை விடுக்கின்றது. 2016ல் அப்போது நல்லாட்சி அரசாங்கம் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்ட ஆலோசனைகளுக்கு ஏற்றவாறு 2016.03.04 திகதியிலான MF/TIP/03/CM/2016/31 அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்குத் தேவையான அங்கீகாரத்தை வழங்கி அமைச்சரவையும் நிதி அமைச்சரும் சமர்ப்பித்த இந்த கூட்டாளி உபசரிப்புக்கு வழிகோலும் செயற்பாட்டுக்கு அடித்தளம் இடப்பட்டுள்ளது. குறித்த

சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்படுகின்றவாறு, அரச நிறுவனங்களுக்கு வாகனங்களைக் கொள்வனவு செய்வதை விட செயற்பாட்டுக் குத்தகை முறையில் பெற்றுக் கொள்ளப்படுவது பயனுள்ளதாக அமைகின்றதெனில், உற்றாரை கவனிக்கும் செயற்பாடுகளை மூடிமறைப்பதற்கு சிறந்த உபாயம் அதன் மூலம் நிர்மாணிக்கப்படுவதே அதற்குக் காரணம். திரட்டு நிதியிலிருந்து செலவுகளைத் தாங்குகின்ற அரசாங்க தொழில்முயற்சிகள் உள்ளிட்ட அனைத்து அரசாங்க நிறுவனங்களுக்கும் 01/2016 வரவுசெலவுத் திட்ட சுற்றுநிருபத்தைப் பின்பற்றுமாறு தீவிரமாக ஆலோசனை வழங்கி, அதன் ஐந்தாவது பந்தியில் குறிப்பிடப்படும் வாகனங்கள் கூட்டாளிகளின் சொகுசுக்கு ஏற்புடையவை அல்ல என்பதால்தான் அவை தொடர்பில் மாறுபட்ட முறையைப் பின்பற்றுமாறு ஆலோசனை விடுக்கின்றது.

**65 நிறுவனங்களால் மக்கள் பணம் மூழ்கடிப்பு**

01/2016ம் இலக்க வரவுசெலவுத் திட்ட சுற்றுநிருபம் பாரிய மோசடியொன்றின் கூட்டு ஆவணம் என்பது பார்த்த மாத்திரத்திலேயே தெளிவாகத் தெரிவதால், தகவல் அறியும் உரிமையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விசாரணையொன்றுக்கு பதில் அளிக்கும் மேலதிக வரவுசெலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம், ஜீ.எம்.ஜீ.கே. குணவர்தன வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தின் தகவல் அலுவலர் என்ற ரீதியில், குறித்த சுற்றுநிருபத்தால், 65 அரசாங்க நிறுவனங்களுக்குக் குத்தகை முறையில் வாகனங்களைக் கொள்வனவு செய்யும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுகின்றார். ஆனால், வாகனங்களைக் கொள்வனவு செய்தல் என இவற்றில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், எந்தவொரு வாகனத்தையும் இங்கு குறிப்பிட்ட 65 அரசாங்க நிறுவனங்களுக்கும் உண்மையாகக் கொள்வனவு செய்யவில்லை என்பதால் இந்த சுற்றுநிருபம் உள்ளிட்ட அதனோடு தொடர்புடைய அனைத்து ஆவணங்களும் மோசடியானவையாகின்றன. பார்த்த மாத்திரத்தில், ஒரே தடவையில் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்திடமுள்ள நிதிச் சொத்து போதுமானதல்ல என்பதால், லீசிங் எனப்படும் குத்தகை முறையில் வாகனங்களைக் கொள்வனவு செய்திருக்கலாம் என்றே தோன்றும். நடந்திருப்பது அதுவென்றால், வாகனத்தின் தேய்வு, ரூபாயின் கொள்வனவு ஆற்றல் என்பவற்றோடு பார்க்கும் போது அதில் பெரிய தவறிருப்பதாகத் தோன்றாது.

ஆனால், ஒட்டுமொத்த செயற்பாட்டையும் ஆய்வு செய்யும் போதுதான் மோசடி இடம் பெற்றிருப்பது தெரியும். இந்தச் சுற்றுநிருபத்தில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு ஏற்ப, செயற்பாட்டு குத்தகை முறையில் கொள்வனவு செய்யக் கூடிய வாகனங்களாக கார்கள், வான்கள் மற்றும் டபிள் கெப்கள், என்பவை சுட்டிக் காட்டப்படுவதுடன், அவற்றின் எஞ்சின் திறன், எரிபொருள் பாவனை, மற்றும் கியர் கட்டமைப்பு என்பவற்றின் வித்தியாசங்களின் அடிப்படையில், கொள்வனவு செய்யும் எல்லைகளும் காட்டப்பட்டுள்ளன. அவ்வாறு கொள்வனவு செய்யப்படும் ஒரு வாகனத்திற்குச் செலுத்த வேண்டிய விலைக் கணக்குகள் பற்றியும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அவ்விலைக் கணக்குகள், நிறுவனங்களின் நாளாந்த நடவடிக்கைகளுக்கான வாகனங்களிலிருந்து அமைச்சுச் செயலாளர்கள் வரையான இடைவெளியில் அலுவலர்களுக்கான கொள்வனவுகளில் மாதாதாந்தம் செலுத்த வேண்டிய குத்தகைக் கூலி ஒரு இலட்சம் ரூபாவிலிருந்து 03 இலட்சம் ரூபாவரை காட்டப்பட்டுள்ளது. நாம் எஞ்சிய மூலாதாரங்களிலிருந்து பெற்றுக் கொண்ட தகவல்களுக்கு ஏற்ப, 65 நிறுவனங்களுக்கான 350 வாகனங்கள் மட்டும் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதுடன், செலவுகள் மிதமானதாகக் கொள்ளப்பட்டு அவ்வொவ்வொரு வாகனத்திற்குமாக 02 இலட்சம் செலவிடப்பட்டிருந்தால், ஒரு மாதத்திற்கு 700 இலட்சம் ரூபாவும், வருடத்திற்கு 8400 இலட்சம் ரூபாவும், ஐந்து வருட இறுதியில் 42000 இலட்சம் ரூபாவும், குத்தகையைச் செலுத்துவதற்காக பொது மக்கள் நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது. இதுவரையுள்ள பெறுமதிகள் கற்பனையின் அடிப்படையில், தோன்றிய கணிப்புகள் என்பது உண்மையென்றாலும், மெய்ச் செலவு இந்தப் பெறுமதியை விடவும் குறைந்திருக்கலாம் என்பதைப் போலவே அதிகரிக்கவும் முடியும்.

அது அவ்வாறாயின், ஐந்து வருடங்களின் இறுதியில் 65 அரச நிறுவனங்களும் கைகழுவி விட்டு ஒருபுறம் ஒதுங்க நேரும் போது அப்பாவி மக்களுக்கு பேரிடர் நேர்ந்து முடிந்துவிட்டது.

**இரவல் சீலையை நம்பி இடுப்புக் கச்சையை எறிதல்**

இவ்வாய்விற்குக் காரணமான தகவல்களை ஆய்வு செய்யும் போது, ஒரு குறிப்பிட்ட அரச சபையொன்றுக்கு நான்கு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்பது தெரிய வந்ததுடன், உதாரணமாக அச் சபையின் தலைவரது வாகனத்தைப் பற்றி மட்டும் அவதானத்தைச் செலுத்துகின்றோம். இத்தலைவருக்காக டொயோட்டா / போர்ச்சூனர் வகையிலான வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், தற்போதைய சந்தை விலைகளோடு ஒப்பிடும்போது, அந்தக் காலகட்டத்தில் ஃபோர்ச்சூனர் வண்டியொன்றின் விலை 60 இலட்சத்திலிருந்து 80 இலட்சம் வரையிலான இடைவெளியில் அமைந்திருந்தது. தயாரிக்கப்பட்ட வருடம் மற்றும் உபதொகுதியின் அடிப்படையில் அவ்விடைவெளியில் விலைகள் நிர்ணயிக்கப்படுவதுடன், குறித்த வண்டியை, குத்தகை முறையில் கொள்வனவு செய்வது தொடர்பில் 05 வருட ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வொப்பந்தம் 2022 நவம்பர் மாதம் வரை அமுலில் இருப்பதுடன், அக்காலப் பகுதியில் 60 மாதங்களுக்கு, 02 இலட்சம் ரூபா வீதம், ஒரு கோடியே இருபது இலட்சத்தைச் செலுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கேற்ப, வாகனத்தின் உரிய விலையை விட அதிகமாக அண்ணளவாக நான்கு மில்லியன் பணத்தைச் செலுத்தியுள்ளதுடன் குத்தகை எனப்படும் லீசிங் முறையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததால், வட்டியும் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றுநிருப இலக்கம் 01ன் மூலம் வழங்கப்பட்டுள்ள அறுவுறுத்தல்களுக்கு ஏற்ப, ஆச்சரியமான முறையொன்றைப் பின்பற்றியதால், வாகனத்தில், சேவை மற்றும் பராமரிப்புச் செலவுகளும் அதில் உள்ளடங்குகின்றன என்பதால் மனதைத் தேற்றிக் கொள்ள முடியும் என அறிவுறுத்தல் வழங்கிய பரமார்த்த குருமார் சொல்வதற்கு இடமிருக்கிறது. ஆனால் கதை வேறு விதமானது.

இச் சுற்றுநிருபத்தால் அரசாங்கத்திடம், நிதிப் பற்றாக்குறை காரணமாக குத்தகை முறையில்




www.youtube.com

**வாகனங்களை எடுப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கினாலும், பெறுகைச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களிலிருந்து உண்மை தோலுரிக்கப்பட்டுள்ளது. சுற்றுநிருபத்தில் குத்தகை முறையில் வாகனங்களைக் கொள்வனவு செய்தல் எனத் தலைப்பிடப்பட்டாலும், இங்கு ஏற்புடைய நிறுவனம் லீசிங் கம்பனியொன்றிடம் சென்று, தமக்குத் தேவையான வாகனங்களை குத்தகை முறையில் நேரடியாகக் கொள்வனவு செய்யவில்லை. திறைசேரிச் செயலாளர் திரு. சமரதுங்கவின் கையெழுத்துடன், அமைச்சரவை அங்கீகாரத்தையும் பெற்ற பெறுகைச் செயற்பாடு பற்றிய அறிவுறுத்தல் வழங்கும் சுற்றுநிருபம், மூன்றாம் தரப்பின் மூலம் வாகனங்களைப் பெற்றுக் கொள்ளுமாறே ஆணையிடுகின்றது. கூட்டாளிகளை உபசரித்தல் எனும் அரசியல்வாதிகளினதும், அவர்களது உற்றாரினதும், சில உயர் அதிகாரிகளினதும், சொகுசு வாகனத் தேவையை ஐந்து வருட காலத்திற்கு நிறைவேற்றுவதற்கு அடித்தளமிட்டு, இதுவரை வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான அறிவுறுத்தல்களை வழங்கிய சுற்றுநிருபம், பெறுகைச் செயற்பாடு குறிப்பிடப்படும் பந்தியில், செயற்பாட்டுக் குத்தகை முறையின் கீழ் பயன்படுத்திய பின்னர் மீளளிக்கும் அடிப்படையின் கீழ் வாகனங்களைப் பெற்றுக் கொள்ளுதல் எனக் குறிப்பிட்டு அப்பனை குதிருக்குள் இருந்து வெளியேற இடமளித்துள்ளது.**

இந்த முறையின் கீழ், முதல் உதாரணத்தில் குறிப்பிடப்பட்ட அரசாங்க சபை தனது ஃ போர்ச்சூன் வண்டிக்கு ஒரு மாதத்திற்கு 02 இலட்ச ரூபா வீதம், ஐந்து வருடங்களில் ஒரு கோடியே இருபது இலட்சமும், 3000 கிலோமீட்டருக்கு மேலதிகமான ஒவ்வொரு மாதாந்த இயக்கத்திலும் அதிகரிக்கின்ற ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் 45 ரூபா வீதமும், செலுத்தி, அது உட்பட நான்கு வாகனங்களுக்கும் சராசரியாக 04 கோடியளவில், செலுத்தி, 2022 நவம்பர் மாதத்தில் அவற்றை வழங்குனர்களிடம் மீண்டும் ஒப்படைத்து கை கழுவி விட வேண்டும். அதற்கேற்ப, இந்த அடிப்படையில் வாகனங்களைக் கொள்வனவு செய்த 65 நிறுவனங்களுக்கும் 2022 ஆகும் போது கற்பனைக்கேற்ப, மீண்டும் அண்ணளவாக 350 வாகனங்களுக்கான பற்றாக்குறை ஏற்படும். கூட்டாளிகளுக்கு 350 சொகுசு வாகனங்கள் இலவசமாகவே கிடைக்கும்.

இந்த வாகனங்களில் சொகுசு வாகனங்களாக அமைவதும், திருட்டுச் சூரர்கள் சிலர் தமது ஆதரவாளர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துவதற்குச் செய்ய குள்ளத்தனம் என அதன் 5வது உறுப்புரைக்கேற்பவே சுற்றுநிருபத்தையும் குறிப்பிட முடிகிறது. அம்புலன்ஸ் வண்டிகள், பக்கோ இயந்திரங்கள், டோசர்கள், கலி பவுசர்கள், லொறிகள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வேறு விசேட பணிகளுக்கான வாகனங்களை செயற்பாட்டுக் குத்தகை முறையில் கொள்வனவு செய்யத் தேவையில்லை என அதிற் குறிப்பிடப்படுகின்றது. உண்மைதான். அரசாங்கத்திற்கு ஐந்து வருடங்களுக்கு கலி பவுசரொன்றைக் குத்தகைக்கு வழங்கி, மீண்டும் அதனைத் தமதாக்கிக் கொள்வதற்கான தேவை யாருக்கும் இல்லை. ஒரே தரத்தில் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பணமில்லாத அரசாங்கத்தால் அவற்றை விலைகொடுத்து வாங்க முடியும். சுற்றுநிருபத்திலுள்ள தகைமைகளைக் கொண்டிருக்கும் வழங்குனர்களும் இரகசியமான அரசியல் தொடர்புகளை வைத்திருக்கும் ஆசாமிகளேயன்றி, சாதாரண மக்கள் அல்ல என்பது தெளிவான விடயம்.

### பிரசைகளின் பொறுப்பு

**பொதுத் திறைசேரிச் செயலாளர் தம் கடமையின் ஒரு பகுதியாகவே இச்சுற்றுநிருபத்தை வெளியிடுகின்றார். இச் செயற்பாட்டிற்கு அமைச்சரவையும் அங்கீகாரம் அளித்துள்ளது. தேசிய வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளில் இப் பெறுகை தொடர்பிலான முன்மொழிவும் உள்ளடங்குகிறது. இத் திருட்டு வலையமைப்பை இனங்காண்பதே பிரசைகளின் தற்போதைய பொறுப்பு. வரவு செலவுத் திட்ட பணிகளில் ஈடுபடும் அதிகாரிகளிலிருந்து அப்போதிருந்த நிதி அமைச்சர் முதற்கொண்டு, இப் பனித் திருட்டில் பங்கேற்றவர்களைக் கண்டுபிடிப்பது**



*www.nissanlk.com*

**பிரசையின் பணியாகும்.** இங்கு கற்பனை செய்யப்பட்ட கணக்கிலக்கங்கள் மாறுபடக் கூடும் என்றாலும், மிகச் சரளமான சில விடயங்களைப் பற்றிக் கேள்வியெழுப்ப வேண்டும். பொருளதாரச் சீர்குலைவால் களைத்துப் போயுள்ள நாடொன்றின் அரசாங்க நிறுவனங்கள் தமது வாகனக் கொள்ளவை ஐந்து வருடங்களுக்கொருமுறை மாற்றுவதில்லை. சிலவேளைகளில் ஜப்பானிலும் மூன்று வருடங்களேனும் ஓட்டப்பட்டு இந்நாட்டுக்குக் கொண்டுவரப்படும் மறுசீரமைக்கப்பட்ட வாகனங்களைக் கூட பதினைந்து இருபது வருடங்களாக எந்தவொரு பிரச்சனையுமின்றி பாவிக்கின்ற பிரசைகள் இருக்கும் நாட்டின் அரச நிறுவனங்களால் தமது வாகனங்களை 10 வருடங்கள் பாவிப்பது இயலாத விடயமல்ல. அவ்வாறு செய்ய வேண்டுமாயின் இவ்வாகனங்கள் நேரடியாக அந்நிறுவனங்களிடமிருந்து குத்தகை முறையில் பெறப்பட வேண்டியிருந்தன. ஏன் அப்படிச் செய்யவில்லை என்பதே இப்போது எழுகின்ற கேள்வி. ஐந்து ஆண்டுகளின் பின்னர் மீண்டும் வாகனத் தேவை ஏற்படுவதே அதன் பெறுபேறாக அமையும். அதனால் தான் திறைசேரிச் செயலாளர், தனது சுற்றுநிருபத்தில் காட்டியுள்ளவாறு வாகன வழங்குனர்களுக்கே இது மேலும் பெறுபேறுமிக்கதாக அமையுமேயன்றி, பிரசைகளுக்குக் கிடைக்காது. மாதாந்த கூலி அடிப்படையில், குறித்த நிறுவனங்களுக்கு வாகனங்களை வழங்கியிருந்தால் இதைவிடவும் கௌரவமாயிருந்திருக்கும். இம்முறையில் சாரதிகள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு சம்பளமும் கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டிருந்தாலும் வாகனங்களை வாடகைக்கு எடுத்திருந்தால் சாரதியையும் வழங்கியிருப்பார்கள். அரசாங்கத்திடம் பணம் இல்லை என புலம்பினாலும், இவ்வாறான இரகசியமான மோசடிகளுக்கு திரட்டு நிதியிலிருந்து நிதியைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனங்களுக்கான ஒதுக்கீடுகள் தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளன. தனியாக மீண்டெழும் செலவு என்னுமொரு விடயம் உருவாக்கப்பட்டள்ளதுடன், அரசாங்கத்துக்கு எந்தவொரு சொத்தும் அதன் மூலம் உருவாகப் போவதில்லை என்பதால்தான் குறித்த செலவு செயற்பாட்டுச் செலவாக கருதப்பட்டிருப்பதாகவும் காட்டப்பட்டுள்ளது. தகவல் அறியும் உரிமையைப் பயன்படுத்தி நாம் செய்த விசாரணைக்குப் பதில் அளிக்கும் சந்தர்ப்பத்தில், தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம், இந்த வாகனங்கள் அரசாங்க நிறுவனங்களின் சொத்து அல்ல என்பதால், அவற்றின் பெறுமானத் தேய்வு பற்றி ஆராய்வது ஏற்புடையதல்ல எனக் குறிப்பிடுகின்றது. ஐந்து வருட முடிவில் சொத்து தேய்மானமொன்று இருக்கலாமெனினும் இம்முறையில் அது பூச்சியமாகி உரிமை இழக்கப்படும் நிகழ்வே இடம்பெற்றுள்ளது.

**லசந்த த சில்வா.**



www.shutterstock.com

## தகவல் உரிமை அதிகாரத்தால் நுகர்வோர் போராட்டமொன்றுக்கு வெற்றி

# குடிநீர் போத்தலில் விலை குறிக்கப்பட்ட கதையின் பின்னணி

பிரசைகளின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்தின் இன்னுமொரு சிறப்பான வெற்றியை அடையாளப்படுத்தி சமூக செயற்பாட்டாளரொருவர் அண்மையில் தகவல் அறியும் உரிமையைப் பயன்படுத்தி, குடிநீர் தொடர்பான பிரதான நுகர்வோர் உரிமைகளுக்காக இடையீடு செய்ததால் பல அனுபவங்களைப் பெற்றுக் கொண்ட சமூக செயற்பாட்டாளரான சுரேஷ் குமார் இப்போது நாட்டில் பாரியளவிலான கேள்வியை உருவாக்கிவரும் குடிநீர் போத்தல் விற்பனையுடன் தொடர்புடைய பிரச்சனை தொடர்பில் இந்த வெற்றியைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

**அண்மைக் காலம் முதல் நாடு முழுவதும் குடிநீர் போத்தல் விற்பனையானது துரிதமாக உயர்வடைந்ததெனினும் அது தொடர்பான பல நுகர்வோர் பிரச்சனைகள், தீர்க்கப்படாதிருந்தன. அவற்றிடையே நீரை விற்பனை செய்யும் போது அதற்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுவான விலை குறிக்கப்படாதிருந்தது இது பிரதான பிரச்சனையாகக் காணப்பட்டது. எனவே ஒரே அளவான குடிநீர் போத்தல்கள் பல்வேறு**

**விலைகளின் கீழ் நாடுமுழுவதும் விற்பனை செய்யப்பட்டன. கடந்த காலம் முழுவதுமாக, இது தொடர்பான பல முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்ட போதும், அது தொடர்பில் யாருடைய கவனமும் செலுத்தப்படவில்லை.**

இந்த நிலைமை தொடர்பில் கவனம் செலுத்திய சுரேஷ் குமார், குடிநீர் போத்தல்கள் தொடர்பில் காணப்படுகின்ற நிர்ணய விலை தொடர்பான விடயங்களைக் கேட்டு, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையிடம் தகவல் விண்ணப்பம் ஒன்றை முதற்படியாக சமர்ப்பித்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 21ம் திகதி தாம் பாவனையாளர் அதிகாரசபையிடம் சமர்ப்பித்த விண்ணப்பத்திற்கு 2017 டிசம்பர் மாதம் 12ம் திகதி அதிகாரசபையிடமிருந்து பதில் கிடைத்தது. அதனூடாக பாவனையாளர் அதிகாரசபைச் சட்டத்தின் 18ம் வாசகத்தின் கீழ் குடிநீர் போத்தல்கள், விலை நிர்ணயிக்கப்பட வேண்டிய பொருட்களின் வகைக்குரியதல்ல என்பதால் அதற்கான அதிகபட்ச சில்லறை விலையொன்று விதிக்கப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே, குடிநீர் போத்தல்களின் விலை தொடர்பில் எந்தவொரு தகவலும் தம்மிடம் இல்லை என தொடர்ந்தும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அப்பதிலால் ஆர்வமிழக்காத சுரேஷ் குமார் தொடர்ந்தும் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து பார்த்தார். அதற்கேற்ப சுகாதார அமைச்சின் மீது அவரது கவனம் செலுத்தப்பட்டது. சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் அதாவது 2016ம் ஆண்டின் இறுதியில், அவர் சுகாதார அமைச்சின் ஊடாக ஒரு பிரச்சனைக்கும் உட்பட்டார். நீர் தயாரிப்பாளர்கள் பதிவு செய்யப்பட்டிருப்பது சுகாதாரத் திணைக்களத்தில்தான் என்பதே அதற்குக் காரணம். எனினும் அப்போது சுகாதார அமைச்சு அத்தகவல்களை வழங்க மறுத்திருந்தது.

**அதன் பின்னர் அவர் தகவலுக்கான உரிமை, சட்டமாக மாறியதன் பின்னர், மீண்டும் சுகாதார அமைச்சுக்கு அப்பிரச்சனையைச் சமர்ப்பிததார். அதற்கான பதில் அவருக்குக் கிடைத்ததுடன், அவ்வாறு கிடைத்த பதிலில், குறிப்பிடப்பட்டிருந்தவாறு, அப்போது 121 நீர் தயாரிப்பு நிறுவனங்கள் சுகாதார அமைச்சின் கீழ் நீர் தயாரிப்பாளர்களாக பதிவுசெய்யப்பட்டிருந்தனர். அவர்களிடையே இரு நிறுவனங்கள் நீரை ஏற்றுமதி செய்பவையாகும். ஆனால் அவர்களின் கீழும் விலைகள் ஒழுங்குபடுத்தப்படவில்லை. ஆனால் அவ்வாறு பெற்றுக் கொண்ட தகவல்கள் தமது போராட்டத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு சுரேஷ்’க்குப் பெரிதும் பயன்பட்டன.**

அதற்கேற்ப, அவர் அப்போது தம்மிடமிருந்த அனைத்துத் தகவல்களுடனும் மீண்டும் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைக்கு அழைப்பு விடுத்தார். முதலில் அவரோடு பாவனையாளர் அதிகாரசபையின் மனிதவளங்கள் மற்றும் நிருவாக அலுவல்கள் பணிப்பாளர் திரு. எம். வி. ரூபசிங்க அவர்கள் பேசினார். அதன் பின்னர் அவர் விலைக்கட்டுப்பாட்டு அலுவலர் ஒருவரிடம் அனுப்பப்பட்டார்.

அங்கு ஓரளவுக்கு நீண்ட பேச்சுவார்த்தை இடம்பெற்றதுடன் இதுபற்றி அவதானிக்கும் பிரதான பொறுப்பு பாவனையாளர் அதிகாரசபைக்கே அளிக்கப்படுகின்றது என்பது சுரேஷின் பிரதான தர்க்கமாகக் காணப்பட்டது.

ஆனால், பாவனையாளர் அதிகாரசபை இது தொடர்பில் அதுவரை காலாவதித் திகதி பற்றிய சிக்கல்களையும் பிளாஸ்ட்டிக் போத்தல்களை வெய்யிலில் வைப்பதால் ஏற்படும் பிரச்சனைகள் போன்றவை மீதும் மட்டுமே அவதானித்தைச் செலுத்தி வந்தது.

கட்டுப்பாட்டு விலையொன்று இல்லாத

காரணத்தால் விலைக் கணக்குகள் பற்றிய கட்டுப்பாட்டைத் தாம் மேற்கொள்ள முடியாது என்பது அதிகாரசபையின் கருத்தாகவிருந்தது. சுரேஷின் ஆலோசனையைப் பெரிதும் பாராட்டியதுடன், அலுவலர்கள் அது தொடர்பில் எடுக்கக் கூடிய எதிர்கால நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்வதாக குறிப்பிட்டனர். அக்கூற்று திருப்தியடைவதற்குப் போதுமான காரணமாக இருப்பினும் சுரேஷ் அதனோடு நின்றுவிடவில்லை. அதற்கேற்ப, அவர் மேலுமொரு வகையில் இந்நாட்டு நீர்வளங்கள் அவதானிப்பு தொடர்பான பொறுப்பளிக்கப்பட்டிருந்த நகர அபிவிருத்தி மற்றும் நீர்வழங்கல் அமைச்சுக்கும் அழைப்பு விடுத்தார். நீர் நிலைகளை ஆரம்பிப்பது அவர்களது பொறுப்பாக இருந்தாலும், நீரை விற்பனை செய்வது தொடர்பில் விலைகளை நிர்ணயிப்பது அவர்களின் பொறுப்பு அல்ல என அங்கு குறிப்பிடப்பட்டது.

நீர் மனிதனின் அடிப்படைத் தேவையாக இருக்கின்ற அதேவேளை, அதனை இயற்கை வளமாக ஏற்றுக்கொண்டு, அந்த மனித உரிமைக்காக சுரேஷ் தனது போராட்டத்தை இடைவிடாது முன்னெடுத்தார்.

அடிப்படை உரிமைகள் வழக்கொன்றைத் தாக்கல் செய்வது, பிரச்சனைக்குரிய அனைத்துத் தகவல்களையும் சேகரித்துக் கொண்டு முன்னோக்கிச் சென்ற சுரேஷின் இறுதி நோக்காக அமைந்தது. தகவல் உரிமைகளின் கீழ், கிடைத்திருந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, அவர் அதற்காகவே தயாராகவிருந்தார். சட்டம் தொடர்பான பாண்டித்தியம் பெறாதவராக இருப்பினும், இங்கு நீதிமன்ற நடவடிக்கையொன்றை எடுப்பதற்குத் தேவையான அடிப்படையொன்றுள்ளதென்பது சுரேஷின் நம்பிக்கையாகும். நீர் மனிதனின் அடிப்படைத் தேவையும் இயற்கை வளமுமாகும் என்பதால், அதற்கான விலை நிர்ணயிக்கப்படுமாயின் அது நியாயமான விலையாக இருக்க வேண்டும் என்பதும் அந்நியாயத்தை நிறைவேற்றுதல் அரசாங்கத்தின் பொறுப்பு என்பதும் சுரேஷின் வாதமாகும். இவ்வாதத்தின் வலிமை எவ்வாறாயினும் சுரேஷ் தொடர்ந்தும் அதற்காகச் செயலாற்றினார். ஏற்புடைய தகவல்களைச் சேகரித்தல் அதன் அடிப்படைப் படிமுறையாகும். சுரேஷ், தகவல் உரிமையைப் பயன்படுத்தி, அப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததுடன், கடந்த மாதம் 30ம் திகதி இந்நாட்டுத் தொலைக்காட்சி அலைவரிசைகளின் ஊடாக ஒளிபரப்பப்பட்ட செய்திகளின் மூலம் சுரேஷின் போராட்டம் தொடர்பில் தீர்மானமிக்க செய்தி ஒளிபரப்பானது.

அதாவது 2018 செப்டெம்பர் மாதம் 28ம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்நாட்டு நீரின் விற்பனை விலை, கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதாகும்.

இது தமது போராட்டத்தின நேரடிப் பெறுபேறு என சுரேஷால் இன்னமும் உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால் சம்பவம் இடம்பெற்ற திகதி காலப்பகுதிகளுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது அவ்வெற்றியின் பின்னாலிருக்கும் தீர்மானமிக்க மனிதராக சுரேஷ் குமாரை இனங்காண்பது சிரமமானது அல்ல. அப்போராட்டத்தை மேற்கொண்ட சுரேஷின் கையிலிருந்த பிரதான கருவி தகவல் அறியும் உரிமை என்பதும் மிகத் தெளிவானது.

**சீ. தொடாவத்த**
சிரேஷ்ட ஊடகவியலாளர்,
தினமின - பவன - 2018 அக்டோபர் 10



*http://clerkship19gh.blogspot.com/*

# குப்பை முகாமைத்துவம் வீணாகிவிட்டது

## அரசியல்வாதிகளினதும் மற்றும் அதிகாரிகளினதும் விலையுயர்ந்த வெளிநாட்டுச் சுற்றுலாக்கள் தனிப்பட்ட நலனுக்காக பொது நிதியைக் காலி செய்துவிட்டன

இலங்கையில் குப்பைகளை ஒழிப்பதற்கான நடைமுறையிலான உத்திகள் இன்றி, இந்தப் பிரச்சனை ஒரு தேசிய நெருக்கடியாக வளர்ந்துள்ளது. சரிவர நிருவகிக்கப்படும் குப்பை பொது வளமொன்றாக மாற்றப்பட முடியும் என நிபுணர்கள் வலியுறுத்துகின்ற அதேவேளை, பாரியளவில் பொதுமக்களுக்கும், சூழலுக்கும் பெரும் ஆபத்தை விளைவிக்கும் தனிப்பட்ட வளமொன்றாக அதை எவ்வாறு சில அதிகாரிகள் மாற்றிவிட்டார்கள் என்பதை இக் கட்டுரை முனைவுபடுத்துகின்றது. இலங்கையின் திண்மக் குப்பையின் **நாளாந்தப் புரள்மானம் ஏறத்தாழ 9,800 மெட்ரிக் தொன்கள்** என்பதுடன், **வருடாந்தப் புரள்மானம் 3,531,934 மெட்ரிக் தொன்கள்** ஆகும். இந்தக் கழிவின் மூன்றில் இரண்டு மட்டுமே நாளாந்தம் சேகரிக்கப்படுவதுடன், இது **3,700 மெட்ரிக் தொன்**களைக் கொண்ட தொகையிலானதாகும். இது **400 மெட்ரிக் தொன்கள்** கொண்ட **பிளாஸ்டிக்**கை; உள்ளடக்குவதுடன்,

இது உயர்ந்து கொண்டே போகின்றது. பெருமளவு நிறுவனங்கள் குப்பைகளை ஒழிப்பதற்கு பொறுப்பாகவுள்ளன. ஆனால், ஆரம்பநிலையிலான அதிகாரங்கள் உள்ளூராட்சி மன்ற உறுப்புக்களுடன் உடமையாக்கப்பட்டுள்ளன. மேலதிகமாக, குப்பை ஒழிப்புக்கு சூழல் அமைச்சு, மத்திய சூழல் அதிகார சபை [Central Environment Authority (CEA)], கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை [Marine Environment Protection Authority (MEPA), கரையோரப் பேணல் திணைக்களம் [Coast Conservation Department (CCD)], நகர அபிவிருத்தி அதிகார சபை [Urban Development Authority (UDA)] மற்றும் முதலீட்டுச் சபை [Board of Investment (BOI)] ஆகியன பொறுப்பாக விளங்குகின்றன. தற்போது கழிவு முகாமைத்துவம் மீது தேசியக் கொள்கையொன்றை சூழல் அமைச்சு தயாரிக்கின்றது.

**வெளிநாட்டுச் சுற்றுலாக்கள்**

குப்பை ஒழிப்புப் பிரச்சனைகள் வளர்ச்சியடையும் போது, அவ்வாறே உள்ளூ ராட்சி மன்ற பிரதிநிதிகளுக்கும் அத்துடன் மத்திய அரசாங்க உறுப்பினர்களுக்குமான வெளிநாட்டுப் பயிற்சியினதும், வெளிப்படுத்தல் செயற்றிட்டங்களினதும் எண்ணிக்கையும் வளர்ச்சியடைந்துள்ளது. குப்பை நெருக்கடியைத் தணிப்பதற்கு அவசியமான பயிற்சியையும், தொழில்நுட்ப உதவியையும் அதிகாரிகளுக்கு வழங்குவதை இந்தச் சுற்றுலாக்கள் இலக்காகக் கொண்டுள்ளன. பாராளுமன்ற அறிக்கைகளினதும் அத்துடன் தகவலுக்கான உரிமை விண்ணப்பங்களிலிருந்து பெறப்பட்ட விபரங்களினதும் பிரகாரம், ரூ. 60,620,351 கொண்ட ஆகுசெலவொன்றில் 2010 முதல் 2019 வரை அத்தகைய வெளிநாட்டுச் சுற்றுலாக்களால் மொத்தமாக 335 உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் பங்கெடுத்துள்ளனர்.

பாராளுமன்ற அறிக்கையின் பிரகாரம், வெளிநாட்டுச் சுற்றுலாக்களைத் தொடர்ந்து தொடர்பான விடய அமைச்சுக்கு தமது குப்பை முகாமைத்துவ அமுலாக்கல் திட்டங்களை முன்வைக்குமாறு CEA, MEPA, CCD, தேசிய விலங்கியல் திணைக்களம் மற்றும் வேறு அத்தகைய திணைக்களங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகளிடம் கேட்கப்படுகின்றது. இந்த அறிக்கைகளின் அடிப்படையில், கொள்கை மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்கு அமைச்சு அதிகாரிகள் வேண்டப்படுவதுடன், அவர்களது திட்டங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கும், அமுலாக்குவதற்கும் வெளிநாட்டுச் சுற்றுலாக்களில் பங்கெடுத்த அதிகாரிகள் அவ்வப்பொழுது வரவழைக்கப்படுவார்கள். கழிவு முகாமைத்துவத்திற்கு பொறுப்பான நிறுவனங்களின் பணிகளை அவர்கள் கண்காணிக்க வேண்டும் என்பதுடன், அவசியமான நடவடிக்கைகளையும் அத்துடன் வழிகாட்டல்களையும் அவர்கள் வழங்கவும் வேண்டும்.

**2010 முதல் 2019 வரை, குப்பை முகாமைத்துவம் குறித்து ஆராய்வதற்காக CEAஇன் தலைவர், பணிப்பாளர்கள் நாயகம் மற்றும் வேறு சிரேஷ்ட மற்றும் பிரிவுசார் அதிகாரிகள் பலதரப்பட்ட நாடுகளுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ளனர். இதன் பிரகாரம், ரூ. 5,882,241 கொண்ட ஆகுசெலவொன்றில் 84 வெளிநாட்டுச் சுற்றுலாக்கள் மீது 84 அதிகாரிகள் சென்றுள்ளனர். இதே காலகட்டத்தின் போது, ரூ. 135,261 செலவழித்து ஐக்கிய அமெரிக்க சுற்றுலா ஒன்றில் தேசிய விலங்கியல் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் பங்கெடுத்துள்ளார்.** ஐந்து தருணங்களில் ஐந்து MEPA அதிகாரிகள் இந்தியா, கென்யா, இந்தோனேஷியா மற்றும் தாய்லாந்து ஆகியவற்றுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ளனர். ஆனால், சர்வதேச சூழல் தாபனங்களினால் அனுசரணை செய்யப்பட்டதால் அரசாங்கத்திற்குச் செலவினம் ஏற்படவில்லை.

**கழிவு முகாமைத்துவ செயலமர்வுக்கு செலவழிக்கப்பட்ட பணத்தின் தொகை (மாகாண ரீதியாக)**

| | ஆண்டு | மாகாணம் | செலவழிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 01 | 2010 | மத்தி | 900,000.00 |
| | | மேல் | 1,807,000.00 |
| | | வயம்ப | 103,293.00 |
| | | சப்ரகமுவ | 88,000.00 |
| 02 | 2011 | சப்ரகமுவ | 945,000.00 |
| 03 | 2012 | தென் | 127,582.00 |
| 04 | 2013 | மத்தி | 403,568.00 |
| | | மேல் | 7,260,802.17 |
| | | சப்ரகமுவ | 944,135.00 |
| | | ஊவா | 368,290.00 |
| 05 | 2014 | மத்தி | 860,000.00 |
| | | மேல் | 6,166,046.38 |
| | | வயம்ப | 13,042,944.90 |
| | | தென் | 4,100,231.70 |
| | | சப்ரகமுவ | 3,816,354.00 |
| | | ஊவா | 550,000.00 |
| 06 | 2015 | மத்தி | 12,378,023.30 |
| | | சப்ரகமுவ | 160,000.00 |
| | | வட மத்தி | 200,000.00 |
| 07 | 2016 | மேல் | 80,021.75 |
| | | தென் | 53,107.50 |
| 08 | 2018 | வயம்ப | 2,113,409.95 |
| | | ஊவா | 1,150,601.00 |
| | | சப்ரகமுவ | 1,728,842.11 |
| | | தென் | 295,776.60 |
| 09 | 2019 | மத்தி | 588,161.70 |
| | | வயம்ப | 121,000.00 |

**தோல்வியுற்ற கருத்திட்டங்கள்**

வெளிநாட்டுப் பயிற்சிச் செயற்றிட்டங்களில் தமது உறுப்பினர்கள் பங்கெடுத்த பின்னர், குப்பை முகாமைத்துவக் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு சில உள்ளூராட்சி சபை உறுப்புக்கள் முயன்றுள்ளன. எனினும், இக் கருத்திட்டங்களில் பெரும்பாலானவை முற்றிலும் தோல்வியடைந்துள்ளன அல்லது குறைவாகச் செயற்பட்டுள்ளன. பெருமளவு தருணங்களில், கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவே இல்லை. வெளிநாட்டுச் சுற்றுலாக்கள் மீது மிக அதிகளவிலான தொகைகளைக் கொண்ட பொது நிதியங்கள் செலவழிக்கப்பட்ட போதிலும், பொது மக்களுக்கு உருப்படியான நன்மையை அளிக்கவில்லை என்பதையே இது முனைவுபடுத்துகின்றது.

மறுதலையாக, பொலித்தீனினதும்; பிளாஸ்ரிக்கினதும்; பயன்பாட்டில் நாடு முழுவதும் அதிகரிப்பொன்று இருந்துள்ளதுடன், இது உயிரியல்ரீதியாக தரம் குன்றாத கழிவின் நாளாந்த தேக்கத்தையும் அதிகரித்துள்ளது. இந்த பாரதூரமான சூழ்நிலை விளங்கிய போதிலும், சாத்தியவளமான குப்பை ஒழிப்புத் திட்டங்களை அமுலாக்குவதற்கு உள்ளூ ராட்சி மன்ற உறுப்புக்கள் தவறிவிட்டன. மென்மேலும், பெருமளவு தரகிலான கருத்திட்டங்கள் 'திட்டமிடல் கட்டத்தில்' தொடர்ந்துமே சிக்கியுள்ளன.

**"தினசரி சேகரிக்கப்பட்ட 3,700 மெ. தொன்கள் கழிவுகளில், 400 மெ. தொன்கள் பிளாஸ்டிக்; ஆகும்"**

'குப்பை முகமைத்துவம்' என்ற போர்வையின் கீழ் கடந்த பத்து ஆண்டுகளில் செலவிடப்பட்ட அபரிமிதமான தொகைகளைக் கொண்ட பொது நிதியங்கள் வீணாகிவிட்டன என்பது தெளிவாகிறது. மென்மேலும், யாருக்கு குப்பை வளமாக மாறியுள்ளது என்பது தெளிவாகிறது. இந்த அரசியல் மற்றும் அதிகாரத்துவ தேக்கநிலை தொடர்கின்ற அதேவேளை, நகர மற்றும் கிராமியப் பகுதிகளில் குப்பைகளின் மலைகள் குவிந்தும் வருகின்றன. உள்ளூராட்சி மன்ற உறுப்புக்கள் சதுப்பு நிலங்களிலும், ஈர நிலங்களிலும் குப்பைகளை தன்னிச்சையாக ஏற்றி இறக்குவதனாலும், கொட்டுவதனாலும் இந்தப் பாதுகாக்கப்பட்டதும் மற்றும் பெறுமதிமிக்கதுமான சூழல் வளங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு, மாசுபடுத்தப்படுகின்றன. அடிப்படையற்ற குப்பை ஒழிப்பின் காரணமாக விளைகின்ற அடாவழியிலான சூழல் அழிவுக்கு தமது கண்களைச் சம்பந்தப்பட்டவர்கள் திறப்பதற்கான நேரம் வந்துவிட்டது. உடனடி நடவடிக்கை எடுக்கப்படாவிட்டாலும் அத்துடன் இந்த ஊழல் மற்றும் கவனக்குறைவான நடத்தை ஆகியன தொடர்ந்தாலும் நம்மை இயற்கை திருப்புவதற்கு நீண்ட காலம் எடுக்காது.

**2010-2019 வரை சர்வதேச திண்மக் கழிவு முகாமைத்துவ பயிற்சி செயற்றிட்டங்களில் பங்கெடுத்த உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை**

| ஆண்டு | பிரதிநிதிகளின் எண். |
|---|---|
| 2010 | 06 |
| 2011 | 11 |
| 2012 | 07 |
| 2013 | 55 |
| 2014 | 156 |
| 2015 | 73 |
| 2016 | 03 |
| 2017 | -- |
| 2018 | 15 |
| 2019 | 09 (மே 31 வரை) |

**சாமர சம்பத்**
டெயிலி மிரர்




## பால்நிலை பிரச்சினையின் காரணமாக

# புகையிரதம் தடம் புரண்டது

இலங்கையில் 160 வருடங்கள் பழமைவாய்ந்த புகையிரத திணைக்களம் தனது மேல்நிலை **பயிற்சி மற்றும் நிறைவேற்று பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றாலும், பெண்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட மாட்டார்களெனவும், அவர்கள் கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்காக மட்டுமே சேவையில் இணைத்துக்கொள்ளபடுவரெனவும்,** தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் ஊடாக தெளிவாகின்றது.

தகவல் அறியும் உரிமையின் கீழ் சன்டே டைம்ஸ் பத்திரிகையால் தாக்கல் செய்யப்பட்ட தகவல் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் வகையில், பணிப்பாளர் (திட்டமிடல்) மற்றும் தகவல் அலுவலர் ஜெ. டி. ஆர். புஷ்பகுமார புகையிரத திணைக்களம் பெண் பணியாளர்களுக்கு

விண்ணப்ப படிவம் வழங்குவதில்லையென தெரிவித்தார். விண்ணப்படிவம் வெளியிட்ட பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பம் கிடைக்கப்பட்டவுடன் பொருத்தப்பாடுகளின் அடிப்படையில் பெண்களை சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவர் என தெரிவிக்கப்பட்டது.

**இத்திணைக்களத்தில் 2017 ஆம் ஆண்டு செயற்திறன் அறிக்கைக்கமைய 15,413 ஊழியர்கள் பணிபுரிவதாக தெரிவிக்கப்பட்டது.** தகவல் அறியும் உரிமையின் கீழ் கோரப்பட்ட தகவல் கோரலுக்கமைய **1,202 பெண் ஊழியர்கள் மட்டுமென்பது தெளிவானது.** அதில் 148 பெண்கள் முறையற்றவகையிலும் அல்லது பதில் மற்றும் தொழிலாளர்களாவர்.

அதில் **பெரும்பாலானவர்கள் (276) பெண் தொழிநுட்ப உதவியாளர்களாவதுடன்** அதில் பின்னர் முறையாக முகாமைத்துவ உதவியாளர் (185), "அலுவலகப் பணியாளர்கள்" (178), மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (126) என்றவகையிலுமாகும். மொத்த திணைக்களத்திலுமுள்ள இலங்கை நிர்வாக சேவையிலிருந்து வந்துள்ள **பெண் ஊழியர் ஒருவரான மேலதிக முகாமையளரும் 17 பொறியியலாளர்களும் மட்டுமே** உள்ளனர்.

புகையிரதத் திணைக்களத்தின் சிரேஷ்ட பதவிகளுக்காக அறிவித்தல் செய்யும் போதும், இந்த ஆண் பெண் பாகுபாடு காட்டப்படுகின்றது. "நிறைவேற்று பதவி நிலையின் தரம் மூன்றின் உதவி அதிகாரி (வியாபார, போக்குவரத்து) க்கான திறந்த போட்டிப்பரீட்சைக்கு அண்மையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டது. 12 பதவிகளுக்கு பதவி நியமனம் வழங்கவேண்டியுள்ளது.

பரீட்சைக்கு தோற்றுவதற்கான ஒரு நிபந்தனையாக குறிப்பிடப்பட்டிருந்ததாவது இலங்கை பிரஜையாக இருக்க வேண்டுமென்பதாகும். அடுத்த நிபந்தனையாக அமைந்த விடயம் யாதெனில் சிறந்த நபராக இருத்தல்வேண்டும் மற்றும் நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்காக உள மற்றும் உளவியல் சார்ந்த வகையில் தகைமை பெற்றிருத்தல் அவசியமானதாகும்.

அதற்கமைய, நிறைவேற்று வகுப்பினரை உள்வாங்குவதற்கு மட்டுப்படுதப்பட்ட பரீட்சை ஆண்களுக்காக மட்டும் நடத்தப்படும். அதன் பின்னர் உயர்வகுப்பு பதவிகளுக்காக உள்ளக ஆண் ஊழியர்களுக்கு மட்டுமே வாய்ப்பு வழங்கப்படும். அவை குறிப்பிடத்தக்க உயர் சம்பளமுடைய தொழில் துறையாகும்.

இலங்கை ஜேர்மன் புகையிரத தொழிநுட்ப பயிற்சி மத்திய நிலையத்தில் தற்போது எத்தனை பெண்கள் பயிற்சி பெறுகின்றனர் என தகவல் அறியும் விண்ணப்பதின் ஊடாக கோரப்பட்டது. மொத்தமாக வருடாந்தம் வழங்கப்பட்ட 90 நியமனங்கள் தொடர்பிலும் அதில் தற்சமயம் கல்வி பயிலும் பெண்களது எண்ணிக்கை 21 ஆகும். குறிப்பிட்ட மாணவர்களது எண்ணிக்கை 23 ஆகும்.

எவ்வாறாயினும், இங்கு ஆண் பெண் இருபாலாருக்கும் திறக்கப்பட்டாலும், (அதில் ஆண், பெண் பல்லினத்தும் தொடர்பான ஏற்பாடுகள் இல்லை) அதற்கு பொருத்தமான எல்லைகளின் காரணமாக இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் பெண்களை பயிற்றுவிப்பதற்கு தொழில் தேவைப்பாடுகள் நலிவடைந்தன.

**நாமினி விஜேதாச**

*The Sunday Times - 14 Jul 2019*



# 2015 முதல் லக்விஜயவின் அலகு 1 அரைவாசி நேரமும் **வலு குறைந்தேயுள்ளது**

**முழு ஆற்றலளவுக்கு அதைக் கொண்டு வருவதற்கு ரூ.330 மில்லியன் அவசியமாகும்**

2015 முதல் லக்விஜய நிலக்கரி மின் பொறியின் ஒன்று அண்ணளவாக அரைவாசி நேரமும் ஆற்றலளவுக்கு குறைவாகவே செயற்பட்டு வருவதுடன், முழு ஆற்றலளவுக்கு அதைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் மேலும் ரூ.330 மில்லியனைச் செலவழிக்க வேண்டிவரும் என **சண்டே ரைம்ஸினால்** (Sunday Times) பார்க்கப்பட்ட தரவுகளும், ஆவணங்களும் எடுத்துக்காட்டுகின்றன.

சீனாவினால் கட்டப்பட்ட பொறியின் பழமையானதும், பாரப்படுத்தப்படுவதற்கு முதலாவதுமான அலகு 1 கடைசியாக 2017 ஏப்ரலில் முழு ஆற்றலளவில் இயங்கி, தேசிய நெய்யரிக்கு 270 மெ.வாட்களை வழங்கியது என இலங்கை பொது வசதிகள் ஆணைக்குழுக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து பெறப்பட்ட தரவு காட்டுகின்றது.

மூன்று அலகுகளில் ஒவ்வொரு அலகுமே 300 மெ.வா. கொண்ட மின்சாரத்தைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டிருக்கின்ற அதேவேளை,

அவற்றின் சொந்த தொழிற்பாடுகளுக்கு வலுவூட்ட அண்ணளவாக 30 மெ.வா. பயன்படுத்தப்படுகின்றது.

**நெருக்கடி-நிறைந்த லக்விஜய நிலக்கரி மின் பொறி**

2015 ஏப்ரலுக்கும், இவ்வருடம் ஏப்ரலுக்கும் இடையிலான காலத்தில், 41 சதவீதத்திற்கு அலகு 1 தொழிற்படவில்லை (அது அண்ணளவாக 80 மெ.வா. குறைவாக விநியோகிக்கும் போது). அது நேரத்தின் வெறுமனே 27 சதவீதத்திற்கு முழு ஆற்றலளவில் தொழிற்பட்டதுடன், நேரத்தின் 24 சதவீதத்திற்கு அண்ணளவாக 190 மெ.வா. கொண்ட மின்சாரத்தை தோற்றுவித்து, குறைந்த ஆற்றலளவில் தொழிற்பட்டது. இக்காலத்தின் போது 12 பாரிய செயலிழப்புகள் இருந்துள்ளன.

2017 ஏப்ரல் 17இலும், 24இலும் அலகு 1இல் கொதிகலனின் இரு வெடிப்புக்கள் அதன் "நீர் சுவர் குழாய்களில்" வெடிப்புக்களை விளைவித்தாக தகவலுக்கான உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அறிக்கையொன்று காட்டுகின்றது. கொதிகலனின் சீன தயாரிப்பாளரான ஹார்பின் பொயிலர் கம்பெனி லிமிற்றெற்றின் பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடும் அறிக்கை "குறைந்த தரத்தைக் கொண்ட கொதி நீரினால்" வெடிப்பு தவறுகை விளைந்துள்ளதாகவும், இது குழாய்களின் தடிப்பத்திற்கு விட்டுக்கொடுக்கப்பட்டதனால் காரமான துருப்பிடித்தலை விளைவித்ததாகவும் கூறி முடிக்கின்றது.

மின் பொறியொன்றின் அத்தியாவசியமான ஆக்கக்கூறாக கொதிகலனொன்று விளங்குவதுடன், இது சுழலிகளைச் செலுத்துகின்ற நீராவியாகவும் திரவத்தை மாற்றுகின்றது. கொதிகலனுள் நீர் சந்திப்பு வடிவமைப்பு விபரக்கூற்றுக்களின் தோதான தரம் ஊட்டப்படுவதை உறுதிப்படுத்துவதே "கொதிகலன் முகாமைத்துவத்தில் மிகவும் அடிப்படையிலான விடயமாகும்" என வலு நிபுணர் ஒருவர் தெரிவித்தார். இந்த நியமங்களைப் பேணுவதற்கு இலங்கை மின்சார சபை தவறியுள்ளது.

அடுத்த மாதம் பாரிய தரமுயர்த்தலொன்றுக்கு தற்போது அலகு 1 மூடப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. கொதிகலன் சோதிக்கப்பட்டு, அபரிதமான ஆகுசெலவில் பதிலீடு செய்யப்படுவது சாத்தியமானதாகும். "தகவலுக்கான உரிமையின் கீழ் வேண்டப்பட்ட தகவலுக்கு பதிலிறுக்கையில், முழு சுமை ஆற்றலளவுக்கு லக்விஜய பொறி 1ஐ மீளக் கொண்டுவருவதற்கு புனரமைப்புக்கான மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு ரூ.330 மில்லியன் ஆகும்" என இலங்கை மின்சார சபை கூறியது.

ஏனைய விடயங்களின் மத்தியில், அலகு 1இல் சுழலி அலகுகளும், குழாய்களும் பதிலீடு செய்யப்பட்டுள்ளதுடன், இங்கு நிலைமின்னுக்குரிய வீழ்படிவாக்கியும், போக்கி-வாயு சல்பேற் அகற்றியும் தொடர்ச்சியாக தவறியுள்ளன. பாய்கின்ற வாயு ஒன்றிலிருந்து பறத்தல் சாம்பலின் விடயத்தில் நுண்ணிய துணிக்கைகளை அகற்றுகின்ற வடித்தெடுப்பு கருவியொன்றே ESP ஆகும். போக்கி வாயுவிலிருந்து சல்பர் டைஒக்சைட்டை FGD அகற்றுகின்றது.

"இறுக்கமான மின் முறைமையொன்றை நாடு கொண்டிருக்கும் போது, இந்த தவறுகையின் மட்டம் அல்லது தடை-சுமை பொறியொன்றின் கிட்டாமை மிகவும் செலவினமானதாகும்" என தொடர்ந்துமே பெயரிடப்படுவதை விரும்பாத நிபுணர் ஒருவர் தெரிவித்தார். "நாம் மின் வலுவினைக் கொண்டிருந்தாலும், ஏனைய

மூலங்களிலிருந்து ஆரம்பநிலையாக டீசலில் இருந்து பொருந்துகின்ற மின்வலுவைத் தோற்றுவிப்பது எமக்கு அவசியமாகும்."

ஆற்றலளவையும் அத்துடன் டீசலில் இருந்து தோற்றுவிப்பினையும் பொறுத்தளவில் உயர்ந்த ஆகுசெலவில் ஒரு வருடத்திற்கு மேலாக 80 மெ.வா. கொண்ட பற்றாக்குறையொன்று உள்ளது என தொடர்ந்தும் கூறினார். இது மாதமொன்றுக்கு அண்ணளவாக ரூ.10 பில்லியன் தொகையிலானது என்பதுடன், இதனால் ரூ.330 மில்லியனைச் செலவழிக்காமலும், பிரச்சனையைக் களையாமலும் விடுவதற்கு இலங்கை மின்சார சபைக்கு காரணம் இல்லை.

"முறைமை ஓட்ட சாராமாறிகளைப் பார்க்கும் போது, 40 மாதங்களைக் கொண்ட காலமொன்றினுள் 14 முறைமை நிறுத்தல்கள் இருந்துள்ளன" என அவர் அபிப்பிராயப்பட்டார். "இது ஒரு காலாண்டுக்கு மேற்பட்ட நிறுத்தமொன்றாகும். தள-சுமை முறைமைகள் ஆண்டொன்றுக்கு இரு தடவைகளுக்கு மேல் மூடப்படுவது எதிர்க்கப்படவில்லை."

"மிதமிஞ்சிய தொடக்கிகளும், நிறுத்திகளும் கொதிகலனில் அனல் மயக்கநிலையை உருவாக்குவதுடன், இது குறிப்பிடத்தக்க வாழ்க்கைக் காலத்தினதும், நம்பகத்தன்மையினதும் குறைப்புடன் சுழலான அனல் மாறலுக்கு எதிர்பார்க்கப்பட்ட பொறுதி எல்லைக்கு அப்பால் செல்லும் பல்-எண்ணிக்கையிலான ஆக்கக்கூறுகளுக்கு இட்டுச்செல்கின்றது" என அவர் எச்சரித்தார்.

இதனிடையே, இவ்வாரம் அமைவிட வருகைதரலின் போது உட்பட மின், சக்தி அமைச்சிலிருந்தும், இலங்கை மின்சார சபையிலிருந்தும் தீவிர அழுத்தம் இருந்த போதிலும், கடந்த வருடம் காலாவதியான லக்விஜயவின் நிலக்கரி மின்பொறியின் சூழல் பாதுகாப்பு உரிமத்தினை வடமேல் மாகாண சபை சூழல் அதிகாரசபை இன்னுமே புதுப்பிக்கவில்லை.

ஏற்கனவே, சூழல் கரிசனைகளைப் பார்ப்பதற்காக பல்-எண்ணிக்கையிலான முகவராண்கைளின் 15க்கு மேற்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணித்தல் குழுவொன்று அமைக்கப்பட்டது. சூழல் பாதுகாப்பு உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கு வடமேல் மாகாண சபை பிரதம செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் இக் குழு மீண்டும் அடுத்த வாரம் சந்திக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

"உரிமத்தை வழங்குமாறு கேட்கப்பட்டோம்" என வடமேல் மாகாண சபை சூழல் அதிகாரசபையின் தலைவர் சமன் லேனதுவ தெரிவித்தார். "தீர்மானமொன்று எடுக்கப்படும் முன்னர், எமது சகல சூழல் நியமனங்களை இலங்கை மின்சார சபை நிறைவேற்றியுள்ளதா என்பதை நாம் மதிப்பிட வேண்டும்." ஒன்றில் குருநாகலில் அல்லது கற்பிட்டியில் நிலக்கரி மின் பொறியில் குழு கூடவுள்ளது.

**நாமினி விஜேதாச**




## பிரதம நிறைவேற்று அதிகாரியின் சம்பளம் மீதான தகவலை வெளியிடுவதற்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் மறுப்பினை

# தகவலுக்கான உரிமை ஆணைக்குழு நிராகரித்தது

**இப்போது மேன்முறையீட்டு மன்றுக்கு தேசிய விமான சேவை செல்லக்கூடும்**

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் வரம்பினுள் அதன் பிரதம நிறைவேற்று அதிகாரியின் சம்பளங்களும், படிகளும் வரவில்லை என்ற காரணங்களின் மீது அத்தகைய தகவலை வெளிப்படுத்துவதிலிருந்து அதற்கு விலக்களிக்கப்பட்டுள்ளது என்ற ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் (SriLankan Airlines) ஆட்சேபனையொன்றை தகவலுக்கான உரிமை [Right to Information (RTI)] ஆணைக்குழு நிராகரித்துள்ளது.

மார்ச் 23 திகதியிடப்பட்ட அதன் தீர்மானத்தில், தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பரப்பெல்லையினுள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வருகின்றதா என்பதில் சந்தேகமில்லை என ஆணைக்குழு தெரிவிக்கின்றது. **“உறுதியற்றதன்மை,**

**உரசல் மற்றும் குழறுபடி ஆகியனவற்றைக் கொண்டு வரும் தகவலுக்கான உரிமைச் சட்டத்தினால் திட்டமிடப்பட்டுள்ளவாறு பயனுறுதிவாய்ந்ததும், தடங்கலற்றதுமான செயற்படும் முறைமையொன்றை மறுதலையிலான முடிவொன்று குழப்பும்"** என்பதை அது தாங்கிப்பிடிக்கின்றது.

தகவலுக்கான உரிமைச் சட்டத்தினால் முன்மொழியப்பட்ட "சுகப்படுத்தலும், தீர்வும்" தேவைக்கு மேற்பட்டதாக நிறைவேற்றப்படக்கூடாது எனவும் ஆணைக்குழு தெரிவிக்கின்றது. "அரசாங்க அதிகாரங்கங்களில் ஒளிவுமறைவின்மையினதும், பொறுப்புக்கூறுதலினதும் கலாசாரமொன்றைப் பேணுவதற்கு" சட்டத்தின் ஒப்புக்கொள்ளப்பட்ட நோக்கத்தில் உள்ள சட்டவாக்கக் கருத்து தோற்கடிக்கப்படலாகாது.

**"இது வெறுமனே பிரதிவாத தேசிய விமான சேவைக்கு சாத்தியக்கூற்றுக்கான அதிகரிப்பினை வழங்கும் என்று அல்ல, ஆனால், பரந்த எண்ணிக்கையைக் கொண்ட வேறு நிறுவனங்கள் அதே விதிவிலக்கின் நன்மையை அர்த்தப்படுத்துவதைக் கோருவதற்கு பொருத்தமாகப் பார்த்து, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் அடைதலுக்கு வெளியே தம்மை வைப்பதுடன், இதன் தொடர்ச்சியாக, சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 43(உ)இல் விளைந்து, பயனின்மைக்கு குறைக்கப்படும்"** என அது உறுதிப்படுத்தியது.

தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிவாரணத்தை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கோரக்கூடும். பிரதம நிறைவேற்று அதிகாரி, மனித வளங்கள் தலைவர் மற்றும் பிரதம வர்த்தக அதிகாரி ஆகியோரின் சம்பளங்கள், படிகள் மற்றும் நன்மைகள் ஆகியன மீதான தகவல், பாகிஸ்தான் இன்ரர்நக்ஷனல் எயார்லைன்ஸுடனான (Pakistan International Airlines) அதன் விமான பேரம்பேசல், Airbus A350 கட்டளையை இரத்துசெய்தமை மீதான தகவல் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரிக்காக ஸ்ரீலங்கா எயார்லைன்ஸினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தனிப்பட்ட பறத்தல் பயிற்சியின் ஆகுசெலவு மீதான தகவல் ஆகியனவற்றை தடுத்துவைப்பதற்கான தேசிய விமான சேவையின் தேடலில் பொதுசன நிதியங்களின் மேலதிக செயலின்மை இதற்கு அவசியமாகும்.

இலங்கை வான்வழி விமானிகள் கழகத்தினால் [Airline Pilots' Guild of Sri Lanka (APGSL)] 2017 ஜூனில் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் அத்தகைய தகவலுக்கான விண்ணப்பம் முதலில் தாக்கல் செய்யப்பட்டது. அதன் நிராகரிப்புக்கு எதிராக, 2017 செப்ரெம்பரில் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவுக்கு கழகம் மேன்முறையீடு செய்தது. 2017 டிசம்பரிலும், இவ் வருடம் ஜனவரியிலும், பெப்ரவரியிலும் எழுத்திலான சமர்ப்பணங்களை மேன்முறையீட்டாளரான APGSL தாக்கல் செய்தது. இவ்வருடம் ஜனவரியிலும், பெப்ரவரியிலும் அதன் சமர்ப்பணங்களை எதிர்வாதியான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தாக்கல் செய்தது.

விசாரணையின் போது, 2007இன் 7ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனியொன்று அல்ல என்றும், எனவே தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 43(உ)இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு "அரசாங்க அதிகாரசபை" ஒன்று அல்ல என்றும் அதன் பூர்வாங்க எதிர்ப்பொன்றை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் முன்வைத்தது.

கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்ட ஒன்றாக நிறுவனமொன்றை தகவலுக்கான உரிமைச்

சட்டம் வரையறுப்பதுடன், "இதில் அரசாங்கம் அல்லது ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனம் மற்றும் அரசாங்கம் மற்றும் அரசாங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றுசேர இருபத்தைந்து சதவீதத்திலான அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளைக் கொண்டுள்ளன அல்லது வேறுவகையில் கட்டுப்படுத்தும் அக்கறையொன்றைக் கொண்டுள்ளன."

கம்பெனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ், 1979இல் எயார் லங்காவாக அது ஒன்றிணைக்கப்பட்டதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தெரிவித்தது. 1982இன் 17ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ், 1999இல் ஸ்ரீலங்கா எயார்லைன்ஸாக அதன் பெயரை அது மாற்றியது. பின்னர் சட்டத்தினால் கேட்கப்பட்டவாறு, 2007இன் 7ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் அது மீள்-பதிவுசெய்யப்பட்டது.

2007 சட்டத்தின் கீழ், அது "ஒன்றிணைக்கப்படவில்லை", ஆனால் வெறுமனே நடைமுறையிலான நிறுவனமொன்றாகப் பதிவுசெய்யப்பட்டதனால், தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 43(உ) இல் உள்ள வரைவிலக்கணம் அதற்கு பொருத்தமானதல்ல என ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பிடிவாதமாகக் கூறியது. ஆனால், இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனமொன்றே என்ற உண்மை குறித்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் சர்ச்சை செய்யவில்லை.

2007இன் கம்பெனிகள் சட்டத்தின் கீழ், மட்டுப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் ஒன்றிணைப்பின் சான்றிதழானது சட்டத்தின் கீழ் "ஒன்றிணைக்கப்பட்டதாக" மட்டுப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாக பதிவுசெய்யப்பட்டுள்ள "நடைமுறையிலான நிறுவனம்" ஒன்றாக அதை விபரிக்கின்றது என அதன் தீர்மானத்தின் தகவலுக்கான உரிமை ஆணைக்குழு கவனத்தில் கொள்கின்றது.

2007 சட்டத்தின் கீழ், புதிதாக ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனமொன்றுக்கு அல்லது முன்னைய சட்டவாக்கத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்ட "நடைமுறையிலான நிறுவனம்" ஒன்றுக்கு இடையில் வேறுபாடொன்று வரையப்பட்டால் கூட, நிலைபேறுதன்மையில் தொடர்வதற்கான கருத்தினைக் கொண்ட வேறுபாடொன்றை விட, சட்டமானது அமுலுக்கு வருகின்றது என்ற துல்லியமான நிலையில், 2007 சட்டத்தின் கீழ் ஆட்சியைக் கட்டுப்படுத்தும் மட்டுப்படுத்தப்பட்ட நோக்கத்திற்கான மாற்றம் மீது செயற்கையான வேறுபாடொன்றை எடுக்கின்றது.

ஒரு தகவல் அதிகாரியின் மற்றும் ஒரு குறித்தொதுக்கப்பட்ட அதிகாரியின் நியமனத்தை மேற்கொள்ளுதல் உட்பட சொல்லப்பட்ட சட்டத்துடனான இணக்கப்பாட்டில் செயற்படும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் ஒன்றுக்கு மேற்பட்ட வருடத்தின் பின் தகவலுக்கான உரிமைச் சட்டம் அதற்கு பொருத்தமற்றது என்ற ஆட்சேபனையை விமான சேவை எழுப்பியுள்ளதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டுகின்றது.

மேலும், அதன் உத்தியோகபூர்வ ஆவணங்களிலும் அத்துடன் அதன் இணையதளம் மீது கிட்டுகின்ற சட்ட அறிவித்தலிலும் கம்பெனிகள் சட்டத்தின் (2007) கீழ் அது ஒன்றிணைக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

**நாமினி விஜேதாச**



*www.solidaridadnetwork.org*

# நிலத்தடி நீர் கண்காணித்தலுக்கு பாரிய ஒப்பந்தத்தை டச்சு நிறுவனம் பெற்றது

நாட்பட்ட சிறுநீரக நோய்க்கு மிகவும் ஊறுபடத்தக்கதென என அடையாளங்காணப்பட்டுள்ள பகுதிகளான மல்வத்து ஓய, மாதுறு ஓய மற்றும் கும்புக்கன் ஓய வடிநிலங்களுக்கு நிலத்தடி நீர் கண்காணித்தல் வலைப்பின்னல்; ஒன்றை தாபிப்பதற்கு பல்-மில்லியன் யூரோவிலான (ரூ.4.4 பில்லியன்) முன்னோடிக் கருத்திட்டமொன்றை டச்சு நிறுவனமொன்று பெற்றுள்ளது.

நிலத்தடி நீர் மட்டங்கள், நைத்ரேற் செறிவு மற்றும் பெறுமதிகள் போன்ற உண்மையான நேர தரவுகளைச் சேகரிப்பதற்கு கருவிகளை நிறுவுவதற்காக 150 குடைதுளைகளின் தோண்டுதலை கருத்திட்டம் வலியுறுத்துகின்றது. இது நீர் வளச் சபையில் உள்ள தரவு முகாமைத்துவ நிலையமொன்றுக்கு நேரடியாக அனுப்பப்பட்டு, படிநிலைப்படுத்தப்படும். நாட்டின் நிலத்தடி நீர் சூழ்நிலை மீது நாளாந்த எதிர்வுகூறலொன்று திட்டமிடப்பட்டுள்ளது.

2013இல் இலங்கை அரசாங்கத்திற்கு அதன் கோரப்படாத பரிந்துரைக்காக முன்மொழிவொன்றை முதலில் நெதர்லாந்தை தளமாகக் கொண்ட மெசர்ஸ் இஜேகெல்கம்ப் ஏர்த் சாம்பிளிங் குரூப் (M/ Eijekelkamp Earth Sampling Group) சமர்ப்பித்தது. இரு வருடங்கள் கழித்து,

அரசாங்கத்தின் மாற்றத்தின் பின்னர் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான பொருளாதார முகாமைத்துவம் மீதான அமைச்சரவைக் குழுவினால் மீண்டும் கரிசனைக்கு எடுக்கப்பட்டு, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் பார்வை ஆவணங்கள் பெறப்பட்டன.

**முழு நாட்டையும் உள்ளடக்கியும், அண்ணளவாக 32 மில்லியன் யூரோ ஆகுசெலவிலானதுமான முழு அளவிலான வலைப்பின்னலொன்றுக்காக மூலத்திலான முன்மொழிவு விளங்கிய அதேவேளை, அண்ணளவாக 23.3 மில்லியன் யூரோவில் விலையிடப்பட்ட முன்னோடிக் கருத்திட்டமொன்றை (உள்ளூர் வரிகள் உட்பட) அரசாங்கம் விரும்பியது.**

சிறிய முன்னெடுப்பானது முழு அளவிலான கருத்திட்டத்தின் மொத்த ஆகுசெலவின் பாரிய 65 சதவீதமாகும். ஆனால், அதன் முதலாவது கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டது முதல் இடம்பெற்ற ஒன்பது சதவீத விலை ஏற்றமொன்றை இஜேகெல்கம்ப் ஏற்றுக்கொண்டமை உட்பட பெருமளவு காரணங்கள் மீது விலை நியாயப்படுத்தப்பட்டது. டச்சு ஏற்றுமதி கடன் முகவராண்மையான Atradius DSBஇன் ஆதரவுடன், சுயடிழடியமெ நேவாநசடயனெஇலிருந்து கடன் ஒன்றின் ஊடாக கருத்திட்டம் நிதிப்படுத்தப்படும். மூன்று வருடங்களைக் கொண்ட சலுகைக் காலமொன்றுடன், 15 வருடங்களாக மீள்-கொடுப்பனவு விளங்கும்.

**இலங்கை முழுவதும் நிலத்தடி நீர் நிலைமைகள் கணிசமானளவு வேறுபடுகின்றன என கருத்திட்டக் குழு அறிக்கையொன்று தெரிவிக்கின்றது. சில பகுதிகளில், ஆழமற்ற நீர்நிலைகள் உள்ளதுடன், இவை மழைக் காலத்தின் போது அல்லது கிட்டவுள்ள மேற்பரப்பு நீர் மூலங்களிலிருந்து விரைவாகவே மீள்நிரப்பப்படுகின்றன. இந்த அமைப்பைக் கொண்ட நிலத்தடிநீர் வழமையாக மிகையாக பயன்படுத்தப்படுகின்றது.**

பரவலான கிணறு தோண்டுதலும், நீர் இறைத்தலும் மிதமிஞ்சிய பிரித்தெடுப்பினதும், நிலத்தடிநீர் மாசுபடுதலினதும் அதிகரித்த அபாயத்தைக் கொண்டுள்ளன. இதனிடையே, நிலைத்திருக்கத்தக்க மழைவீழ்ச்சி வெள்ள நீர்நிலைகளைக் கொண்ட நீண்ட காலங்கள் வழமையான மட்டங்களுக்கு மேலாக எழுவதற்கு நீர் பீடபூமிகளை விளைவிக்கின்றன.

**2011இல், அறியப்படாத நோய்க் காரணியியலின் நாட்பட்ட சிறுநீரக நோயினால் (CKDu) தாக்கப்பட்ட உலர் வலயப் பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட அனேகமாக சகல குடிநீர் மாதிரிகளில் உயர்வான ஆர்சனிக் மற்றும் இரச அடக்கம் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிக்கை சுட்டிக்காட்டியது. “இந்த நாட்டில் உயர் நில ‘நீர் வன்தன்மையின்; பங்கீட்டுப் பாங்குடன் இப் பகுதிகள் படிந்திருக்கின்றன” என அது தெரிவிக்கின்றது. “மேற்படி வன் நீரில்; கல்சியம் வியாபித்துள்ளதுடன், இது எமது உலர் வலயப் பகுதிகளில் அம்சமொன்றாகும். கல்சியத்துடன் பலமான பிணைப்புக்களை ஆர்சனிக் அமைப்பதுடன், மேற்படி வன் நீரில்; அதை அகற்றுவது கஷ்டமாகும்.”**

சில பகுதிகளில் ஆழமற்ற கிணறுகளுக்கு மானியங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், “மூலவளத்தின் கிட்டுந்தன்மை குறித்து போதிய அறிவு இன்றி சில அரசாங்க, மாகாண அத்துடன் அரச சார்பற்ற அமைப்புக்களினால் நிலத்தடி நீரைப் பயன்படுத்துதல் குறித்து தீவிரமாக முன்னேற்றப்படுகின்றன” என அறிக்கை தொடர்கிறது. “ஒழுங்குபடுத்தப்படாததும், நிருவகிக்கப்படாததுமான நிலத்தடி நீர் முன்னேற்றமானது பாரதூரமான பின்விளைவுகளைக் கொண்டிருக்கும்

என்பதை கொள்கை வகுப்போர்களும், நிதியுதவி முகவராண்மைகளும் மற்றும் அ.சா.அமைப்புகளும் உணர வேண்டும்.”

கிரமமான சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் தரவுகளைக் களஞ்சியப்படுத்தல் ஆகியவற்றை கொண்டுள்ள பயனுறுதிவாய்ந்த நிலத்தடிநீர் கண்காணித்தல் மற்றும் முகாமைத்துவ முறைமைகள் ஆகியன அமுலில் இருந்தால், இச் சூழ்நிலைகளின் பெரும்பாலானவை கட்டுப்படுத்தப்பட்டு, குறைந்தபட்சமாக்கப்பட முடியும். நீரைப் பராமரிப்பதற்கு செம்மையானதும், கற்றுணர்ந்ததுமான தீர்மானமெடுத்தலை இது இயலச்செய்யும்.

கண்காணித்தல் முறைமையொன்று, குறிப்பாக அது நாட்டின் எஞ்சிய பகுதிகளுக்கு விரிவடையும் போது, பொதுமக்களினதும், **வர்த்தகத்தினதும் மற்றும் கைத்தொழிலினதும் பயன்பாட்டுக்கு திருந்திய நீர் விநியோகத்தை இயலச்செய்யும். நீர்ப்பாசனத்தில் நடைமுறையிலானதும், எதிர்காலத்திலானதுமான அபிவிருத்திக்கு குறிப்பான பகுதிகளில் நீர் மட்டங்களினதும், பீடபூமிகளினதும் தகவலை வழங்கும் கமத்தொழிலில் நோயிலிருந்து பயிர்களைக் காப்பாற்றக்கூடிய மாசுபடுத்தப்பட்ட அல்லது பொருத்தமற்ற நீர் மூலங்களைத் தவிர்க்கின்ற அதேவேளை, நீரின் புதிய, நிலைத்திருக்கத்தக்க மூலங்களை அல்லது சிறந்த விளைச்சல்களை அடையாளங்காண்பதுடன்,** சுகாதாரப் பராமரிப்பில், உரத்தினதும், பூச்சிநாசினியினதும், களைநாசினியினதும் மிதமிஞ்சிய பயன்பாட்டின் காரணமாகவும் அத்துடன் பொருத்தமற்றதாக திட்டமிடப்பட்ட கொட்டுதல் அமைவிடங்களினதும் அத்துடன் வெள்ளத்தினதும் மற்றும் வரட்சியினதும் போதும் நிலத்தடிநீர் வளங்களின் மாசுபடுத்தலினால் விளைகின்ற நீர்காவு நோய்களைத் தடுக்கும்.

**நிலத்தடிநீரின் போக்கினைக் கண்காணிப்பதன் மூலம் வரட்சிகள், நிலச்சரிவுகள், மண்சரிவுகள் மற்றும் பெருமளவு வேறு இயற்கையான பேரழிவுகள் போன்ற இயற்கையான பேரழிவினை எதிர்வுகூற முடியும் என அறிக்கை தெரிவிக்கின்றது. சூழல்ரீதியிலான பாதுகாப்பைக் கொண்ட பகுதியில், உரத்தின் மிதமிஞ்சிய பயன்பாடு அல்லது கைத்தொழில் இரசாயனங்களின் வழிந்தோடல் போன்ற மாசுபடுத்தலைத் தடுப்பதன் மூலம், சூழலைப் பேணுவதற்கு கண்காணித்தல் முறைமையொன்று உதவக்கூடும்.**

முழு நாட்டுக்கும் கருத்திட்டப் பகுதியை விரிவாக்குவதன் முக்கியத்துவத்தை கருத்திட்டக் குழு வலியுறுத்தியதுடன், உத்தேசமான முன்னோடி முயற்சியின் முக்கியமான அம்சமொன்றாக தொழில்நுட்பத்தின் கைமாற்றம் விளங்குவதாகத் தெரிவித்தது. “முன்னோடிக் கருத்திட்டம் முடிவடைந்த பின்னர், முன்மொழிபவரின் (*Eijekelkamp*) மட்டுப்படுத்தப்பட்ட வலைப்பின்னலை விரிவாக்குதில் சகல எதிர்பார்க்கப்பட்ட திறன்களையும், நிபுணத்துவத்தையும் நீர் வளச் சபை கொண்டிருக்கும் என்ற கருத்தினை குழு கொண்டுள்ளது” என அது உறுதிப்படுத்தியது. கருத்திட்டத்திற்கு நான்கு உள்ளூர் உப-ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒரு வெளிநாட்டவர் மற்றும் மூன்று உள்ளூர்வாசிகள் என நான்கு நீரியியலாளர்களைக் கொண்ட குழாமொன்று இருக்கும். கருத்திட்டத்தை விரிவாக்கும் கட்டத்தில், சாதனங்களின் விநியோகத்திலும், குறுகிய கால உசாவுகைகளிலும் மட்டுமே *Eijekelkamp* சம்பந்தப்பட்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நாமினி விஜேதாச**




www.pressreader.com

# சிரேஷ்ட குடிமக்கள் வைப்புக்கள்: ரூ. 22.92 பில்லியனை வங்கிகளுக்கு திறைசேரி கடன்பட்டுள்ளது

அரசாங்க அறிவுறுத்தல்களின் மீது சிரேஷ்ட குடிமக்கள் நிலையான வைப்புக்கள் மீது கொடுப்பனவாகிய உயர் வட்டி விகிதங்களுக்கு மீள்நிரப்பலில் ரூ. 22.92 பில்லியனுக்கும் அதிகமான தொகையை வர்த்தக வங்கிகளுக்கு திறைசேரி கடன்பட்டுள்ளதாக தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட தகவல்களின் கீழ் திரட்டப்பட்ட தரவுகள் காட்டுகின்றன. அரசாங்கம் தனது 2015 வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் வர்த்தக வங்கிகளுக்கு சிரேஷ்ட குடிமக்களின் நிலையான வைப்புத்தொகைக்கு 15 சதவீதத்திலான சிறப்பு வட்டி விகிதத்தில் ரூ. 1 மில்லியன் வரை வழங்குவதற்கு ஆணையிட்டது. 2017ஆம் ஆண்டில், நிதி

அமைச்சு நிலையான வைப்புத்தொகையின் மேல் வரம்பை ரூ. 1.5 மில்லியனாக உயர்த்தியது. ஆனால், வட்டி விகிதம் 15 சதவீதமாக தொடர்ந்தும் இருந்தது.

சிறப்பு வட்டி வீதத்திற்கும் மற்றும் வர்த்தக வங்கிகளினால் வழங்கப்படும் சந்தை நியம வட்டி விகிதத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை திறைசேரி செலுத்த வேண்டும். எனினும், 2016இல் வங்கிகளுக்கு இறுதியான கொடுப்பனவு செய்யப்பட்டது. அது முதல் நிலுவைகள் உயர்ந்துள்ளன. ஆனால் மீள்நிரப்பல் செய்யப்படவில்லை. உதாரணமாக, **2017ஆம் ஆண்டில் வங்கிகளுக்கு மொத்தம் ரூ.13.462 பில்லியனை கடன்பட்டிருந்தது.** ஆனால், அது எதுவும் செலுத்தப்படவில்லை என்று தகவல் அமைச்சின் தரவு காட்டுகிறது. இந்த ஆண்டின் முதல் காலாண்டில் ரூ. 3.304 பில்லியன் கடன்பட்டிருந்தது. இதுவும் கூட தீர்க்கப்படவில்லை

**2016ஆம் ஆண்டில், ஒரு பகுதியளவிலான மீள்நிரப்பல் மட்டுமே செய்யப்பட்டது. திறைசேரியினால் கடன்படப்பட்டிருந்த ரூ.14.518 பில்லியனில், மொத்தமாக ரூ. 6.156 பில்லியன் செலுத்தப்பட்டது.** திட்டத்தின் முதலாவது ஆண்டான 2015இல் மட்டும் முழுத்தொகையான ரூ.3.361 பில்லியன் தீர்க்கப்பட்டது. எனினும், இதுவரை **2015 முதல் மொத்தமாக கடன்பட்டிருந்த ரூ.34.646 பில்லியனில் வங்கிகளுக்கு ரூ.11.723 பில்லியனை திறைசேரி செலுத்தியுள்ளது.** இந்தத் திட்டத்தின் அறிமுகத்தின் பின்னர் சிரேஷ்ட குடிமக்களின் நிலையான வைப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

2015ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிலவிய மிகக் குறைந்த வட்டி விகிதங்களின் அடிப்படையின் மீது நிதி நிறுவனங்கள் உரிமைகோரல்களைக் கணக்கிட்டுள்ளதால் திறைசேரி தள்ளுபடியைத் தாமதப்படுத்துவதாகக் கூறி 2016ஆம் ஆண்டில் மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைப் பிரிவு கடிதமொன்றை வழங்கியதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. வங்கிகளால் தள்ளுபடி கணக்கிடப்பட்டு ஒவ்வொரு காலாண்டின் போது கட்டுப்பாட்டாளருக்கு அனுப்பப்பட வேண்டும் என அது தெரிவித்தது.

**எனினும், அப்போதிருந்து, இந்தப் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் இல்லை. பதிலாக, இதேபோன்ற கொள்கையின் மீது செயற்படும் மேலதிகத் திட்டங்களை நிதி அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது. சமீபத்தில் தொடங்கப்பட்ட இலங்கை வியாபார முயற்சி கடன்களின் கீழ், பல்வேறுபட்ட உற்பத்திப்பொருட்கள் மீது வழங்கப்பட்டுள்ள வட்டி விகிதங்களில் 25 விகிதத்திற்கும் 75 விகிதத்திற்கும் இடையில் மானியங்களை வழங்குவதை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது.**

உதாரணமாக, 13.5 சதவீதத்தைக் கொண்ட வருடாந்த வட்டி விகிதமொன்றுடன் ஒரு புதிய 32 இருக்கைகள் கொண்ட பஸ் வாங்குவதற்கு பாடசாலை மேற்படி வேன்; உரிமையாளர்களுக்கு ரூ. 4 மில்லியன் வரை ஒரு புதிய ஷரியா சக்தி; கடன் திட்டத்தின் கீழ் கடன் வாங்குபவர் வெறுமனே **3.38 சதவீதத்தை** செலுத்தும் அதேவேளை, அதன் 75 சதவீதத்தை அரசாங்கம் மானியமாக வழங்கும். பயிர்ச்செய்கையை இயந்திரமயமாக்குவதற்கு சிறு அளவிலான கமக்காரர்களுக்கும் மற்றும் கமக்காரர் தாபனங்களுக்கும் “கொவிநவோதய” திட்டத்திற்கு இது பிரயோகிக்கப்படும்.



*http://archives.sundayobserver.lk/*

# தண்டவாளங்கள் மீது ஒவ்வொரு வருடமும்

## நூற்றுக்கணக்கானோர் கொல்லப்படுகின்றனர்.

அவலநிலையாக, கடந்து மூன்று வருடங்களில் புகையிரத விபத்துக்களில் 718 பேர் மரணமடைந்துள்ளனர். கொரோனா ஊரடங்கின் போது, மாதக்கணக்கில் நடைமுறையில் செயற்பாடு அற்று தண்டவாளங்கள் இருந்த போதிலும், இந்த வருடமே அதிகளவில் விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

புகையிரதத் தண்டவாளங்கள் மீது அத்துமீறலின் விளைவொன்றாக இடம்பெறுகின்ற தற்கொலைகளாக அல்லது விபத்துக்களாக புகையிரதத் திணைக்களத்தினால் பெருமளவு மரணங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தகவலுக்கான உரிமை வேண்டுகோள் ஒன்றின் ஊடாக விபரங்களை சண்டே

ரைம்ஸ் (Sunday Times) பெற்றுக்கொண்டது.

**2018இல், புகையிரத விபத்துக்களின் காரணமாக, 230 மரணங்களும், 2019இல் 215 மரணங்களும் நிகழ்ந்துள்ளன. இவ் வருடம் ஓகஸ்ட் 10 வரை மரணங்கள் 273 வரை குறிப்பிடத்தக்க வித்தில் உயர்ந்துள்ளன.** தீவகம் பூராவிலுமான கொவிட்-19 ஊரடங்கின் காரணமாக, அனேகமாக மூன்று மாதங்களுக்கு பெருமளவு புகையிரதப் பிரயாணம் இரத்து செய்யப்பட்டுள்ளதை நோக்குகையில், இது ஒரு குழப்பத்திலான புள்ளிவிபரமாகும்.

**2018இல், 1,456 புகையிரத விபத்துக்களிலிருந்து 230 மரணங்களும், காயத்தின் 477 விடயங்களும் இடம்பெற்றுள்ளதுடன், தற்கொலைகளாக அல்லது தண்டவாளங்கள் மீது அத்துமீறியதன் காரணமாக 212 மரணங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.** பாதிக்கப்பட்டவர்களில் **(167)** பாரிய பெரும்பான்மையினர் ஆண்களாவர். **2018**இல், புகையிரதக் கடவை **மரணங்கள் 13ஐயும்,** காயத்தின் 69 விடயங்களையும் விளைவித்துள்ளன. புகையிரதங்களில் இருந்து வீழ்ந்ததினால் ஐவர் தமது உயிர்களை இழந்தனர். **2019இல், 1,385 புகையிரத விபத்துக்களிலிருந்து 215** மரணங்களும், 369 காயங்களும் விளைந்துள்ளன. சகலவையும், ஆனால் 15 மரணங்கள் தற்கொலைகளாக / தண்டவாளங்கள் மீதான அத்துமீறலாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. புகையிரதக் கடவை விபத்துக்களிலிருந்து 10 மரணங்களும், புகையிரதங்களிலிருந்து விழுந்ததினால் 76 விடயங்களில் இருந்து மேலும் ஐந்து மரணங்களும் நிகழ்ந்துள்ளன.

இதனிடையே, 2020இல் புகையிரத விபத்துக்களில் 107 மரணங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ள அதேவேளை, ஏனைய 166 மரணங்கள் தற்கொலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய புள்ளிவிபரங்கள் இன்னுமே தொகுக்கப்படுகின்றன.

புகையிரத தடம்புரள்தல்கள் அடிக்கடி நடக்கின்ற போதிலும், ஒன்றுமே மரணத்தை அல்லது காயத்தை விளைவிக்கவில்லை. 2018இலும், 2019இலும் சுமார் 112 தடம்புரள்தல்கள் இருந்துள்ளன. கடந்த வருடம் புகையிரதங்களுக்கு இடையில் ஆறு மோதல்கள் இருந்துள்ளன. ஆனால், பிரயாணிகளுக்கு கெடுதல் ஒன்றும் ஏற்படவில்லை. அதேவேளை, ஒரு வருடத்திற்கு முன் ஒரு மோதல் இடம்பெற்றதுடன், அது 32 காயங்களை விளைவித்துள்ளது.

விபத்துக்களைக் குறைந்தபட்சமாக்குவதற்கு வாயில்களைக் கொண்டிருக்காத புகையிரதக் கடவைகளில் மணி-மற்றும்-ஒளி எச்சரிக்கை முறைமைகளைத் திணைக்களம் நிறுவுகின்றது. ஆனால், 2023 வரை பணி முடிக்கப்படமாட்டாது என புகையிரதப் பொது முகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

**“அத்தகைய முறைமைகள் இடம்பெறும் வரை, எச்சரிக்கை முறைமை இல்லாத புகையிரதக் கடவைகளில் பொலிசாரைப் பணிக்கு அமர்த்துமாறு நாம் கேட்டுள்ளோம். முறைமை நிறுவப்பட்ட பின்னர் கடவையொன்றிலிருந்து பொலிசார் மீளப்பெறப்படுவார்கள்”** என அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு புகையிரதக் கடவையிலும் வாயில்களை நிறுவுவதற்கு திணைக்களத்திற்கு கட்டுபடியாகாது, ஏனெனில் அவற்றில் பணியாற்றுவதற்கு ஆட்களை தொழிற்படுத்துவது அவசியமாகும் என திரு.பெர்னாண்டோ தெரிவித்தார்.

**"தனித்த பாதையென்றால் புகையிரதக் கடவையை நிருவகிக்க மூன்று பேரும், இரட்டை பாதையென்றால் ஆறு பேரும் எமக்கு அவசியமாகும். வாயில் காப்போரின் சம்பளம் ரூ.50,000 ஆகும் என்பதுடன், பெருமளவானோரைத் தொழிலுக்கு அமர்த்த எம்மிடம் வளங்கள் இல்லை."**

கவனக்குறைவின் காரணமாக பெருமளவு புகையிரத விபத்துக்கள் இடம்பெறுவதாக புகையிரத பொது முகாமையாளர் விவாதித்தார். ஏனெனில் புகையிரதக் கடவைகளில் மணி-மற்றும்-ஒளி எச்சரிக்கைகளுக்கு வாகன ஓட்டிகளும், பாதசாரிகளும் கீழ்ப்படிவதில்லை.

மிகவும் உயர்வான புறவரையிலான மூன்று அண்மைய விபத்துக்களில், எச்சரிக்கை மணி ஒலி எழுப்பி, விளக்குகள் மின்னிய அதேவேளை, புகையிரதக் கடவைகளினுள் வாகன ஓட்டிகள் வாகனங்களைச் செலுத்தியுள்ளனர். வேறுபட்ட புகையிரதக் கடவைகள் வாகன ஓட்டிகளுக்கு மாறுபட்ட பிரச்சனைகளை முன்வைத்துள்ளதாக திரு.பௌனாண்டோ மேலும் தெரிவித்தார்.

**"உதாரணமாக வடக்கிற்கான பாதையில், பாதை நேரானது என்பதுடன், தெளிவானதுமாகும். அத்துடன் புகையிரதங்கள் மணித்தியாலத்திற்கு 100 கி.மீ. வேகம் வரை செல்ல முடியும்" என அவர் தெரிவித்தார்.**

**"அடிக்கடி, இந்தப் பாதையில், புகையிரதம் எந்தளவு வேகமாக வருகின்றது என வாகன ஓட்டிகள் தவறான கணிப்பிடுவதுடன், அது வரும் முன் கடவையைத் தாண்டிவிடலாம் என நம்புகின்றனர். மணி-மற்றும்-ஒளி முறைமை அவ்வாறு செய்ய வேண்டாம் என எச்சரிக்கை செய்கின்ற போதும் கூட தண்டவாளங்கள் மீது வாகனத்தைச் செலுத்திவிடுகின்றனர். தமது தவறை உணரும் நேரத்திற்குள் அதே அனேகமாக மிகவும் பிந்திவிடுகின்றது."**

அதன் பெருமளவு வளைவுகளுடன் கரையோரப் பாதை இன்னொரு தொகுதியைக் கொண்ட பிரச்சனைகளை முன்வைத்தது. **"புகையிரதத் தண்டவாளங்களுக்கு பக்கத்தில் அங்கீகரிக்கப்படாத கட்டமைப்புக்கள் போடப்பட்டிருப்பதன் காரணமாக வாகன ஓட்டிகளும், பாதசாரிகளும் கூட புகையிரதத்தைப் பார்க்க முடியாமலிருக்கின்றனர். இதுவே விபத்துக்களுக்கான ஒரு காரணமாகும். அத்தகைய கட்டமைப்புக்களை அகற்றுவதற்கு நாம் சட்ட நடவடிக்கையை ஆரம்பித்துள்ளோம். ஆனால், அது ஒரு நீண்ட நடைமுறையாகும்"** என திரு. பௌனாண்டோ குறித்துக்கொண்டார்.

தண்டவாளங்களில் அத்துமீற வேண்டாம் என அவர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார். "அவ்வாறு செய்து பிடிபட்டவர்களுக்கு நாம் அபராதம் கூட விதித்துள்ளோம். ஆனால், பலர் இன்னுமே செய்கின்றனர். இது எடுக்கப்படுவதற்கு பெறுமதியற்ற ஓர் இடரொன்றாகும். எச்சரிக்கை முறைமை இடம்பெற வேண்டும் என்ற அதேவேளை, அத்தகைய விபத்துக்களைக் குறைந்தபட்சமாக்குவதற்கு பொதுமக்கள் மத்தியில் மனோநிலையில் மாற்றமொன்று எமக்கு அவசியமாகும்" என புகையிரத முதல்வர் வலியுறுத்தினார்.

**சந்துன் ஜயவர்தன**




*srilankamirror.com*

## தொல்பொருளியல் திணைக்களத்தில்

# உச்சநிலையிலிருந்து அடிமட்டம் வரை ஊழியர்கோப்பின் பாரிய வெற்றிடங்கள்

தொல்பொருளியல் திணைக்களம் கடுமையான அளவில் குறைந்த பணியாளரைக் கொண்டிருப்பதுடன், பெருமளவு அதன் உயர் மட்ட பதவிநிலைகள் வெற்றிடமாகவே இருக்கின்றன. திணைக்களத்தின் சகல மட்டங்களிலும் தொடர்கின்ற பற்றாக்குறையானது நாட்டைச் சுற்றியுள்ள தொல்பொருளியல் அமைவிடங்களைப் பாதுகாப்பதற்கும், பேணுவதற்குமான அவர்களது முயற்சிகளுக்கு ஊறுவிளைவிக்கின்றன என்பதை சிரேஷ்ட அதிகாரிகள் ஏற்றுக்கொண்டனர்.

சிரேஷ்ட பதவிநிலைகளுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு உடனடியான நடவடிக்கையை எடுப்பதற்கு கடந்த வருடம் ஜனவரியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து பணிப்புரையொன்று விடுக்கப்பட்ட போதிலும், சூழ்நிலை தொடர்ந்துமே இருக்கின்றது. தகவல் அறியும் உரிமையின் ஊடாக **சண்டே ரைம்ஸினால்** (*Sunday Times*) பெறப்பட்ட புள்ளிவிபரங்களின் பிரகாரம் திணைக்களத்தின் சகல வேறுபட்ட மட்டங்கள் முழுவதும் 457 பதவிநிலைகள் தொடர்ந்தும் வெற்றிடமாகவுள்ளன.

பெரும்பான்மையான சிரேஷ்ட பதவிநிலைகள் வெற்றிடமாக இருப்பதனால் நிறைவேற்று மட்டத்தில் பிரச்சனையும் மிகவும் வெட்டவெளிச்சமாகும். தகவலுக்கான உரிமை வேண்டுகோளின்படி விடுவிக்கப்பட்ட தரவுகளின் பிரகாரம், நிறைவேற்று மட்டத்தில் உள்ள 53 பதவிநிலைகளில் 13 மட்டுமே இவ்வருடம் மார்ச் 31இல் உள்ளவாறு நிரப்பப்பட்டுள்ளன. இன்னுமே வெற்றிடமாகவுள்ள பதவிநிலைகளின் மத்தியில், ஒன்பது பணிப்பாளர்கள் பதவிகளில் எட்டு வெற்றிடமாக உள்ளன. அவை மதிப்பாராய்தல் மற்றும் பதிவு, அகழ்தல், அருங்காட்சியகம், பராமரிப்பு, கருத்திட்டமிடல் மற்றும் கண்காணித்தல் அத்துடன் இரசாயனப் பேணல் ஆகியனவற்றை உள்ளடக்குகின்றன.

இதனிடையே சகல 15 பிரதி/உதவிப் பணிப்பாளர் (பிராந்தியம்) பதவிகள் இன்னும் நிரப்பப்படவுள்ளன. மூன்று பிரதி/உதவிப் பணிப்பாளர் (மதிப்பாராய்தல் மற்றும் பதிவு) பதவிகளும் வெற்றிடமாகவுள்ளன. அத்துடன் இரு பிரதிஃஉதவிப் பணிப்பாளர் (அகழ்தல்) பதவிகளும் அத்துடன் இரு பிரதி/உதவிப் பணிப்பாளர் (பராமரிப்பு) பதவிகளும் வெற்றிடமாகவுள்ளன. எல்லாமாக, திணைக்களத்தில் 27 பிரதி/உதவிப் பணிப்பாளர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளன. பிரதம பொறியியலாளர், உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது சட்ட அலுவலர் ஆகியோரையும் திணைக்களம் கொண்டிருக்கவில்லை.

அங்கீகரிக்கப்பட்டுள்ள 56 பதவிகளிலான ஊழியர்கோப்பொன்றைக் கொண்டுள்ள மூன்றாம்நிலை மட்டத்தில், 23 வெற்றிடங்கள் உள்ள அதேவேளை, இரண்டாம்நிலை மட்டத்தில் உள்ள 812 பதவிநிலைகளில் 217 பதவிநிலைகளில் வெற்றிடங்கள் உள்ளன. ஆரம்பநிலை மட்டத்தில் 179 பணியாட் உறுப்பினர்கள் திணைக்களத்தில் குறைவாக விளங்குகின்றனர்.

குறிப்பிடத்தக்க எண்ணிக்கையைக் கொண்ட பதவிநிலைகள் தொடர்பில், வெற்றிடங்களை நிரப்புமாறு அரசாங்க நிருவாக, முகாமைத்துவ அமைச்சுக்கு தொல்பொருளியல் திணைக்களம் வேண்டிக்கொண்டுள்ளதாக தகவலுக்கான உரிமை வேண்டுகோளின் பிரகாரம் திணைக்களத்தினால் விடுவிக்கப்பட்ட தகவல் குறித்துக் கொள்கின்றது. போதிய எண்ணிக்கையைக் கொண்ட தகைமைவாய்ந்த தேருனர்கள் இல்லாததன் காரணமாக ஆட்சேர்ப்புத் திட்டத்தை மாற்றுவதற்கு அரசாங்கச் சேவை ஆணைக்குழுவிடமிருந்தும், வேறு தொடர்பான முகவராண்மைகளிடமிருந்தும் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. இதனிடையே, திணைக்களத்தின் சில ஊழியர்களினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மனுவொன்று விடயத்தின் முடிவு வரை பிரதி/உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பினைத் தடுத்துள்ளது.

அரசாங்கத்தின் ஆகவுயர்ந்த மட்டங்களின் சூழ்நிலை கரிசனையை விளைவித்துள்ளது. கடந்த வருடம் ஜனவரியில், தொல்பொருளியல் அமைவிடங்களையும் அத்துடன் பழமைச் சின்னங்களையும் பாதுகாப்பது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில் விசேட கலந்துரையாடலொன்றுக்கு ஜனாதிபதி தலைமை தாங்கினார். அவ்வேளையில் ஜனாதிபதியின் ஊடாக அலகினால் விடுவிக்கப்பட்ட ஓர் ஊடக வெளியீட்டின் பிரகாரம், "தொல்பொருளியல் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்குமாறு" தொடர்பான அதிகாரமுள்ளவர்களை ஜனாதிபதி அறிவுறுத்தினார். தொல்பொருளியல் பிரச்சனைகள் தொடர்பிலான தடைகளை நீக்குவதற்கும் அத்துடன் தொல்பொருளியல்

அமைவிடங்களைப் பாதுகாப்பதற்கும் உடனடியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு பற்றாக்குறையுள்ளது என்ற கருத்து என்னவெனில், தமது பணியை கனிஷ்ட அலுவலர்கள் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு அவர்களுக்கு அவசியமான திசையையும், வழிகாட்டலையும் வழங்குவதற்கு போதியளவு அதிகாரிகள் இல்லை என்பதேயாகும் என அனாமதேயத்தின் நிபந்தனையின் மீது பேசிய தொல்பொருளியல் திணைக்களத்தின் முன்னாள் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார். அத்தகைய திசையின்றி, நாட்டின் தொல்பொருளியல் பொக்கிஷங்களைப் பாதுகாப்பதற்கான திணைக்களத்தின் மிகவும் முக்கியமான பணி தவிர்க்க முடியாத விதத்தில் பாதிப்படையும் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

தசாப்தங்களாக நாட்டைச் சுற்றி பௌத்த தொல்பொருளியல் அமைவிடங்களின் விபரங்களை ஆய்வுசெய்ததும், பதிவுசெய்ததும் அத்துடன் ஜனாதிபதியுடனான கடந்த வருடத்தின் கூட்டத்தில் சமூகமளித்தவர்களின் மத்தியில் விளங்கியவருமான வண. எல்லாவல மேதானந்த தேரர் தொல்பொருளியல் திணைக்களத்தில் தொடருகின்ற பணியாளரின் பற்றாக்குறை குறித்து துயருற்றார்.

“அனுபவத்திலான தொல்பொருளியலாளர்களின் பற்றாக்குறையின் காரணமாக, கலைப்பொருட்களைக் கையாள்வதில் மிகவும் இளமையானதும், அனுபவமற்றதுமான அலுவலர்களையே நாம் கொண்டுள்ளோம்” என தேரர் கவனத்திற்கெடுத்தார். வடக்கிலும், கிழக்கிலும் பௌத்த தொல்பொருளியல் அமைவிடங்களை அழிப்பதற்கு ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட இயக்கமொன்று உள்ளதாக தான் வலியுறுத்தியதற்கு இது பங்களிக்கின்றது என அவர் சொன்னார். பிரதானமாக அவற்றின் உளதாம்தன்மையைச் சரிபார்ப்பதற்கும் அத்துடன் அதைத் தொடர்ந்து இந்த அமைவிடங்களைப் பாதுகாப்பதற்கும் அவசியமான ஆளணியினரைத் தொல்பொருளியல் திணைக்களம் பற்றாக்குறையாகக் கொண்டிருப்பதன் காரணத்தினால், அமைவிடங்களை திணைக்களம் அடையாளங்காணாததினால் பெருமளவு சம்பவங்கள் பொலிசாரினால் பதிவுசெய்யப்படாமல் விடப்படும் என அவர் தெரிவித்தார்.

“பிரதானமாக நடைமுறையிலான விடயங்களின் காரணமாகவே ஆட்சேர்ப்பில் தாமதங்கள் உள்ளன” என தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் பி.டீ.மந்தவல வலியுறுத்தினார். தற்போதைய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம், பணிப்பாளர் பதவிகளுக்கு திணைக்களத்திலிருந்து அலுவலர்கள் பதவியுயர்த்தப்பட வேண்டும் என பணிப்பாளர் நாயகம் குறித்துக்கொண்டார். “பணிப்பாளர் பதவிகளை நிரப்புவதற்கு, எமது பிரதி/உதவிப் பணிப்பாளர்களை நாம் பதவியுயர்த்த வேண்டும். ஆனால், பணிப்பாளர் பதவியொன்றைக் கொண்டிருப்பதற்கு தகைமையடைவதற்கு திணைக்களத்துடன் 15 வருடங்களை அவர்கள் முடித்திருக்க வேண்டும். தற்போது வரை பதவியுயர்த்துவதற்கு அவர்களில் போதியளவானோரை நாம் கொண்டிருக்கவில்லை” என அவர் விளக்கமளித்தார்.

கஷ்டத்தை வழங்குகையில், பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு



/archaeologynewsnetwork.blogspot.com

அரசாங்கச் சேவையிலிருந்து யாரேனும் தகைமைவாய்ந்த தேருநரை அனுமதிப்பதற்கு ஒரேயொரு தடவை மட்டுமே விதிவிலக்கு அளிப்பதற்கு அனுமதியைக் கோரி தொடர்பான அதிகாரமுள்ளவர்களுக்கு திணைக்களம் எழுதியுள்ளது. எனினும், ஊதியச் சபை மற்றும் அரசாங்கச் சேவை ஆணைக்குழு ஆகியன உட்பட பெருமளவு முகவராண்மைகளிலிருந்து அங்கீகாரத்தை இது வேண்டுகின்றது. நடைமுறை இன்னுமே நடந்து கொண்டிருக்கின்றது.

தொல்பொருளியல் திணைக்களத்தில் 27 பிரதி/உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கு தேருநர்களை ஆட்சேர்ப்பதற்காக 28 ஓகஸ்ட் 2016 அன்று இலங்கை அபிவிருத்தி, நிருவாக நிறுவனத்தினால் போட்டிக்குரிய பரீட்சையொன்று நடத்தப்படவிருந்தது. எனினும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு சவால்விடுத்து மீஉயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் திணைக்களத்தில் உள்ள பட்டதாரிகளைக் கொண்ட குழுவொன்று தாக்கல் செய்தது. அதன் பின்னர், வழக்கின் முடிவு வரை, பரீட்சை நடத்தப்படுவதை தடுத்து இடைக்கால தடைக்கட்டளையை மீஉயர் நீதிமன்றம் விடுத்தது. கடந்த வருடம் ஜூனில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட பேராசிரியர் மந்தவல இந்தப் பட்டதாரிகளுக்கு அநீதியை விளைவிக்கும் முரண்பாடுகளை நீக்குவதற்கு ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அவசியமான மாற்றங்களை தாம் செய்துள்ளதாகவும் அத்துடன் திணைக்களத்தின் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியதாகவும் தெரிவித்தார். “அங்கீகாரத்திற்கு அரசாங்கச் சேவை ஆணைக்குழுவுக்கு திருத்தப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தை நாம் தற்போது அனுப்பியுள்ளோம் என்பதுடன், அது கிடைத்தவுடன் நாம் மீஉயர் நீதிமன்றத்தின் முன்னிலையில் சென்று, இந்தத் தீர்வினை முன்வைப்போம்.”

இரண்டாம்நிலை மட்டத்தில், வெற்றிடங்களை நிரப்புவதற்கு பட்டதாரிகள் ஆட்சேர்க்கப்படுவார்கள். தொடர்பான அதிகாரமுள்ளவர்களிடம் இருந்து பட்டதாரிகளை ஏற்கனவே கேட்டுள்ளதாக பேராசிரியர் மந்தவல தெரிவித்தார். "எனினும், தொல்பொருளியல் ஒரு தனிச் சிறப்பான துறை என்பதை வழங்கி, அதில் பட்டமொன்றைக் கொண்டுள்ளவர்களை நாம் கொண்டிருப்பதற்கு விரும்புகின்றோம் என தெளிவுபடுத்தியுள்ளோம்."

பணிப்பாளர் பதவிநிலைகளுக்கு புறநீங்கலாக, வேறு பதவிநிலைகளில் பதில் கடமை புரிவதற்கு நடைமுறையிலான அலுவலர்களை எடுப்பதற்கான நகர்வுகள் தற்போது இடம்பெறுகின்றன எனவே பேராசிரியர் மந்தவல தெரிவித்தார். உதாரணமாக, சகல 15 பிரதி/உதவி பணிப்பாளர் (பிராந்தியம்) பதவிநிலைகள் வெற்றிடமாக இருக்கின்ற போதிலும், பலதரப்பட்ட மாவட்டங்களில் ஏற்கனவே நிரந்தரமாகத் தொழிலாற்றுகின்ற பிராந்திய அலுவலர்கள் பதில் கடமை புரிகின்றனர். "இருந்த போதிலும், தீர்மானங்களை எடுப்பதற்கான அவர்களின் அதிகாரம் தொடர்பான பிரச்சனைகள் எழும் போது, பெருமளவு கோவைகள் எனது மேசைக்கு வருகின்றன. உதவிப் பணிப்பாளர் ஒருவரினால் பணிப்பாளருக்கு வழமையாக அனுப்பப்படக்கூடிய பெருமளவு விடயங்கள் பணிப்பாளர் நாயகத்திடம் செல்கின்றன என்பதே அத்தகைய பதவிகளின் வெற்றிடங்களின் கருத்தாகும்."

ஆரம்பநிலை மட்டத்தில் தகைமையடைந்த மேசன்மார்களினதும், காவற்காரர்களினதும் பற்றாக்குறையே பிரதான சவாலாகும். திணைக்களத்தின் மேசன்மார்களுக்கு 35 வெற்றிடங்கள் உள்ளன. தொல்பொருளியல் அமைவிடங்களில் இடம்பெறுகின்ற புனருத்தாரணப் பணியின் தொகையை வழங்குகையில், பதவிநிலை முக்கியமானதாகும். இருந்த போதிலும், நாளொன்றுக்கு சுமார் ரூ.3,000 சம்பாதிக்கக்கூடிய தகைமைவாய்ந்த மேசன்மார்கள் மாதாந்த ஊதியமொன்றுக்கு இணங்கி வேண்டியிருப்பதால், அரசாங்கப் பதவிநிலையொன்றுக்கு விண்ணப்பிப்பதற்குத் தயங்குகின்றனர். தொல்பொருளியல் அமைவிடங்களைப் பாதுகாப்பதற்கு மிகவும் அதிகளவு காவற்காரர்கள் அவசியமாகும். தற்போது, காவற்காரர்களின் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகை 150 என்ற போதிலும் கூட 35 பேருக்கான பற்றாக்குறையொன்று உள்ளது. "ஆனால், உண்மையில், தொல்பொருளியல் அமைவிடங்களை நாம் சரிவரக் கவனிக்க வேண்டுமென்றால், அண்ணளவாக 2,000 நிரந்தர காவற்காரர்கள் எமக்கு அவசியமாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, ஊழியர்கோப்பு எண்ணிக்கைகளை அதிகரிப்பதற்கு நாம் வேண்டுகோளொன்றை விடுத்துள்ளோம்" என அவர் வலியுறுத்தினார்.

இருந்த போதிலும், வடக்கிலும், கிழக்கிலும் பௌத்த தொல்பொருளியல் அமைவிடங்களை அழிப்பதற்கு இயக்கமொன்று நடத்தப்படுகின்றது என்ற வலியுறுத்தல்கள் குறித்து பேராசிரியர் மந்தவல கடுமையாக விவாதித்தார். பொலிசாருக்கு கிடைத்துள்ள அறிக்கைகளின் பிரகாரம், கடந்த வருடம் தொல்பொருளியல் அமைவிடங்கள் அழிக்கப்படுகின்ற அல்லது நாசப்படுத்தப்படுகின்ற 290 தருணங்கள் இருந்துள்ளதாக அவர் குறித்துக்கொண்டார். அவற்றில் பெரும்பான்மையிலானவை அனுராதபுரம் (81), குருநாகல் (30) மற்றும் மொனராகலை (28) ஆகியவற்றில் நடந்துள்ளன. மாறாக, மட்டக்களப்பிலிருந்து வெறுமனே மூன்று சம்பவங்கள், கிளிநொச்சியிலிருந்து இரண்டு அத்துடன் முல்லைத்தீவிலிருந்து ஒன்று அறிக்கையிடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் அல்லது மன்னார் ஆகியவற்றிலிருந்து அறிக்கைகள் இல்லை என அவர் தெரிவித்தார்.




# இலங்கையின் சிறைச்சாலைகள் ஊழலின் குகைகள் என அறிக்கை காட்டுகின்றது

**சிறையில் அடைக்கப்பட்டிருந்த வேளையில் கொல்லப்பட்ட பாதாள உலகத் தலைவர் முகநூலைப் பேணினார் !**

களுத்துறையில் பெப்ரவரியில் இரு சிறைச்சாலைப் பஸ்கள் மீது பதுங்கியிருந்து தாக்கப்பட்ட போது, படுபயங்கரமான பாதாள உலக கோஷ்டித் தலைவர் ஒருவர் கொல்லப்பட்ட வேளை, அவர் தனிப்பட்ட முகநூல் கணக்கொன்றைப் பேணி வந்ததுடன், சிறைச்சாலை அலுவலர்களுடன் ஒன்றுசேர இருந்து தம்மை எடுத்த புகைப்படங்களையும் பதிவேற்றியுள்ளதாக உண்மையைக் கண்டறியும் குழுவொன்றின் அறிக்கை தெரிவிக்கின்றது.

இலங்கையின் சிறைச்சாலைகளில் பரவலான ஊழல் இருப்பதாக அறிக்கை அபிப்பிராயப்பட்டதுடன், அதை வேருடன் பிடுங்குவதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் எதையும் செய்யவில்லை என தெரிவித்தது. எதனமடல்லவில் நடைபெற்ற திடீர் தாக்குதல் குறித்து விசாரிப்பதற்காக குழுவொன்றை சிறைச்சாலை சீர்திருத்த அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நியமித்தார். இதில் உதயங்க பத்திரன அல்லது சமயங், அவரது நான்கு சகாக்கள் மற்றும் இரு சிறைச்சாலைக் காவலர்கள் மரணமடைந்தனர்.

அறிக்கை மே மாதத்தில் கையளிக்கப்பட்டதுடன், பிரதியொன்றைப் பெறுவதற்காக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பமொன்றை சண்டே ரைம்ஸ் (Sunday Times) தாக்கல் செய்தது. இது இறுதியாக கடந்த மாதம் கிட்டச் செய்யப்பட்டது. 2011க்கும், 2017க்கும் இடையில் சிறைச்சாலைகளில் கைபற்றப்பட்ட நடமாடும் தொலைபேசிகளினதும்,

போதைவஸ்துகளினதும் அளவையும் அத்துடன் நல்லொழுக்கப்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படாத சிறைச்சாலை அலுவலர்களின் எண்ணிக்கையையும் பற்றி தகவலைக் கோரி சிறைச்சாலைகள் திணைக்களத்திடம் புறம்பானதொரு விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது.

**சிறைச்சாலைகளின் உள்ளே நடமாடும் தொலைபேசிகளின் பயன்பாடு சிறைக்கைதிகளுக்கு நடமாடும் தொலைபேசிகளைக் கிட்டச்செய்தல் சிறைக்கைதிகளுக்கும், அவர்களது சகபாடிகளுக்கும் மற்றும் குடும்பத்தினர்களுக்கும் இடையில் தொடர்பினை வசதிப்படுத்தல் அத்துடன் ezcash மற்றும் வேறு முறைமைகள் ஊடாக நாணய கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளுதல் ஆகியன உட்பட சட்டவிரோத நடவடிக்கைகளைச் சிறைச்சாலை அலுவலர்கள் மேற்கொள்கின்றனர்.**

வெளியில் உள்ள சகபாடிகளுடன் தொடர்பினைப் பேணுவதற்கும் அத்துடன் உள்ளேயிருந்து குற்றங்களைத் திட்டமிடுவதற்கும், ஆரம்பிப்பதற்கும் அத்துடன் கண்காணிப்பதற்கும் பாதாள உலகத்துடனான இணைப்பினைக் கொண்டுள்ள கைதிகளை ஊழல் அனுமதித்தது. சிறைச்சாலையினுள் போதைவஸ்து வர்த்தகமும் நடத்தப்பட்டது. “சிறைச்சாலை அதிகாரத்தினால் எந்தளவு அத்தகைய ஊழல் அலுவலர்கள் தண்டிக்கப்பட்டுள்ளார்கள்” என அறிக்கை கேட்கின்றது.


“எதுவாயினும் பதவிநிலைகளில் இருந்த அந்த பொறுப்பான அலுவலர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்பதுடன், இதைச் செய்வதற்கு அதிகாரமுள்ளவர்கள் தகுதியானவர்கள் அல்லர் என்றால், அவர்களது பதவிநிலைகளிலிருந்து அவர்கள் அகற்றப்படவேண்டும் என்பதுடன், இந்த அபாயத்திற்கு முடிவொன்றைக் காணவேண்டும்” என குழு பரிந்துரைக்கின்றது. “இதில் அமைச்சு பாரிய வகிபங்கொன்றைக் கொண்டுள்ளது.”

**“சிறைச்சாலைச் சூழலில் மோசமான விடயங்களை ஊழலிலான அலுவலர்கள் மேற்கொள்கின்றனர் என்பதற்கு அதிகளவிலான சான்று உள்ளது” என அது மேலும் தெரிவிக்கின்றது. “அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். அத்தகைய அலுவலர்களைக் கையாள்வதற்கு போதியளவு அதிகாரம் சிறைச்சாலை பொலிஸ்[6]க்கு வழங்கப்பட வேண்டும் என்பதுடன், அச்சுறுத்துகின்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அத்துடன் மேற்படி திருத்துகின்ற இல்லத்தின்; நற்பெயரைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு ஆணை வழங்கப்பட வேண்டும்.”**

சிறைச்சாலையின் உள்ளே இருந்து கொலையாளிகளுக்கு பத்திரனவினதும், அவரது சகபாடிகளினதும் நடமாட்டங்கள் பற்றிய தகவல் கசிந்துள்ளதாக களுத்துறை சிறைச்சாலையைச் சேர்ந்த அலுவலர்களும், பொலிசாரும் நம்புவதாக அறிக்கை தெரிவிக்கின்றது. அந்தக் காலை வேளை, வேறுபட்ட நேரங்களில் அதே பாதையில் மூன்று வேறு பஸ்கள் சிறைச்சாலையை விட்டு வெளியேறியுள்ளன.

புறப்படும் திகதி, நேரம், பாதை, அதன் நிலை, மேற்படி பஸ்ஸின் உள்ளே எங்கு, எவ்வாறு சந்தேக நபர்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ளனர் மற்றும் தாக்குதல் இடத்தை இரு பஸ்கள் அடையும் அச்சொட்டான நேரம் போன்ற தகவல்கள் தாக்குதல்தாரிகளுக்கு ஊட்டப்படாமல் திட்டம் வெற்றிகரமாக நிருவகிக்கப்பட்டிருக்கமாட்டாது. ஆனால், அத்தகைய விபரங்கள் எவ்வாறு கசிந்தன என்பது மீதான தகவலைத் திரட்டுவதற்கு தற்போது சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு பொறிமுறை இல்லை.

மேற்படி பஸ்ஸின் பாதையை டபிள் கப் வாகனம் தடுத்ததுடன், இடது புறமிருந்த



*roar.media/*


அணை ஒன்றிலிருந்து தாக்குதல்தாரிகளைக் கொண்ட குழுவொன்று சுட்ட அதேவேளை, வீதியிலிருந்து இன்னொரு குழுவும் சுட்டது. பொலிஸ் அலுவலர்களின் சீருடைகளுக்கு ஒத்த அலங்காரங்களுடன், அவர்கள் அணிவது போன்ற சீருடைகளைச் சகலரும் அணிந்திருந்தனர். சூழ்நிலைக்கு முகங்கொடுப்பதற்கு சிறைச்சாலைக் காவலர்கள் தயாராக இருக்கவில்லை. தாக்குதல்தாரிகள் பகுதியின் புவியியலை ஆய்வு செய்திருந்தனர். அவர்கள் எடுத்திருந்த பாதை அனேகமாக சகல பாரிய வீதிகளையும் தவிர்த்திருந்தது.

களுத்துறைச் சிறைச்சாலையில் பெருமளவு நடமாடும் தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக குழுவுக்கு அலுவலர்கள் தெரிவித்தனர். தனது பிரதான எதிரி அங்கொட லொக்காவை; கொல்வதற்கு பத்திரவினால் தீட்டப்பட்ட திட்டமொன்றை முறியடிப்பதற்கு கைப்பற்றப்பட்ட இந்தச் சாதனங்களில் சில உதவின. முதலில் E வார்ட்டில் பத்திரன வைக்கப்பட்டிருந்தார். ஆனால், இரகசியமான நடவடிக்கையில் அவர் ஈடுபட்டுள்ளார் என்ற சந்தேகத்தில் அவர் A வார்ட்டுக்கு இடமாற்றப்பட்டார்.

சிறைச்சாலையினுள் அவர் நடமாடும் தொலைபேசியைச் சுதந்திரமாகப் பயன்படுத்தினார் என்பதற்குச் சான்று உள்ளது.

சிறைச்சாலையில் பத்திரன இருந்த வேளை, அனேகமாக ஒவ்வொரு நாளும் அவருடன் பேசியதாக அவரின் இரண்டாவது மனைவி குழுவுக்குத் தெரிவித்தார். அவரைப் பார்க்கச் சென்ற நண்பர்களினாலும், உறவினர்களினாலும் அவருக்கு வழங்கப்பட்ட நடமாடும் தொலைபேசிகளை அவர் பயன்படுத்தினார் என இரண்டாவது மனைவி தெரிவித்தார். சிறைச்சாலைக்கு வெளியே உள்ள பெண்களுடன் தொடர்புகொள்ள அவர் ஸ்கைப், வைபர்; போன்றவற்றையும் பயன்படுத்தியதாகச் சொல்லப்படுகின்றது. **“வெறுமனே மறுப்பு தெரிவிக்காமல் சிறைச்சாலைகளின் உள்ளே அச்சொட்டாக என்ன நடக்கின்றது என்பதைக் கண்டறிவதற்கு இது அதிகாரமுள்ளவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்”** என குழு உறுதிப்படுத்துகின்றது.

சிறைச்சாலைகளினுள் தொலைபேசிகளின் சட்டவிரோதப் பயன்பாடு ஒரு தீராத நோயாக வந்துள்ளதாக அது தொடர்கின்றது.



அவற்றைக் கண்டுபிடிப்பதற்கு விசேட அலகொன்றை அமைத்தல் அத்துடன் வெலிக்கடையைச் சுற்றி உருக்குலைத்தல் அலகுகளை நிறுவுதல் போன்ற முயற்சிகள் பயனுறுதியற்றவையாகக் விளங்கியுள்ளன. கைச்சங்கிலிகள் மற்றும் மோதிரங்கள் ஆகியன உட்பட பெருமளவு ஆபரணங்களை பத்திரன அணிந்திருக்கின்றார். **“ஏதேனும் அச்சம் அல்லது சலுகை இன்றி சட்டம் வினைப்படுத்தப்பட வேண்டிய இடமொன்றில் மிதமிஞ்சிய சிறப்புரிமைகளைச் சில சிறைக்கைதிகளும், சந்தேகநபர்களும் அனுபவிக்கின்றனர் என்பது ஆச்சரியமானதாகும்”** என குழு அவதானம் கொண்டது.

ஏழு பேரின் மரணத்திற்கு இட்டுச்சென்ற தெட்டத் தெளிவான பாதுகாப்புக் குறைபாடுகளை அறிக்கை முனைவுபடுத்துகின்றது. **2015 செப்ரெம்பரில்,** கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் கொலை முயற்சியொன்றிலிருந்து பத்திரன உயிர்தப்பியுள்ளார். அவரது உயிருக்கு கடுமையான அச்சுறுத்தலொன்று இருந்துள்ளது. ஆனால், தயார்நிலை இருக்கவில்லை. சகல ஐந்து சந்தேக நபர்களும் ஒரே பஸ்ஸில் இருந்துள்ளனர். அட்டவணைப்படுத்தப்பட்ட போக்குவரத்துக்கு குறைந்தபட்சம் **24 மணித்தியாலங்களுக்கு** முன் பொலிஸ் பாதுகாப்புக்கான வேண்டுகோள் செய்யப்பட வேண்டும் என்ற போதிலும், **18 மணித்தியாலங்களுக்கு** முன்னர் மட்டுமே தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலர்களின் லீவு பதிவேடுகள் பூரணப்படுத்தப்படவில்லை. லீவைப் பெறுவதற்கான காரணங்கள் தெளிவின்றி விளங்கின அல்லது சரிவரப் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. களுத்துறை சிறைச்சாலையிலிருந்து குறைந்தபட்சம் 18 அலுவலர்கள் தாக்குதல் நாளன்று வெளியேயிருந்தனர். **“லீவைப் பெறுவதில் உள்ள பாங்கில் ஏதேனும் மாற்றமும், லீவுக்காக வழங்கப்படும் நேர்மையற்ற காரணங்களும் இருந்தால், அவை ஆய்வு செய்யப்பட வேண்டும்”** என அறிக்கை வலியுறுத்துகின்றது.

“இவ்வகையைக் கொண்ட தாக்குதல்களுக்கு சந்தேக நபர்களின் பாதுகாப்பு மட்டுப்பட்டதல்ல. ஆனால், நீதிமன்றத்திற்கு சகல வழியிலும் ஒரு பிரச்சனையாகும்” என அது தெரிவிக்கின்றது. **“சிறைச்சாலைப் போக்குவரத்துக்கு தோதான திட்டங்கள் இல்லாதிருந்தால் சாதாரண குடிமக்களும், பாடசாலைச் சிறார்களும், அலுவலக ஊழியர்களும், தனியார் துறை ஊழியர்களும், வருமானமொன்றை ஈட்டுவதற்குச் செல்லும் அனைவரும் அத்துடன் நாளாந்தக் கருமங்களின் பின்னர் வீடுகளுக்குத் திரும்புபவர்களும் அபாயத்தில் உள்ளனர்.”**

**“இதுவே அதன் வகையில் முதலாவது சம்பவமாகும்” என அது சுட்டிக்காட்டுகின்றது. “இதுவே இறுதியானது என நாம் மனநிறைவடைய முடியாது. இது ஆரம்பமாக இருக்கலாம். எனவே, இது ஒரு சவால்விடுக்கும் நிகழ்வாகும். பாதாள உலகம் சோதித்துள்ளதுடன், சிறைச்சாலைகள் வீரியமற்றவை, தளர்விலானவை அல்லது மந்தமானவை எனக் கண்டறிந்துள்ளது. சிறைச்சாலைகள் திணைக்களத்தினதும், சிறைச்சாலைகள் தாபனங்களினதும் பலவீனமான முனைகளை அவர்கள் அறிந்துள்ளனர். எனவே, முன்னோக்கிப் பார்ப்பது அமைச்சுக்கு அவசியமாகும்.”**

குழுவுக்கு முன்னாள் நீதவானும், முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமுமான ரூமி மார்ஸ்ூக் தலைமை தாங்கினார். ஏனைய உறுப்பினர்களாக பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலாளர் எஸ்.மெதவேவா மற்றும் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன ஆகியோர் விளங்கினர்.

**சந்துன் ஜயவர்தன**
*The Sunday Times - Sunday, September 10, 2017*



*edition.mv*

# சட்டவிரோத மீன்பிடித்தல்

## தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் உதவியால் சண்டே ரைம்ஸ் அடித்தளத்திற்கே சென்றது.

2012க்கும், 2015க்கும் இடையில் வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்களுக்கு 641 அனுமதிச்சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதுடன், அவற்றில் பெரும்பாலானவை சட்டவிரோத மீன்பிடித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் [European Union (EU)] எச்சரிக்கைகளை மீறி வழங்கப்பட்டுள்ளன. இது இறுதியாக ஏற்றுமதிகள் மீது தடையொன்றை இலங்கைக்கு ஏற்படுத்தியுள்ளதாக தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் **சண்டே ரைம்ஸின்** (Sunday Times) முதலாவது விண்ணப்பத்தில் வெளிப்பட்டுள்ளது.

இறுதியாக 2015இல், இலங்கையின் மீன் ஏற்றுமதிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்ததுடன், இதனால் 75 மில்லியனுக்கு மேற்பட்ட யூரோ (ரூ.12 பில்லியன்) இழப்பினை ஏற்படுத்தியுள்ளது.

பெருமளவு வேண்டுகோள்கள் விடுக்கப்பட்ட போதிலும், இதுவரை மீன்பிடித்தொழில் திணைக்களத்தினால் இந்தத் தகவல் வழங்கப்படவில்லை. மீன்பிடித்தலுக்காக

வெளிநாட்டுக் கப்பல்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களின் விபரங்களை வெளிப்படுத்துவதற்கு முன்னைய அரசாங்கம் மீண்டும் மீண்டும் மறுத்துள்ளது.

இலங்கையில் நீர்நிலைகளின் கரைகளிலிருந்து 12 கடல் மைல்கள் (22.2 கி.மீ.) கொண்ட ஆட்புல கடலுக்கு அப்பாலான வலயமொன்றான பிரத்தியேக பொருளாதார வலயத்தில் [Exclusive Economic Zone (EEZ)] மீன்களுக்கான அனுமதிச்சீட்டுக்கள் வழங்கப்பட்டன.

இந்தோனேஷியா, தாய்வான் மற்றும் மலேஷியா ஆகியவற்றில் பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுக் கப்பல்களுக்கே உரிமங்கள் வழங்கப்பட்டன. 2015இல், இலங்கை மீது தடையைச் சுமத்திய பின்னர், இலங்கையின் துறைமுகங்களைப் பயன்படுத்தி இலங்கையின் கப்பல்களினால் அல்லது வெளிநாட்டுக் கப்பல்களினால் சட்டவிரோத மீன்பிடித்தலை எதிர்ப்பதற்கு நடவடிக்கைகளை அமுலாக்குமாறு இலங்கையை EU வற்புறுத்தியது.

EU நாடுகளுக்கு தூனா இறக்குமதிகள் மீது தடையொன்று விதிக்கப்பட்டதனால், 2015 பெப்ரவரி முதல் வெளிநாட்டுக் கப்பல்களுக்கு துறைமுக வசதியை இலங்கை மறுத்ததாக மீன்பிடித்தொழில் திணைக்களம் கூறியது. 2012இல், வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்களுக்கு 257 அதைத் தொடர்ந்து 2013இல், 256 என ஆகக்கூடுதலான தொகையைக் கொண்ட உரிமங்கள் வழங்கப்பட்டன. 2014இல், திணைக்களம் 159 உரிமங்களை வழங்கியதுடன், 2015இல், திட்டம் இடைநிறுத்தப்படும் வரை 9 உரிமங்களை வழங்கியது.

இலங்கையில் சட்டவிரோத, அறிக்கையிடப்படாத அத்துடன் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தலை நிறுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தினால் குறித்துரைக்கப்பட்ட பரிந்துரைகளை அமுலாக்குவதற்கு முயன்றதுடன், இறுதியாக EU நாடுகளுக்கு மீன் ஏற்றுமதிகள் மீதான தடை கடந்த வருடம் ஏப்ரலில் நிறுத்தப்பட்டது.

விசேட வலயத்தில் மட்டுமே மீன்பிடிப்பதை மேற்கொள்வதற்கு வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்கள் அனுமதிக்கப்பட்ட போதிலும், தமது மீன்பிடித்தல் செயற்பாடுகளைக் குழப்பி இலங்கையின் நீர்நிலைகளில் மீன்பிடித்தலிலும் அவை ஈடுபட்டுள்ளதாக உள்ளூர் மீனவர்கள் கிரமமாக முறையிட்டனர்.

வெளிநாட்டுக் கப்பல்களுக்கு உரிமங்களை வழங்குவதில் சம்பந்தப்பட்டிருந்த அப்போதைய மீன்பிடித்தொழில் அமைச்சர் ராஜித சேனரத்னவை உள்ளூர் மீனவர்கள் குற்றஞ்சாட்டினர்.

**எஸ்.ரூபதீசன்**

*The Sunday Times - February 26, 2017*



*www.tamilguardian.com*

# ஒரு பில்லியன் ரூபா பெறுமதியான தங்க நகைகள்

## விரைவில் உரிமையாளர்களுக்கு மீள வழங்கப்படும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் [Liberation Tigers of Tamil Eelam (LTTE)] பாதுகாவலிலிருந்து இராணுவத்தினால் பறிமுதல் செய்யப்பட்டதும், மோதலின் இறுதிக் கட்டங்களின் போது கைவிடப்பட்ட வீடுகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதுமான ஏறத்தாழ ஒரு பில்லியன் ரூபா பெறுமதியிலான தங்கத்தையும் மற்றும் வேறு பெறுமதிமிக்க ஆபரணங்களையும் மீளளிக்கும் நடைமுறையை விரைவுபடுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளதாக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். “இது குறித்து பார்ப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு அதன் பரிந்துரைகளை ஜனாதிபதிக்கு அண்மையில் அனுப்பியிருந்தது. இது தொடர்பில் எடுக்கப்படுவதற்கான அடுத்த நடவடிக்கைகளை நிர்ணயிப்பதற்காக

அடுத்த வாரத்திற்கு சகல பங்குடமையாளர்களுடனான உயர் மட்டக் கூட்டமொன்று வரையறுக்கப்பட்டுள்ளது" என மேலதிக பாதுகாப்புச் செயலாளர் ஆர்.எம்.எஸ். சரத் குமார **சண்டே ரைம்ஸ்ஃக்கு** (Sunday Times) கூறினார்.

**சண்டே ரைம்ஸினால்** தாக்கல் செய்யப்பட்ட தகவலுக்கான உரிமை விண்ணப்பத்திற்கான பதிலிறுப்பொன்றில், அதன் பாதுகாவலில் **37.7 கிலோ கிராம்களை (37,708.472 கிராம்கள்)** அது கொண்டிருப்பதாக இலங்கை மத்திய வங்கி [Central Bank of Sri Lanka (CBSL)] வெளிப்படுத்தியது. இது இராணுவத்தில் இருந்து பெறப்பட்டிருந்தது. **7 செப்ரெம்பர் 2010க்கும், 26 ஜனவரி 2012க்கும்** இடையிலான காலத்தின் போது, **28 தருணங்களில்** தங்க ஆபரணங்களைக் கொண்டுள்ளதாக சொல்லப்பட்ட பொதிகளை இராணுவத்திடமிருந்து ஏற்றுக்கொண்டதாக மத்திய வங்கி கூறியது. இப் பொருட்களின் வீதிப் பெறுமதி மொத்தமாக ஒரு பில்லியன் ரூபா ஆகும். **"CBSLக்கு வழங்கப்படுவதற்கு முன்னதாக சகல பொருட்களும் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையினால் நிறுக்கப்பட்டு, மதிப்பிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு தருணத்திலும், இராணுவ ஆளணியினரினதும் மற்றும் CBSLஇல் உள்ளகக் கணக்காய்வாளர்களினதும் முன்னிலையில் ஆபரணங்களின் ஒவ்வொரு பொதியையும் CBSL நிறுத்தத்துடன், தங்கத்தைக் கொண்டுள்ள இந்தப் பொதிகளின் பற்றுவரவின் சாட்சியொன்றாக இராணுவத்திற்கு கடிதமொன்றையும் வழங்கியது"** என அதன் தகவலுக்கான உரிமைப் பதிலிறுப்பில் மத்திய வங்கி கூறியது.

கடந்த வருடம் **6003.132 கிராம்கள்** நிறையிலான தங்கப் பொருட்களைக் கொண்டுள்ளதாகச் சொல்லப்பட்ட இன்னொரு பொதியை இராணுவம் கையளித்ததாகவும், அவற்றை CBSLக்கு கையளிப்பதற்கு முன்னதாக தேசிய இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகார சபையினால் அந்தப் பொருட்கள் நிறுக்கப்படவோ அல்லது மதிப்பிடப்படவோ இல்லை எனவும் CBSL ஏற்றுக்கொண்டது. **"அவற்றை ஏற்றுக்கொள்வதற்கு முன், CBSLஇனால் இந்தப் பொதிகள் சோதிக்கப்படவில்லை. தங்கத்தை கொண்டுள்ளதாகச் சொல்லப்பட்ட இந்தப் பொதிகள் தொடர்ந்தும் CBSL பாதுகாவலில் உள்ளன."**

அதன் பாதுகாவலில் குறிப்பிடத்தக்க தொகையைக் கொண்ட தங்கத்தையும், பெறுமதிமிக்க ஆபரணங்களையும் இராணுவம் இன்னுமே கொண்டுள்ளதாக மேலதிகச் செயலாளர் குமார தெரிவித்தார்.

இதனிடையே, சில ஆபரணங்கள் வங்கிக்குச் சொந்தமானவை என பாதுகாப்பு அமைச்சுக்கு மக்கள் வங்கி அறிவித்துள்ளது. **2014இல்,** அவர்களது சட்டபூர்வ உரித்துரிமையைக் கவனமாக ஆய்வு செய்த பின்னர், உரிமையாளர்களுக்கு தங்கத்தையும், வேறு பெறுமதிமிக்கவைகளையும் மீளளிப்பதற்கு அது நடவடிக்கைகளை எடுத்ததாக முன்னைய அரசாங்கம் வலியுறுத்தியது. மோதல் காலத்தின் போது LTTEஇனால் நிருவகிக்கப்பட்ட வங்கிகளுக்கு அடகுவைத்த தங்க ஆபரணங்களின் சட்டரீதியான உரிமையாளர்களாக வடக்கில் இருந்து **2,377** பேரை அரசாங்கம் அடையாளங்கண்டுள்ளது. அவர்களின் மத்தியில் 25 பேருக்கு மட்டும் அலரி மாளிகையில் நடைபெற்ற வைபவமொன்றில் அவர்களது தங்கம் மீளளிக்கப்பட்டது. சட்டரீதியான உரிமையாளர்களாக வலியுறுத்துபவர்களுக்கு தங்கத்தை மீளளிப்பதற்கு மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தசாப்தங்களுக்கு LTTEஇனால் தக்கவைக்கப்பட்டிருந்த பகுதிகளில் வாழ்ந்த குடியிருப்பாளர்கள் "தமிழீழ வைப்பகத்தில்" அல்லது "தமிழீழ வங்கியில்" அடகு வைத்த தமது ஆபரணங்களின் தமது சட்டரீதியான உரித்துரிமையை நிரூபிப்பதற்கு தாம் ஆவணங்களைக் கொண்டிருப்பதாக வலியுறுத்துகின்றனர்.

**எஸ்.ரூபதீசன்**

*The Sunday Times - April 16, 2017*




*www.facebook.com*

## தனது பொலன்னறுவைக்கு

# ரூபா.25 பில்லியனுக்கு மேற்பட்டதை சிறிசேன உறிஞ்சினார்.

8 ஜனவரி 2015 முதல் 16 நொவம்பர் 2019 வரை, ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவி வகித்த காலத்தின் போது, வெளிநாட்டு நிதிப்படுத்தலிலான கருத்திட்டங்களுக்குப் புறம்பாக, பலதரப்பட்ட அரசாங்க முகவராண்மைகள் ஊடாக நேரடியான அரசாங்கச் செலவினமாக தனது பொலன்னறுவை மாவட்டத்தில் பலதரப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்களுக்காக ரூ.25.293 பில்லியனைப் பயன்படுத்தினார்.

தகவலுக்கான உரிமை விசாரணையொன்றின் ஊடாக **சண்டே ரைம்ஸ்** (Sunday Times) இந்தத் தகவலைப் பெற்றது.

ஜனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம், 2015 ஜனவரியில் முன்னைய ஜனாதிபதி பதவியேற்ற உடனேயே அமைச்சரவை தீர்மானமொன்றைத் தொடர்ந்து **"பிபிதெமு பொலன்னறுவ; (பொலன்னறுவையை எழுச்சியுறச் செய்வோம்) அபிவிருத்திச் செயற்றிட்டம் என அழைக்கப்பட்ட ஐந்து வருட நீண்ட பேராவலுடைய செயற்றிட்டம் துரிதமாக அமுலாக்கப்பட்டது.**

அவ்வப்பொழுதிலான கூட்டங்களை நடத்துதல், தனிப்பட்ட கடிதங்களை எழுதுதல் மற்றும் நடந்துகொண்டிருக்கும் கருத்திட்டங்களின் நிலை மீது சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளை வேண்டிக்கொள்ளுதல் ஆகியனவற்றின் மூலம் அர்ப்பணிக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் முழு அமுலாக்கல் நடைமுறையை பொலன்னறுவை



*முன்னாள் ஜனாதிபதி திரு மைத்ரீபால சிறிசேன பொலொன்னறுவையில் அபிவிருத்திக் கருத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.*

www.dailynews.lk

மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி சிறிசேன மேற்பார்வை செய்தார். இது 2015 முதல் 2019 வரை ஜனாதிபதி செயலகத்தின் செயல்நிறைவேற்ற அறிக்கைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் வெளிப்பட்டுள்ளது. தகவலுக்கான உரிமை விசாரணைக்கான பதிலிறுப்பின் அங்கமாக அறிக்கைகள் அனுப்பப்பட்டன.

**2015இல், 152 கருத்திட்டங்கள் மீது ரூ. 4 பில்லியன் செலவழிக்கப்பட்டது. பாடசாலை தொடர்பான அபிவிருத்திப் பணி, பாடசாலைகளுக்கு சுகாதார வசதிகள், பிரிவேனாக்களினதும், வைத்தியசாலைகளினதும் அபிவிருத்தி மற்றும் வனவாழ்வினதும், வனங்களினதும் மற்றும் வீதிகளினதும் பேணல் என கருத்திட்டங்கள் வேறுபட்டிருந்தன. 2016இல், அங்கீகரிக்கப்பட்ட 908 கருத்திட்டங்களில், அவற்றின் 618 முடிக்கப்பட்டிருந்த அதேவேளை, அங்கீகரிக்கப்பட்ட 2,338 கருத்திட்டங்களை முடிப்பதற்கு ரூ.5.63 பில்லியன் ஒதுக்கப்பட்டதுடன், இவற்றில் 2017இல் 1,781 கருத்திட்டங்கள் முழுமையாக அமுல்படுத்தப்பட்டன.**

2018இலும், 2019இலும் ரூ.20 பில்லியன் கொண்ட ஒதுக்கப்பட்ட நிதியத்தில், ஜனாதிபதி செயலகத்தின் நோக்கெல்லையின் கீழ் அமைச்சுக்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியன ஊடாக 6,765 கருத்திட்டங்களை மேற்கொள்வதற்காக ரூ.15.663 பில்லியன் செலவழிக்கப்பட்டது.

தகவலுக்கான உரிமை விசாரணைக்கு செயலகத்தினால் அனுப்பப்பட்ட பதிலிறுப்பின் பிரகாரம், **முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவின் அண்ணளவான ஐந்து வருட ஆட்சியின் போது அவரது உத்தியோகபூர்வ மற்றும் உத்தியாகபூர்வமற்ற விஜயங்கள் மீது செலவழிக்கப்பட்ட நிதியங்களின் விபரங்கள் ஜனாதிபதி செயலகத்தில் கிட்டவில்லை. "அதிமேன்மை தங்கிய ஜனாதிபதியின் வெளிநாட்டு விஜயங்களுக்கான ஒரு புறம்பான பதிவேடு இந்த அதிகாரத்தினால் பராமரிக்கப்படவில்லை"** என பதிலிறுப்பு தெரிவித்த அதேவேளை, தொடர்பான தகவலை நிறுத்தி வைப்பது என ஜனாதிபதி செயலகம் தீர்மானித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதியினால் பொறுப்பேற்கப்பட்ட இந்த உத்தியோகபூர்வ விஜயங்கள் குறித்து ஏதாவது தீர்க்கப்படாத கொடுப்பனவுகள் உள்ளனவா என்ற இன்னொரு விசாரணைக்கு பதிலிறுக்கையில், தீர்க்கப்படாத கொடுப்பனவு இல்லை அல்லது பொது திறைசேரியினால் அல்லது ஏதேனும் வேறு நிறுவனத்தினால் அத்தகைய தீர்க்கப்படாத கொடுப்பனவுகள் மீது அறிவிக்கப்படவில்லை என ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

**எஸ்.ரூபதீசன்**




## 2012 கொழும்பு கச்சேரி தீ :

# பொலிஸ் புலனாய்வாளர்கள் இன்னும் தணல்களிலிருந்து சாம்பலை சலித்தெடுக்கிறார்கள்

மதிப்புமிக்க ஆவணங்களின் இழப்பினையும், ரூ. 92 மில்லியனுக்கும் அதிகமான பொருள் இழப்புகளையும் ஏற்படுத்தியுள்ள டாம் வீதியில் உள்ள கொழும்பு கச்சேரியை சாம்பலாக்கிய 2012ஆம் ஆண்டு தீ விபத்து குறித்த பொலிஸ் விசாரணைகள், தீ சம்பவம் விபத்தினால் நடந்ததா அல்லது வேண்டுமென்றே நடந்ததா என புலனாய்வாளர்கள் இன்னுமே கண்டுபிடிக்காமல் தொடர்ந்துமே முடிவுறாமல் உள்ளன.

மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் அலுவலகத்தினால் கொழும்பு மாவட்டச் செயலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட சமீபத்திய அறிக்கையின் பிரகாரம், தீ பரவிய வேகத்தை நோக்குகையில், மேல் மட்டமொன்றின் மரப்பலகையிலான தளம் மீது தீயை உயர்ந்தளவில் எரிபற்றக்கூடிய பொருளொன்று விளைவித்துள்ளதாகவும், அது விரைவிலேயே கட்டிடம் முழுவதும் பரவியுள்ளதாகவும் அரசாங்கப் பகுப்பாய்வு அறிக்கை குறிப்பிட்டுள்ளது. எனினும், அறிக்கையொன்றைச் சமர்ப்பித்துள்ள இலங்கை மின்சார சபையின் பிரதம பொறியியலாளர் (கொழும்பு - மேற்கு) மின்சார குறுகிய-சுற்றொன்றினால் தீ விளைந்துள்ளதாக தன்னால் முடிந்த முடிவாக கூற முடியாதுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

அரசாங்க நிருவாக அமைச்சுக்கு தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பமொன்றை **சண்டே ரைம்ஸ்** (Sunday Times) முதலில் சமர்ப்பித்த போது, புலனாய்வின் குறைபாட்டுத்தன்மை வெளிப்படுத்தப்பட்டது. கச்சேரி தீ தொடர்பான அறிக்கை இல்லை என அமைச்சு தெரிவித்தது. தீயின் காரணத்தை நோக்குவதற்கு நியமிக்கப்பட்ட 3 உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றினாலான 2 பக்கத்திலான அறிக்கையொன்றைக் கொழும்பு மாவட்டச் செயலகத்திற்கு தகவலுக்கான உரிமை விண்ணப்பமொன்று விளைவித்ததுடன், இது ஒரு பக்க பொலிஸ் அறிக்கையுடன் சேர்த்து **சண்டே ரைம்ஸ்க்கு** வழங்கப்பட்டது. இந்த தகவலைத் தவிர, புலனாய்வாளர்களுக்கும், கொழும்பு மாவட்டச் செயலகத்திற்கும், அரசாங்க நிருவாக அமைச்சுக்கும் இடையிலான பாரிய எண்ணிக்கையிலான கடிதத் தொடர்புகள் கிடைத்தன.

சம்பவத்திற்கு ஒன்றில் நேரடியிலான சாட்சிகளோ அல்லது யாரேனும் சந்தேக நபர்களோ இல்லை என 2017 டிசம்பரில் சமர்ப்பிக்கப்பட்ட பொலிஸ் அறிக்கை தெரிவித்திருந்ததுடன், கொழும்பு மாவட்டச் செயலக அதிகாரிகளுடனான விரிவான கலந்துரையாடல்கள் கூட தீ தொடர்பில் ஏதேனும் பயனுள்ள தகவலையும் விளைவித்திருக்கவில்லை. தீயின் உண்மையான காரணத்தை உறுதிப்படுத்துவதற்கு மேலதிக புலன்விசாரணைகள் அவசியம் என அது தெரிவித்திருந்தது.

தீயில் 153 பொருட்கள் அழிக்கப்பட்டன என்றும், அவற்றின் பெறுமதி ரூ.16,606,687.93 என்றும், அதேவேளை கட்டிடத்திற்கான இழப்பு ரூ.76,000,000இல் மதிப்பிடப்பட்டுள்ளது என்றும், மொத்த இழப்பு ரூ.92,606,687.93இல் மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் 3-உறுப்பினர்களைக் கொண்ட மதிப்பீட்டுக் குழாமொன்று தெரிவித்ததாக 3 உறுப்பினர் குழு தனது அறிக்கையில் குறிப்பிடுகின்றது.

தீ சம்பவத்திற்கு யாரேனும் கொழும்பு மாவட்டச் செயலக அதிகாரிகள் பொறுப்பானவர்களா அல்லது அதற்கு வெளிப்புற காரணிகள் பங்களித்துள்ளனவா என்று முடிவெடுப்பது சாத்தியமில்லை என குழு தெரிவித்தது. தீயினால் விளைந்துள்ள இழப்பினை அரசாங்கம் உள்வாங்க வேண்டும் என்றும், தீயிட்டமைக்கு யாரேனும் ஆள் அல்லது ஆட்கள் பொறுப்பு என்பதைப் பொலிஸ் புலனாய்வார்கள் கண்டறிந்தால் அவர்களுக்கு எதிராகச் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு மேலும் தெரிவித்தது.

**சாந்தானி கிரிந்த**



# 2012 நவம்பரில் வெலிக்கடைச் சிறை படுகொலை பற்றிய அறிக்கை

சிறைச்சாலை வளாகங்கள் பரிசீலனை செய்யப்படும் போது பின்பற்றப்படுவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள சகல நடைமுறைகளையும் மீறி, 2012 நொவம்பரில் வெலிக்கடைச் சிறையின் இரண்டு வார்ட்;களில் தேடுதல் நடத்துவதற்காக ஏறத்தாழ 798 ஆயுதபாணிகளான விசேட அதிரடிப் படை [Special Task Force (STF)] ஆளணியினரை கடமையில் ஈடுபடுத்திய போது, அது கலவரத்திற்கு இட்டுச்சென்றது, இதன் விளைவாக, 27 கைதிகள் மரணமடைந்தனர், இன்னும் பலருக்கு காயங்களை விளைவித்தது என உண்மையைக் கண்டறியும் குழுவொன்றின் அறிக்கை தெரிவிக்கின்றது.

## வெலிக்கடை சிறை வளாகம்

9.11.2012 அன்று வெலிக்கடை சிறைச்சாலையில் நடந்த சம்பவம் தொடர்பான உண்மைகளை ஆராய முன்னாள் நீதித்துறை அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவினால் 3 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. அதன் அறிக்கை இந்த ஆண்டு பெப்ரவரியில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் பாராளுமன்றத்தில்

தாக்கல் செய்யப்பட்டது. சண்டே ரைம்ஸ் (Sunday Times) இந்த மாதத் தொடக்கத்தில் பாராளுமன்றத்தில் இருந்து ஒரு பிரதியைப் பெற தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்தது.

**சம்பவத்தில் கொல்லப்பட்ட ஆறு கைதிகளின் விடயத்தில், அவர்களது உடல்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் T-56 தன்னியக்க ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன, இது அவர்கள் ஆயுதங்களைப் பயன்படுத்தினார்கள் என்பதை முன்னீட்சிப்படுத்துகின்றது, அவ்வாறாக அவர்கள் அழித்தொழிக்கப்பட்டதை நியாயப்படுத்துகின்றதுமான நோக்கத்துடன் செய்யப்பட்டுள்ளது என்ற குழுவின் குழப்பமான முடிவுகளின் மத்தியில் வெளிப்பட்டது. சான்றாக குழு முன்வைத்த சம்பவத்தின் பின்னர் உடனடியாகவே சிறைச்சாலை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ புகைப்படப்பிடிப்பாளரினால் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் ஆயுதங்கள் காணப்படவில்லை. ஆனால், ஒரு சில மணித்தியாலங்களின் பின்னர், மரண விசாரணைக்காக சம்பவ இடத்திற்கு நீதவான் வருகைதந்தபோது உடல்களுக்கு அருகில் T-56 ஆயுதங்கள் தெளிவாகத் தெரிந்தன.**

அத்துடன் நீதித்துறை மருத்துவ அதிகாரியின் சாட்சியத்தின்படி, மூன்று கைதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் கொல்லப்பட்டுள்ளார்கள் எனக் குழு முடிவு செய்தது.

**இக்குழுவின் முன்னிலையில் சாட்சியம் அளித்தவர்கள் மத்தியில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அத்துடன் சிரேஷ்ட சிறைச்சாலை மற்றும் பொலிஸ் திணைக்கள அதிகாரிகள் விளங்குகின்றனர். ஆனால், தேடுதலை நடத்துவதற்கு STF ஆளணியினரைப் பயன்படுத்துவதற்கு யார் அதிகாரமளித்தார்கள் என்ற கேள்வி எழுந்த போது, அவர்கள் ஒன்றில் உயர் சிரேஷ்ட அதிகாரிகளின் பணிப்புரையில் செயல்பட்டதாகத் தெரிவித்தனர் அல்லது ஏதேனும் அத்தகைய தீர்மானம் குறித்து தமக்குத் தெரியவில்லை என வலியுறுத்தினர்.**

“வஞ்சகப்புகழ்ச்சியாக, இந்தத் தருணத்தில் STFஇன் பயன்பாடு தொடர்பிலான பொறுப்பு எந்தவொருவரினதும் பொறுப்பு அல்ல எனக் கண்டறியப்பட்டது” என அதன் அறிக்கையில் குழு தெரிவித்தது.

ஒன்றில் தேடுதல் நடவடிக்கை அல்லது STF ஆளணியினரைப் பயன்படுத்தியமை ஆகியன பற்றிய அறிவை மறுத்துரைத்த சாட்சிகளின் மத்தியில் திரு.ராஜபக்ஷ விளங்கியதுடன், சிறைச்சாலை யொன்றினுள் ஏதேனும் ஆயுதங்களையும், தளபாடங்களையும் கொண்டு செல்வதற்கு சட்டபூர்வமாக அனுமதிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டார். தேடுதலொன்றை நடத்துவதற்கு ஆயுதங்களுடன் STF அல்லது பொலிஸ் அதிகாரிகள் பிரவேசிப்பதைத் தடுப்பது சிறைச்சாலைத் திணைக்கள அதிகாரிகளின் பொறுப்பாகும் எனவும் குழுவுக்கு அவர் தெரிவித்தார்.

எனினும், குழுவின் முன்னிலையில் முன்னிலையாகிய வேறு அதிகாரிகளின் சாட்சியம் முன்னாள் செயலாளரின் சாட்சியத்துடன் முரண்பட்டிருந்தது.

**9.11.2012 அன்று நடத்தப்பட்ட தேடுதல் STF பொலிஸ்மா அதிபர் தனது சொந்தக் உத்தரவு மீது செய்யப்படவில்லை, ஆனால் சிறைச்சாலைத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுடனான ஒருதொடரைக் கொண்ட கலந்துரையாடல்களின் பின்னர்**



/srilankabrief.org

**பிரதிப் பொலிஸ் மா அதிபர் (DIG) நிமால் வாகிஷ்டவின் பதவிக் காலத்தின் போது 2012இன் பணிப்பாளர் - அரச புலனாய்வு சேவை (SIS) மற்றும் DIG பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு (TID)] ஒருங்கிணைப்புடன் அப்போதைய பாதுகாப்புச் செயலாளரின் பணிப்புரையின் மீது நடத்தப்பட்டதாக புலனாய்வுப் படைத் தலைவரான பிரதிப் பொலிஸ் மா அதிபர் (DIG-இளைப்பாறிய) சந்திரசிறி ரணவன தனது சாட்சியத்தில் குழுவுக்குத் தெரிவித்தார்.**

2013இன் ஆரம்பம் வரை, பாதுகாப்பு அமைச்சின் கீழ் STF செயற்பட்டது என்றும், அதன் பின்னர் பொலிஸ் மா அதிபரின் நோக்கெல்லையின் கீழ் அது வந்தது என்றும் DIG ரணவன குறிப்பிட்டார். எனினும், தேடுதல் நடவடிக்கை இடம்பெற்ற தினத்தன்று, அது இன்னுமே பாதுகாப்பு அமைச்சின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்தது.

17.07.2012 அன்று பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற கூட்டமொன்றில், 798 STF ஆளணியினரைப் பயன்படுத்தி தேடுதலை நடத்துவதற்கான அவசியம் மேற்கொள்ளப்பட்டது. இதில் திரு.ராஜபக்ஷ வும் சமூகமளித்திருந்தார் என்ற STF படைத் தலைவரின் நிலையை சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பி.டபிள்யு. கொடிபிலியின் சாட்சியமும் ஆதரவளித்தது.

கைதிகள், சிறைச்சாலைகள், பொலிஸ் மற்றும் STF ஆகியவற்றின் அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சு மற்றும் சிறைச்சாலைகள் சீர்திருத்தங்கள் அமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகள் மற்றும் நீதித்துறை மருத்துவ அதிகாரி அத்துடன் கைரேகை நிபுணர்கள் ஆகியோர் உட்பட அண்ணளவாக 90 சாட்சிகளைக் குழு விசாரித்ததுடன், அதன் அறிக்கையில் பெருமளவு

அவதானிப்புக்களையும், பரிந்துரைகளையும் அது செய்தது.

கொழும்பு ரிமாண்ட், மகஸின் மற்றும் வெலிக்கடை ஆகிய சிறைச்சாலைகளை அடக்கி, இணைந்த தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொளவதற்கு 300 STF ஆளணியினரின் உதவியைக் கோரி, சம்பவத்திற்கு அண்ணளவாக மூன்று மாதங்களுக்கு முன் பொலிஸ் மா அதிபர் என். கே.இலங்கக்கோனுக்கு திரு.கொடிபிலியினால் செய்யப்பட்ட வேண்டுகோளொன்றைக் கண்டறிந்ததாக குழு தெரிவித்தது. எனினும், வேண்டுகோளுக்கு சாதகமற்ற முறையில் பொலிஸ் மா அதிபர் பதிலிறுத்ததுடன், சிறைச்சாலை வசதிகளின் உள்ளே தோதான செயல்திட்டமொன்றுடன் “தேடுதல் நடவடிக்கைகள்” நடத்தப்பட வேண்டும் என்றும், STF மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் ஆகியோரினால் ஒழுங்குபடுத்தப்பட்ட தன்மையொன்றில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

எனினும், உத்தியோகபூர்வ குறித்தொதுக்குதல் ஒன்றின் மீது வெளிநாட்டில் பொலிஸ் மா அதிபர் இருந்தபோது, 9.11.2012 அன்று நடைபெற்ற தேடுதல் நடவடிக்கையில், வெலிக்கடை சிறைச்சாலையில் அதுவும் கூட L வார்ட் மற்றும் சப்பள் கட்டிடம் ஆகிய இரு வாட்டுகளில் மட்டும் தேடுதல் நடத்துவதற்கு STF ஆளணியினரின் எண்ணிக்கை 798க்கு அதிகரித்துள்ளது. சிறைச்சாலை வசதியொன்றின் உள்ளே 798 STF ஆயுதபாணிகளான ஆளணியினரின் பிரசன்னமானது கைதிகள் மத்தியில் கொந்தளிப்பிலான சூழ்நிலையொன்றின் உருவாக்கத்திற்கு வழிவகுக்கும் என்றும், சிவிலியன் நிறுவனமொன்றில் தேடுதலொன்றை நடத்துவதற்கு துணை இராணுவ அலகொன்றைப் பயன்படுத்துவது ஒரு “திகைக்க வைக்கின்ற தீர்மானம்” என்றும், அதே வேளை ஆயுதங்களுடன் வெலிக்கடைச் சிறைச்சாலையினுள் அவர்கள் பிரவேசித்தமையானது சட்டத்தின் முழுமையான மீறல் என்றும் குழு கருதியது.

சிறைச்சாலையின் பூட்டு போடப்பட்டிருந்த இரு கூடங்களினுள் கண்ணீர் புகைக்குண்டை ஏவியதை குழு கண்டித்ததுடன், இது கைதிகளின் ஆத்திரமூட்டலுக்குப் பிரதான காரணமாகவும் அடையாளங்காணப்பட்டது. “கண்ணீர் புகைக்குண்டின் புகையின் தாக்கங்களை எதிர்த்து சமாளிப்பதற்கு மூடப்பட்ட பகுதியொன்றிலிருந்து கைதிகள் நகர முடியாததினால் STFஇன் இந்த நடவடிக்கையானது மனிதாபிமானமற்ற நடத்தையின் நடவடிக்கையொன்றாக வகைப்படுத்தப்பட முடியும். வெலிக்கடை சிறைச்சாலையினுள் கெடுபிடி சூழ்நிலையானது STF உருவாக்கமொன்றே என்பதுடன், கைதிகளின் அல்ல என ஆணைக்குழு முன்னிலையில் வெளிப்பட்ட சாட்சியத்திலிருந்து வெளிப்பட்டது.”

மேல் நீதிமன்ற நீதிபதி விமால் நம்புவாசம் (தலைவர்), இளைப்பாறிய DIG அசோகா விஜேதிலக்க மற்றும் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் இளைப்பாறிய மேலதிகச் செயலாளர் (SLAS) எஸ்.கே.லியனகே ஆகியோரைக் குழு உள்ளடக்கியிருந்தது.

**சாந்தனி கிரிந்த**



*peoplesworld.org*

# ஊடகவியலாளர்கள் மீதான புலனாய்வு அறிக்கைகளை இலங்கை இராணுவம் சேகரிக்கின்றது

# RTI மேன்முறையீடு வெளிப்படுத்துகின்றது

தமிழ் ஊடகவியலாளர் மீதான புலனாய்வு அறிக்கைகளை அது சேகரிப்பதாக இலங்கை தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவினாலான விசாரணைகளுக்கு பதிலிறுக்கும் போது இலங்கை இராணுவம் மறைமுகமாக ஏற்றுக்கொண்டது. இராணுவத்தினால் நிருவகிக்கப்படும் வியாபாரத்தினதும் அத்துடன் 2007இல் ஹெயிட்டி பிரஜைகள் மீதான பாலியல் துஷ்பிரயோகத்தில் குற்றமிழைத்தவர்களாக காணப்பட்ட ஹெயிட்டிக்கு அனுப்பப்பட்ட இலங்கையின் அமைதிப் படைகள் குறித்த சார்த்துரைகளினதும் மீது தகவலைப் பெறுவதற்காக 28.09.2017 அன்று தகவலுக்கான உரிமை வேண்டுகோளொன்றை 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **உதயம்** அச்சு ஊடகவியலாளரான ஜி.திலீப் அமுதன் செய்திருந்தார்.

கோரப்பட்ட தகவலை வழங்குவதற்குப் பதிலாக, தொடர்பான அதிகாரமுள்ள ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்ட அவரது தேசிய ஆளடையாள அட்டையைச்

சமா்ப்பிக்குமாறு திலீப் அமுதன் கேட்கப்பட்டார். ஊடகவியலாளர் திலீப் அமுதன் மீதான இராணுவப் புலனாய்வு அறிக்கையொன்றை கைவசம் கொண்டிருப்பதாகவும், அதன் **விளைவொன்றாக தகவலை விடுவிப்பதற்கு தயங்குவதாகவும்** அது மேலும் தெரிவித்திருந்தது.

**"அடிப்படையில், இலங்கைப் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு சட்டபூர்வமானதும், சட்டபூர்வ நடைமுறையானதுமான தகவலுக்கான உரிமை வேண்டுகோள்களை பிரஜைகள் முனைவுபடுத்தும் அடிப்படையின் மீது வெறுமனே அவர்கள் தொடர்பில் இராணுவப் புலனாய்வு அறிக்கையைப் பெறுவதற்கு ஏதேனும் அதிகாரம் ஆரம்பித்தால், அது சட்டத்தின் அடிப்படையிலான நோக்கங்கள் எதிர்மறைப்படுத்தப்படும் என கடுமையாக வலியுறுத்தப்பட வேண்டும்"** என அதன் கட்டளையில் தகவலுக்கான உரிமை ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

தகவலுக்கான உரிமை ஆணைக்குழு மேன்முறையீடு - திலீப் அமுதன் எதிர் பாதுகாப்பு அமைச்சு - பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகள்

**மேன்முறையீட்டாளர் தொடர்பில் இராணுவப் புலனாய்வு அறிக்கையொன்றை அது கொண்டிருப்பதாகவும், இதன் விளைவொன்றாக தகவலை விடுவிப்பதற்கு தயங்குவதாகவும் அரசாங்க அதிகாரம் [Public Authority (SLA)] முன்வைத்தது.**

**வெறுமனே தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழும், அதன் பிரகாரமும் தகவல் வேண்டுகோள்களை முனைவுபடுத்தியதன் காரணமாக தன் மீது பின்னணியொன்றைச் சரிபார்ப்பதில் அரசாங்க அதிகாரம் ஈடுபட்டுள்ளது, அவ்வாறாக தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் நோக்கத்தினையும் தோற்கடிக்கின்றது என மேன்முறையீட்டாளர் பதிலிறுப்பாகக் குறிப்பிட்டார். அதன் கையகப்படுத்த இராணுவப் புலனாய்வு அறிக்கையானது தகவலுக்கான உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்துவதை மேன்முறையீட்டாளர் பயன்படுத்துவதற்கு முற்பட்டதாகும் என அரசாங்க அதிகாரம் எதிராகப் பதிலிறுத்தது.**

மேன்முறையீட்டாளர் ஒருவரின் அல்லது வேண்டப்பட்ட தகவலொன்றின் நோக்கத்தின் பின்னணிச் சட்டத்தின் கீழ் மறுப்பதற்கான காரணமொன்றல்ல என்ற உண்மையை அரசாங்க அதிகாரத்தின் கவனத்திற்கு ஆணைக்குழு ஈர்த்தெடுத்தது. அத்தகைய வியாபார முயற்சிகளை அது நடத்துகிறது என்பதைக் காட்டுவதன் மூலம் அரசாங்க அதிகாரத்தின் மறுதலையிலான பிரதிமையொன்றை நிலைத்திருக்கச் செய்வதற்கு இந்தத் தகவலை ஊடகவியலாளர் ஒருவராக விளங்கும் மேன்முறையீட்டாளர் பயன்படுத்துவார் என்ற கரிசனையாக, "அத்தகைய தகவலை வெளிப்படுத்துவது அரசாங்கத்தின் பாதுகாப்பினை அல்லது அதன் ஆட்புல நேர்மையை அல்லது தேசிய பந்தோபஸ்தை குறைத்து மதிப்பிடும்" என்ற பிரிவு 5(ஆ)(i) மீது அது நம்பியிருப்பதாக அரசாங்க அதிகாரம் முன்வைத்தது. இது இறுதியில் அரசாங்க அதிகாரத்திற்கும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் வியாபார சமூகத்திற்கும் இடையில் தேவையற்ற மோதலொன்றுக்கு இட்டுச்செல்லும் என்றும், இது உண்மையில் தகவலுக்கான உரிமைச் சட்டத்தினால் கருத்துக்கொள்ளப்பட்ட "அரசாங்கத்தின் பாதுகாப்பினை" அத்துடன் அல்லது "தேசிய பந்தோபஸ்தினைப்" பாதிக்கக்கூடும் என்றும் அரசாங்க அதிகாரம் முன்வைத்தது.

**உத்தரவு அடிப்படையில், இலங்கைப் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு சட்டபூர்வமானதும், சட்டபூர்வ நடைமுறையானதுமான தகவலுக்கான**



*http://www.chinadaily.com.cn/*

**உரிமை வேண்டுகோள்களை பிரஜைகள் முனைவுபடுத்தும் அடிப்படையின் மீது வெறுமனே அவர்கள் தொடர்பில் இராணுவப் புலனாய்வு அறிக்கையைப் பெறுவதற்கு ஏதேனும் அதிகாரம் ஆரம்பித்தால், அது சட்டத்தின் அடிப்படையிலான நோக்கங்கள் எதிர்மறைப்படுத்தப்படும் என கடுமையாக வலியுறுத்தப்பட வேண்டும்.**

எம் மீதுள்ள உண்மைகள் மீது இவ்விடயத்தில் இது உண்மையாகவே நடந்துள்ளதா அல்லது இல்லையா என்பதை இக்கட்டத்தில் மதிப்பிடுவதற்கான நிலையொன்றில் ஆணைக் குழு உள்ள அதேவேளை, தகவலுக்கான உரிமை விண்ணப்பதாரிகள் எதுவாகிலும் ஏதேனும் வழியில் அச்சுறுத்தப் படுவதற்கு உட்பட்டால் ஆணைக்குழுவின் குறிப்பான தலையீட்டினை ஏற்புடையதாக்கும் பாரதூரமான கரிசனையின் விடயமொன்றாக இது விளங்கும்.

மேன்முறையீட்டாளர் ஒருவரின் அல்லது வேண்டப்பட்ட தகவலொன்றின் நோக்கத்தின் பின்னணியானது தகவலை மறுப்பதற்கு தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழும் அத்துடன் அதன் பிரகாரமும் தொடர்பான கரிசனையொன்று அல்ல என்பதை நாம் குறிப்பாக கவனத்திற்கொள்கின்றோம்.

சட்டத்தின் பிரிவு 24(5)(ஈ) பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

**“தகவலுக்கான வேண்டுகோள் ஒன்றைச் செய்யும் பிரஜையொருவர் அவரைத் தொடர்புகொள்வதற்கு அவசியப்படுபவற்றை விட தகவலை அல்லது ஏதேனும் தனிப்பட்ட விபரங்களைக் கோருவதற்கு ஏதேனும் காரணத்தை வழங்குவதற்கு கோரப்படமாட்டார்.”**

**பிரதிமை: திலீப் அமுதன் (முகநூல்)**




*www.alamy.com*

## எதுவிதச் செலவும் இன்றி 557 தடவைகள் ஆகாயத்தில் பறந்த மைத்திரி

# மும்முறை உலகத்தை சுற்றி வந்திருக்கலாம்

தனது ஐந்து வருட ஆட்சிக் காலத்தில், இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர்களை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பயன்படுத்தி ஒரு இலட்சத்து முத்பத்தோராயிரத்து இருநூற்று எழுபத்தேழு கிலோ மீற்றர் தூரம் பயணித்துள்ளார்.

**மும்முறை உலகத்தைச் சுற்றி வந்திருக்கலாம்**

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக, தமிழ்மிரர் பத்திரிகை, இலங்கை விமானப்படைத் தலைமையகத்திலிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களிலேயே மேற்படி விடயம் அம்பலமாகியுள்ளது.

மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியாக இருந்தபோது அவருக்கு அதி முக்கிய பிரமுகருக்கான ஹெலிகொப்டர்களே, இலங்கை விமானப் படையால் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான MI-17 ரக ஹெலிகொப்டர்களை 535 தடவைகளும் B-412 ரக ஹெலிகொப்டர்களை 22 தடவைகளும் மைத்திரி பயன்படுத்தியுள்ளார்.

சராசரியாக வருடமொன்றுக்கு 111 தடவைகள் ெ ஹலிகொப்டர்களைப் பயன்படுத்தியுள்ள மைத்திரி, 70 ஆயிரத்து 884 கடல் மைல் தூரம் அதாவது ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 277.17 கிலோ மீற்றர் பயணம் செய்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட 557 ஹெலிகொப்டர் பயணங்களுக்கும் எந்தவிமானக் கட்டணங்களும் செலுத்தப்படவில்லை. இந்தப் பயணங்களுக்கான காரணங்களை விமானப்படைத் தலைமையகம் வழங்கவும் இல்லை.

புவியின் சராசரி சுற்றளவு 40,030.17 கிலோ மீற்றராகும். மைத்திரி பயன்படுத்திய ஹெலிகொப்டர் பயணங்களின் படி அவரால் மூன்று தடவைகள் பூமியின் மத்தியரேகை வழியாக உலகைச் சுற்றி வந்திருக்க முடியும்.

**பீ. நிரோஷ்**



*www.newsfirst.lk* *விமானப் படையைச் சார்ந்த திருகோண மடு புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள்*

# சரணடைந்த புலிகளுக்கு பொறுப்புக்கூற வேண்டியது யார் ?

இந்நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தகவலைப் பெற்றுக்கொள்ள, மின்னஞ்சலூ டாகக் கோரப்படும் தகவலறியும் விண்ணப்பங்களுக்கே பதில்கள் கிடைப்பதில்லை.

ஜனாதிபதி அலுவலகமே இவ்வாறிக்கும் போது ஏனைய அரச நிறுவனங்களிடம் மின்னஞ்சலூடாகத் தகவலைப் பெற்றுக்கொள்வது என்பது, எவ்வளவு கடினாமனதென்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

ஆகவே, இதுபோன்ற காரணங்களால் மின்னஞ்சலூடாகக் கோரப்படும்



*http://www.airforce.lk/* புனர்வாழ்வு பெற்று வெளியேறிச் செல்லும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள்

தகவல்களுக்கு, மின்னஞ்சலூடாக அனுப்பப்பட்ட விண்ணப்பம் கிடைக்கப்பெற்றுள்ளதா என்பதைப் பலமுறை உறுதி செய்ய வேண்டியிருக்கிறது.

எனது மின்னஞ்சல் இராணுவத்துக்கு கிடைத்திருக்கிறதோ என்பதை விண்ணப்பம் அனுப்பிய நான்கு நாள்களுக்குப் பின்னர் (08.04.2019), தொலைபேசி அழைப்பினூடாக உறுதி செய்து கொண்டேன்.

இதன்போது, RTIஐ கிடைத்திருப்பதாகவும் மொழிப்பெயர்ப்பு செய்து அதனைப் பணிப்பாளருக்கு அனுப்பியிருப்பதாகவும், எனினும் அந்த RTIஐ அவர் பார்த்தாரா இல்லையா என்பது தனக்குத் தெரியாது என்றும், பதில் வழங்கப்படுமெனவும் அங்கிருந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி குறிக்கப்பட்டு சிங்கள மொழியில் எனக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதமொன்றில், என்னால் கோரப்பட்ட தகவலை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொகொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

2016 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல் அறிந்துகொள்ளும் உரிமைகள் தொடர்பான சட்டத்தின் ஒழுங்குவிதி இல.07 படி, கோரப்படும் தகவலை, தகவல் அலுவலர் உடனடியாக 14 நாள்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

எனினும் இந்த ஒழுங்கு விதிகளை முறையாகப் பின்பற்றாத இலங்கை இராணுவம், என்னால் கோரப்பட்டிருந்த RTI இற்கு, ஒரு மாதத்துக்கும் அதிகமான காலம் எந்தவிதமான பதில்களையும் வழங்கவில்லை.

இதனால், மே மாதம் 5ஆம் திகதி (08.05.2019),மீண்டும் இராணுவத்

தலைமையகத்துக்கு அழைப்பை மேற்கொண்டு மேஜர் ரணசிங்கவிடம் எனது RTI இற்கு ஒருமாதக் காலமாகியும் பதில் வழங்கப்படவில்லை என்றேன்.

இதனைத் தொடர்ந்து கேர்ணல் நிர்மலா பெரேராவிடம் இது தொடர்பில் கேட்டறிந்துக்கொள்ள முடியுமென்றார். நான் அனுப்பிய கடிதம் தமிழ் மொழியில் இருப்பதால் அதனை மொழிபெயர்க்க அரச கரும மொழிகள் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும், அவர்கள் ஒருவாரத்தில் அதனை மொழிபெயர்ப்புச் செய்வதாகக் கூறியதாகவும் கேர்ணல் நிர்மலா கூறினார்.

இது தொடர்பில், எனக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாகவும் அவர் கூறினார். எனினும் மே மாதம் 6ஆம் திகதி குறிக்கப்பட்டு, எனக்கு அனுப்பி வைக்கப்பட்ட குறித்த கடிதம்  மே மாதம் 16ஆம் திகதிக்குப் பின்னர், ஜூன் மாதம் 30 திகதிவரையில் பல தடவைகள் இராணுவத் தலைமையகத்துக்கு அழைப்பை மேற்கொண்டு, பதிலுக்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது.

எனினும், எனது RTI இற்கான 2019 ஜூன் 25ஆம் திகதி  குறிக்கப்பட்ட பதில் கடிதம் ஜூலை மாதம் முதலாம் திகதியே எனக்குக் கிடைக்கப்பெற்றது.

2016 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கத் தகவல்களை அறிந்துக்கொள்ளும் உரிமைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளை முறையாகப் பின்பற்றாத இராணுவம், “இறுதி யுத்தக் காலப்பகுதியில், தங்களிடம் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் எவரும் சரணடயவில்லை” எனப் பதிலளித்திருப்பதோடு, “இலங்கை அரசாங்கத்திடமே அவர்கள் சரணடைந்தனர்.” எனவும் தெரிவித்திருக்கிறது.

இராணுவம் இறுதி யுத்த காலப்பகுதியில் தங்களிடம் விடுதலைப் புலிகள் சரணடயவில்லை எனப் பதில் வழங்கி கைகழுவிக்கொண்டுள்ளமை ஆழமாக ஆராயப்பட வேண்டியது. இலங்கை இராணுவத்தின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல்களான dmedia@army.lk, slarmymedia@gmail.com என்ற மின்னஞ்சலூடாக, கோரப்பட்ட RTI இற்கே இராணுவம் இவ்வாறு பதில் வழங்கியிருக்கிறது.

தகவல் அதிகாரியான பிரிகேடியர் ஏ.எம்.எஸ்.பீ அத்தபத்து என்பவரினால் கையொப்பமிடப்பட்டு இந்த பதில் கடிதம் எனக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தகவலறியும் விண்ணப்பத்துக்கு மூன்று மாதங்களுக்குப் பின்னர் சிங்கள மொழியில் கிடைக்கப்பெற்றுள்ள பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இறுதி  யுத்தகாலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் இலங்கை இராணுவத்திடம் சரணடயவில்லை. அவர்கள் இலங்கை அரசாங்கத்திடமே சரணடைந்துள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சரணடைந்த புலிகள் அமைப்பின் உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பில் அதிகாரம் கொண்ட நிறுவனமான, புனர்வாழ்வு ஆணையாளர் காரியாலயத்திடம் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதி யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவத்திடம் சரணடைந்தமைக்கான ஆதாரங்கள் அதிகமாகவே இருக்கின்றன எனத் தமிழ் மக்கள் கருதுகிறார்கள். இவ்வாறு சரணடைந்த தமிழீழ விடுதலை புலிகளின் உறுப்பினர்களுக்க என்ன நடந்தது ? இதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

**பா.நிரோஸ்**



*http://www.redcross.lk/*

# அமைச்சரின் உணவுக்கும் நிதி ஒதுக்கப்படுகிறதா?

மலையகப் பெருந்தோட்ட மக்களின் மிக நீண்ட கனவுகளில் தனிவீட்டுத் திட்டமும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. அதன் அடிப்படையில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் முதற்கட்டமாக 4000 தனி வீடுகள் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு முடிவடையும் தறுவாயில் இருக்கின்ற நிலையில் இரண்டாம் கட்டமாக 10,000 வீடுகள் நிர்மாணிக்கும் பணிகள் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. மேற்படி அமைச்சின் மூலம் இந்திய வீட்டுத் திட்டம் முன்னெடுக்கப்பட்டாலும் அவற்றினை பெருவாரியாக பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியமே நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அவ்வாறு முன்னெடுக்கப்படும் தனிவீட்டுத் திட்டங்களில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக பல முறை சுட்டிக்காட்டிய போதும், இதுவரையும் அவற்றை திருத்துவதற்கோ அல்லது அவை தொடர்பாக ஆராய்வதற்கோ எவ்விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. மஸ்கெலியா, பிரவுன்ஸ்விக் தோட்டததில் 2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 25 வீட்டுத் தொகுதிகளைக் கொண்ட பசும்பொன் வீடமைப்புத் திட்டம் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியது. அதில் குறிப்பாக வீதி அபிவிருத்தி மற்றும் மின்சாரம் என்பவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதியினை விடவும் மேலதிகமாக பல ஆயிரங்களை இங்கு வசிப்பவர்கள் சொந்தமாக செலவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மலையகப் பெருந்தோட்டங்களில் முன்னெடுக்கப்படும் வீட்டுத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியில் சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. மேலதிகமாக கட்டணங்கள் பயனாளிகளிடம் அறிவிடப்படுவதில்லை.

பிரவுன்ஸ்விக் தோட்டத்தில் கட்டப்பட்ட 25 வீடுகள் தொடர்பாக தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் தகவல் கோரப்பட்ட நிலையில் மின்சார விநியோகத்துக்காக 704, 086.20 ரூபா ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டிருந்த போதும் பயனாளிகளுக்கு ஒரு வருடம் கடந்தும் மின்சாரம் வழங்கப்படாமல் வீட்டுத்திட்ட பயனாளிகள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட ரீதியில் 18,915.16 ரூபாவினை மின்சார சபைக்கு செலுத்தி (25 18,915.16 = 472,879.00) மின்சாரத்தினை பெற்றுக்கொண்டுள்ளனர். அதே போலவே பாதை அமைப்புக்காக ஒதுக்கப்பட்ட 604, 316.98 ரூபாவும் செலவளிக்கப்பட்டுள்ள நிலையில் பாதியளவிலேயே பாதைக்கும் கொங்றீட் இடப்பட்டிருக்கிறது.

இவ்வாறு வீட்டுத் திட்டத்தில் முறையற்ற வகையிலான செலவினங்கள் காணப்படுவதைப் போல ஒரு வீட்டினை கட்டுவதற்கான செலவில், விளம்பரம், ஹெலிகொப்டர் பயணம், அமைச்சருக்கான உணவுச் செலவு, நொறுக்குத் தீனி என்பவற்றுக்கான செலவு செய்யப்படுவது ஆச்சரியத்தைத் தருவதாக அமைந்திருக்கின்றது. மலைநாட்டு புதிய கிராமங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்குகின்ற பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரிய போது, M/V/N/q/2/8/3/2/f/P/I (2019) கடிதத் தலைப்பின் மூலம் நிதியத்தினால் முன்னெடுக்கப்பட்ட வீடமைப்புத் திட்டம் (2014-2019) தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தது.

**இதில் முக்கியமாக 2014 ஆம் ஆண்டு கணக்கு அறிக்கையில், பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பான கூட்டத்துக்கு (நீர் + பகல் உணவு + நொறுக்குத்தீனி + அமைச்சரின் பகல் உணவு + 600 + 20845 + 19575) என 164,733.94 ரூபாவும் ஏனைய செலவுகளாக (ப்ளக்ஸ் ) 208,000 ரூபாவும் ஹெலிகொப்டர் பயணத்துக்காக 759,126 ரூபாவும் என மொத்தமாக 1,164,494.94 ரூபா செலவு செய்யப்பட்டிருக்கின்றது.** இத்தொகையானது பசும்பொன் வீடமைப்புத் திட்டத்தில் ஒரு வீட்டுக்காக ஒதுக்கப்படும் தொகையில் இரு மடங்காகக் காணப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் வீணான நிதி விரயத்தையே வெளிப்படுத்துகின்றன.

பெருந்தோட்டங்களில் தற்போது பல இடங்களில் தனிவீட்டுத் திட்டம் முன்னெடுக்கப்படுவதை மறுக்க முடியாது.



http://thehowarths.net/

அதேவேளை மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் அவர்கள் பயன்பெறுகின்றார்களா என்பது சந்தேகத்துக்கிடமானதாகவே காணப்படுகின்றது.

**2015/05/10 ஆம் திகதி அக்கரப்பத்தனை பிறேமோர் தோட்டத்தின 7 ஆம் குடியிருப்பில் ஏற்பட்ட தீவிபத்தில் முற்றாக சேதமடைந்த 8 வீடுகளின் உரிமையாளர்களுக்கு இன்றுவரையும் மாற்று வீடுகள் வழங்கப்படவில்லை. பெருந்தேடாட்ட மனித அபிவிருத்தி நிதியத்தினால் அமைத்துக் கொடுக்கபட்ட தற்காலிக கூடாரங்களிலேயே இன்றும் வசித்து வருகின்றனர்.** அதே சமயம் 29/12/2018 ஆம் திகதி போடைஸ் 30 ஏக்கர் தோட்டத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்று வரையும் வீடுகள் அமைக்க நடவடிக்கையெடுக்கப்படவில்லை.

ஆரம்பத்தில் மலையகப் பெருந்தோட்டங்களில் வீட்டுத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் போது அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களை முதன்மைப்படுத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும், தற்போது ஆதரவாளர்களுக்கும், கட்சிக்கு செல்வாக்குள்ள பகுதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டே வீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் அமைச்சுக் கூட்டங்களுக்கு மொத்த பரிவாரங்களும் கொழும்புக்கு வந்து விடுகின்றன. ஒரு வீட்டுத் திட்டம் தொடர்பான கூட்டத்துக்கு செலவாகும் தொகையில் இரு வீடுகளை கட்ட முடியும் என்ற நிலை இருக்கும் போது எதற்க இந்த ஆரவாரம்.

**தற்போதைய நிலையில் நுவரெலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி, காலி, கேகாலை, மொனராகலை, மாத்தளை, களுத்துறை மாத்தறை மாவட்டங்களில் 943,390 பெருந்தோட்ட மக்கள் வசித்து வருவதுடன் இவர்களுக்கு மொத்தமாக 186,298 வீடுகள் தேவைப்படுவதாக மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்புடு அபிவிருத்தி மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் செயலாற்று அறிக்கையில் 2018 இல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே பெருந்தோட்ட மக்களின் தேவையைக் கருத்திற் கொண்டு, நிதி துஷ்பிரயோகம் இடம்பெறாத வகையில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதே அனைவரினதும் கோரிக்கை.**

**கே. பிரசன்னா**
2009.08.05
தினக்குரல் பத்திரிகை.



*www.alamy.com*

# கழிப்பிடமாகும்
# ஹட்டன் பஸ் நிலையம்

1. பராமரிப்பற்ற நிலையில் பொது மலசலகூடம்
2. பொது மலசலகூடங்களில் அதிக கட்டணம் வசூலிப்பு
3. குத்தகையின் மூலம் அதிக வருமானம்

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சராகவிருந்த திகாம்பரத்தின் (தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்) எண்ணக்கருவுக்கமைய ஹட்டன் நகரை அழகுப்படுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதன் முதற்கட்டமாக ஹட்டன் புகையிரத நிலையத்தை அழகுப்படுத்தும் நடவடிக்கையில் தற்போது கட்டுமாணப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் புதிய ஆட்சி மாற்றத்தின் பின்னர் இவ்வேலைத்திட்டம் இடம்பெறுவதில் சந்தேகங்கள் எழுந்துள்ளன. ஆனால் ஹட்டன் நகரை அழகுபடுத்தும் வேலைத்திட்டம் எவ்வளவு முக்கியமானதோ அதைவிடவும் மலசலகூடங்களை சுத்தமாகவும் மக்கள் பாவனைக்கு உகந்ததாகவும் பயன்படுத்துவது அவசியமாகின்றது. தற்போது ஹட்டன் நகரை ஓவியங்கள் மூலம் அழகுபடுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் ஹட்டன் பஸ்தரிப்பு நிலையத்தின் மோசமான நிலை அவற்றுக்கு எதிராகவே அமைந்திருக்கிறது.

ஹட்டன் பஸ்தரிப்பு நிலையம் பஸ்களை தரித்து வைக்கும் இடமாக மாத்திரமல்லாது தற்போது பஸ்களின் பின்னால் மறைவான பகுதிகளில் சிறுநீர் கழிக்கும் வசதியையும் பலருக்கும் வழங்குகின்றது. பஸ் தரிப்பிடத்துக்கு அண்மையிலேயே பொது மலசலகூடம் அமைந்திருந்தாலும் பெரும்பாலானோரின் தெரிவு இதுவாகவே

இருக்கின்றது. இச்செயற்பாடுகள் பல காலமாக இடம்பெற்றுவந்தாலும் அவற்றை தடுப்பதற்கு எவ்விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவிலலை. இது பொது வெளியில் சிறுநீர் கழிக்கும் ஆர்வலர்களுக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது.

இதேவேளை தலவாக்கலை மற்றும் ஹட்டன் நகரங்களில் அமைந்துள்ள பேருந்து நிலைய மலசலகூடங்களில் அதிக கட்டணம் அறவிடப்படுவதாக பயணிகள் முறைப்பாடுகள் தெரிவித்துள்ளதாக அண்மையில் பத்திரிகைச் செய்தியொன்று வெளியாகியிருந்தது. அச்செய்தியில், தினந்தோறும் சுமார் ஆயிரக்கணக்கான பயணிகள் வந்து செல்லும் இந்த நகரங்களில் அதிகளவு கட்டணங்கள் அறவிடப்படுவதால் பெரும் அசௌகரியமாக இருப்பதாக தெரிவித்துள்ளனர். அதே நேரம் பாடசாலை மாணவர்களுக்கு இந்த அதிகரித்த கட்டணத்தை செலுத்துவதென்பது கடினம் எனச் சுட்டிக்காட்டும் பொதுமக்கள் குறித்த நகரங்களிலுள்ள பொது மலசலகூடங்களில் சிறுநீர் அல்லது மலம் கழிப்பதற்கு 20 ரூபா வீதம் அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நுவரெலியா மாநகரசபைக்கு உட்பட்ட பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள மலசலகூடமானது, மக்கள் பாவனைக்கு உகந்ததாக இல்லை என அண்மையில் சமூக வலைத்தளத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதேவேளை வெலிமடை நகரசபை நிர்வாகத்துக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் காணப்படும் மலசலகூடமானது முற்றிலும் இலவசமான சேவையை பொதுமக்களுக்கு வழங்கி வருவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

**இந்த மலசலகூட விவகாரம் தொடர்பாக தலவாக்கலை லிந்துலை நகரசபையிடமும் (CPC/N/TUC/5/1/IRTI) ஹட்டன் டிக்கோயா நகர சபையிடமும் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தினை பயன்படுத்தி சில தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. அதன்படி தலவாக்கலை லிந்துலை நகரசபை எல்லைப் பிரதேசத்தில் ஒரு பொது மலசலகூடமே அமையப்பெற்றுள்ளதாகவும் கேள்வி மனு கோரல் மூலம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள இம்மலசலகூடத்தின் மூலம் மாதம் 52,170 ரூபா வருமானம் பெற்றுக்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது பொது மலசலகூடத்தில் 20 ரூபா கட்டணமாக அறவிடப்படுகின்றது இதேவேளை அதிக கட்டணம் அறவிடப்படுவது தொடர்பாக எவ்விதமான முறைப்பாடுகளும் தலவாக்கலை லிந்துலை நகரசபையில் பதிவு செய்யப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.**

**2016ஆம் ஆண்டு கேள்வி மனு மூலம் பொது மலசலகூடம் வருடத்துக்கு 360,000 ரூபா (மாதம் 30,000 ரூபா) அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது 2017 ஆம் ஆண்டு வருடத்துக்கு 375,000 ரூபா (மாதம் 31,290 ரூபா) அடிப்படையிலும் 2018 ஆம் ஆண்டு வருடத்துக்கு 475,000 ரூபா (39,580 ரூபா) அடிப்படையிலும் 2019 ஆம் ஆண்டு வருடத்துக்கு 626,000 ரூபா (மாதம் 52,170 ரூபா அடிப்படையிலும் தலவாக்கலை லிந்துலை நகரசபைக்குட்பட்ட பொது மலசலகூடமானது குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே பொது மலசலகூடத்தின் மூலம் மக்கள் ஏதேனும் அசௌகரியங்களை எதிர்நோக்கின் அவை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறைப்பாடுகளை பதிவு செய்யமுடியும்.**

ஹட்டன் டிக்கோயா நகரசபைக்குச் சொந்தமாக மூன்று பொது மலசலக்கூடங்கள் காணப்படுகின்றன அவற்றில் இரண்டு ஹட்டன் நகரத்தை மையப்படுத்தியதாகவும் ஒன்று டிக்கோயாவிலும் அமைக்கப்பட்டுள்ளது. டிக்கோயா பொது மலசலகூடமானது குத்தகைக்கு வழங்கப்படாது பொதுமக்களின் பாவனைக்காக இலவசமாக விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஹட்டன் பேருந்து நிலைய பொது மலசலகூடம் மற்றும் ஹட்டன் நட்சத்திர சதுக்க பொதுமலசலகூடம் என்பன குத்தகைக்கு வழங்கப்படுவதால் வருடாந்தம் பல இலட்சங்களை வருமானமாக பெற்றுக்கொள்கின்றன அதனடிப்படையில் குத்தகையின் மூலம் 2016 ஆம் ஆண்டு 3874643.49 ரூபாவினை வருமானமாகவும் 2017 ஆம் ஆண்டு 4845061.86 ரூபாவினை வருமானமாகவும் 2018 ஆம் ஆண்டு 4211809.92 ரூபாவினை வருமானமாகவும் 2019 ஆம் ஆண்டு 2952108.29 ரூபாவினையும் (2019.09.30 வரை) வருமானமாக ஹட்டன் டிக்கோயா நகரசபை பெற்றுக்கொண்டுள்ளது.

பொது மலசலகூடத்தினை பாவிப்போருக்கு கட்டணமாக 10 ரூபாவே கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் 10 ரூபாவினை விடவும் அதிகமான தொகையே கட்டணமாக அறவிடப்படுவதாக பொதுமக்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. பொது மலசலகூடத்தினை பாவிப்போருக்கு அதிக கட்டணம் அறவிடப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அம்முறைப்பாடுகளுக்கெதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஹட்டன் டிக்கோயா நகரசபை நிர்வாகம் தெரிவித்துள்ளது. அவ்வாறு அதிகமான கட்டணங்கள் அறவிடப்படுவதனாலும் சுகாதாரமான முறையில் பொது மலசலகூடங்கள் பேணப்படாமையினாலும் பலர் திறந்த வெளியினையே கழிப்பறையாக பயன்படுத்தும் நிலை காணப்படுகின்றது. ஹட்டன் பஸ் தரிப்பிடத்தில் பஸ்கள் தரித்து நிற்கும் இடத்துக்கு பின்னால் காணப்படும் வடிகாண்களில் சிறுநீர் கழிப்பது பலருக்கும் வேடிக்கையான விடயமாகவே காணப்படுகின்றது.

இதனால் அப்பகுதியில் தரித்து நிற்கின்ற பஸ்களில் பொது மக்கள் அமர்ந்திருப்பதே மிகப்பெரும் சவாலாக இருப்பதோடு கடும் துர்நாற்றம் வீசும் நிலை காணப்படுகின்றது. இதனால் இயற்கை காற்றுக்குப் பதிலாக சிறுநீர் நாற்றத்தையே அனைவரும் சுவாசிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. பொது மலசலகூடங்களின் மூலம் பல இலட்சங்களில் வருமானத்தை பெற்றுக்கொள்ளும் நகரசபை இவ்விடயம் தொடர்பாக அக்கறையற்ற நிலையில் இருப்பது வேடிக்கையானது.அதேவேளை பேருந்து நிலையத்துக்கு அருகில் காணப்படும் பொது மலசலகூடமானது முறையான பராமரிப்புகளின்றி காணப்படுவதுடன் அதன் வளவுகளிலேயே குப்பைகளும் சேகரிக்கப்படுகின்றன. இவையனைத்தும் சுகாதாரத்துக்க பெரும் கேடாக அமைவதுடன் அருகிலுள்ள உணவகங்கள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. இவ்வாறு கடும் துர்நாற்றம் வீசும் பகுதிகளிலேயே பொரித்த உணவுகளும் கூடைகளில் கொண்டு வந்து பஸ்களில் விற்கப்படுகின்றன. இந்த உணவுகளில் இந்த காற்றுபடாது என்பதற்கு எவ்விதமான உத்தரவாதங்களும் இல்லை.


livandleetravel.wordpress.com

புதிய ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கமைய நாடு முழுவதுமுள்ள வெற்று சுவர்களில் சித்திரம் வரைந்து நாட்டை அழகுப்படுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சுவர் ஓவியங்கள் மூலம் ஹட்டன் பேருந்து நிலையததில் வீசும் துர்நாற்றத்தை இல்லாதொழித்துவிட முடியாது அதற்கு முறையான கழிவகற்றல் முறையுடன் வடிகானில் சிறுநீர் கழிக்கும் நடவடிக்கையினையும் தடைசெய்ய வேண்டும். பேருந்து நிலையத்தில் தரித்து நிற்கும் பஸ்களின் சாரதிகளும் நடத்துனர்களும் வடிகாண்களையே மலசலகூடமாக பயன்படுத்தும் நிலை காணப்படுகின்றது. எனவே இவற்றை தடுப்பதற்கு கடுமையான தண்டனைகளும் அபராதங்களும் விதிக்கப்பட வேண்டும். ஹட்டன் நகரை அழகுப்படுத்தும் வேலைத்திட்டத்தில் ஹட்டன் தனியார் மற்றும் பொதுப்போக்குவரத்து பஸ் தரிப்பிடங்களும் உள்வாங்கப்பட வேண்டும். அதற்கு ஹட்டன் டிக்கோயா நகரசபை, ஹட்டன் டிப்போ, மத்திய மாகாண பொதுப்போக்குவரத்து அதிகாரசபை மற்றும் ஹட்டன் பொலிஸாருடன் இணைந்து பொதுமக்களும் செயற்பட வேண்டும்.

**கே.ப்ரசன்னா**

*Thinakkural 3rd January 2020*




# பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களின் சந்தா பணத்துக்கு
# என்ன நடக்கிறது ?

இலங்கையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொடர்புடைய மற்றும் அவர்கள் அங்கத்துவம் வகிக்கின்ற தொழிற்சங்கங்களின் தரவுகளை தொழில் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்வதென்பது இயலாத காரியமாகவிருக்கிறது. இதன்படி பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பான தகவல்களைக் கோரி கடந்த பெப்ரவரி மாதம் தொழில் திணைக்களத்திடம் விண்ணப்பித்த போதும் மேன்முறையீட்டுக்கான, ஆணைக்குழுவின் மூலம் 2020 ஜூன் மாதமே தகவல்களை பெற்றுக்கொள்ள முடிந்தது. அதன்படி தொழிற்சங்கங்களில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்கள் எண்ணிக்கை தொடர்பான கேள்விக்கு (03/01/06) இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் **383,007** (2016/2017) அங்கத்தவர்களும் தொழிலாளர் தேசிய சங்கத்தில் **26,172** (2017/2018)

அங்கத்தவர்களும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தில் **148, 242** (2017/2018) அங்கத்தவர்களும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஏனைய தொழிற்சங்கங்கள் தொடர்பான தகவல்கள் வழங்கப்படவில்லை. இந்நிலையில் தொழிற்சங்கங்கள் பெற்றுக் கொள்கின்ற சந்தாப்பணம் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு தொழில் திணைக்களம் மறுத்துவிட்டது. எனினும் இவ்விடயம் தொடர்பான தகவல் கோரிக்கைக்கு ஏற்கனவே இருவருக்கும் பதில் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனத்திலிருந்து அறிவிடப்படும் 150.00ரூபா சந்தாப்பணத்துக்கு என்ன நடக்கிறது என்பது தொடர்பாக ஆராய முற்பட்ட வேளையில், தேர்தல்கள் ஆணைக்குழுவிடமிருந்து தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் ஆண்டு நிதியறிக்கையினை (23/99) பெற்றுக்கொள்ள முடிந்தது. இதன்மூலம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, பிரஜைகள் முன்னணி, ஆகிய கட்சிகளின் தகவல்களை பெற்றுக்கொள்ள முடிந்தது.

ஒவ்வொரு மாதச் சம்பளத்தின்போதும் தொழிலாளர்களிடமிருந்து 150ரூபா சந்தாப்பணமாக அறிவிடப்படுகின்றது. இந்தப் பணத்தின் மொத்தத் தொகை கோடிகளை எட்டுகிறது. எவ்வாறு இந்த கோடிகள் செலவு செய்யப்படுகின்றன. இந்த கோடிகளால் மக்கள் பெறுகின்ற நன்மை என்ன? என்பதுவே முக்கியமாகும். 2015/2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் **396,869** உறுப்பினர்களைக் கொண்டிருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சந்தாப் பணத்தின் மூலம் **94,731,687** ரூபாவை பெற்றுக்கொண்டுள்ளது. 2016/2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் **77,751,933** ரூபாவும் 2017/2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் **7,758,020** ரூபாவும் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அரசியல் நிதியெனும் வகையில் 2015/2016 காலப்பகுதியில் **10,525,743** ரூபாவும் 2016/2017 காலப்பகுதியில் **8,639,104** ரூபாவும் 2017/2018 காலப்பகுதியில் **19,668,944** ரூபாவும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஏனைய வரவுகள் எனும் வகையில் வட்டி, வாடகை, முதலீடுகள், கடன்கள் மூலமான வட்டி மற்றும் காப்புறுதி என 2015/2016 காலப்பகுதியில் **20,879,977** ரூபாவும் 2016/2017 காலப்பகுதியில் **23,375,980** ரூபாவும் 2017/2018 காலப்பகுதியில் **19,668,944** ரூபாவும் இலாபமாக பெற்றுக்கொண்டுள்ளன. இவ்வாறு சந்தாப்பணம் அரசியல் நிதி மற்றும் ஏனைய வரவுகள் என்ற அடிப்படையில் மொத்தமாக 2015/2016 காலப்பகுதியில் 126,37,407 ரூபாவும் 2016/2017 காலப்பகுதியில் 109,767,017 ரூபாவும் 2017/2018 காலப்பகுதியில் 973,49,464 ரூபா என்ற வகையில் வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் 30-40 வருடங்கள் பெருந்தோட்டங்களில் கஷ்டப்பட்டாலும் இறுதியாக அவர்களுக்கு EPF/ETF எனும் வகையில் 10-15 இலட்சம் வரையிலேயே கிடைக்கின்றது. ஆனால் தொழிற்சங்கங்கள் கோடிகளில் இலாபத்தினை ஒரு வருடங்களிலேயே எட்டிவிடுகின்றன. எனவே பெருந்தோட்டங்களில் கஷ்டப்படுவதை விட தொழிற்சங்கங்கள் மூலம் அதிகம் இலாபத்தை பெறலாம் என்பது தெளிவாகிறது.



அதனால் தான் என்னவோ, பெருந்தோட்டங்களை மையப்படுத்தி 34 தொழிற்சங்கங்கள் (தொழில் திணைக்களம் - RTI) இயங்கி வருகின்றன. இவ்வாறு பெற்றுக்கொண்டுள்ள கோடிகளின் மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்க ஏதேனும் கருமங்கள் ஆற்றப்பட்டிருக்கிறதா என கணக்கறிக்கையில் தேடிய போது ஏமாற்றமே மிஞ்சியது. இவரக்ள் பெற்றுக்கொள்ளும் வருமானத்தில் பெரும்பகுதியை அவர்களின் நிர்வாகச் செலவுகளுக்காக பயன்படுத்துகின்றனர். தொழிலாளர்களின் நிர்வாகத்துக்காக அல்ல. இது எல்லா கட்சிகளிடமும் இருக்கும் பொதுவான பண்பாகும். இதன்படி இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிர்வாகச் செலவுகளுக்காக 2015/2016 காலப்பகுதியில் **98,743,604** ரூபாவும் 2016/2017 காலப்பகுதியில் **98,444,643** ரூபாவும் 2017/2018 காலப்பகுதியில் **67,597,127** ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளன.

இதில் அலுவலக ஊழியர்களுக்கான கொடுப்பனவு அவர்களுக்கான ஏனைய கொடுப்பனவுகள் உள்ளிட்ட உள்வீட்டுத் தேவைகளே நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றில் முக்கியமாக கமிட்டிகளுக்கான செலவுகள் என்ற வகையில் மாவட்ட மட்டத்திலும் தோட்ட மட்டத்திலும் தொழிற்சங்க நடவடிக்கைகளை கொண்டு செல்கின்ற தொழிற்சங்க தூதுவர்களாக செயற்படும் மாவட்டக் கமிட்டிகளுக்கு 2015/2016 காலப்புகுதியில் **3,002,000** ரூபாவும் 2016/2017 காலப்பகுதியில் **2,530,000** ரூபாவும் 2017/2018 காலப்பகுதியில் **935,080** ரூபாவும் செலவளிக்கப்பட்டுள்ளதோடு தோட்ட கமிட்டிகளுக்கான ஒதுக்கீடுகளுக்காக

2015 2016 காலப்பகுதியில் **5,149,071** ரூபாவும் 2016/2017 இல் **4,282,765** ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டிருக்கிறது.

அதேவேளை தொழிற்சங்கங்களின் முக்கிய திருவிழாக்களில் ஒன்றான மேதின நிகழ்வுகளுக்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸினால் 2015/2016 காலப்பகுதியில் **5,007,940** ரூபாவும் 2016/2017 இல் **5,448,872** ரூபாவும் 2017/2018 இல் **4,939,560** ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு மேதினத்துக்கும் அண்ணளவாக 50 இலட்சம் ரூபாவினை செலவு செய்யும் நிலை காணப்படுகையில் இவ்வாறான பிரமாண்ட மேதினங்களின் மூலம் தொழிலாளர்களுக்கு என்ன உரிமையினை பெற்றுக்கொடுத்திருக்கிறார்கள்.

இதேவேளை மலையக மக்கள் முன்னணியானது.01.04.2015 - 31.03.2016 வரையான காலப்பகுதியில் **1,934,000** ரூபாவினை நிதியாக பெற்றுள்ளதாக நிதியறிக்கையில் தெரிவித்துள்ளதுடன் இதில் கொடுப்பனவு, போக்குவரத்து கொடுப்பனவு,பண்டிகைக்கால கொடுப்பனவு என **1,920,628,.52** ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை 01.05.2017 - 31.05.2018 வரையான காலப்பகுதியில் **252,647.18** நிதியாக பெற்றிருப்பதோடு மொத்தமும் நிர்வாகச் செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

தொழிலாளர் தேசிய முன்னணியானது, 2015 - 2016 காலப்பகுதியில் சந்தாப்பணமாக **1,080,230** ரூபாவினையும் 2016 - 2017 இல் **9906,170** ரூபாவினையும் பெற்றுள்ளதோடு அவை மொத்தமும் நிர்வாகச் செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை கடந்த காலங்களில் குறுகிய நோக்கத்துக்காக மலையக மக்களை தொலைக்காட்சி பேச்சு மூலம் ஆட்சி செய்த ரங்காவின் பிரஜைகள் முன்னணியானது, 2016 ஆம் ஆண்டில் **31,650** ரூபாவும் 2017 மற்றும் 2018 இலும் இதே தொகையினை நிலுவையாகக் கொண்டிருக்கின்றன.

அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியானது, 2018, மார்ச் 31 இல் **1,400,000** ரூபாவினை நன்கொடையாக பெற்றிருப்பதாக கணக்கு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை பயன்படுத்தி தேர்தல்கள் ஆணைக்குழுவிலிருந்து மேற்கூறிய கட்சிகளின் கணக்கறிக்கையினை மட்டுமே பெற்றுக்கொள்ள முடிந்தது. தொழிலாளர் தேசிய சங்கமானது தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட கட்சியாக இல்லாமையினால் அவற்றின் கணக்கறிக்கையை எம்மால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இருப்பினும் தொழில் திணைக்களத்தின் தகவல்களின்படி 01.04.2016-31.03.2017 வரையான காலப்பகுதியில் **34,524,328.41** ரூபாவினை பெற்றுக்கொண்டுள்ளமையை அறிந்துகொள்ள முடிகின்றது.

அவ்வாறு தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து சந்தாப்பணத்தினை பெற்றுக்கொள்ளும் தொழிற்சங்கங்கள் அவர்களுக்கு என்ன உதவிகளை செய்துவிட்டதாக நினைக்கின்றார்கள். ஒவ்வொரு முறை ஆட்சிக்கு வருபவர்கள் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளும் நிதியிலேயே அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றார்களே தவிர, தமது கட்சியின் மூலமான



வருமானத்தை கட்சி செலவுகளுக்காகவும் தமது செலவுகளுக்காகவும் பயன்படுத்திகொள்கின்றார்கள் இதில் ஆச்சரியமான விடயம் என்னவென்றால் பிறந்தநாள் செலவுகளைக் கூட மக்களின் சந்தாப்பணத்தில் செலவு செய்து கொண்டாடும் நிலை காணப்படுகின்றது. இதேவேளை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களை தமது கட்சியின் மூலமாக முன்னெடுத்து அவற்றுக்கு சொந்தம் கொண்டாடி வரும் நிலையே காலங்காலமாக பின்பற்றப்பட்டு வருகின்றது. இதன் மூலம் தொழிலாளர்களை வருமானத்துக்காகவும் பதவிக்காகவும் பலர் பயன்படுத்துகின்றனரே தவிர உண்மையில் தொழிலாளர்கள் மீதான கரிசணையில் எவரும் செயற்படுவதாக தெரியவில்லை.

**கே. பிரசன்னா**
*Thinakkural -05th August 2019*




*dailynews.lk*

## பெருந்தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட வருடாந்த தொழிற்சங்கச் சந்தாக் கட்டணம் பற்றிய தகவலை

# தொழில் திணைக்களம் வெளிவிட மறுத்தது

பெருந்தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவ ஆறு தொழிற்சங்கங்களுக்கான சந்தாக் கட்டணங்கள் மீதான தகவலுக்காக பின்வருவனவற்றைக் கோரி தொழில் திணைக்களத்துடன் தகவலுக்கான உரிமை வேண்டுகோள் ஒன்றை **மாற்றம்** தாக்கல் செய்தது:

தொழில் திணைக்களத்தினால் தொழிற்சங்கங்களிலிருந்து கிடைத்த கடைசி ஆவணங்களின் பிரகாரம்,

1. ஒவ்வொரு தொழிற்சங்கத்திலும் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் பால்நிலைரீதியான விபரங்கள்
2. ஒரு தொழிலாளியிடமிருந்து அறவிடப்படும் சந்தாக் கட்டணம்
3. 2017ஆம் ஆண்டில் தொழிற்சங்கங்களினால் பெறப்பட்ட மொத்த சந்தாக் கட்டணம்
4. 2018 செப்ரெம்பரில் தொழிற்சங்கங்களினால் பெறப்பட்ட மொத்த சந்தாக் கட்டணம்
5. 2017 டிசம்பரில் தொழிற்சங்கங்களினால் பெறப்பட்ட மொத்த சந்தாக் கட்டணம்
6. 2017இல் தொழிற்சங்கங்களினால் செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகை மற்றும் எதற்கு இந்தத் தொகை செலவழிக்கப்பட்டது
7. குறித்துக் கூறத்தக்கதாக இயக்கங்கள், சேமநலன், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியன உட்பட ஆனால் அவற்றுக்கு மட்டுப்படாமல், தேயிலைப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பான பிரச்சனைகள் மீது 2017இல் தொழிற்சங்கங்களினால் செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகை

பின்வரும் ஆறு தொழிற்சங்கங்களின் தகவல் கோரப்பட்டது:

- CWC – இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்
- LJEWU – இலங்கைத் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம்
- NUW – தொழிலாளர் தேசிய சங்கம்
- UPF – மலையக மக்கள் முன்னணி
- JPTUC – தோட்டத் துறை தொழிலாளர் கூட்டணி
- SRFU – இலங்கைச் செங்கொடிச் சங்கம்

சந்தாக் கட்டணங்கள் பற்றிக் கேட்பது ஒரு இடையூறற்ற வேண்டுகோள் போன்று தெரிந்தாலும், அவை முக்கியமானவையாகும். கல்வி போன்ற அத்தியாவசியச் சேவைகளை அடைவதற்கு குறிப்பிடத்தக்க தடைகளுக்கு முகங்கொடுக்கும் சமூகமொன்றான மலையகத் தமிழ் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களாக விளங்கும் உறுப்பினர்களைத் தொழிற்சங்கங்கள் பிரதிநிதிப்படுத்துகின்றன. அவர்கள் அனேகமாக போஷாக்கிலான உணவை தமது குடும்பங்களுக்கு வழங்குவதற்காகப் போராடுகின்றார்கள். ஊதியப் பேச்சுவார்த்தைகளின் போது இந்தப் பிரச்சனைகள் முன்னணிக்கு வருவதற்கு முயல்கின்றன. இங்கு தொழிலாளர்களுக்கும், பிராந்தியப் பெருந்தோட்ட கம்பெனிகளுக்கும் இடையில் தரகர்களாக தொழிற்சங்கங்கள் செயல்படுகின்றன.

ஆண்டுக்கணக்கில் தமது அடிப்படை ஊதியத்தின் ரூ.1,000 அதிகரிப்பொன்றுக்காக தேயிலைப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அழைப்புவிடுக்கின்றனர். வேலைக்காக கொழும்புக்கு வந்த மலையகத் தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களினால் ஒன்றுதிரட்டப்பட்டு, காலிமுகத் திடலில் கடந்த வருடம் ஒக்ரோபர் 22 அன்று நடைபெற்ற போராட்டமொன்று ஆயிரக்கணக்கான மக்களை ஈர்த்தெடுத்தது. டிசம்பரில், அதே கோரிக்கைக்காக கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு வெளியே உண்ணாவிரதப் போராட்டமொன்றைத் தொழிலாளர்கள் ஆரம்பித்தார்கள். ஒவ்வொரு தடவையும், வழமையாக அண்ணளவாக ரூ.50 அல்லது ரூ.100 தொகையிலான அதிகரிப்பொன்றுக்கு தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தையை நடத்துகின்றன. உலகளாவிய சந்தையில் நிலைமைகள் (போட்டி உட்பட) மற்றும் காலநிலை மாற்றம் போன்ற காரணிகளை வழங்கி, அதிகளவு குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று சாத்தியமற்றது என தோட்ட உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

இந்தப் பின்புலத்திற்கு எதிராக, தொழிற்சங்கங்களின் வகிபங்கினைத் தொழிலாளர்கள் வெற்றிவாகையுடன் நோக்குகின்றனர். மேற்படி தொழிற்சங்கத்தின் நிறம் எமக்குத் தெரியாது; என்ற தலைப்பிலான மாற்றத்தினாலான அண்மைய கட்டுரையொன்றில் நேர்முகங்காணப்பட்ட தேயிலைப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், “எப்பொழுதெல்லாம் எங்களுக்கு பிரச்சனைகள் இருக்கின்றதோ அப்பொழுதுதெல்லாம் எமது சார்பாகப் பேசுவதற்கு ரூ.150 சந்தாக் கட்டணமொன்றை நாம் வழங்குகின்றோம். ஆனால், இது வரை நாம் எந்த உதவியையும் பெறவில்லை” எனத் தெரிவிக்கின்றனர். தொழிற்சங்கத் தலைவர்களின் நடவடிக்கைகள் மீதும் அவர்கள் கருத்துரைத்தனர். “நாம் வழங்கும் சந்தாக் கட்டணம் மீது அவர்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் ஆடம்பரமாக வாழ்கின்றார்கள்.”

**12 ஒக்ரோபர் 2018 அன்று, தகவலுக்கான உரிமை விண்ணப்பத்தை மாற்றம் கையளித்த பின்னர், விண்ணப்பத்தில் கோரப்பட்ட தகவலுடன் பதிலிறுப்பதற்கு தொழில் திணைக்களத்திற்கு அச்சொட்டாக இரண்டு மாதங்கள் எடுத்தன. தனக்கு தமிழ் தெரியாது என்பதனால் உடனடியாகவே ஏற்றுக்கொள்ளலை வழங்க முடியாது என தகவல் அலுவலர் தெரிவித்தார். ஒக்ரோபர் 25 அன்று, ஏற்றுக்கொள்ளலின் குறிப்பினை மாற்றம் பெற்றதுடன், தகவலுக்கான உரிமைச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள பதிலிறுப்பு நேரகாலத்தினுள் இது விளங்கியது (2 வாரங்கள்). தமிழில் அரசாங்க அலுவலர்களிடமிருந்து தகவலைக் கோரும் தனிப்பட்டவர்களுக்கு உள்ள கஷ்டங்களைப் பதிப்பாசிரியர் செல்வராஜா ராஜசேகர் இந்த ”வீடியோவில்; தீர்க்கமாகப் பேசியுள்ளார்.**

**மாற்றத்தினால் எழுப்பப்பட்ட கேள்விகள் இல.1இலிருந்து 3 வரையில் மட்டுமே பதிலிறுப்பில் கூறப்பட்டுள்ளதுடன், இது டிசம்பர் 12 அன்று கிடைத்தது. ஏனைய நான்கு வினாக்கள் தொடர்பான தகவல் எம்மிடம் இல்லை என தொழில் திணைக்களம் தெரிவித்திருந்தது.**

**இரு மாதங்களினால் பதிலிறுப்பு தாமதமடைந்ததினால் தொலைபேசி ஊடாக தகவல் அலுவலருடன் தொடர்பு கொள்வதற்கு மாற்றம் கட்டாயப்படுத்தப்பட்டது. “இங்குள்ளவர்களுக்கு தமிழ் தெரியாது என்பதனால், உங்கள் விண்ணப்பம் சிங்களத்திற்கு அல்லது ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட வேண்டும். முழுத் திணைக்களமும் ஒரேயொரு மொழிபெயர்ப்பாளரையே கொண்டுள்ளது. நாம் அவருக்கு கொடுப்போம், அதனால் தான் தாமதமொன்று உள்ளது” என்பதே தகவல் அலுவலரின் விளக்கமாகும்.**

**தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள், தனித்த தொழிலாளர் ஒருவரிடமிருந்து அறவிடப்படும் உறுப்புரிமைக் கட்டணம் மற்றும் இந்தத் தொழிற்சங்கங்களினால் ஒரு வருடத்தில் பெறப்பட்ட சந்தாக் கட்டணங்களின் மொத்தத் தொகை ஆகியன குறித்த தகவலை மாற்றம் பெறக்கூடியதாக இருந்தது.**

தொழில் திணைக்களம் தகவலைக் கொண்டிருக்கவில்லை என்பதை வெற்று இடங்கள் காட்டுகின்றன.

**தகவல் எதனை வெளிப்படுத்துகின்றது**

ஆறு தொழிற்சங்கங்களிலிருந்து தொழில் திணைக்களம் பெற்றுக்கொண்ட மிகவும் அண்மைய ஆவணங்கள் மீதான அடிப்படையிலான தகவலையே **மாற்றம்** கோரியிருந்தது. திணைக்களம் வழங்கியிருந்த தகவல் 2017 அறிக்கைகள் மீதான அடிப்படையிலானதாகும்.

இந்த ஆவணங்களின் பிரகாரம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 400,000 கொண்ட உறுப்புரிமையொன்றைக்

கொண்டுள்ளது. இலங்கை தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் 150,000 உறுப்பினர்களைக் கொண்டுள்ள அதேவேளை, தொழிலாளர் தேசிய சங்கம் 21,280 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

தோட்டத் துறையில் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 150,000க்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. எனினும், இந்த மூன்று தொழிற்சங்கங்களில் மட்டும் மொத்த எண்ணிக்கை 550,000ஐக் தாண்டிவிட்டது. எனவே, தொழில் திணைக்களத்திற்கு வழக்கொழிந்த விபரங்களை தொழிற்சங்கங்கள் சமர்ப்பிக்கின்றன என்பது சாத்தியமாக விளங்குகின்ற அதேவேளை, அதன் சொந்தத்தில் ஏதேனும் முறைமையான பின்தொடரை மேற்கொள்ளாமல் இந்தப் பதிவுகளை கேள்விக்கிடமின்றி திணைக்களம் உள்ளீடு செய்கின்றது.

கிடைத்துள்ள விபரங்களின் பிரகாரம், 1 ஏப்ரல் 2016க்கும், 30 மார்ச் 2017க்கும் இடையிலான ஒரு வருட காலத்தில் தொழிலாளர்களிடமிருந்து உறுப்புரிமைக் கட்டணங்களாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ரூ.77,751,933ஐப் பெற்றது. அதேவாறு, இலங்கைத் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் ரூ.22,437,558.53ஐப் பெற்ற அதேவேளை, தொழிலாளர் தேசிய சங்கம் ரூ.34,524,328.41ஐ சந்தாக் கட்டணங்களாகப் பெற்றுள்ளது.

**இல.4 முதல் இல.7 வரைக்குமான கேள்விகளுக்கும் (இது முதலாவது பதிலிறுப்பில் வழங்கப்படவில்லை) அத்துடன் தொழிற்சங்கங்களின் வருடாந்த அறிக்கைகளுக்கும் தொழில் திணைக்களத்திடம் மாற்றம் கோரிக்கைவிடுத்தது. தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் வாசகம் 5(1) ஊ இன் பிரகாரம், அறிக்கைகள் வழங்கப்பட முடியாது எனத் திணைக்களம் பதிலிறுத்தது. தகவலின் அடைதலுக்கு இந்தச் சட்டத்திற்கு மூலப்பிரமாணமொன்றை வாசகம் இட்டுள்ளது.**

**5(1) துணைப் பிரிவு (2)இன் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, தகவலுக்கான அடைதலுக்கு இச்சட்டத்திலான ஒரு வேண்டுகோள் மறுக்கப்பட முடியும், அங்கு-**

- **தனது கடமைகளினதும், ஓர் அரசாங்க அதிகாரத்தினதும் செயல்நிறைவேற்றத்தில் சட்ட மா அதிபருக்கு உதவும் ஏதேனும் அலுவலருக்கு இடையில் ஏதாவது தொடர்பாடல் உட்பட ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் வெளிப்படுத்துவதற்கு அனுமதிக்கப்படாத சேவைகளை வழங்கும் அத்தகைய வாழ்க்கைத்தொழில்புரிபவர் ஒரு வாழ்க்கைத்தொழில்புரிபவருக்கும் மற்றும் அரசாங்க அதிகாரத்திற்கும் இடையில் எதையேனும் மறுப்பதற்கான நிபந்தனையொன்றை இந்த வாசகம் முன்வைக்கின்றது.**

தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் முன்னிலையில் இந்தத் தீர்மானத்திற்கு **மாற்றம்** மேன்முறையீடு செய்துள்ளது.

தொழில் திணைக்களத்தினாலான முதலாவது பதிலிறுப்பினை நோக்குவதற்கு இங்கு "கிளிக்; செய்க. மேன்முறையீடு மீதான பதிலிறுப்பினை நோக்குவதற்கு இங்கு கிளிக்; செய்க.

**செல்வராஜா ராஜசேகர்**
மாற்றம் இணையத்தளத்திலிருந்து

# தகவல் அறியும்
# ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட
# ஒரு சில தீர்ப்புகள்

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் முன்னிலையில்

**பஷீர் சேகுதாவூத் எதிர் ஜனாதிபதி செயலகம்**

**RTIC Appeal/22/2017** *(16.10.2017 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் கூட்டத்தின் போது நடாத்தப்பட்டது)*

தலைவர்: திரு. மஹிந்த கம்மம்பில

ஆணைக்குழு உறுப்பினர்கள்: சிரேஷ்ட சட்டத்தரணி. செல்வி. கிஷாலி பின்டோ- ஜெயவர்த்தன
சிரேஷ்ட சட்டத்தரணி. திரு.எஸ்.ஜி. புஞ்சிஹேவா
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்

சமூகமளித்திருந்தவர்: பணிப்பாளர் நாயகம் திரு. பியதிஸ்ஸ ரணசிங்க

மேன்முறையீட்டாளர்: திரு. பஷீர் சேகுதாவூத்

அழைப்பு விடுக்கப்பட்டவர்: மாண்புமிகு ஜனாதிபதியின் செயலாளர் (குறித்தளிக்கப்பட்ட அதிகாரி)

ஆஜரானோர்/பிரதிநிதிப்படுத்தியோர்: திரு. பஷீர் சேகுதாவூத்
திருமதி. லக்ஸ்மி ஜயவிக்கிரம, மேலதிக செயலாளர் (சட்டம்), ஜனாதிபதி செயலகம்

மாண்புமிகு ஜனாதிபதியின் செயலாளர் வேறு பணிகளில் ஈடுபட்டுள்ளமையால் பகிரங்க அதிகாரசபையின் மேலதிக செயலாளர் (சட்டம்) திருமதி. ஜயவிக்கிரம அவரை பிரதிநிதித்துவப்படுத்த ஆணைக்குழுவிடம் அனுமதி கோரியிருந்தார். ஆணைக்குழுவும் அதற்கு அனுமதியளித்தது.

இந்த விசாரணையில் மேன்முறையீட்டாளரான திரு. பஷீர் சேகுதாவூத் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகரும் முன்னாள் தலைவருமான திரு. எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் உயிரிழக்க காரணமான 2000ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்து தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஆணைக்குழுவின் அறிக்கையை கோரியிருந்தார். ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்கள் (அப்போதைய ஜனாதிபதி) இவ்விபத்தின் சந்தர்ப்ப சூழ்நிலைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழுவொன்றை நியமித்திருந்தார்.

மேன்முறையீட்டாளார் (அக்காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர்) 2001 ஜனவரியில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் போது குறித்த விபத்து தொடர்பில் ஆராய ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென கோரியிருந்தார். மேலும் அரச உளவுத்துறை அதிகாரிகளை ஈடுபடுத்தி திரு. அஷ்ரப் அவர்களின் மரணத்திற்கு காரணமான விபத்து தொடர்பில் கண்டறியுமாறும் கேட்டுக்கொண்டார். இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நியமித்த பின்னர் மேன்முறையீட்டாளர் மீண்டுமொருமுறை நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது திரு. அஷ்ரப் அவர்களின் மரணத்திற்கு காரணமான விபத்து தொடர்பில் கண்டறிய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமென கோரிய போதும் அவரது கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்கவில்லை.

மேன்முறையீட்டாளர் அக்காலத்தில் இலங்கை குடிமக்களுக்கு தகவலறியும் உரிமை இல்லாமையால் தமது கோரிக்கை தொடர்பில் அதிகாரிகளுடன் தம்மால் தொடர்புகளை ஏற்படுத்தி கொள்ளமுடியவில்லை எனக் குறிப்பிட்டார். 2016 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலறியும் உரிமை சட்டம் இயற்றப்பட்டதையடுத்து 09.02.2017ஆம் திகதியிடப்பட்ட தகவல் கோரிக்கையொனறின் மூலம் திரு. அஷ்ரப் அவர்களின் மரணம் தொடர்பிலான விசாரணை

அறிக்கையை வெளியிடுமாறு மேன்முறையீட்டாளர் ஜனாதிபதி செயலகத்திடம் கோரியிருந்தார். 02.03.2017 அன்று அக்கோரிக்கைக்கு பதிலளித்த ஜனாதிபதி செயலகத்தின் தகவல் உத்தியோகத்தர் குறித்த அறிக்கை தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டதாக குறிப்பிட்டிருந்தார்.

20.03.2017 அன்று மேன்முறையீட்டாளருக்கு பகிரங்க அதிககாரசபை மேலும் ஒரு கடிதத்தை அனுப்பி அதில் கோரப்பட்ட தகவலை கண்டுபிடிக்க முடியாமையால் தகவல் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தது. மேன்முறையீட்டாளர் குறித்தளிக்கப்பட்ட அலுவலகரான மாண்புமிகு ஜனாதிபதியின் செயலாளருக்கு 27.03.2017 அன்று மேன்முறையீட்டினை மேற்கொண்டிருந்தார். அதற்கு 25.04.2017 அன்று அனுப்பிய பதில் கடிதத்தில் கோரப்பட்டா தகவலை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் அத்தகவல்கள் 12 ஆண்டுகளுக்கு முன்னையவை என்றும் குறித்தளிக்கப்பட்ட அதிகாரி பதிலளித்து தகவல் கோரிக்கையை நிராகரித்திருந்தார். இதனையடுத்து 08.05.2017 அன்று மேன்முறையீட்டாளர் தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்திருந்தார்.

மேன்முறையீட்டாள்ர் அரசாங்கம் குறித்த அறிக்கையை வெளியிட வேண்டுமென தாம் எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார். மேலும் அவர் நீதியரசர்.எல். கே.ஜி. வீரசேகர தலைமையிலான விசாரணை ஆணைக்குழு 1 ஜனவரி 2001 வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியின் படி நியமிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். எனினும் தாம் அனைத்து வர்த்தமானிகளையும் ஆராய்ந்த போதும் குறித்த நியமனம் தொடர்பில் எவ்வித தகவலையும் காணக்கிடைக்கவில்லை எனவும் குறிப்பிட்டர். மேலும் தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திலோ அல்லது தேசிய நூலகத்திலோ இவ்விடயம் தொடர்பில் எவ்வித தகவலும் காணப்படவில்லையெனவும் அவர் குறிப்பிட்டார். மேலும் அக்காலத்தில் குறித்த விசாரணை அறிக்கை நிறைவு செய்யப்பட்டு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதாக செய்திதாள்களில் செய்திகள் வந்ததாகவும் குறிப்பிட்டார். அத்துடன் பகிரங்க அதிகாரசபையினால் அவருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் குறித்த விடயம் தொடர்பான கோப்பு 2007ஆம் ஆண்டு வரை பகிரங்க அதிகார சபையிடம் காணப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

இவ்விடயங்களுக்கு பதிலளிக்கும் போது திருமதி. ஜெயவிக்கிரம குறித்த விசாரணை அறிக்கையை கண்டுபிடிப்பதற்கு தகவல் உத்தியோகத்தர் தம்மாலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாக குறிப்பிட்டார். மேலும் சுவடிகள் திணைக்களத்திடம் இவ்விடயம் தொடர்பிலுள்ள கோப்பையும் பெற்று தகவல் உத்தியோகத்தர் ஆராய்ந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். எனினும் இவ்விடயம் தொடர்பிலான விசாரணை அறிக்கை அதில் காணப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். 12.01.2007 அன்று குறித்த கோப்பு சுவடிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதான பதிவு மாத்திரமே உள்ளதெனவும் அவர் குறிப்பிட்டார். குறித்த அறிக்கை ஜனாதிபதி செயலகத்திடம் காணப்படாமையால் இவ்விடயம் தொடர்பிலான மேன்முறையீட்டாளரின் கோரிக்கையை பூர்த்தி செய்ய பகிரங்க அதிகாரசபையினால் இயலவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

திருமதி. ஜயவிக்கிரம, மேன்முறையீட்டாளர் 1 ஜனவரி 2001இல் வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியை தம்மால் கண்டுபிடிக்க இயலவில்லை எனக் குறிப்பிட்ட போதும் தமது தகவல் கோரிக்கையில் அதனை உள்ளடக்கவில்லை எனக் குறிப்பிட்டார். குறித்த வர்த்தமானியும் தற்போது தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திடமுள்ள கோப்பில் இருக்க கூடும் எனவும் குறிப்பிட்டார்.

**ஆணை**

ஆணைக்குழு முன் சமர்ப்பிக்கப்பட்ட காரணங்களை அடிப்படையாக கொண்டு குறித்த விடயம் தொடர்பிலான கோப்பு தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திடம் இருப்பது தெளிவாகிறது. எனினும் குறித்த கோப்பில் விசாரணை அறிக்கை இல்லை எனவும் தெரிவிக்கப்படும் நிலையில்

இவ்விசாரணையின் ஒரு கட்சிக்காரராக தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்தை இணைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

1973ஆம் ஆண்டு 48ஆம் இலக்க தேசிய சுவடிகள் காப்பக திணைக்கள சட்டத்தின் பிரிவு 11இன் படி,
*''ஏதாயினும் விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு அல்லது அமைச்சரால் நியமிக்கப்படும் விசாரணை குழுக்கள் ஆகியவற்றின் செயலாளர் அவற்றின் அனைத்து பதிவுகள், அறிக்கைகள் அனைத்தையும் குறித்த ஆணைக்குழு மற்றும் குழுக்களின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு 3 மாத காலப்பகுதிக்குள் அவ்வறிக்கையை தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்''.*

பொதுமக்கள் அணுகல் மற்றும் பொது சுவடிகள் தொடர்பிலான விடயங்கள் தொடர்பில் தேசிய சுவடிகள் காப்பக சட்டத்தின் பிரிவு 16(d) இன் கீழ் இயற்றப்பட்டு 5 டிசம்பர் 1978 அன்று அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் பந்தி 2 இன் படி.
*"சட்டத்தின் பிரிவு 10,11 அல்லது 18 இன் படி அரச அலுவலகங்களால் தேசிய சுவடிகள் காப்பகத்திற்கு கொடுக்க வேண்டிய ஆவணங்கள் அவை தயாரிக்கப்பட்ட காலப்பகுதியில் இருந்து 30 ஆண்டுகால பகுதிக்கு பொதுமக்கள் பார்வைக்கு தடைசெய்யப்படலாம் அல்லது அவற்றில் குறித்த காலப்பகுதிவரை குறித்த ஆவணங்கள் அவற்றை தயாரித்த அரச அலுவலகங்களால் பொதுமக்கள் பாவனைக்கு தடைசெய்யப்படலாம்''.*

அதனடிப்படையில் தேசிய சுவடிகள் பாதுகாப்பு திணைக்களம் அடுத்த விசாரணைக்கு சமூகமளிக்க வேண்டுமென அறிவிக்கப்படுகின்றது. மேலும் குறித்த விடயம் தொடர்பிலான கோப்பையும் ஆணைக்குழுவின் பரிசோதனைக்காக எடுத்து வரும்படி தேசிய சுவடிகள் பாதுகாப்பு திணைக்களத்துக்கு உத்தரவிடப்படுகின்றது.

மேன்முறையீடு இத்தால் ஒத்திவைக்கப்பட்டது.

அடுத்த விசாரணை 2017 நவம்பர் 20ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

*****

**RTIC Appeal/22/2017** *(20.11.2017 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் கூட்டத்தின் போது நடாத்தப்பட்டது)*

| | |
|---|---|
| தலைவர்: | திரு. மஹிந்த கம்மம்பில |
| ஆணைக்குழு உறுப்பினர்கள்: | சிரேஷ்ட சட்டத்தரணி. செல்வி. கிஷாலி பின்டோ- ஜெயவர்த்தன<br>சிரேஷ்ட சட்டத்தரணி. திரு.எஸ்.ஜி. புஞ்சிஹேவா<br>கலாநிதி. செல்வி திருச்சந்திரன் |
| மேன்முறையீட்டாளர்: | திரு. பஷீர் சேகுதாவூத் |
| அழைப்பு விடுக்கப்பட்டவர்: | மாண்புமிகு ஜனாதிபதியின் செயலாளர் (குறித்தளிக்கப்பட்ட அதிகாரி) |
| ஆஜரானோர்/பிரதிநிதிப்படுத்தியோர்: | திரு. பஷீர் சேகுதாவூத்<br>திருமதி. லக்ஸ்மி ஜயவிக்கிரம, மேலதிக செயலாளர் (சட்டம்), ஜனாதிபதி செயலகம் |

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் முன்னிலையில்

கலாநிதி. என்.ரி. ரூபசிங்க, பணிப்பாளர் நாயகம், தேசிய சுவடிகள் காப்பக திணைக்களம்
திருமதி. டிலினி லியனகே, பிரதி பணிப்பாளர், தேசிய சுவடிகள் காப்பக திணைக்களம்

தேசிய சுவடிகள் காப்பு திணைக்கள பிரதிநிதிகளும் இவ்விசாரணையின் போது சமூகமளித்திருந்தனர். தேசிய சுவடிகள் காப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நதீரா ரூபசிங்க அவர்கள் திரு. எம்.எச்.எம். அஷ்ரப்பின் மரணம் தொடர்பிலான விசாரணை ஆணைக்குழு அறிக்கை பற்றிய கோப்பை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தார். இவ்விடயம் தொடர்பிலான ஆவணங்களை உள்ளடக்கிய கோப்பு தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திற்கு விசாரணை ஆணைக்குழுவின் செயலாளரான ஜி.கே.ஜி. பெரொராவினால் தேசிய சுவடிகள் காப்பக சட்டத்தின் பிரிவு 11இன் படி 24.01.2002 அன்று அனுப்பப்பட்டது.

பிரிவு 11 இவ்வாறு குறிப்பிடுகிறது:
*''ஏதாயினும் விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு அல்லது அமைச்சரால் நியமிக்கப்படும் விசாரணை குழுக்கள் ஆகியவற்றின் செயலாளர் அவற்றின் அனைத்து பதிவுகள், அறிக்கைகள் அனைத்தையும் குறித்த ஆணைக்குழு மற்றும் குழுக்களின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு 3 மாத காலப்பகுதிக்குள் அவ்வறிக்கையை தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்''.*

எவ்வாறாயினும் குறித்த கோப்பில் விசாரணை ஆணைக்குழுவின் பிரதி இணைக்கப்படவில்லை.

மேலும் தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திற்கு ஜனாதிபதி செயலகத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற கோப்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்களின் (இதன் பின்னர் 2007 கோப்பு என குறிப்பிடப்படும்) அனைத்து உத்தியோகபூர்வ ஆவணங்கள் காணப்பட்டன. குறித்த கோப்பு 18.05.2007 அன்று தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. எனினும் அக்கோப்பில் குறித்த விசாரணை அறிக்கை தொடர்பான ஆவணங்கள் காணப்பட்ட போதும் விசாரணை அறிக்கை காணப்படவில்லை. தேசிய சுவடிகள் காப்பக திணைக்களம் ஜனாதிபதி செயலகத்திடமிருந்து கிடைக்கும் ஆவணங்கள் தொடர்பிலான ஏற்பு கோப்பு (accession file) ஒன்றையும் பராமரித்து வருகிறது.

எனினும் பகிரங்க அதிகாரசபையை பிரதிநிதித்துவப்படுத்திய திருமதி. லக்ஸ்மி ஜயவிக்கிரம பகிரங்க அதிகாரசபையின் கோப்புகளின் படி குறித்த விசாரணை ஆணைக்குழு தொடர்பான கோப்பு 12.01.2007 அன்று தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். மேலும் பகிரங்க அதிகாரசபை கோப்புகளை அனுப்பிய பின் அது தொடர்பான கோப்புகளை பேணுவதில்லை என்றும் கோப்பு இலக்கத்தை மட்டும் பதிவு செய்து கொள்ளும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்விடயத்துடன் தொடர்புடைய 2007 கோப்பு தொடர்பாக ஆணைக்குழு வினவிய போது தேசிய சுவடிகள் காப்பக திணைக்கள பணிப்பாளர் நாயகம் தமக்கு அனுப்பப்பட்ட கோப்பில் விசாரணை அறிக்கையில் விசாரணை ஆணைக்குழுவால் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என முன்மொழியப்பட்ட மூன்று பக்கங்கள் ( பக்கங்கள் 69,70 மற்றும் 71) மட்டுமே காணப்பட்டதாக குறிப்பிட்டார்.

2007 கோப்பில் முன்னாள் ஜனாதிபதியின் ஆவணங்கள் உள்ளிட்ட பின்வரும் ஆவணங்கள் காணப்பட்டது

1. 13.08.2002 திகதியிடப்பட்டு முன்னாள் ஜனாதிபதியின் கையொப்பத்துடன் அப்போதைய விமானப்படை தளபதிக்கு அனுப்பிய கடிதத்தில் பின்வரும் இரு அறிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன்

- திரு. எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் மரணம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை குழுவின் அறிக்கை
- கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் மற்றும் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஆகியன மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை குழுவின் அறிக்கை

2. 13.08.2002 அன்று முன்னாள் ஜனாதிபதியால் அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் திரு. திலக் மாரப்பனக்கு அனுப்பிய கடிதத்தில் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை அனுப்புவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் முன்னாள் ஜனாதிபதியால் அப்போதைய பாதுகாப்பு அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் குறித்த விசாரணை அறிக்கையை பிரசுரிப்பதற்கு தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

விசாரணைகளின் போது தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கோப்பு 2007 இல் உள்ள சுருக்க குறிப்பொன்று தொடர்பாக ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டுவந்தார். ஜனாதிபதி செயலகத்தால் குறித்த கோப்பு பராமரிக்கப்பட்ட காலத்தில் ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளரால் 12.08.2002 அன்று இடப்பட்ட சுருக்க குறிப்பில் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

1. விசாரணை அறிக்கை 01.08.2002 அன்று மாண்புமிகு ஜனாதிபதியவர்களுக்கு கையளிக்கப்பட்டது. குறித்த அறிக்கையின் படி இந்த விபத்தானது திட்டமிட்ட ஒன்றல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இவ்விபத்து எவ்வித வெடிப்பு சம்பவம் காரணமாக இடம்பெறவில்லை. இந்த விபத்து விமான பணியாளர்களின் கவனக்குறைவாலே இடம்பெற்றதாகவும் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அவர்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருந்தது.
2. குறித்த விசாரணை அறிக்கை திருமதி. மானெல் அபேரத்னவுக்கு அனுப்பப்பட்டதாக செப்டம்பர் 2002 இடப்பட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. அறிக்கையின் 69, 70 மற்றும் 71 பக்கங்களில் உள்ள முன்மொழிவுகளில் சில தரப்பினருக்கு ரூபா. 8 மில்லியனுக்கு நஷ்ட ஈட்டை வழங்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திற்கு, பொதுமக்களுக்கு ஆவணங்களின் பிரதிகளை வழங்க தேசிய சுவடிகள் காப்பக சட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்படவில்லை, என பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

தற்போது திணைக்களத்திடம் உள்ள கோப்பு 24.01.2002 அன்று தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திற்கு ஆணைக்குழுவின் செயலாளரால் அனுப்பப்பட்டதாக பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். சுமார் 300 பக்கங்களுக்கு மேற்பட்ட சுமார் 64 ஆவணங்கள் பெட்டிகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**ஆணை**

தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திடம் உள்ள இந்த இரகசிய ஆவணங்களை திணைக்கள ஊழியர்கள் கூட ஆராய சட்டத்தில் இடமில்லை எனவும் ஜனாதிபதி செயலகம் மற்றும் விசாரணை ஆணைக்குழுவின் செயலாளர் ஆகியோரிடம் முறையான அனுமதியை

பெற்றே குறித்த ஆவணங்களை ஆராயவோ அல்லது பொதுமக்களுக்கு வெளியிட வேண்டும் என்ற கடப்பாடு தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திடம் இருப்பதை ஆணைக்குழு கவனத்திலெடுக்கின்றது.

2016ஆம் ஆண்டு 12ஆம் இலக்க தகவலறியும் உரிமை சட்டத்தின் பிரிவு 4 பின்வருமாறு குறிப்பிடுகிறது,

*“இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் பயனுறுவதாதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க, இச்சட்டத்தினதும் அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு உள்ள விடயத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றலும் வேண்டும்”.*

இதனடிப்படையில் தகவலறியும் உரிமை சட்ட ஏற்பாடுகள் தேசிய சுவடிகள் காப்பக சட்டம் மற்றும் தொடர்புடைய ஒழுங்குவிதிகள் ஆகியவற்றை விட மேலோங்கி காணப்படும்.

விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை காணாமல் போனமையானது பொதுமக்கள் நலனுடன் தொடர்புடைய விடயமாகும். மேலும் இந்த ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 5இல் விலக்களிக்களிக்கப்பட்டுள்ள விடயங்களை வெளியிடுமாறு கோரவில்லை. பகிரங்க அதிகாரசபையினால் 20.03.2017 அன்று திகதியிட்டு மேன்முறையீட்டாளருக்கு அனுப்பிய கடிதம் மற்றும் 18.08.2017 என திகதியிட்டு ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்த எழுத்துமூல விளக்கம் ஆகியவற்றில் கோரப்படும் ஆவணத்தை கண்டுபிடிக்க இயலவில்லை என்பது புலனாகிறது.

இதனடிப்படையில் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு 1948ஆம் ஆண்டு 17ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான பின்வரும் விபரங்களை வெளியிடுமாறு ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

1. ஆணைக்குழுவின் விசாரணையின் சுருக்கம் மற்றும் குறித்த கோப்பு 18.05.2007 அன்று ஜனாதிபதி செயலகத்தினால் சுவடிகள் காப்பக திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளரால் இடப்பட்ட 12.08.2002 திகதியிட்ட சுருக்க குறிப்பின் பிரதி.
2. விசாரணை ஆணைக்குழுவின் முன்மொழிவுகள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நஷ்ட ஈட்டை வழங்க சிபாரிசு செய்யும் விடயங்களை உள்ளடக்கிய கோப்பில் உள்ள விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் 3 பக்கங்களின் பிரதிகள்

1948ஆம் ஆண்டு ஆணைக்குழு விசாரணை சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்களின் அனைத்து ஆவணங்களும் 1973ஆம் ஆண்டு 48ஆம் இலக்க தேசிய சுவடிகள் காப்பக சட்டத்தின் பிரிவு 11இன் படி தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட வேண்டும். குறித்த விசாரணை அறிக்கை அச்சட்டத்தின் கீழான பிரதான ஆவணமாக கருதப்படும். அதனடிப்படையில் விசாரணைக்கு பொறுப்பான அரச நிறுவனம் அல்லது விசாரணை ஆணைக்குழுவின் செயலாளர் ஆகியோரை தொடர்பு கொண்டு குறித்த விசாரணை சட்டத்தின் பிரகாரம் ஆவணங்கள் முறையாக அனுப்பப்பட்டுள்ளதா என்பதை அறிந்துகொள்ளும் உரிமை திணைக்களத்திற்கு உண்டு. இவ்வாறு ஏதாயினும் முரண்பாடுகள் இருப்பின் அவற்றை உத்தியோகபூர்வமாக தெளிவாக்கி கொள்ள வேண்டியது திணைக்களத்தின் கடமையாகும்.

பகிரங்க அதிகாரசபை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்களின் ஆவணங்கள் உள்ளடங்கிய கோப்புக்களை 2007ஆம் ஆண்டு தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளது. மேலும் பகிரங்க அதிகாரசபை மற்றும் சுவடிகள் காப்பக திணைக்களம் ஆகியவற்றின் ஆவண பரிமாற்றம் தொடர்பிலான திகதிகள் முரணாக காணப்படுகின்றமையும் கவனிக்க வேண்டிய விடயமாகும். பகிரங்க அதிகாரசபை உரிய கோப்பு

12.01.2007 அன்று கையளிக்கப்பட்டதாக தெரிவிக்கின்ற அதேவேளை தேசிய சுவடிகள் காப்பக திணைக்களம் 18.05.2007 அன்றே குறித்த கோப்பு தமக்கு கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ளது. எனவே இவ்விடயம் தொடர்பில் தெளிவற்ற தன்மை நிலவுகிறது.

விசாரணை ஆணைக்குழுவினால் 24.01.2002 திகதியிடப்பட்ட கோப்பில் உள்ளடங்கியுள்ள ஆவணங்களில் குறித்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை உள்ளதா என்பதை பரிசீலிக்குமாறு சுவடிகள் காப்பக திணைக்களம் கோரப்படுகிறது.

மேலும் 24.01.2002 அன்று திகதியிட்டு விசாரணை ஆணைக்குழுவின் செயலாளரால் அனுப்பப்பட்ட ஆவணங்களின் பட்டியலை வெளியிடுமாறு இத்தால் உத்தரவிடப்படுகிறது.

அடுத்த விசாரணை 16.01.2017 அன்று இடம்பெறும்.

இவ்விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

*****

## *எச். சி. எஸ். டி சொய்ஸா சிறிவர்தன எதிர். இலங்கை இராணுவம்*[1]

**"உச்ச வெளிப்படுத்துகை கோட்பாடு தொடர்பான சட்டத்தின் வெளிப்படையான எண்ணத்திற்கு மற்றும் உட்கிடையான மெய்ப்பொருளுக்கு உயிர்க்கொடுக்க வேண்டிய நியதிச் சட்டக் கடப்பாட்டினால் ஆணைக்குழு பிணைக்கப்படுகின்றது. இக்கோட்பாடானது சட்டத்தின் பிரிவு 5(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்குகள் வேண்டப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமே தகவலுக்கான உரிமை மறுக்கப்படலாம் என குறிப்பிடுகின்றது. இலங்கை இராணுவம் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பரப்பிற்குள் உள்ளடக்கப்படுகின்ற ஒரு பகிரங்க அதிகார சபை என்பதும் ஆகவே சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கிக் கொள்வதற்கான நியதிச்சட்டக் கடப்பாடு அதற்கு உண்டு என்பதும் குறித்துக் கொள்ளப்படுகின்றது."**

**தீர்மானம்:** நீதிமன்ற அழைப்பாணை, மூன்றாந் திறத்தவர்களின் அந்தரங்கம் பாதிக்கப்படுமென்பதனால் அவர்களால் வழங்கப்பட்ட சான்றுகளைத் தவிர்த்த விசாரணை அறிக்கை, விசாரணையின் அவதானிப்புக்கள் மற்றும் முடிவுகள் மற்றும் அது தொடர்பான ஆவணங்கள் மற்றும் விசாரணை முடிவினை வரைந்த நபர்களின் தகைமைகள் என்பனவற்றை வெளிப்படுத்த வேண்டுமென பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது.

**பிரதான விடயங்கள்:** கட்டாய நடபடிமுறைகள்- பின்விளைவுகள்/ விசாரணை அறிக்கைகள் /அந்தரங்கம் (பிரிவு 5(1)(அ)) / வேறாக்குதல் (பிரிவு 6)

**சுருக்க நிகழ்வு பின்னணி**

தகவல் 02.05.2017 அன்று கோரப்பட்டது.

இவ்வழக்கில் மேன்முறையீட்டாளர் மேஜர் ஜெனரல் (சட்டத்தரணி) ஆர்.பி. ராஜபதிரண, ஆர்.எஸ்.பி யு.எஸ்பி என்பவரால் தனக்கு புரியப்பட்ட பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக இலங்கை இராணுவத்தின் (பகிரங்க அதிகார சபை) விசேட நீதிமன்றத்தினால் நடாத்தப்பட்ட விசாரணை தொடர்பில் கீழ்வரும் விடயங்களைக் கோரியிருந்தார்:

1. ஆரம்ப விசாரணைகளை நடத்துமாறு நீதிமன்றத்தினால் 01.08.2014 அன்று வழங்கப்பட்ட அழைப்பாணைகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி

2. கையால் எழுதப்பட்ட நீதிமன்றத்தின் ஆரம்ப விசாரணை அறிக்கையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி

3. அவதானிப்புக்கள் மற்றும் முடிவுகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி

[1]தகவல் அறியும் ஆணைக்குழுவிற்கான மேன்முறையீடு (தனி நபர் விசாரணை) 89/2017. 06.11.2017, 27.11.2017, 30.01.2018, 23.02.2018, 16.03.2018, 03.04.2018, 30.05.2018, 17.07.2018,31.07.2018, 14.08.2018, 02.10.2018, 09.10.2018 & 30.10.2018 போன்ற தினங்களில் இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ சந்திப்பின் அங்கங்களாக இம்மேன்முறையீடு கேட்கப்பட்டது.

4. அது தொடர்பான பிற ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி

5. இராணுவ தளபதியினால் மேற்கொள்ளப்பட்ட முடிவின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி

6. ஆரம்ப விசாரணைகளில் நீதிமன்ற சட்ட அதிகாரிகளும் சாட்சிகளாகக் காணப்பட்டமையினால், இராணுவ தளபதியினால் மேற்கொள்ளப்பட்ட முடிவினை வரைந்த/ தயாரித்த அலுவலர் அல்லது அலுவலர்களின் விபரங்கள்/தகைமைகள்

மேன்முறையீட்டாளரினால் முன்வைக்கப்பட்டத் தகவல் கோரிக்கைக்கு பதிலிறுத்த தகவல் அலுவலர் மேஜர் ஜெனரல் ஏ.டபிள்யூ.எம்.பி.ஆர். செனவிரத்ன 12.05.2017 எனத் திகதியிடப்பட்டக் கடிதத்தினூடாக கோரப்பட்டுள்ளத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும்பொருட்டு குறிப்பிட்டத் தகவல் கோரிக்கையை மேன்முறையீட்டாளரின் மேற்பார்வையாளர் மற்றும் (அல்லாவிடின்) இராணுவக் கட்டளைத் தளபதிக்கு அனுப்புமாறு மேன்முறையீட்டாளரரைப் பணித்திருந்தார்.

தகவல் அலுவலரிடமிருந்து மேற்படிக் கடிதத்தினைப் பெற்றுக் கொண்ட மேன்முறையீட்டாளர் 14.05.2017 அன்று அவருடைய தகவல் கோரிக்கையினை அவரது மேற்பார்வையாளருக்கு அனுப்பினார். மேற்பார்வையாளரிடமிருந்து எவ்வித பதிலினையும் பெற்றுக் கொள்ளாமையினால் மேன்முறையீட்டாளர் 05.06.2017 அன்று குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு அதாவது இராணுவ தளபதிக்கு மேன்முறையீடு செய்தார். குறித்தளிக்கப்பட்ட அலுவலர் மேன்முறையீட்டிற்கு பதிலிறுக்கவில்லை. மேன்முறையீட்டாளர் 28.08.2017 அன்று ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்தார்.

**இடைக்கால ஆணை**[2]

குறிப்பிட்ட இவ்விடயத்தில், தகவலுக்கான உரிமைச் சட்டத்தின்கீழ் மேன்முறையீட்டாளரினால் கோரப்பட்டத் தகவல்களை பகிரங்க அதிகார சபை வழங்கியிருக்கவில்லை என்பதுடன் கோரப்பட்டத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இலங்கை இராணுவச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பகிரங்க அதிகார சபையின் உள்ளக நடபடிமுறைகளைப் பின்பற்றும்படி மேன்முறையீட்டாளரைக் கோரியிருந்தது. தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 25, தகவல் அலுவலர் தகவல் கோரிக்கையொன்றினைப் பெற்றுக் கொள்கின்றபோது ஒன்றில் அதனை ஏற்க வேண்டும் அல்லது அதனை சட்டத்தின் பிரிவு 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு அல்லது பல காரணிகளின் அடிப்படையில் நிராகரிக்க வேண்டும் என்பதுடன் அத்தகைய அவரது தீர்மானத்தினை, கோரிக்கையை முன்வைத்த பிரஜைக்கு உடனடியாக அறிவிக்க வேண்டுமென மிகத் தெளிவாகக் கூறுகின்றது.

உச்ச வெளிப்படுத்துகை கோட்பாடு தொடர்பான **வெளிப்படையான எண்ணத்திற்கு மற்றும் உட்கிடையான மெய்ப்பொருளுக்கு** உயிர்க்கொடுக்க வேண்டிய நியதிச் சட்டக் கடப்பாட்டினால் ஆணைக்குழு பிணைக்கப்படுகின்றது. இக்கோட்பாடானது சட்டத்தின் பிரிவு 5(1) இல்

[2] 06.11.2017 அன்று வழங்கப்பட்டது.

குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்குகள் வேண்டப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமே தகவலுக்கான உரிமை மறுக்கப்படலாம் என குறிப்பிடுகின்றது. இலங்கை இராணுவம் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பரப்பிற்குள் உள்ளடக்கப்படுகின்ற ஒரு பகிரங்க அதிகார சபை என்பதும் ஆகவே சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கிக் கொள்வதற்கான நியதிச்சட்டக் கடப்பாடு அதற்கு உண்டு என்பதும் குறித்துக் கொள்ளப்படுகின்றது. 02.05.2017 அன்று மேன்முறையீட்டாளரினால் மேற்கொள்ளப்பட்ட தகவலுக்கான கோரிக்கை கவனத்திலெடுக்கப்பட்டுள்ள முறையில் சட்டத்தின் 25 ஆம் பிரிவோ அல்லது பிரிவு 5(1) இன் உபபிரிவுகளோ பின்பற்றப்படவில்லை.

மேன்முறையீட்டாளரினால் மேற்கொள்ளப்பட்டுள்ள தகவல் கோரிக்கையின் சில அம்சங்கள் உதாரணமாக நீதிமன்ற அழைப்பாணை போன்ற கோரிக்கைகள் இயற்கை நீதிக் கோட்பாட்டினால் நியாயப்படுத்தப்படுகின்றமையினால், 02.05.2017 அன்று மேன்முறையீட்டாளரினால் முன்வைக்கப்பட்ட தகவலுக்கான இக்கோரிக்கையினை சட்டத்தின் பிரிவு 25 இற்கு அமைவாகக் கவனத்திற் கொண்டு அக்கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதா அல்லது தகவலுக்கான உரிமை சட்டத்தின் பிரிவு 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் காரணிகளின் அடிப்படையில் நிராகரிக்கப்படக்கூடியதா என்ற தமது தீர்மானத்தினை ஆணைக்குழுவிற்கு அறிவிக்குமாறு பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது.

**இடைக்கால ஆணை**[3]

…ஆரம்ப விசாரணை அறிக்கைகளை வெளியிடுதல் அதன் பின்னரான விசாரணைகள் மற்றும் நீதிமன்றச் செயன்முறைகளில் நீதித்துறையின் அதிகாரம் மற்றும் பக்கச் சார்பற்றத் தன்மையினைப் பேணுதலைப் பங்கப்படுத்தலாம் என்பதனால் அவற்றின் வெளியிடுகை தொடர்பில் பொதுவாக ஆணைக்குழு மிகக் கவனத்துடனேயே செயற்படும். எவ்வாறெனினும், இச்சந்தர்ப்பத்தில் இராணுவத் தளபதியினால் மேற்கொள்ளப்பட்ட முடிவு மேலதிக நடவடிக்கையெதனையும் தோற்றுவிக்காதமையினால் (ஆணைக்குழுவின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டு மேன்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட தகவல் கோரிக்கையின் 5 ஆவது அம்சம்), கையால் எழுதப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கையின் பிரதிகளையும் (இது தகவல் கோரிக்கையின் 2 மற்றும் 3 ஆம் அம்சங்களை உள்ளடக்கும்), மூன்றாந் திறத்தவர்களின் அந்தரங்கத்தினைப் பாதிக்கின்ற பகுதிகள் நீக்கப்பட்ட குறிப்பிட்ட அறிக்கையின் சுருக்கத்தினையும் ஆணைக்குழுவின் ஆராய்விற்காக சமர்ப்பிக்க வேண்டுமென பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது. இராணுவத் தளபதியின் முடிவு மற்றும் ஆணைக்குழுவின் முன்னிலையில் எழுத்துமூலமாக மற்றும் வாய்மொழி மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட சமர்ப்பிப்புக்களினூடாக வெளிப்படுகின்ற விசாரணையின்போது மேன்முறையீட்டாளருக்கு தொடர்ச்சியாக இடம்பெற்ற ஆழமான அநீதி தொடர்பான வலியுறுத்தல்கள் என்பனவற்றை விரிவாக ஆராய்ந்து பார்த்ததன் பின்னர் விசாரணை நடபடிமுறைகளின் பிரதியினை வழங்குவதனால் பகிரங்க அதிகார சபைக்கு ஏதேனும் பங்கம் ஏற்படுத்தப்படுமென ஆணைக்குழு கருதவில்லை.

[3] 30.01.2018 அன்று வழங்கப்பட்டது.

**இடைக்கால ஆணை[4]**

விசாரணை அறிக்கை மற்றும் பகிரங்க அதிகார சபையினால் கையளிக்கப்பட்ட சுருக்கம் என்பனவற்றை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது குறிப்பிட்ட சுருக்கம் விசாரணை அறிக்கையினை போதுமானளவு பிரதிபலிக்கவில்லை என்பது தெளிவாகின்றது. பகிரங்க அதிகார சபையினால் வழங்கப்பட்ட சுருக்கமும், விசாரணை அறிக்கையிலுள்ள அவதானிப்புக்கள் மற்றும் முடிவுகள் முழுமையாகவும் இன்று மேன்முறையீட்டாளருக்கு வழங்கப்பட வேண்டுமென பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது.

குறிப்பாக மேன்முறையீட்டாளருக்கு சார்பான சான்றுகள் போதுமானளவில் சுருக்கத்தில் பிரதிபலிக்கப்படவில்லை என்பது குறித்துக் கொள்ளப்படுகின்றது. மேன்முறையீட்டாளருக்கு சார்பாக சாட்சிகளால் வழங்கப்பட்ட சான்றுகளை முழுமையாக மேன்முறையீட்டாளருக்கு வழங்க வேண்டுமென பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது. இது 5, 12, 16, 17 மற்றும் 18 ஆவது சாட்சிகளையும் உள்ளடக்கும். மேலும், குறிப்பிட்ட தகவலை வெளியிடுவதனால் அந்தரங்கம் பாதிக்கப்படுமென கருதப்படுகின்ற நபர்களுடைய பெயர்ப்பட்டியலையும் (பகிரங்க அதிகார சபையினால் முன்னைய விளக்கங்களின்போது வேண்டப்பட்டதற்கமைய) அவ்வாறு கருதுவதற்கான அடிப்படையினையும் தயாரிக்குமாறு பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது.

**இடைக்கால ஆணை[5]**

அந்தரங்கம் பாதிக்கப்படும் என்ற காரணத்தின் அடிப்படையில் தமது சான்றினை அல்லது அவற்றின் பகுதிகளை வெளியிடுவதற்கு உடன்படாத இரண்டு பெண் அலுவலர்களிடமிருந்தும் அவர்களுடைய நிலைப்பாடு குறித்த ஒரு உத்தியோகபூர்வ உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளுமாறு பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது. அவ்விரண்டு அலுவலர்கள் தொடர்பான விடயங்கள்/ அவர்களது சான்று தவிர்ந்த ஏனைய விசாரணை அறிக்கையினை வெளியிட முடியாமைக்கான காரணமெதுவும் உள்ளதாக ஆணைக்குழு கருதவில்லை.[6]

குறித்தளிக்கப்பட்ட அலுவலரின் தீர்மானம் மாற்றப்பட்டது. குறிப்பிட்ட பகுதிகளை நீக்கிவிட்டு தகவல் வழங்கப்பட்டது.

---

4 30.01.2018 அன்று வழங்கப்பட்டது.

5 30.01.2018 அன்று வழங்கப்பட்டது.

6 17.07.2018 அன்று வழங்கப்பட்ட ஆணையின் ஊடாக, குறிப்பிட்ட இரண்டு அலுவலர்களினால் வழங்கப்பட்ட மூலச் சான்று, குறுக்கு விசாரணை மற்றும் மீள் விசாரணையின்போது வழங்கப்பட்ட சான்று மற்றும் சட்டத்தின் பிரிவு 5(1)(அ) இற்கு அமைவாக அவ்விரண்டு அலுவலர்களின் அந்தரங்கத்தினைப் பாதிக்கின்ற மேன்முறையீட்டாளர் உள்ளடங்கலாக ஏனையோரால் வழங்கப்பட்ட சான்று என்பனவற்றை நீக்குவதற்காக குறிப்பிட்ட விசாரணை அறிக்கை மீண்டும் பகிரங்க அதிகார சபைக்கு வழங்கப்பட்டது (குறிப்பிட்ட விசாரணை அறிக்கையின் மூலப்பிரதியினை ஆணைக்குழு வைத்துக்கொண்டது). இந்நீக்குதல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை ஆணைக்குழு மேற்பார்வை செய்துள்ளது. 02.10.2018 எனத் திகதியிடப்பட்ட ஆணையின் ஊடாக குறிப்பிட்டப் பகுதிகள் நீக்கப்பட்ட அறிக்கை மேன்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டது.

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் முன்னிலையில்

**பைஸல் சமாத் எதிர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்**

**RTIC Appeal (நேரடி)/201/2017** *(06.02.2018 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் கூட்டத்தின் போது நடாத்தப்பட்டது)*

*தகவலறியும் உரிமை சட்டம் பிரிவு 32(1)க்கமைவான ஆணையும் தகவலறியும் உரிமைக்கான ஒழுங்குவிதிகள்-2017 (கட்டணங்கள் மற்றும் செயன்முறை) இன் விதி 28இற்கமைவான ஆணைக்குழுவின் செயன்முறை பதிவும்.*

தலைவர்: திரு. மஹிந்த கம்மம்பில

ஆணைக்குழு உறுப்பினர்கள்: சிரேஷ்ட சட்டத்தரணி. செல்வி. கிஷாலி பின்டோ- ஜெயவர்த்தன
சிரேஷ்ட சட்டத்தரணி. திரு.எஸ்.ஜி. புஞ்சிஹேவா
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்
நீதியரசர் ரோஹினி வல்கம

சமூகமளித்திருந்தவர்: பணிப்பாளர் நாயகம் திரு. பியதிஸ்ஸ ரணசிங்க

மேன்முறையீட்டாளர்: பைஸல் சமாத்

அழைப்பு விடுக்கப்பட்டவர்: கே.ஓ.டி.டி. பெர்னாண்டோ, பொது முகாமையாளர், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

**ஆஜரானோர்/பிரதிநிதித்துவப்படுத்தியோர்**

மேன்முறையீட்டாளர்- பைஸல் சமாத்

பகிரங்க அதிகாரசபை- திருமதி. ஜி. என். கே. பெரேரா, சட்ட அலுவலகர், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

| | |
|---|---|
| **தகவல் கோரிக்கை முன்வைக்கப்பட்டது:** | 03.07.2017 |
| **தகவல் உத்தியோகத்தரின் பதில்** | 06.07.2017 |
| **குறித்தளிக்கப்பட்ட அதிகாரியிடம் மேன்முறையீடு** | 13.07.2017 |
| **குறித்தளிக்கப்பட்ட அதிகாரியின் பதில்** | 10.08.2017 |
| **தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு** | 17.10.2017 |

விசாரணையின் போது மேன்முறையீட்டாளர் சமூகமளித்திருந்தார். பகிரங்க அதிகாரசபையை திருமதி. ஜி. என். கே. பெரேரா, சட்ட அலுவலகர் பிரதிநிதித்துவம் செய்திருந்தார்.

**பின்னணி**

மேன்முறையீட்டாளரால் 03.07.2017 அன்று திகதியிட்ட தகவல் கோரிக்கையின் கீழ்வரும் விடயங்கள் கோரப்பட்டிருந்தன.

*"இலங்கை மற்றும் சவுதி அரேபியா, இலங்கை மற்றும் கட்டார், இலங்கை மற்றும் குவைத் ஆகிய நாட்டு அரசாங்கங்களுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட குடிபெயர் பணியாளர் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அல்லது இரு தரப்பு உடன்படிக்கைகள்"*

தகவல் உத்தியோகத்தரால் 06.07.2017 அன்று மேன்முறையீட்டாளருக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சலில் 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க இலங்கை தகவல் அறியும் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 5 (ஆ) (ii) (sic) குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிப்பு தொடர்பான விடயங்களை அடிப்படையாக கொண்டு குறித்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் மேன்முறையீட்டாளர் 13.07.2017 அன்று குறித்தளிக்கப்பட்ட அதிகாரியிடம் மேன்முறையீட்டை மேற்கொண்டார். அவ்வாறு மேற்கொண்ட மேன்முறையீட்டிற்கு குறித்தளிக்கப்பட்ட அதிகாரியினால் 10.08.2017 அன்று அனுப்பப்பட்ட மின்னஞ்சல் மூலமான பதிலில் தகவல் உத்தியோகத்தரின் பதிலை உறுதிப்படுத்தி அனுப்பப்பட்டிருந்தது. இதனையடுத்து மேன்முறையீட்டாளர் 17.10.2017 அன்று தகவல் அறியும் ஆணைக்குழுவிடம் மேன்முறையீட்டை மேற்கொண்டிருந்தார்.

**ஆணைக்குழுவின் விசாரணையின் போது பரிசீலிக்கப்பட்ட விடயங்கள்**

பகிரங்க அதிகாரசபையினால் தகவலறியும் உரிமை சட்டத்தின் பிரிவு 5 (1) (ஆ) (ii) மற்றும் பிரிவு 5 (1) (இ) (v) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிப்பு தொடர்பான விடயங்களை காரணம் காட்டி தகவல் கோரிக்கை மறுக்கப்பட்டுள்ளது.

பிரிவு 5 (1) (ஆ) (ii) இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது

5(1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக,-

(ஆ) அத்தகைய தகவல் வெளியிடுகையானது-

(ii) அத்தகைய தகவல் இரகசியமாகத் தரப்பட்டு அல்லது அதிலிருந்து பெற்றப்பட்டு உள்ளவிடத்து, ஏதேனும் அரசுடனான அல்லது சர்வதேச சட்டத்தின் கீழ் சர்வதேச உடன்படிக்கைகள் அல்லது கடப்பாடுகள் தொடர்பில் இலங்கையின் உறவுகளுக்கு பாரதூரமாக பாதகமாகவிருக்குமிடத்து அல்லது அவ்வாறிருக்கும் சாத்தியமுள்ளவிடத்து

பிரிவு 5 (1) ( இ) (v) இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

5(1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக,-

(இ) அத்தகைய தகவல் வெளியிடுகையானது அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகளை பாதிக்கும் விடயங்களாக இருக்குமானால்,

(v) கரைகடந்த வியாபார உடன்படிக்கைகளை செய்து கொள்ளுதல்,

ஆணைக்குழு பகிரங்க அதிகாரசபையிடம் குறித்த தகவலை வழங்குவது எவ்வாறு பாரபட்சமாக கருதப்படும் என கோரியபோது பதிலளித்த பகிரங்க அதிகாரசபை கோரப்பட்டுள்ள ஒப்பந்தங்களில் மூன்றாம் தரப்பு சார்ந்த விடயங்கள் அடங்கி இருப்பதனால் அவற்றை வழங்குவது பாரபட்சமாகும் என குறிப்பிட்டது.

எனினும் வழமையாக சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் தொழில் சார் ஒப்பந்தங்கள் ஆகியன இரகசியமானவையாக கருதப்படாதமையால் பகிரங்க அதிகாரசபை கோரப்பட்ட தகவல்கள் எவ்வாறு இரகசியமானவை என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டுமென ஆணைக்குழுவினால் தெரிவிக்கப்பட்டது.

பகிரங்க அதிகாரசபை குறித்த ஆவணங்கள் இலங்கைக்கும் குறிப்பிடப்பட்ட நாடுகளுக்கும் இடையில் இருதரப்பிற்கும் இடையிலான இணக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள் ஆகும் என குறிப்பிட்டது. எனினும் பகிரங்க அதிகாரசபையின் விவாதத்தை ஏற்றுக்கொண்டால் இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையிலான எந்தவொரு ஒப்பந்தமும் இரகசியமானது என்பதாகிவிடும் என தெரிவித்த ஆணைக்குழு குறித்த ஒப்பந்தங்களின் எப்பகுதி இரகசியமானது என பகிரங்க அதிகாரசபை தெளிவாக குறிப்பிடவில்லை என சுட்டிக்காட்டியது.

பகிரங்க அதிகாரசபை கோரப்பட்ட சில ஒப்பந்தங்கள் 2012ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரியவை எனவும் சில 2017ஆம் ஆண்டுக்குரியவை எனவும் குறிப்பிட்டது.

**ஆணை**

கோரப்பட்ட தகவல் இரகசியமானது என்பது தொடர்பான தனது விவாதத்தில் பகிரங்க அதிகாரசபை ஆணைக்குழுவை திருப்திப்படுத்த தவறிவிட்டது. கோரப்பட்ட இலங்கை அரசாங்கத்திற்கும் கட்டார், சவுதி அரேபியா மற்றும் குவைத் ஆகிய நாடுகளுக்கு இடையில் குடிபெயர் பணியாளர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் அல்லது இரு தரப்பு உடன்படிக்கைகளில் பொதுமக்கள் நலன் மேலோங்கி காணப்படுகிறது. அவ்வொப்பந்தங்களில் அடங்கியுள்ள விடயங்களை தெரிந்து கொள்ளுவது குறித்த நாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களின் உரிமைகளை பாதுகாக்க அவசியமாகும். மேலும் தகவல் கோரிக்கையில் வரைபு நிலையில் உள்ள ஒப்பந்தங்களை உள்ளடக்கப்படவில்லை மாறாக ஏற்கனவே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களே கோரப்பட்டுள்ளன. இதனால் எந்த தரப்பிற்கும் எவ்வித பாரபட்சமோ பாதிப்போ ஏற்பட போவதில்லை. எனவே பகிரங்க அதிகார சபையினால் குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 5 (1) (ஆ) (ii) மற்றும் பிரிவு 5 (1) (இ) (v) ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள விலக்களிப்பு தொடர்பான விடயங்கள் இச்சந்தர்ப்பத்திற்கு பொருந்தாது.

இதனடிப்படையில் பகிரங்க அதிகாரசபைக்கு கோரப்பட்ட தகவலை மேன்முறையீட்டாளருக்கு வழங்குமாறு உத்தரவிடப்பதுகிறது. குறித்த தகவல் வழங்கப்பட்டதா என்பதை உறுதி செய்ய இவ்விடயம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அடுத்த விசாரணை 23.02.2018 அன்று இடம்பெறும்.

…………………………………………………………………………………………………….

**RTIC Appeal (நேரடி)/201/2017** *(23.02.2018 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் கூட்டத்தின் போது நடாத்தப்பட்டது)*

*தகவலறியும் உரிமை சட்டம் பிரிவு 32(1)க்கமைவான ஆணையும் தகவலறியும் உரிமைக்கான ஒழுங்குவிதிகள்-2017 (கட்டணங்கள் மற்றும் செயன்முறை) இன் விதி 28இற்கமைவான ஆணைக்குழுவின் செயன்முறை பதிவும்.*

| | |
|---|---|
| தலைவர்: | திரு. மஹிந்த கம்மம்பில |
| ஆணைக்குழு உறுப்பினர்கள்: | சிரேஷ்ட சட்டத்தரணி. திரு.எஸ்.ஜி. புஞ்சிஹேவா<br>கலாநிதி. செல்வி திருச்சந்திரன்<br>நீதியரசர் ரோஹினி வல்கம |
| சமூகமளித்திருந்தவர்: | பணிப்பாளர் நாயகம் திரு. பியதிஸ்ஸ ரணசிங்க |

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் முன்னிலையில்

மேன்முறையீட்டாளர்: பைஸல் சமாத்

அழைப்பு விடுக்கப்பட்டவர்: கே.ஓ.டி.டி. பெர்னாண்டோ, பொது முகாமையாளர், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

**ஆஜரானோர்/பிரதிநிதித்துவப்படுத்தியோர்**

பகிரங்க அதிகாரசபை- திருமதி. ஜி. என். கே. பெரேரா, சட்ட அலுவலகர், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

**ஆணைக்குழுவின் விசாரணையின் போது பரிசீலிக்கப்பட்ட விடயங்கள்**

மேன்முறையீட்டாளர் விசாரணைக்கு சமூகமளித்திருக்கவில்லை. இச்சந்தர்ப்பந்தத்தில் பகிரங்க அதிகாரசபையினால் இலங்கை அரசாங்கத்திற்கும் சவூதி அரேபியா, கட்டார் மற்றும் குவைத் ஆகிய நாடுகளுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களில் பகிரங்க அதிகாரசபையினால் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் பிரதிகளை மாத்திரமே தம்மால் வழங்க முடியுமென்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை வழங்க முடியாதெனவும் குறிப்பிடப்பட்டது.

இதனையடுத்து அமைச்சினால் சவுதி அரேபியா, கட்டார் மற்றும் குவைத் ஆகிய நாடுகளுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் பகிரங்க அதிகாரசபையிடம் இருக்கின்றனவா என ஆணைக்குழு வினாவிய போது பகிரங்க அதிகாரசபையினால் ஆம் என தெரிவிக்கப்பட்டது.

**ஆணை**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பகிரங்க அதிகாரசபையிடம் காணப்படுகின்றன. 2016ஆம் ஆண்டு 12ஆம் இலக்க தகவலறியும் உரிமை சட்டத்தின் பிரிவு 3(1) இன் பிரகாரம்

"இச்சட்டத்தின் 5ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, பிரஜை ஒவ்வொருவரும், ஒரு பகிரங்க அதிகாரசபையின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கின்ற தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்"

முன்னைய விசாரணையின் போது பகிரங்க அதிகாரசபையிடம் மேன்முறையீட்டாளரால் கோரப்பட்ட ஆவணங்கள் பொது ஆவணங்களாதலால் அவற்றுடன் மூன்றாம் தரப்பு தொடர்புடையதாக கூறப்படும் வாதம் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என அறிவிக்கப்பட்டது. இதனடிப்படையில் கோரப்பட்ட தகவலை மேன்முறையீட்டாளருக்கு வழங்க பகிரங்க அதிகாரசபைக்கு ஆணைக்குழு உத்தரவிடுகிறது.

எனவே குறித்தளிக்கப்பட்ட அதிகாரியின் தீர்மானம் ஆணைக்குழுவால் இரத்து செய்யப்படுவதுடன் கோரப்பட்ட தகவல் வழங்கப்பட்டமையை உறுதி செய்ய இவ்விடயம் மீண்டும் 16.03.2018 அன்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்படும்.

**16.03.2018-** பகிரங்க அதிகாரசபையினால் 14.03.2018 அன்று திகதியிட்டு RTI படிவம் 04 மூலமாக கோரப்பட்ட தகவல் 2016ஆம் ஆண்டு 12ஆம் இலக்க தகவலறியும் உரிமை சட்டத்தின் பிரிவு 25(1) இன் பிரகாரம் வழங்கப்படும் என தமக்கு அறிவிக்கப்பட்டதாக மேன்முறையீட்டாளர் ஆணைக்குழுவிற்கு அறிவித்தார்.

இவ்விசாரணை இத்தால் நிறைவடைந்தது ****

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் முன்னிலையில்

**கலாநிதி. மரியோ கோமெஸ் எதிர் சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு**

**RTIC Appeal (நேரடி)/51/2018** *(27.02.2018 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் கூட்டத்தின் போது நடாத்தப்பட்டது)*

*தகவலறியும் உரிமை சட்டம் பிரிவு 32(1)க்கமைவான ஆணையும் தகவலறியும் உரிமைக்கான ஒழுங்குவிதிகள்-2017 (கட்டணங்கள் மற்றும் செயன்முறை) இன் விதி 28இற்கமைவான ஆணைக்குழுவின் செயன்முறை பதிவும்.*

தலைவர்: திரு. மஹிந்த கம்மம்பில

ஆணைக்குழு உறுப்பினர்கள்: சிரேஷ்ட சட்டத்தரணி. செல்வி. கிஷாலி பின்டோ- ஜெயவர்த்தன
சிரேஷ்ட சட்டத்தரணி. திரு.எஸ்.ஜி. புஞ்சிஹேவா
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்
நீதியரசர் ரோஹினி வல்கம

சமூகமளித்திருந்தவர்: பணிப்பாளர் நாயகம் திரு. பியதிஸ்ஸ ரணசிங்க

மேன்முறையீட்டாளர்: கலாநிதி. மரியோ கோமெஸ்

அழைப்பு விடுக்கப்பட்டவர்: ஷிரானி வீரக்கோன், செயலாளர், சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு

**ஆஜரானோர்/பிரதிநிதித்துவப்படுத்தியோர்**

மேன்முறையீட்டாளர்- கலாநிதி. மரியோ கோமெஸ்

பகிரங்க அதிகாரசபை- எஸ்.டி. உடவத்த, மேலதிக செயலாளர், சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு

| | |
|---|---|
| **தகவல் கோரிக்கை முன்வைக்கப்பட்டது:** | 13.07.2017 (நினைவூட்டல் 23.08.2017 மற்றும் 29.08.2017) |
| **தகவல் உத்தியோகத்தரின் பதில்** | 11.10.2017 |
| **குறித்தளிக்கப்பட்ட அதிகாரியிடம் மேன்முறையீடு** | 25.10.2017 |
| **குறித்தளிக்கப்பட்ட அதிகாரியின் பதில்** | 08.11.2017 |
| **தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு** | 05.12.2017 |

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் முன்னிலையில்

**பின்னணி**

13.07.2017 அன்று திகதியிட்ட தமது தகவல் கோரிக்கை மற்றும் 23.08.2017 மற்றும் 29.08.2017 அன்று மேற்கொண்ட குறித்த கோரிக்கை தொடர்பான நினைவூட்டல்களின் பிரகாரம் மேன்முறையீட்டாளர் ஊனமுற்றவர்களுக்கான உரிமைகள் தொடர்பான நகல் சட்டவரைபின் பிரதியை (சிங்களம், தமிழ், ஆங்கிலம் மற்றும் முடிந்தால் விழிப்புலனற்றோருக்கான பிரெயில் எழுத்து) கோரியதுடன் அதன் தற்போதைய நிலை என்ன என்பது தொடர்பிலும் கோரியிருந்தார். அத்துடன் மேன்முறையீட்டாளர் குறித்த சட்ட வரைபு எப்போது அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமெனவும் கேட்டிருந்தார். இக்கோரிக்கைக்கு 11.10.2017 அன்று பதிலளித்த தகவல் உத்தியோகத்தர் ஊனமுற்றவர்களுக்கான உரிமைகள் தொடர்பான சட்டமூலத்தின் வரைபு சட்ட வரைஞர் திணைக்களத்திடமிருந்து அமைச்சின் கருத்தினை கோரி அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அதற்குரிய கருத்துக்களை அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் சட்ட வரைபு அரச வர்த்தமானியில் வெளியிடப்படும் வரை அதனை வழங்க முடியாதெனவும் பகிரங்க அதிகாரசபையினால் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மேன்முறையீட்டாளரால் 25.10.2017 அன்று குறித்தளிக்கப்பட்ட அதிகாரியிடம் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டிற்கு 08.11.2017 அன்று அளிக்கப்பட்ட பதிலில் அவரும் தகவல் உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட பதிலை உறுதி செய்யும் வகையில் பதிலளித்திருந்தார். அத்துடன் குறித்தளிக்கப்பட்ட அதிகாரி குறித்த சட்ட வரைபின் திருத்தங்கள் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை 15.11.2017இற்கு முன்னராக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் நிர்வாக சபையின் அனுமதியை பெற சமர்ப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. குறித்த அனுமதி கிடைக்கப்பெற்றதை தொடர்ந்து 30.11.2017இற்கு முன்னர் திருத்தப்பட்ட சட்டவரைபை சட்ட வரைஞர் திணைக்களத்திடம் மீண்டும் சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டது.

30.11.2017இற்கு பின்னர் பகிரங்க அதிகாரசபையிடமிருந்து இவ்விடயம் தொடர்பில் மேலதிக பதில் ஏதும் கிடைக்கப்பெறாததால் மேன்முறையீட்டாளரால் 05.12.2017 அன்று தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு மேற்கொள்ளப்பட்டது.

**ஆணைக்குழுவின் விசாரணையின் போது பரிசீலிக்கப்பட்ட விடயங்கள்**

ஏற்கனவே பகிரங்க அதிகாரசபையின் குறித்தளிக்கப்பட்ட அதிகாரியினால் அளிக்கப்பட்ட பதிலில் குறிப்பிடப்பட்ட திகதிகள் அனைத்தும் கடந்து நீண்டகாலம் ஆகையால் சட்டவரைபின் தற்போதைய

நிலை தொடர்பாக ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த பகிரங்க அதிகார சபையை பிரதிநிதித்துவம் செய்த திரு. எஸ். டி. உடவத்த, மேலதிக செயலாளர், சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு, ஊனமுற்றோருக்கான உரிமைகள் தொடர்பான சட்டவரைபு சட்ட வரைஞர் திணைக்களத்திடமிருந்து அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் அதன்பின்னர் அமைச்சின் கருத்துக்களுடன் குறித்த சட்ட வரைபு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவக நிர்வாக சபையின் அனுமதிக்கென அனுப்பி வைக்கப்பட்ட போதும் குறித்த நிர்வாக சபையின் கூட்டங்களில் குறித்த விடயம் இன்னும் ஆராயப்படாமையினால் தம்மால் மேன்முறையீட்டாளர் கோரிய சட்ட வரைபினை வழங்க முடியாதுள்ளதாக குறிப்பிட்டார். எனினும் குறித்த சட்ட வரைபினை வழங்குமாறு ஆணைக்குழு ஆணையிட்டால் தம்மால் குறித்த சட்ட வரைபின் பிரதியினை வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் குறித்த சட்ட வரைபு எப்போது அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்பது தொடர்பில் உறுதியாக எதனையும் தெரிவிக்க முடியாதெனவும் அவர் குறிப்பிட்டார்.

மேன்முறையீட்டாளர் குறித்த சட்ட வரைபு தொடர்பில் இலங்கையில் ஊனமுற்றோருக்கான குழுக்கள் உள்ளிட்ட பொது நலன்சார்ந்த குழுக்கள் அறிந்து கொள்ள ஆர்வமாக உள்ளதாக குறிப்பிட்டார்.

**ஆணை**

2016ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க இலங்கை தகவலறியும் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 5 இன்படி குறித்த நிர்வாக சபையினால் சட்ட வரைபு தொடர்பான விடயங்களை கருத்தில் கொள்ளாமை தகவல் கோரிக்கையை நிராகரிப்பதற்கான காரணமாக கருதப்படமாட்டாது. மேலும் சட்டத்தின் பிரிவு 43இன் படி 'தகவல' தொடர்பான வரைவிலக்கணத்தில் சட்ட வரைபும் உள்ளடக்கப்பட்டுள்ளது. பல நாடுகளின் சட்ட வரைபுகள் சட்டமாக்கப்படுவதற்கு முன்னர் பொதுமக்களிடம் முன்வைக்கப்பட்டு அவர்களின் கருத்துக்கள் கோரப்பட்ட பின்னரே சட்டமாக்கப்படுகின்றன என்பதையும் ஆணைக்குழு நினைவுபடுத்த விரும்புகிறது.

ஊனமுற்றோரின் உரிமைக்கான சட்ட வரைபு மாற்றங்களுக்கு உட்படும் என்ற போதிலும் மேன்முறையீட்டாளரின் கோரிக்கைக்கமைய சட்ட வரைபினை வழங்க பகிரங்க அதிகார சபை கடமைப்பட்டுள்ளது. அதற்காக சட்ட வரைபு அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் வரை காத்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை என்பதையும் ஆணைக்குழு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

இதனடிப்படையில் 16.03.2018 அன்று மேன்முறையீட்டாளரும் பகிரங்க அதிகாரசபையின் பிரதிநிதியும் இணங்கியவாறு இலங்கை ஊனமுற்றோரின் உரிமைகள் தொடர்பான சட்ட வரைபின்

பிரதியினை (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) மேன்முறையீட்டாளருக்கு வழங்க பகிரங்க அதிகாரசபைக்கு ஆணைக்குழு ஆணையிடுகிறது.

இந்த மேன்முறையீட்டு விசாரணை இத்துடன் நிறைவடைகிறது.

*****

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

**ஜி. திலீப் அமுதன் எதிர் பாதுகாப்பு அமைச்சு**

*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு (அந்நபரினூடாக) /70/2018- 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 32(1) இன் கீழான கட்டளை மற்றும் 2016 ஆம் ஆண்டு தகவல் உரிமைக்கான விதிகளின் (கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறை) 28 ஆம் விதிக்கு கீழான நடபடிமுறை பதிவு - மேன்முறையீடானது 23.03.2018 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வமான சந்திப்பின் ஒரு அங்கமாகக் கேட்கப்பட்டது.*

**தலைவர்:** திரு. மஹிந்த கம்மம்பில

**ஆணைக்குழு உறுப்பினர்கள்:** செல்வி. கிஷாலி பின்ரோ ஜயவர்தன
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்
திரு. எஸ். ஜி. புஞ்சிஹேவா
நீதிபதி ரோஹினி வெல்கம

**வருகை தந்தவர்கள்:** பணிப்பாளர் நாயகம் திரு. பியதிஸ்ஸ ரணசிங்க
**மேன்முறையீட்டாளர்:** திரு. ஜி. திலீப் அமுதன்
**அறிவித்தல் வழங்கப்பட்ட நபர்:** குறித்தளிக்கப்பட்ட அலுவலர், பாதுகாப்பு அமைச்சு

**தோன்றல்/பிரதிநிதித்துவப்படுத்தப்படல்**: மேன்முறையீட்டாளர்- திரு. ஜி. திலீப் அமுதன்

பகிரங்க அதிகார சபை- உபாலி வீரசிங்க, சட்ட ஆலோசகர், பாதுகாப்பு அமைச்சு

மேஜர் குணவர்த்தன, சட்ட ஆலோசகர், பாதுகாப்பு அமைச்சு

ஏ. எம். எஸ்.பி. அத்தபத்து, தகவல் அலுவலர், இலங்கை இராணுவம்

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

| | |
|---|---|
| **தகவல் உரிமைக்கான கோரிக்கை பதியப்பட்டது** | 28.09.2017 |
| **தகவல் அலுவலர் பதிலளித்தது** | 16.10.2017 (தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றைக் கோரி) |
| **குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடம் முதலாவது மேன்முறையீடு பதியப்பட்டது** | 22.10.2017 |
| **குறித்தளிக்கப்பட்ட அலுவலர் பதிலளித்தது** | 23.11.2017 |
| **தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு பதியப்பட்டது** | 04.12.2017 |

**சுருக்கமான நிகழ்வு பின்னணி**:

மேன்முறையீட்டாளர் 28.09.2017 எனத் திகதியிடப்பட்ட தகவல் கோரிக்கையொன்றினூடாக கீழ்வரும் மூன்று தகவல்களையும் கோரியுள்ளார்.

I. 1. பொது மக்கள் உட்பட ஏனையோருக்கு உணவு விநியோகம் செய்கின்ற, இலங்கை இராணுவம் மற்றும்/அல்லது கடற்படை மற்றும்/அல்லது விமானப்படைக்கு பொறுப்புடைய மற்றும்/அல்லது அவர்களால் அல்லது அவர்களுக்கு கீழ் பேணப்படுகின்ற கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், மையங்கள் மற்றும் உணவகங்களின் முழுமையான பட்டியல்

2. மேற்குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம் 1 இல் உள்ளடக்கப்படாத,பொது மக்கள் உட்பட ஏனையோருக்கு விநியோகம் செய்கின்ற, இலங்கை இராணுவம் மற்றும்/அல்லது கடற்படை மற்றும்/அல்லது விமானப்படைக்கு பொறுப்புடைய மற்றும்/அல்லது அவர்களால் அல்லது அவர்களுக்கு கீழ் பேணப்படுகின்ற வியாபார நிறுவனங்களின் முழுமையான பட்டியல்

II. 1. இராணுவ பணிப்பாளர் குழுமத்தின் நலன்புரி சேவையினை ஆளுகை செய்கின்ற பொருத்தமான ஒழுங்குவிதிகள், நடபடிமுறைகள், வழிகாட்டிகள் மற்றும்/அல்லது கொள்கைகள்

2. இலங்கை இராணுவத்தின் நலன்புரி சமூக நிதியின் வரவு மற்றும் செலவினை வெளிக்காட்டுகின்ற கடந்த பத்து வருடங்களுக்கான (அதாவது 2006 முதல் 2016 வரையான காலப்பகுதிக்கான) வருடாந்த கணக்கு அறிக்கைகள்.

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

3. இலங்கை இராணுவத்தின் நலன்புரி சமூக நிதிக்கான தணிக்கை நடபடிமுறைகள் மற்றும் கடந்த பத்து வருடங்களுக்கான தணிக்கை ஆவணங்கள்

4. இராணுவ பணிப்பாளர் குழுமத்தின் நலன்புரி சேவைக்கு பொறுப்புடைய மற்றும்/அல்லது அவர்களால் அல்லது அவர்களுக்கு கீழ் பேணப்படுகின்ற,பொது மக்களுக்கு உணவு விநியோகம் செய்கின்ற கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், மையங்கள் மற்றும் உணவகங்கள் மற்றும் அதுபோன்றனவற்றின் முழுமையான பட்டியல்

5. மேற்குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம் 4 இல் உள்ளடக்கப்படாத, பொது மக்கள் உட்பட ஏனையோருக்கு விநியோகம் செய்கின்ற, இலங்கை இராணுவத்திற்கு பொறுப்புடைய மற்றும்/அல்லது அவர்களால் அல்லது அவர்களுக்கு கீழ் பேணப்படுகின்ற வியாபார நிறுவனங்களின் முழுமையான பட்டியல்

6. மேற்குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம் 4 மற்றும் 5 இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களில் பணிபுரிகின்ற மற்றும்/அல்லது பொறுப்புக்களுக்காக அமர்த்தப்பட்டுள்ள மற்றும்/அல்லது பதவி வகிக்கின்ற இராணுவ உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை

7. லாயா விடுதியின் (Laya Hotel) கீழ் இயங்குகின்ற ஒவ்வொரு உணவகத்தினதும் (அதாவது, Laya Beach, Laya Leisure, Laya Safari, and Laya Waves போன்றன)2009 முதல் 2016 வரையான காலப்பகுதிக்கான வருடாந்த தணிக்கை அறிக்கைகள்

8. தெல்செவன விடுதியின் (Thelsevana Hotel) 2010 முதல் இன்றைய திகதி வரையான காலப்பகுதிக்கான வருடாந்த கணக்கு அறிக்கைகள்

9. இராணுவ பணிப்பாளர் குழுமத்தின் நலன்புரி சேவையின் கீழ் பேணப்படுகின்ற சட்ட உதவி நிதியிலிருந்து பயனடைந்துள்ள பயனாளிகளின் முழுமையானப் பட்டியல் மற்றும் அதன்கீழ் அளிக்கப்பட்டுள்ள நிதி விபரங்கள் தொடர்பான முழுமையானப் பட்டியல்

III. 2007 ஆம் ஆண்டு ஹய்டியில் அமைதிக் காப்பாளர்களாகப் பணிக்கு அமர்த்தப்பட்ட இலங்கை இராணுவத்தினர் அந்நாட்டு பிரஜைகளைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பானது.

- சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் உயர் நிலையிலுள்ள அதிகாரிகள் உள்ளடங்கலாக, 2007 ஆம் ஆண்டு ஹய்டியில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காப்பு பணிகளில் ஈடுபட்டிருந்தபோது, பாலியல் குற்றங்களில் (Sex ring) ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் நாட்டிற்கு திருப்பியனுப்பப்பட்ட அமைதிகாப்பாளர்களின் பெயர்கள்;
- ஹய்டியில் அமைதி காப்பாளர்களாகப் பணிக்கு அமர்த்தப்பட்ட இலங்கை அமைதிகாப்பாளர்களின் நடவடிக்கைகள் தொடர்பான விசாரணை நீதிமன்ற அறிக்கைகள்

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

அல்லது விசாரணைக் குறிப்புக்கள் மற்றும் இலங்கை அமைதி காப்பாளர்கள் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது ஹய்டியில் பரவலாக இடம்பெற்ற பாலியல் குற்றங்கள் (Sex ring) தொடர்பான நிகழ்வுகளின் விபரங்கள்;

- குற்றத்தின் தன்மை, பாதிக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் அல்லது/மற்றும் அக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வேறு ஏதேனும் பொருத்தமான விபரங்கள் என்பன உள்ளடங்கலாக ஹய்டியில் அமைதி காப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இலங்கை அமைதிகாப்பாளர்களுக்கு எதிராக ஹய்டி பிரஜைகளால் செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்களின் பட்டியல்;
- பின்வருவன உள்ளடங்கலாக 11 படைவீரர்கள், 2 லெப்டினன்ட் கேணல் மற்றும் 2 மேஜர் ஆகியோருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகளின் விபரங்கள்:
    - இந்நபர்கள் பொது இராணுவ நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்களா அல்லது ஏதேனுமொரு இராணுவ நீதிமன்றச் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டார்களா;
    - பொது இராணுவ நீதிமன்றத்தினால் அல்லது/மற்றும் வேறு ஏதேனும் இராணுவ நீதிமன்றச் செயன்முறையினால் கண்டறியப்பட்ட விடயங்கள்;
    - பொது இராணுவ நீதிமன்றத்தில் அல்லது/மற்றும் வேறு ஏதேனும் இராணுவ நீதிமன்றச் செயன்முறையில் தலைமை தாங்கிய அதிகாரிகளின் பெயர்கள் மற்றும் அவர்களின் பதவி நிலைகள்;
    - பொது இராணுவ நீதிமன்றத்தில் அல்லது/மற்றும் வேறு ஏதேனும் இராணுவ நீதிமன்றச் செயன்முறையில் விசாரிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களின் அல்லது/மற்றும் குற்றங்களின் பட்டியல்;
    - ஹய்டியில் இடம்பெற்ற குற்றங்களை புரிந்தவர்களுக்கு எதிராக அல்லது அக்குற்றங்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட கண்டனம், இடைநீக்கம் மற்றும் பதவிநீக்கம் உள்ளடங்கலான ஒழுக்காற்று நடவடிக்கைகள்;
    - குறிப்பிட்ட அவ் இராணுவப்பிரிவின் தளபதிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று அல்லது/மற்றும் தண்டனை ரீதியான நடவடிக்கைகள்;
    - இலங்கை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட அத்தகைய குற்றவியல் வழக்குகளின் வழக்கு எண் உள்ளடங்கலாக, ஹய்டியில் இடம்பெற்ற குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் என கண்டறியப்பட்டவர்கள்மீது தொடரப்பட்ட வழக்குத்தொடுப்புக்கள் தொடர்பான தகவல்கள் ;

கிராம அலுவலரினால் மற்றும் பிரதேச செயலாளரினால் உண்மையானது என உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் பிரதியினைச் சமர்ப்பிக்குமாறு கோரிய ஒரு பதிலொன்றினை

மேன்முறையீட்டாளர் 16.10.2017 அன்று பெற்றுக் கொண்டார். இக்கோரிக்கை இலங்கை இராணுவம் சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவருக்கு அறிவிக்கப்பட்டது. தன்னுடைய தேசிய அடையாள அட்டை இலக்கத்தை தகவல் கோரிக்கையில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்ததாகவும், தேசிய அடையாள அட்டையின் பிரதியினைக் கோருதல் ஒன்றில் குறிப்பிட்ட விடயத்தை தாமதப்படுத்துவதற்காக அல்லது தன்னை அச்சுறுத்தவதற்காக என மேன்முறையீட்டாளர் தெரிவித்தார். மேலும், அவர் இது தொடர்பாக குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு 22.10.2017 அன்று மேன்முறையீடு செய்ததாகவும் தெரிவித்தார். மேன்முறையீட்டாளரின் பிரஜாவுரிமையை மதிப்பிடும் நோக்கத்திற்காக அவரது தேசிய அடையாள அட்டைத் தேவைப்படுவதாக குறித்தளிக்கப்பட்ட அலுவலர் பதில் தெரிவித்தார். இப்பதிலானது பாதுகாப்பு அமைச்சின் கடிதத்தாளில் தட்டச்சு செய்யப்பட்டிந்ததுடன், மேலதிக செயலாளரினால் (பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் கொள்கைகள்) அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இப்பதிலில் அதிருப்தியுற்ற மேன்முறையீட்டாளர் 04.12.2017 அன்று தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்தார்.

**விளக்கத்தின்போது தோன்றிய விடயங்கள்**

பகிரங்க அதிகார சபையானது தகவல் கோரிக்கையைப் பெற்றுக் கொண்டவுடன் மேன்முறையீட்டாளரின் அடையாள அட்டையின் பிரதியை கோரியது என்பதனை பாதுகாப்பு அமைச்சின் சட்ட அதிகாரியான திரு.வீரசிங்க உறுதிபடுத்தினார். தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி தகவல் அறியும் உரிமைப்படிவம் 01 (தகவல் கோரிக்கைப் படிவம்) ஆனது, அவன் / அவள் ஒரு பிரஜை என்பதை மாத்திரமே அவன் /அவள் குறிப்பிட வேண்டும் என்பதனைத் தேவைப்படுத்துகின்றது என்பது பகிரங்க அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டது. மேன்முறையீடு செய்பவரின் பிரஜாவுரிமைக் குறித்து சந்தேகம் கொள்வதற்கு புறநிலை நோக்கங்கள் இருந்தால் மட்டுமே பகிரங்க அதிகார சபை அது தொடர்பாகக் கேள்வி கேட்கலாம். மேன்முறையீடு செய்பவர் அவருடைய அடையாள அட்டை இலக்கத்தை தன்னுடைய தகவல் கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள போது,மேன்முறையீட்டாளரின் பிரஜாவுரிமை தொடர்பாக எழக்கூடிய சந்தேகம் யாது என பகிரங்க அதிகார சபையிடம் ஆணைக்குழுவானது விசாரனை செய்தது. இந்த வினாவிற்கு பகிரங்க அதிகார சபை விடையளித்தபோது, இந்த விசாரனையானது முன்னைய தகவல் வழங்கும் அலுவலரால் முன்னெடுக்கப்பட்டது என்று கூறப்பட்டது. மேலும், பகிரங்க அதிகார சபையானது, விண்ணப்பதாரர்களுடைய அடையாள அட்டைகளை சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளும் வழக்கமான நடைமுறையானது எதிர்காலத்தில் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படாது எனவும் உறுதியளித்தது.

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

தகவல் கோரிக்கையின் இலக்கம் I,II இன் கீழ் கோரப்பட்ட தகவல்கள் தொடர்பில் ஆணைக்குழுவானது அத்தகையத் தகவல்கள் சம்பந்தப்பட்ட திறத்தவர்களின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என சுட்டிக்காட்டிய போது, பகிரங்க அதிகார சபை அவ்வாறாகவே இலங்கை இராணுவத்திற்கு அறிவித்துள்ளதாகவும், அது அத்தகவல்களை வழங்குவதற்கான நிலைப்பாட்டில் உள்ளதாகவும் தெரிவித்தது. தகவல் கோரிக்கையின் இலக்கம் III தொடர்பாக கூறுகின்றபோது, இலங்கை இராணுவத்தின் தகவல் அலுவலர், இலங்கையிலிருந்து பணிக்கு அமர்த்தப்பட்ட அமைதிகாக்கும் படையினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் இராணுவத்தின் உள்ளக ஒழுக்காற்று விதிமுறைகளுடன் தொடர்புபட்டுள்ளதாகவும், சர்வதேச மட்டத்தில் இது தொடர்பில் ஆர்வமுடைய பல தரப்புக்களால் இலங்கை இராணுவத்திற்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் அத்தகவல்களை வெளியிடுவதற்கு தயக்கம் கொள்வதாகவும் தெரிவித்தார்.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் பிரிவு 5(1) இல் கீழ் கூறப்பட்டுள்ள எவ்விதிவிலக்கின் கீழ் குறிப்பிட்ட தகவல்களை வழங்குவதற்கு பகிரங்க அதிகார சபை மறுக்கின்றதென ஆணைக்குழு விசாரித்தபோது, குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் 2007ம் ஆண்டில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பானவை என்றும், இவற்றை 2018 ஆம் ஆண்டில் வெளியிடுகின்றமையானது, சர்வதேச அரங்கில் இலங்கை இராணுவத்தின் நற்பெயரை அழிப்பதாக அமையுமென்றும், அத்தகவல்களானவை இது தொடர்பில் ஆர்வமுடைய திறத்தவர்களின் பிரச்சார நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம் எனவும் தகவல் அலுவலர் மீண்டும் வலியுறுத்தினார். மொத்த படைபிரிவினரில் சுமார் 100 அமைதி காப்பாளர்கள் மீண்டும் நாட்டிற்கு அனுப்பப்பட்டனர்; ஆனால் அவர்களில் மூன்று பேர் மட்டுமே இவ்விடயங்களில் தொடர்பு பட்டிருந்தனர்; மற்றும் ஒரு அதிகாரி கட்டளை பொறுப்பு ஒழுங்கு விதிகளை மீறியதன் காரணமாகவே மீண்டும் நாட்டிற்கு அழைக்கப்பட்டார்; எனவே திருப்பி அழைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையானது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டோருடைய எண்ணிக்கையுடன் ஒத்து அமையாது எனவும் தகவல் அலுவலர் குறிப்பிட்டார். மேலும், இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே பகிரங்க பரப்பில் கிடைக்கக்கூடியதாக உள்ளதென அவர் தெரிவித்தார்.

மேலும், விசாரணை நீதிமன்றமானது குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பான அனைத்து விபரங்களையும் தன்வசம் கொண்டுள்ளது என்றபோதிலும் அவற்றை வெளியிடுதலானது, அந்தரங்கம் தொடர்பான விடயங்களைக் கேள்விக்குட்படுத்துவதாகவும், அது பிரிவு 5(1)(அ) இன் மீறலாக அமைவதாகவும், மற்றும் அது நாட்டின் நற்புகழைப் பாதிக்கும் எனவும் தகவல் அலுவலர் சமர்ப்பித்தார். குறிப்பிட்ட விசாரணை நீதிமன்றத்தினால் கண்டறியப்பட்ட விடயங்களை பகிரங்கப்படுத்தாதிருப்பதற்கான பகிரங்க அதிகார சபையின் கோரிக்கையின் ஏற்புடைமைத்

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

தொடர்பில் ஆணைக்குழுவினால் தொடர்ச்சியாக கேள்வியெழுப்பப்பட்டபோது, இலங்கை இராணுவமானது ஆணைக்குழுவின் பணிப்பிற்கு இணங்குவதாகவும், இவ்விடயம் தொடர்பாக சுருக்கமொன்றை வழங்கமுடியும் எனவும் அவர் கூறினார்.

**ஆணை**

03.02.2017 எனத் திகதியிடப்பட்ட 2004/66 ஆம் இலக்க வர்த்தமானியினூடாக வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின்படி தகவல் அறியும் உரிமை 01 என்ற படிவத்தில் அவன் / அவள் ஒரு பிரஜையா இல்லையா என்பதை மட்டுமே குறிப்பிடவேண்டும் என விண்ணப்பதாரர் தேவைப்படுத்தப்படுகின்றார். மேன்முறையீட்டாளர் ஒரு பிரஜை அல்ல என நம்புவதற்கான உறுதியான ஒரு காரணமின்றி பகிரங்க அதிகார சபையானது இது தொடர்பாக மேலதிகமாக கேள்வி எழுப்ப முடியாது. மேலும் புறநிலையான காரணிகளின் அடிப்படையில் மட்டுமே பிரஜாவுரிமைக்கான ஆதாரம் கோரப்படலாம். உதாரணமாக வெளிநாட்டில் உள்ள ஒருவர் தகவல் உரிமைக்கான கோரிக்கையினைச் செய்தால் அப்பொழுது அவரின் பிரஜாவுரிமையை சந்தேகிக்க ஒரு நியாயமான காரணம் இருக்கலாம்.

*TISL எதிர் பிரதமர் அலுவலகம்/ஜனாதிபதி செயலகம்* என்ற வழக்கில் (RTICAppeal/05/2017 & RTICAppeal/06/201,RTIC Minutes of 23.02.2018) இவ் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டதைப் போன்று, அரிதான சந்தர்ப்பங்களில் மட்டுமே கோரிக்கை விடுப்பவர்களின் பிரஜாவுரிமையினை உறுதிபடுத்தும்படி கேட்கப்படலாம் (ஸ்ரீ. கே. பாலகிருஷ்ண பிள்ளை எதிர் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு இல: CIC/OK/C/2008/00016, இந்திய மத்திய ஆணைக்குழுவின் நடபடிமுறைகள், 26 மே 2008) என்பதுடன் பகிரங்க அதிகார சபைக்கு விண்ணப்பிப்பவர் பிரஜையா இல்லையா என்பது குறித்த ஒரு நல்லெண்ண அடிப்படையிலான சந்தேகம் காணப்படுகின்றபோது மட்டுமே பிரஜாவுரிமையை நிரூபிப்பதற்கான ஆதாரம் கேட்கப்படலாம் என கூறப்பட்டது.

இவ்விடயத்தில், மேன்முறையீட்டாளர் ஏற்கனவே தனது அடையாள அட்டை இலக்கத்தை தகவல் கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளார்: ஆகையால் பகிரங்க அதிகார சபையானது, மேன்முறையீட்டாளரின் அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டின் நகல்களை கோருதல் பொருத்தமானதல்ல. 2016 ஆம் ஆண்டின் தகவல் அறியும் உரிமைச் சட்டமானது, தகவலுக்கான கோரிக்கையொன்று சட்டத்தின் பிரிவு 5(1) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விதிவிலக்குகளின் அடிப்படையில் மட்டுமே மறுக்கப்படலாம் எனபதனைத் தெளிவாக கூறுகின்றது. ஆகவே இதனை வேறு ஏதேனும் வழிகளில் தடை செய்ய இயலாது. எனவே இந்நடைமுறையானது பகிரங்க சபையில் முன்னர் காணப்பட்டு தற்போது வழக்கத்தில் இல்லாதொழிந்த ஒரு நடைமுறையாக மாறியுள்ளதாக ஆணைக்குழுவினால் பதிவு செய்யப்படுகின்றது.

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

குறிப்பிட்ட இத்தகவல் கோரிக்கையை பொறுத்தவரையில், இலங்கை அமைதி காக்கும் படையினர் மீது குற்றச்சாட்டுகள் மேற்கொள்ளப்பட்டு அவை தொடர்பான விசாரணைகள் முடிவடைந்துள்ள நிலையில், அவ்விசாரணைத் தொடர்பானத் தகவல்களை இலங்கை இராணுவமானது பொது மக்களுக்கு வழங்க முடியாது என்ற பகிரங்க அதிகார சபையின் (இலங்கை இராணுவம்) வாதத்தினை ஏற்றுகொள்ளுதல் சிக்கலானதாகும். அவ்வாறு செய்யின் அது குறிப்பிட்ட பகிரங்க அதிகார சபைக்கு (இலங்கை இராணுவம்) சிறப்புரிமைகளை அளிப்பதாக அமையும். அத்தகைய சிறப்புரிமைகள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினால் வழங்கப்படவில்லை.

மேலும் இத்தகைய விடயங்களில் பொது நலனை மதிப்பிடுகின்றபோது, விசாரணை நடைமுறையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், பகிரங்க அதிகார சபையானது குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக மேற்கொண்டுள்ள உறுதியான நடவடிக்கைகள் யாதென வெளிப்படுத்துதல் பகிரங்க அதிகார சபைக்கு நன்மையளிப்பதாகவே அமையும் என்ற விடயமும் கவனத்திற்கொள்ளப்படுதல் வேண்டும். இவ் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதற்காக நீதிமன்ற விசாரணையின் மூலமாக கண்டறியப்பட்ட விடயங்களின் முழுமையான சுருக்கமொன்றினைத் தயார் செய்யும்படி பகிரங்க அதிகாரசபைக்கு (இலங்கை இராணுவம்) பணிக்கப்படுகின்றது. ஆணைக்குழுவானது அச்சுருக்கத்தினை ஆராயும் என்பதுடன், தேவைப்படுமிடத்து குறிப்பிட்ட சுருக்கத்திலுள்ள விடயங்கள், விசாரணை நீதிமன்ற அறிக்கைகளில் உள்ள விடயங்களை சரியான முறையில் பிரதிபலிக்கின்றனவா என்பதனை உறுதிபடுத்துவதற்காக, இவ் ஆணைக்குழுவானது பகிரங்க அதிகார சபையிடம் (இலங்கை இராணுவம்) விசாரணை நீதிமன்ற அறிக்கைகளை சமர்பிக்குமாறும் கோரலாம்.

மேலும், இலக்கம் I இன் கீழ் கோரப்பட்டத் தகவல்களை, இலங்கை விமானப்படை மற்றும் இலங்கைக் கடற் படையிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறும் பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது.

மேன்முறையீடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அடுத்த விளக்கத்திற்கான திகதி: 15/05/2018

…………………………........................................................................................................................
..............

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு (அந்நபரினூடாக) /70/2018- 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 32(1) இன் கீழான கட்டளை மற்றும் 2016 ஆம் ஆண்டு தகவல் உரிமைக்கான விதிகளின் (கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறை) 28 ஆம் விதிக்கு கீழான நடபடிமுறை பதிவு -மேன்முறையீடானது 15.05.2018 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வமான சந்திப்பின் ஒரு அங்கமாகக் கேட்கப்பட்டது.*

**தலைவர்:** திரு. மஹிந்த கம்மம்பில

**ஆணைக்குழு உறுப்பினர்கள்:** செல்வி. கிஷாலி பின்ரோ ஜயவர்தன
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்
திரு. எஸ். ஜி. புஞ்சிஹேவா
நீதிபதி ரோஹினி வெல்கம

**வருகை தந்தவர்கள்:** பணிப்பாளர் நாயகம் திரு. பியதிஸ்ஸ ரணசிங்க
**மேன்முறையீட்டாளர்:** திரு. ஜி. திலீப் அமுதன்
**அறிவித்தல் வழங்கப்பட்ட நபர்:** குறித்தளிக்கப்பட்ட அலுவலர், பாதுகாப்பு அமைச்சு

**தோன்றல்/பிரதிநிதித்துவப்படுத்தப்படல்**: மேன்முறையீட்டாளர்- திரு. ஜி. திலீப் அமுதன்

பகிரங்க அதிகார சபை- உபாலி வீரசிங்க, சட்ட ஆலோசகர், பாதுகாப்பு அமைச்சு

ஏ. எம். எஸ்.பி. அத்தபத்து, தகவல் அலுவலர், இலங்கை இராணுவம்

தளபதி டபிள்யு. எச். எஸ் சொய்ஸா, விடய அலுவலர், இலங்கை இராணுவம்

**விளக்கத்தின்போது தோன்றிய விடயங்கள்**

தகவல் கோரிக்கையில் கோரப்பட்டுள்ள ஒவ்வொரு தகவலும் விரிவாக ஆராயப்பட்டபோது, இலக்கம் II (1) இல் கோரப்பட்டுள்ள கொள்கை ஆவணங்கள் தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரகாரம், செயல்திறனுடன் இணையத்தில் பதிவிடப்பட வேண்டியத் தகவல்களாகும் என ஆணைக்குழு

பகிரங்க அதிகார சபைக்கு (இலங்கை இராணுவம்) தெரிவித்தது. தம்முடைய சில கொள்கை ஆவணங்கள் http://www.army.lk/welfare என்ற தமது வலைத்தளத்தில் பதிவிடப்பட்டிருப்பதாக இலங்கை இராணுவம் தெரிவித்தது.

இலக்கம் II (2) இல் கோரப்பட்டுள்ளவை பகிரங்க ஆவணங்கள் எனவும் அவை பொது மக்கள் இலகுவாக அணுகக்கூடிய வகையில் கிடைக்கப்படுதல் வேண்டுமெனவும் ஆணைக்குழு இலங்கை இராணுவத்திற்கு தெரிவித்தது. கோரப்பட்டுள்ள இத்தகவல்கள் வெளிநாட்டிலுள்ள சில தரப்புக்களினால் எதிர்மறையான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே குறிப்பிட்டத் தகவலை வெளியிடாது உள்ளதாக கூறியதுடன், குறிப்பிட்ட ஆவணங்களை ஆணைக்குழுவின் முன்னிலையில் அதன் ஆய்விற்காக சமர்ப்பிப்பதாகவும், அவ் ஆவணங்களை ஆராய்ந்த பின்னர் அவை மேன்முறையீட்டாளருக்கு கையளிக்கப்பட வேண்டுமா இல்லையா என்பது குறித்து ஆணைக்குழு தீர்மானம் எடுக்க முடியும் எனவும் பகிரங்க அதிகார சபை கூறியது.

இலக்கம் II (8) இல் கோரப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பாக கூறுகின்றபோது, தல்செவனவானது 2011 ஆம் ஆண்டு வரையில் ஒரு வியாபார நிறுவனமாகப் பேணப்படாமையினால் 2011 வரை தணிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், 2011 ஆம் ஆண்டு முதலே அது ஒரு விடுதியாக இயங்கி வருவதாகவும் இலங்கை இராணுவம் தெரிவித்தது. 2011 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட தணிக்கைகளை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதாகவும் இலங்கை இராணுவம் தெரிவித்தது. இலக்கம் II (7) இல் கோரப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பாகவும் இவ்வாறே செய்வதற்கு இலங்கை இராணுவம் சம்மதித்தது. இலக்கம் II (4) இல் கோரப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பாக கூறுகின்றபோது, இலங்கை இராணுவத்தின் அனைத்து முகாம்களுக்கு அருகாமையிலும் அது உணவகங்கள்/ உணவு விடுதிகளை அமைத்துள்ளதாகவும், பொது மக்களும் அவற்றை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுவதாகவும், இதன் காரணமாக கோரப்பட்டுள்ளத் தகவல்கள் கணிசமான அளவினதாக இருக்கும் எனவும் இலங்கை இராணுவம் தெரிவித்தது. தேவைப்படுமாயின், இராணுவத்தினரால் உள்ளகமாகப் பேணப்படுகின்ற, பொது மக்களும் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள உணவகங்களின் விபரங்கள் மற்றும் வெளிப்படையாக பொது நிறுவனங்களாக இயங்குகின்ற உணவகங்களின் விபரங்கள் என இரு பிரிவுகளாக குறித்த தகவல்களை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு இலங்கை இராணுவம் சம்மதித்தது. இலக்கம் II (5) மற்றும் (6) இல் கோரப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பாகவும் இவ்வாறே செய்வதற்கு இலங்கை இராணுவம் சம்மதித்தது. மேலும், இலக்கம் II (9) இல் கோரப்பட்டுள்ள தகவல்களை ஆணைக்குழுவின் ஆய்விற்காக சமர்ப்பிப்பதற்கும், அதன் பின்னர் ஆணைக்குழு குறிப்பிட்ட தகவலின் வெளியிடுகை தொடர்பில் தீர்மானிப்பதற்கும் இலங்கை இராணுவம் சம்மதித்தது.

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

இலக்கம் I இல் இலங்கை கடற்படை மற்றும் விமானப் படையினரினால் நடாத்தப்படுகின்ற வியாபார நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் கோரப்பட்டிருந்தன. இது தொடர்பாக கூறுகின்றபோது, குறிப்பிட்டத் தகவல்களை இலங்கை கடற்படை மற்றும் விமானப்படையினரிடம் கோரியுள்ளதாகவும், இரண்டு படைகளும் அத்தகவல்களை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாகவும், ஆனால் அத்தகவல்களைத் திரட்டுவதற்கு கால அவகாசம் கேட்டிருப்பதாகவும் இலங்கை இராணுவம் தெரிவித்தது.

இலக்கம் III இல் கோரப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பாக கூறுகின்றபோது, அத்தகவல்கள் பிரிவு 5(1)(ஆ)(ii) இற்கு கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள விதிவிலக்கின் கீழ் மறுக்கப்படக்கூடியன என சட்டமா அதிபர் திணைக்களத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாக இலங்கை இராணுவம் தெரிவித்தது.

மேலும், கடந்த விளக்கத்தின்போது ஆணைக்குழுவால் பணிக்கப்பட்டதற்கு அமைய விசாரணை நீதிமன்றத்தினால் கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பான ஒரு சுருக்கத்தினை ஏற்கனவே தயார் செய்துள்ள போதிலும், சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தமக்கு விடுக்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் காரணமாக அவற்றை இவ்விளக்கத்திலே சமர்ப்பிக்காது இருப்பதற்கு தாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை இராணுவம் தெரிவித்தது.

**ஆணை**

எம் முன்னிலையில் இணங்கிக் கொண்டதற்கு அமைய,எவ்வித விதிவிலக்கிற்கும் உட்படாத பகிரங்க ஆவணங்களான, இலக்கம் I மற்றும் II இல் கோரப்பட்டுள்ளத் தகவல்களை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பகிரங்க அதிகார சபைக்கு (இலங்கை இராணுவம்) பணிக்கப்படுகின்றது. பொருத்தமாகவுள்ள சந்தர்ப்பங்களில், இராணுவத்தினாரல் பேணப்பட்டு வருகின்ற விருந்தோம்பல் தொழில்முயற்சிகள் தொடர்பான தகவல்கள், அத்தகைய விருந்தோம்பல் தொழில்முயற்சிகள் வியாபார/பகிரங்க நிறுவனங்களாக மாற்றப்பட்ட நாளிலிருந்து வழங்கப்படலாம்.

இலக்கம் II (4) இல் கோரப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பாக கூறுகின்றபோது, இலங்கை இராணுவமானது, இராணுவத்தினரால் உள்ளகமாகப் பேணப்படுகின்ற, பொது மக்களும் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள உணவகங்களின் விபரங்கள் மற்றும் வெளிப்படையாக பொது நிறுவனங்களாக இயங்குகின்ற உணவகங்களின் விபரங்கள் என இரு பிரிவுகளாக குறித்த தகவல்களை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கலாம் என ஆணைக்குழு கூறியது. இலக்கம் II (9) இல் கோரப்பட்டுள்ள தகவல்களை ஆணைக்குழுவின் ஆய்விற்கு சமர்ப்பிக்குமாறு பகிரங்க சபைக்கு பணித்ததுடன், அதனை பரிசீலித்ததன் பின்னர் அத்தகவலின் பகிரங்க வெளிவிடுகை பற்றி ஆணைக்குழு தீர்மானிக்குமெனவும் கூறியது.

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

இலக்கம் III இல் கோரப்பட்டுள்ள தகவல் மற்றும் அது தொடர்பாக பகிரங்க அதிகார சபையினால் வேண்டப்பட்ட (சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைவாக) பிரிவு 5(1)(ஆ)(ii) இன் விதிவிலக்கு என்பன தொடர்பாக கூறுகின்றபோது, குறிப்பிட்ட பிரிவானது பகிரங்க அதிகார சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதில் எச்சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டத் தகவல் மறுக்கப்படலாம் என்பது பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

*"**அத்தகையத் தகவல் இரகசியமாகத் தரப்பட்டு அல்லது இரகசியமாகபெறப்பட்டு உள்ளவிடத்து**, ஏதேனும் அரசுடனான அல்லது சர்வதேச சட்டத்தின் கீழ் சர்வதேச உடன்படிக்கைகள் அல்லது கடப்பாடுகள் தொடர்பில் இலங்கையின் உறவுகளுக்கு பாரதூரமாக பாதகமாகவிருக்குமிடத்து அல்லது அவ்வாறிருக்கும் சாத்தியமுள்ளவிடத்து…" (அழுத்தம் எம்முடையது)*

சர்வதேச உடன்பாடொன்றின் மீது தங்கியிருந்து குறிப்பிட்ட தகவலை மறுக்க வேண்டுமாயின் அத்தகவல் இரகசியமாகப் பெறப்பட்டிருக்க வேண்டும் அல்லது தரப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் அது *ஏதேனும் அரசுடனான அல்லது சர்வதேச சட்டத்தின் கீழ் சர்வதேச உடன்படிக்கைகள் அல்லது கடப்பாடுகள் தொடர்பில் இலங்கையின் உறவுகளுக்கு பாரதூரமாக பாதகமாகவிருத்தலும்* வேண்டும். ஆகவே இவ்விதிவிலக்கினை நுட்பமற்ற அல்லது பொதுவான முறையில் சர்வதேச உடன்பாடுகளுடன் தொடர்புடைய அனைத்து தகவல்களுக்கும் பிரயோகிக்கவியலாது.

முதலாவதாக, எச் சர்வதேசச்சட்டத்தின் கீழான கடப்பாடு அல்லது சர்வதேச உடன்பாடு இப்பிரச்சனையுடன் தொடர்புற்றுள்ளது என்பதனைத் தெளிவுபடுத்தும்படியும், இரண்டாவதாக, அதனால் ஏற்படக்கூடிய பாரதூரமான பாதகத்தன்மையை துல்லியமாக விபரிக்கும்படியும், மூன்றாவதாக, எத்தகவல்கள் இரகசியத்தன்மை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது அல்லது பெறப்பட்டுள்ளது என்பதனைத் தெளிவுபடுத்தும்படியும் பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்பட்டது. வேண்டப்பட்டுள்ள விதிவிலக்கு இச்சந்தர்ப்பத்திற்கு ஏற்புடையதாகுமா என்பதனை மதிப்பிடுவதற்காகவும், பிரிவு 5(4) இல் கூறப்பட்டுள்ள பகிரங்க அக்கறை விஞ்சி நிற்கின்றதா என்பதனை தீர்மானிக்கவுமே இத்தகவல்களைக் கோருவதாக ஆணைக்குழு கூறியது. பிரிவு 5(4) ஆனது பின்வருமாறு கூறுகின்றது:

*"உப பிரிவு (1)இல் எது எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், தகவலின் வெளிவிடுகையின் பகிரங்க அக்கறை அதனது வெளிவிடுகையிலிருந்து விளையும் தீங்கை விஞ்சியிருக்குமிடத்து, அத்தகையத் தகவலுக்கானக் கோரிக்கை மறுக்கப்படக்கூடாது''*

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

மேலும், தகவல் உரிமைக்கானச் சட்டத்தின் பிரிவு 15 இன்படி ஆணைக்குழுவின் நியதிச்சட்டக் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்காக ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்கவே அத்தகைய ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளது என்பதும் குறித்துக் கொள்ளப்பட்டது. *தகவலை அணுகுவதற்கான உரிமையினை மேம்படுத்துவதனூடாக பகிரங்க அதிகார சபைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் பண்பாட்டைப் பேணி வளர்க்க வேண்டும்* என்பதனை அழுத்தமாகக்கூறுகின்ற சட்டத்தின் பாயிரத்தின் நோக்கு மற்றும் உள்ளடக்கம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபோது, இதனைப் பின்பற்றத் தவறுகின்றமையானது நியதிச்சட்டக் கடமைகள் மற்றும் பணிகளை மீறுவதாக அமையும்.

இலங்கை இராணுவமானது அது விரும்புகின்றவிடத்து, மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக தனது எழுத்து மூலமான சமர்ப்பிப்புக்களை 2018 ஆம் ஆண்டு ஜுன் 26 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக ஆணைக்குழுவிற்கு (மேன்முறையீட்டாளருக்கு ஒரு பிரதி அனுப்பப்படுதல் வேண்டும்) சமர்ப்பிக்கலாம்.

பகிரங்க அதிகார சபையானது (பாதுகாப்பு அமைச்சு) அது இணங்கிகொண்டதன்படி இலக்கம் I மற்றும் II தொடர்பான தகவல்களை அடுத்த விளக்கத்தின்போது சமர்ப்பிப்பதற்கு பணிக்கப்படுகின்றது.

மேன்முறையீடு ஒத்திவைக்கப்படுகின்றது.
அடுத்த விளக்கத்திற்கான திகதி: 03.07.2018

……………………

*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு (அந்நபரினூடாக) /70/2018 (03.07.2018 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வமான கூட்டத்தின் ஒரு அங்கமாக ஆணை வழங்கப்பட்டது)*

*2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 32(1) இன் கீழான கட்டளை மற்றும் 2016 ஆம் ஆண்டு தகவல் உரிமைக்கான விதிகளின் (கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறை) 28 ஆம் விதிக்கு கீழான நடபடிமுறை பதிவு*

**தலைவர்:** திரு. மஹிந்த கம்மம்பில

**ஆணைக்குழு உறுப்பினர்கள்:** செல்வி. கிஷாலி பின்ரோ ஜயவர்தன
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

திரு. எஸ். ஜி. புஞ்சிஹேவா
நீதிபதி ரோஹினி வெல்கம

**வருகை தந்தவர்கள்:** பணிப்பாளர் நாயகம் திரு. பியதிஸ்ஸ ரணசிங்க

**மேன்முறையீட்டாளர்:** திரு. ஜி. திலீப் அமுதன்

**அறிவித்தல் வழங்கப்பட்ட நபர்:** குறித்தளிக்கப்பட்ட அலுவலர், பாதுகாப்பு அமைச்சு

**தோன்றல்/பிரதிநிதித்துவப்படுத்தப்படல்**: மேன்முறையீட்டாளர்- திரு. ஜி. திலீப் அமுதன்

பகிரங்க அதிகார சபை- ஏ. ஜயசேகர, சட்ட ஆலோசகர், பாதுகாப்பு அமைச்சு

பிரிகேடியர் (படைப்பகுதித் தலைவர்) ஈ. எஸ். ஜயசிங்க, சடட பிரிவு, இலங்கை இராணுவம்

கேணல் டபிள்யு.ஏ.சி.என். வரகாகொட, கொழும்பு - ஊடக பிரிவு, இலங்கை இராணுவம்

ஏ. எம். எஸ்.பி. அத்தபத்து, தகவல் அலுவலர், இலங்கை இராணுவம்

**விளக்கத்தின்போது தோன்றிய விடயங்கள்**

இம்மேன்முறையீட்டின் கடந்த விளக்கத்தின்போது (15.05.2018 அன்று வழங்கிய ஆணையின்போது), வடக்கு மாகாணத்தில் கிரங்க அதிகார சபையினால் (இலங்கை இராணுவம்) பேணப்படுகின்ற விடுதிகள், கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், மையங்கள், உணவகங்களின் பட்டியல் மற்றும் 2009 முதல் 2016 வரையான காலப்பகுதிக்கான லாயா உணவகத்தின் (Laya Hotel) கீழ் இயங்குகின்ற ஒவ்வொரு உணவகத்தினதும் (அதாவது, Laya Beach, Laya Leisure, Laya Safari, and Laya Waves போன்றன) வருடாந்த தணிக்கை அறிக்கைகள் போன்ற தகவல்கள் உள்ளடங்கலாக (I) மற்றும் (II) ஆகிய இலக்கங்களின்கீழ் கோரப்பட்டத் தகவல்களை மேன்முறையீட்டாளருக்கு வழங்குவதற்கு பகிரங்க அதிகார சபை (இலங்கை இராணுவம்) இணங்கியிருந்த தகவல்களின் நிலைப்பாடு குறித்து விசாரணை செய்தபோது, அத்தகவல்கள் இலங்கையிலுள்ள வேறுபட்ட சமுதாயங்களுக்கிடையில் பிரிவினையினை ஏற்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படலாம் அல்லது புலம்பெயர் குழுக்களினால் எதிர்மறையான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம் என்ற காரணங்களுக்காக அத்தகவல்களை வெளியிடுவதற்கு தயக்கம் காட்டுவதாக பகிரங்க அதிகார சபை (இலங்கை இராணுவம்) தெரிவித்தது.

மேலும் தகவல் கோரப்பட்டிருந்த, விடுதிகள், கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் மையங்கள் மற்றும் உணவகங்கள் உள்ளடங்கலான விருந்தோம்பல் நிறுவனங்கள் பொது மக்கள் நிதியினாலோ அல்லது அரசாங்க நிதியினாலோ நிதியளிக்கப்படுவனவல்ல என்றும், அவற்றிற்கு இலங்கை இராணுவத்தின் நலன்புரி நிதியினூடாகவே நிதியளிக்கப்படுவதாகவும் அவை இலங்கை இராணுவத்தின் பொது தணிக்ககைகளுக்கு உட்படுத்தப்படுகின்றது என பகிரங்க அதிகார சபை (இலங்கை இராணுவம்) தெரிவித்தது.

குறிப்பிட்ட அவ் விருந்தோம்பல் நிறுவனங்கள் அரசாங்கத்தினால் சம்பளம் வழங்கப்படுகின்ற பகிரங்க சேவை (இலங்கை இராணுவம்) ஊழியர்களினாலேயே நடத்தப்படுகின்றன என்பதனை ஆணைக்குழு குறித்து கொண்டது. அவ்வாறில்லாத பட்சத்தில் குறிப்பிட்ட கோரிக்கையானது பலனாகாதெனவும் கூறியது.

மேலும், பகிரங்க அதிகார சபையானது (இலங்கை இராணுவம்), மேன்முறையீட்டாளர் தொடர்பான இராணுவ உளவுத்துறை அறிக்கையொன்றினைத் தன் உடைமையில் கொண்டிருப்பதாகவும், அதனால் அத்தகவலை வெளியிடுவதற்கு தயக்கம் கொள்வதாகவும் தெரிவித்தது.

இதற்கு பதிலளிக்கும் முகமாக, தான் தகவலறியும் உரிமைச் சட்டத்திற்கு அமைவாக மற்றும் அதன் கீழ் தகவலுக்கான கோரிக்கையொன்றினை செய்த ஒரே ஒரு காரணத்தினிமித்தம், தகவலறியும் உரிமைச் சட்டத்தின் நோக்கத்தினைத் தோற்கடிக்கும் வகையில், பகிரங்க அதிகார சபையானது (இலங்கை இராணுவம்) தன்னைப் பின்தொடர்ந்து தன்னைப் பற்றியப் பின்புலத் தகவல்களை ஆராய்ந்துள்ளதாக மேன்முறையீட்டாளர் கூறினார். இதற்கு பதிலளித்த இராணுவம், மேன்முறையீட்டாளர் தகவலறியும் உரிமைச் சட்டத்தினைப் பயன்படுத்த ஆரம்பிப்பதற்கு முன்பே அவரைப் பற்றிய இராணுவ உளவுத்துறை அறிக்கையினை உடைமையில் கொண்டிருந்ததாகத் தெரிவித்தது.

மேன்முறையீட்டாளரின் பின்புலமோ அல்லது அவர் அத்தகவல்களைக் கோருவதற்கான நோக்கமோ அத்தகவலை மறுப்பதற்கான காரணிகளாக அமைய முடியும் என சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படவில்லை என்ற விடயத்தினை ஆணைக்குழு இலங்கை இராணுவத்திற்கு எடுத்து காட்டியது. மேன்முறையீட்டாளர் ஒரு ஊடகவியலாளராக இருப்பதனால், இராணுவம் இத்தகைய வியாபாரங்களை முன்னெடுக்கின்றது என்பதனைக் காட்டுவதனூடாக இராணுவம் மீதான ஒரு எதிர்மறையான பார்வையை ஏற்படுத்துவதற்கு அவர் இத்தகவல்களை பயன்படுத்தலாம் என கருதுவதனால், தாம் "*தகவலின் வெளிவிடுகையானது நாட்டின் பாதுகாப்பினை அல்லது ஆள்புல கௌரவத்தினை அல்லது அதன் தேசிய பாதுகாப்பினை மழுங்கடிக்கும்*" என கூறுகின்ற பிரிவு

5(ஆ)(1) இல் தங்கியிருப்பதாக இராணுவம் கூறியது. இத்தகவலின் வெளிவிடுகையானது காலப்போக்கில் இலங்கை இராணுவத்திற்கும் வடக்கு கிழக்கிலுள்ள வியாபார சமுதாயங்களுக்குமிடையில் வீணான மோதல்கள் தோன்றுவதற்கு காரணமாக அமையும் எனவும், இம்மோதல்கள் தகவலறியும் உரிமைச் சட்டத்தில் குறித்துகாட்டப்பட்டுள்ளதன் படி *'நாட்டின் பாதுகாப்பு'* மற்றும்/அல்லது *'தேசிய பாதுகாப்பு'* என்பனவற்றை மழுங்கடிக்கும் என இலங்கை இராணுவம் கூறியது.

இலங்கை இராணுவத்தினால் முன்வைக்கப்பட்ட இச்சமர்ப்பிப்பு தொடர்பான பகிரங்க அதிகார சபையின் (பாதுகாப்பு அமைச்சின்) நிலைப்பாட்டினை ஆணைக்குழு வினவியது. பகிரங்க அதிகார சபையானது (பாதுகாப்பு அமைச்சு), இலக்கம் I இன் கீழ் கோரப்பட்ட இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையினால் நடாத்தப்படுகின்ற விருந்தோம்பல் நிறுவனங்களின் முழுமையான பட்டியல் தொடர்பில், கடற்படை மற்றும் விமானப்படை என்பன அத்தகவல்களை முறையே 05.06.2018 மற்றும் 12.06.2018 எனத் திகதியடப்பட்ட கடிதங்களினூடாக வெளியிட்டுள்ளது எனத் தெரிவித்தது.

கடற்படை மற்றும் விமானப்படை என்பன தம்மால் நடத்தப்படுகின்ற விருந்தோம்பல் நிறுவனங்களின் முழுமையான பட்டியலினை வெளியிட்டுள்ளமையைத் தொடர்ந்து இலங்கை இராணுவமும் அதனை வெளியிடுவதற்கு சம்மதித்தது.

இலக்கம் III இன் கீழ் கோரப்பட்டத் தகவல்கள் தொடர்பில், பகிரங்க அதிகார சபையானது, 15.05.2018 அன்று இடம்பெற்ற விளக்கத்தின்போது வேண்டப்பட்ட பிரிவு 5(i)(ஆ)(ii) இன் கீழான விதிவிலக்கினை நியாயப்படுத்துகின்ற சமர்ப்பிப்புக்களை (02.04.2018 என்ற திகதியில் பெற்றுக்கொண்ட சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின்படி) 03.07.2018 அன்று எழுத்து வடிவில் சமர்ப்பித்திருந்தது. அத்துடன் ஹய்டியில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காப்பு பணிகளின்போது இடம்பெற்றதாக இளம்பராய பெண்கள் மீதான பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டுக்கள் பற்றிய விசாரணை அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கை இராணுவமானது 03.07.2018 அன்று எழுத்து மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட அதன் சமர்ப்பிப்புக்களை மீளவும் பின்வருமாறு எடுத்து கூறியது.

1. 2007 ஆம் ஆண்டு ஹய்டியில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த இலங்கை இராணுவத்தினரினால் ஹய்டி பிரஜைகள் மீது புரியப்பட்ட பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பானத் தகவல்களை மேன்முறையீட்டாளர்

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

வினவியிருந்தார். விண்ணப்பிக்கப்பட்ட தகவல்களானவை, விசாரணை நீதிமன்ற நடபடிமுறைகள், இராணுவத்தினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள், பாதிக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள், இராணுவத்தினருக்கு எதிரான இராணுவ நீதிமன்ற நடவடிக்கைகள், குற்றச்சாட்டுக்கள், அவர்களுக்கு வழங்கப்பட்டத் தண்டணைகள் மற்றும் வேறு இராணுவ ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

2. இராணுவத்தினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுக்களும் இராணுவ ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக சரியான முறையில் விசாரிக்கப்பட்டன. அத்துடன் இராணுவச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு கீழான இராணுவ நடபடிமுறை மூலமாகத் தண்டனையும் வழங்கப்பட்டது.

3. இலங்கை இராணுவத்தினரால் புரியப்பட்ட பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டுக்கள் தொடர்பான தகவல்களை ஐக்கிய நாடுகள் சபையானது,"`ஹய்டியில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காப்பு பணிகளின்போது இடம்பெற்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட இளம்பராய பெண்கள் மீதான பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் என்பன பற்றிய விசாரணை அறிக்கை" எனத் தலைப்பிடப்பட்ட அறிக்கையொன்றினை இலங்கை இராணுவத்திற்கு வழங்கியுள்ளது. இவ் அறிக்கை **"அதீத இரகசியத்தன்மையுடையது"** என குறிப்பிடப்பட்டே வழங்கப்பட்டிருந்தது. ஆகவே அத்தகவல்களை மூன்றாந் திறத்தவருக்கு வெளியிடாது இருப்பதற்கான கடப்பாடு இருப்பதாக இலங்கை இராணுவம் கூறியது.

4. பிரிவு 5(i)(ஆ)(ii) ஆனது "*அத்தகையத் தகவல் இரகசியமாகத் தரப்பட்டு அல்லது இரகசியமாகப் பெறப்பட்டு உள்ளவிடத்து, ஏதேனும் அரசுடனான அல்லது சர்வதேச சட்டத்தின் கீழ் சர்வதேச உடன்படிக்கைகள் அல்லது கடப்பாடுகள் தொடர்பில் இலங்கையின் உறவுகளுக்கு பாரதூரமாக பாதகமாகவிருக்குமிடத்து அல்லது அவ்வாறிருக்கும் சாத்தியமுள்ளவிடத்து*" பகிரங்க அதிகார சபையானது அத்தகவலை வெளியிட மறுக்கலாம் என கூறுகின்றது.

5. இத்தகவல்களை மூன்றாந்திறத்தவர் ஒருவருக்கு வழங்கும்போது, அத்தகவல்கள் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் மூலமாகப் பிரசித்தப்படுத்தப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன என்பதுடன், அது இராணுவத்தினரின் நற்பெயரை இல்லாதொழிக்கும் என்பதுடன் இலங்கைக்கும் ஏனைய நட்பு நாடுகளுக்கும் இடையிலுள்ள உறவிற்கு பாரதூரமான பாதகத்தினை ஏற்படுத்தும்.

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

6. இத்தகைய சூழ்நிலைகளை கவனத்திற்கெடுத்து பார்த்த சட்டமா அதிபர் திணைக்களமானது கோரப்பட்ட குறிப்பட்டத் தகவல்கள் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(i)(ஆ)(ii) இற்கு கீழ் கொண்டுவரப்பட கூடியன என்றும் அவை மறுக்கப்பட முடியும் எனவும் கருதுகின்றது. ஆகவே அத் தகவல்களை மூன்றாந் திறத்தவருக்கு வழங்குவதற்கு இலங்கை இராணுவம் மறுக்கின்றது.

**ஆணை**

கொள்கைரீதியாகப் பார்க்கின்றபோது, இலங்கை பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நெறிமுறையானதும் சட்டரீதியானதுமான தகவலுக்கான கோரிக்கையொன்றினை மேற்கொண்டுள்ளார் என்ற ஒரே காரணத்திற்காக, பகிரங்க அதிகார சபையானது ஒரு பிரஜை தொடர்பில் இராணுவ உளவுத்துறை அறிக்கையினைப் பெற்றுக் கொள்ள எத்தனித்தலானது சட்டத்தின் அடிப்படை குறிக்கோள்களைத் தோற்கடிப்பதாக அமையும்.

இத்தருணத்தில் எமது முன்னிலையிலுள்ள நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபோது, சட்டத்தின் அடிப்படை குறிக்கோள்களைத் தோற்கடிக்கக்கூடிய அத்தகைய செயற்பாடொன்று இடம்பெற்றுள்ளதா இல்லையா என்பதனை ஆணைக்குழுவினால் மதிப்பிட முடியாதுள்ளது. தகவலறியும் உரிமை அடிப்படையில் தகவல் கோருகின்ற விண்ணப்பதாரர்கள் ஏதேனுமொரு முறையில் அச்சுறுத்தப்படுவார்களாயின், அது ஆணைக்குழுவின் தலையீட்டினை தேவைப்படுத்துகின்ற ஒரு பாரதூரமான விடயமாகக் கருத்தில் கொள்ளப்படும்.

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மற்றும் அச்சட்டத்திற்கு அமைவாக, மேன்முறையீட்டாளரின் பின்புலமோ அல்லது அவர் அத்தகவல்களைக் கோருவதற்கான நோக்கமோ அத்தகவலை மறுப்பதற்கான காரணிகளாக அமைய முடியாது என்பதனை ஆணைக்குழு குறித்து காட்டுகின்றது. சட்டத்தின் பிரிவு 25(5)(ஈ) ஆனது பின்வருமாறு கூறுகின்றது;

*''அவரைத் தொடர்பு கொள்வதற்கு அவசியமாக இருக்கக்கூடிய தகவல் தவிர, தகவலைத் தேவைப்படுத்துவதற்கான ஏதேனும் காரணம் அல்லது வேறு ஏதேனும் தனிப்பட்ட விபரங்களைக் கொடுக்கும்படி தேவைப்படுத்துதல் ஆகாது''*

கோரப்பட்டுள்ள தகவலானது சட்டத்தின் பிரிவு 5(1) இன் கீழுள்ள விதிவிலக்கான சந்தர்ப்பங்களுக்குள் உள்ளடக்கப்படாது மற்றும் இத்தகவலின் வெளிவிடுகை தொடர்பில் பிரிவு

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

5(4) இலுள்ள மிதமிஞ்சிய பகிரங்க அக்கறையினை பிரயோகிக்க இயலாது என்கின்ற சந்தர்ப்பங்களில், குறிப்பிட்ட தகவல் சட்டத்தின்படி நெறிமுறைத்தன்மையினை உடையதா மற்றும் அதனை மேன்முறையீட்டாளருக்கு வழங்கமுடியுமா என்பதனை நிச்சயிப்பதே ஆணைக்குழுவின் பணியாக அமையும். இலக்கம் I இன் கீழ் கோரப்பட்டுள்ள தகவல் தொடர்பில், இலங்கை கடற்படை மற்றும் விமானப் படையினரால் வழங்கப்பட்ட தகவல்களை ஒத்த தகவல்களை பகிரங்க அதிகார சபையானது (இலங்கை இராணுவம்) 07.08.2018 அன்று அல்லது அதற்கு முன்பதாக மேன்முறையீட்டாளருக்கு வழங்க வேண்டும் என்பதுடன் அதன் பிரதியொன்றை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்ட பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது.

தகவல் கோரிக்கையின் இலக்கம் II (7) இன் கீழ் லாயா விடுதியின் (Laya Hotel) கீழ் இயங்குகின்ற ஒவ்வொரு விடுதியிதினதும் (அதாவது, Laya Beach, Laya Leisure, Laya Safari, and Laya Waves போன்றன) 2009 முதல் 2016 வரையான காலப்பகுதிக்கான வருடாந்த தணிக்கை அறிக்கைகள் கோரப்பட்டன. இத்தகவல் தொடர்பில், இராணுவத்தினரால் நடாத்தப்படுகின்ற குறிப்பிட்ட விருந்தோம்பல் நிறுவனங்கள் பொது நிதியினாலா அல்லது தனிப்பட்ட நிதியினாலா (இலங்கை இராணுவத்தின் நலன்புரி சமூக நிதி) நடாத்தப்படுகின்றன என்ற வினா எழுந்துள்ளது. குறிப்பிட்ட விருந்தோம்பல் நிறுவனங்கள் அரசாங்கத்தினால் சம்பளம் வழங்கப்படுகின்ற பகிரங்க அதிகார சபையின் உறுப்பினர்களினால் கட்டுப்படுத்தப்படுகின்றன மற்றும் செயற்படுத்தப்படுகின்றன மற்றும் நடாத்தப்படுகின்றன என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். பகிரங்க அதிகார சபையினால் முன்வைக்கப்பட்டுள்ள இவ் வாதத்தினை நிரூபிக்கப்படாதபட்சத்தில் அதனை ஏற்றுக்கொள்ளுதலானது, சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்படாத ஒரு சிறப்புரிமையினை குறிப்பிட்ட பகிரங்க அதிகார சபைக்கு வழங்குவதாக அமையும் என்பதுடன் அது இவ் ஆணைக்குழுவின் நியதிச்சட்டப் பணிகளை எடுத்துரைக்கின்ற தகவலறியும் உரிமைக்கானச் சட்டத்திற்கு முரணானதாக அமையும்.

அடுத்த விளக்கத்திற்கான நாளின்போது, தகவல் கோரிக்கையின் இலக்கம் II (7) இன் கீழ் கோரப்பட்டத் தகவல் குறித்த அதன் நிலைப்பாட்டினை முழுமையாக நிரூபிக்கும்படி இலங்கை இராணுவத்திற்கு பணிக்கப்படுகின்றது. மேலும், தகவல் கோரிக்கையின் இலக்கம் II இன் கீழ் கோரப்பட்டுள்ள ஒவ்வொரு தகவல் தொடர்பாகவும் இலங்கை இராணுவம் தமது நிலைப்பாட்டினை தகவலறியும் உரிமைக்கான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அடுத்த விளக்கத்தின் போது விளக்க வேண்டும் எனவும் பணிக்கப்படுகின்றது.

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

தகவல் கோரிக்கையின் இலக்கம் III இல் "ஹய்டியில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காப்பு பணிகளின்போது இடம்பெற்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட இளம்பராய பெண்கள் மீதான பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் என்பன பற்றிய விசாரணை அறிக்கை" கோரப்பட்டுள்ளது. இவ்விளக்கத்தின்போது இவ்விடயம் தொடர்பில் எமக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையினை ஆய்வு செய்த பின்னர் இவ்விடயம் தொடர்பான தீர்மானங்கள் எம்மால் பணிக்கப்படும்.

இத்துடன் இம் மேன்முறையீடு ஒத்திவைக்கப்படுகின்றது.

அடுத்த விளக்கத்திற்கான திகதி: 07.08.2018

---

*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு (அந்நபரினூடாக) /70/2018- (இவ் ஆணையானது 07.08.2018 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வமான சந்திப்பின் ஒரு அங்கமாக வழங்கப்பட்டது)*

*2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 32(1) இன் கீழான கட்டளை மற்றும் 2016 ஆம் ஆண்டு தகவல் உரிமைக்கான விதிகளின் (கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறை) 28 ஆம் விதிக்கு கீழான நடபடிமுறை பதிவு*

**தலைவர்:** திரு. மஹிந்த கம்மம்பில

**ஆணைக்குழு உறுப்பினர்கள்:** செல்வி. கிஷாலி பின்ரோ ஜயவர்தன
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்
திரு. எஸ். ஜி. புஞ்சிஹேவா
நீதிபதி ரோஹினி வெல்கம

**வருகை தந்தவர்கள்:** பணிப்பாளர் நாயகம் திரு. பியதிஸ்ஸ ரணசிங்க

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

**மேன்முறையீட்டாளர்:** திரு. ஜி. திலீப் அமுதன்

**அறிவித்தல் வழங்கப்பட்ட நபர்:** குறித்தளிக்கப்பட்ட அலுவலர், பாதுகாப்பு அமைச்சு

**தோன்றல்/பிரதிநிதித்துவப்படுத்தப்படல்**: மேன்முறையீட்டாளர்- திரு. ஜி. திலீப் அமுதன்

பகிரங்க அதிகார சபை- மேஜர், பி. பெரேரா, இலங்கை இராணுவம்

பிரிகேடியர், ஈ.எஸ். ஜயசிங்க, சட்ட பிரிவு, இலங்கை இராணுவம்

மேஜர், ஏ. அமரதிலக்க, சட்ட அலுவலர், இலங்கை இராணுவம்

**விளக்கத்தின்போது தோன்றிய விடயங்கள்**

31.07.2018 எனத் திகதியிடப்பட்டு மேன்முறையீட்டாளரினால் முன்வைக்கப்பட்ட எழுத்துமூலமான சமர்ப்பிப்புக்களில் உள்ளடங்கியிருந்த பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆணைக்குழு இலங்கை இராணுவத்தின் கவனத்தை ஈர்த்தது:

1. 'இவ்விடயம் இவ்வழக்கிற்கு அவசியமானதொன்றல்ல என்றபோதிலும் கூட, தான் யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் ஒரு ஊடகவியலாளர் என்றும், அவரால் பதிவு செய்யப்பட்டுள்ள பல தகவல் உரிமைக்கான கோரிக்கைகள் அவருடைய தொழிலின் நிமித்தம் பதியப்பட்டவை என்றும் மேன்முறையீட்டாளர் தெரிவித்திருந்தார்',
2. 'கடந்த விளக்கத்திற்கு பின்னர், நாட்டிற்கு வெளியிலுள்ள குறிப்பிட்ட சில குழுக்கள் அவருடைய வழக்கு தொடர்பான **ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் கைப்பற்றி வைத்துள்ளமை குறித்தும்,** அவருடைய வழக்கு தொடர்பாக ஆணைக்குழுவுடன் எழுத்து மூலமாக தொடர்பு கொள்வதற்கு உத்தேசித்துள்ளமை குறித்தும் சமூக ஊடகங்கள் மூலமாக மேன்முறையீட்டாளர் அறிந்துள்ளார்.'
3. '**அவருடைய இவ்வழக்கிலே மூன்றாந் திறத்தவர்களின் தலையீட்டினை அவர் விரும்பவில்லை என மேன்முறையீட்டாளர் குறிப்பாக கூறிக்கொள்ள விரும்புகின்றார்.** மேன்முறையீட்டாளர் அவரது வழக்கை அவராகவே வாதிடுவதற்கு விரும்புகின்றார்',
4. 'சுருக்கமாக, அவர், 2007 ஆம் ஆண்டு ஹய்டியில் பணியிலமர்த்தப்பட்டிருந்த இலங்கை அமைதி காப்பாளர்கள் ஹய்டியின் பிரஜைகள் மீது பாலியல் குற்றங்கள் புரிந்ததாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பான தகவல்களை கோரியிருந்தார்',
5. கோரப்பட்டுள்ள குறிப்பிட்ட தகவலானது இரகசியத்தன்மை தொடர்பான அக்கறைகளைத் தோற்றுவிக்கின்றது என்ற பகிரங்க அதிகார சபையின் கோரிக்கையினை

மேன்முறையீட்டாளர் மறுக்கின்றார். தகவலறியும் உரிமைச் சட்டத்திலுள்ள குறிப்பிட்ட விதிவிலக்கானது பின்வருமாறு கூறுகின்றது:

"*தகவலானது, ஏதேனும் பகிரங்க தொழிற்பாடு அல்லது அக்கறைக்கு தொடர்பல்லாததாகவுள்ள அல்லது தனியாளின் அந்தரங்கத் தன்மையின் அனுமதிக்கப்படாத வரம்புமீறலைச் செய்யக்கூடிய தனிப்பட்ட தகவலின் வெளிவிடுகையுடன் தொடர்புறுகினற்விடத்து, பாரிய பகிரங்க அக்கறை அத்தகைய தகவலின் வெளிவிடுகையை நீதிமுறைப்படுத்தினாலொழிய அல்லது சம்பந்தப்பட்ட ஆள் அத்தகைய வெளிவிடுகைக்கு எழுத்தில் சம்மதமளித்திருந்தாலொழிய,*"

6. தெளிவாக கூறுவோமாயின், கோரப்பட்ட தகவலானது "பகிரங்க நடவடிக்கையொன்றுடன்" தொடர்புடையது, குறிப்பாக இலங்கை இராணுவப் படையின் அங்கத்தவர்கள் அத்தகைமையின் அடிப்படையில் அமைதிகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டமை தொடர்பானது. இப்பணிகள் இரகசியத்தன்மை உடையவை அல்ல என்பது தெளிவான விடயமாகும்.'
7. 'மேலும், இத்தகவல் பகிரங்க அக்கறை தொடர்பான ஒரு தகவல் என்பது தெளிவான விடயமாகும். அரச அதிகாரிகள் அவர்களுடைய அலுவல்முறை தகைமையில் பணியாற்றுகின்றபோது இழைத்த தீவிரமான மீறுகைகள் குறித்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்ற கேள்வி எழுகின்றமையால், அலுவலக கடமைகளின் போதான அரச அதிகாரிகளின் நடத்தையானது வெளிப்படையாக பகிரங்க அக்கறை தொடர்பான ஒரு விடயமாக அமைகின்றது.
8. 'மேலும், இராணுவம் தொடர்பான சீர்திருத்த முயற்சிகள் நல்லிணக்கத்திற்கான முன்னெடுப்புக்களுக்கு அவசியமானதாக அமைகின்றன. ஆகவே இவ்விடயத்தில் தெளிவான பகிரங்க அக்கறை உண்டு',
9. 'கோரப்பட்டத் தகவல்கள் எந்தவொரு தனிநபரினதும் தனிப்பட்ட வாழ்க்கை சார்ந்தவை அல்ல. மாறாக அவை பணியிலிருந்தபோதான அலுவலர்களின் நடத்தையுடனும், அந்நடத்தை தொடர்பில் அரச நிறுவனங்களினால் வெளிப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ எதிர்ச்செயலுடனும் தொடர்புபட்டவை ஆகும்.
10. 'தொடர்புறுத்தி பார்க்கின்றபோது, குற்றவியல் வழக்குகள் தொடர்பான பதிவுகள் பகிரங்க ஆவணங்களாகும். குற்றவாளி அல்லது தண்டனை அளிக்கப்பட்டுள்ள நபர் அவர் தொடர்பான குற்றவியல் நீதிமன்ற நடபடிமுறைகள் தொடர்பில் இரகசியத்தன்மை இருக்க வேண்டும் என்ற நெறிமுறைதன்மையான எதிர்பார்ப்பினை கொண்டிருக்க இயலாது.'
11. 'இத்தகவலின் வெளிவிடுகையானது பிரிவு 5 (1) (ஆ) (ii) இன் கீழான விதிவிலக்கிற்குள் உள்ளடக்கப்படும் என்ற கோரிக்கை தொடர்பாக கூறுகின்றபோது, மேன்முறையீட்டாளர் இவ் ஏற்பாடு இவ்விடயத்திற்கு ஏற்புடையதாகாது என்பது தெளிவான விடயம் என கூறினார்.

12. '….முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் மற்றும் அவற்றுக்கான பதிலிறுப்பு தொடர்பாக சரியான நடவடிக்கைகளை எடுக்கத்தவறுகின்றமையே ஏனைய நாடுகளுடனான இலங்கையின் உறவினை சேதப்படுத்தும். மேலும், தவறான நடத்தை மற்றும் அதற்கான ஏதேனும் தீர்வு நடவடிக்கைகள் (அல்லது அவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்காமை) தொடர்பான தகவல்களை தொடர்ச்சியாக மூடி மறைப்பதன் ஊடாக தண்டனையிலிருந்து விடுபடுகின்ற கலாசாரம் தொடர்ந்தும் நிலைத்திருக்கும் என்பதுடன் அது நாடுகளுக்கிடையேயான இலங்கையின் மதிப்பை பாதிக்கும்' என்பதுடன்
13. எவ்வாறாயினும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தேவைப்படுகின்ற ''பாரதூரமான பாதகமானது'' இதுவரை நிரூபிக்கப்படவில்லை.மேலும், கோரப்பட்ட எந்தவொரு தகவலும் இரகசியத்தன்மையின் அடிப்படையில் வழங்கப்பட்டதோ அல்லது பெற்றுக்கொள்ளப்பட்டதோ அல்ல''

இலக்கம் 1 இன் கீழ் கோரப்பட்ட தகவல்களின், அதாவது இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையினால் நடாத்தப்படுகின்ற விருந்தோம்பல் நிறுவனங்கள்/தொழில் முயற்சிகளின் நிலைப்பாடு தொடர்பில் வினவியபோது, 03.07.2018 அன்று இணங்கிக் கொண்டதற்கு அமைவாக இலங்கை இராணுவமானது, தகவல் கோரிக்கையின் இலக்கம் II (4) இல் கோரப்பட்ட தகவல்களை உள்ளடக்கி, 09.07.2018 என திகதியிடப்பட்டு ஆணைக்குழுவிற்கு விலாசமிடப்பட்ட கடிதத்தினை சமர்ப்பித்தது.

**ஆணை**

குறிப்பிட்ட தகவல் கோரிக்கையின் இலக்கம் III தொடர்பாகப் பார்க்கின்றபோது, ஐக்கிய நாடுகள் சபையினால் **"அதீத இரகசியத்தன்மையுடையது"** என குறிப்பிடப்பட்டு பகிரங்க அதிகாரசபைக்கு (இலங்கை இராணுவத்திற்கு) வழங்கப்பட்டுள்ள, "`ஹய்டியில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காப்பு பணிகளின்போது இடம்பெற்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட இளம்பராய பெண்கள் மீதான பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் என்பன பற்றிய விசாரணை அறிக்கை" ஆனது, 28.09.2017 எனத் திகதியிடப்பட்ட மேன்முறையீட்டாளரின் தகவலுக்கான கோரிக்கையின் இலக்கம் III இன் கீழ் கோரப்பட்ட தகவல்களுடன் தொடர்புடையது அல்ல.

மறுதலையாக, குறிப்பிட்ட இராணுவ வீரர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை இராணுவத்தினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் தொடர்பான தகவல்களையே மேன்முறையீட்டாளர் கோரியிருந்தார். ஆகவே, இலக்கம் III(1), III(2) மற்றும் III (4) இன் கீழ் கோரப்பட்ட தகவல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையினால் பகிரங்க அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட அறிக்கையின் **"அதீத இரகசியத்தன்மையுடையது"** என்ற தன்மை

மற்றும் சட்டத்தின் பிரிவு 5(1)(ஆ)(ii) இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள விதிவிலக்கு என்பன பிரயோகிக்கப்பட முடியாது.

மேலும், இலங்கை அரசாங்கமானது கடந்த காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களின்போது, ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு அமைப்புக்களின் முன்னிலையில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட இராணுவ வீரர்களின் எண்ணிக்கை தொடர்பான புள்ளி விபரங்களை சமர்ப்பித்துள்ளமையினால் அத்தகவல்கள் ஏற்கனவே பகிரங்க பரப்பில் கிடைக்கக்கூடியதாக உள்ளன.

முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இராணுவ வீரர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்ட இராணுவ வீரர்கள் தொடர்பான முழுமையான புள்ளிவிபர அடிப்படையிலான சுருக்கமொன்றினை தயாரிக்கும்படி பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது. இப்புள்ளிவிபர அடிப்படையலான சுருக்கமானது இலக்கம் III(1), III(2) மற்றும் III(4) இன் கீழ் கோரப்பட்ட தகவல்களை வழங்குவதாக அமையும்.

தகவல் கோரிக்கையின் இலக்கம் III(3) இன் கீழ் கீழ்வரும் தகவல் கோரப்பட்டுள்ளது;

3. குற்றத்தின் தன்மை, பாதிக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் அல்லது/மற்றும் அக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வேறு ஏதேனும் பொருத்தமான விபரங்கள் என்பன உள்ளடங்கலாக ஹய்டியில் அமைதி காப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இலங்கை அமைதிகாப்பாளர்களுக்கு எதிராக ஹய்டி பிரஜைகளால் செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்களின் பட்டியல்

கோரப்பட்டுள்ள இத்தகவலானது "குற்றத்தின் தன்மை, பாதிக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் அல்லது/மற்றும் அக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வேறு ஏதேனும் பொருத்தமான விபரங்கள் என்பன உள்ளடங்கலாக ஹய்டியில் அமைதி காப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இலங்கை அமைதிகாப்பாளர்களுக்கு எதிராக ஹய்டி பிரஜைகளால் செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்களின் பட்டியல்" என்ற பகுதியினைக் கொண்டிருப்பதனால் அது பாதிக்கப்பட்டவர்களின் தகவல்களையும் உள்வாங்குகின்றது. ஆகவே இத்தகவலானது தவலறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(1)(அ) இன் அவதானத்தினை ஈர்க்கின்றது. மேலும், ஆணைக்குழுவினால் ஆராயப்பட்ட, ஐக்கிய நாடுகள் சபையினால் பகிரங்க அதிகார சபைக்கு வழங்கப்பட்ட அறிக்கையிலே அத்தகைய தனிப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபோது, இத்தகவலானது அவ் அறிக்கையின் **"அதீத இரகசியத்தன்மையுடையது"** என்ற தன்மையினையும் பாதிக்கின்றது.

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

இவ் அனைத்து பொருத்தமான காரணிகளையும் கவனத்திற்கெடுத்து, இலக்கம் III(1), III(2) மற்றும் III(4) இன் கீழ் கோரப்பட்ட தகவல்களை வெளிவிடுதலானது பிரிவு 5(4) இல் கூறப்பட்டுள்ள பகிரங்க அக்கறை தொடர்பான அனைத்து நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடைந்து கொள்வதற்கு போதுமானது என்ற அடிப்படையில், இலக்கம் III (3) இன் கீழ் கோரப்பட்டத் தகவலின் வெளிவிடுகையினை பிரிவு 5(1) (அ) இன் கீழ் நாம் மறுக்கின்றோம்.

இலக்கம் I இன் கீழ் கோரப்பட்ட தகவல்கள் தொடர்பாக கீழ்வரும் தகவல்களை 05.06.2018 எனத் திகதியிடப்பட்ட கடிதத்தினூடாக இலங்கை கடற்படையானது மேன்முறையீட்டாளருக்கு வழங்கியுள்ளது,

1. “மாலிமா விருந்தோம்பல் சேவைகள் (*Malima Hospitality Services)* ஆரம்பத்தில் இலங்கை கடற்படை உறுப்பினர்களுக்கான நலன்புரி சேவையாக காணப்பட்டதுடன் அது 2011 ஆம் ஆண்டிலிருந்து பொது நிதியல்லாத நிதி மூலமாகவே செயற்பட்டு வருகின்றது. தற்போது, உணவகம் /உல்லாசப் போக்கிடம் என குறிப்பிடக்கூடிய 3 விருந்தோம்பல் தொழில் முயற்சிகள் மாலிமா விருந்தோம்பல் சேவைகளின் கீழ் இயங்கி வருகின்றது.
   அ) சோபர் ஐலன்ட் ரிசோட், திருகோணமலை
   ஆ) கோல்ட் லின்க் ஹோட்டல், திருகோணமலை
   இ) வெலிகம்பி விலாஸ், மிரிஸ்ஸ
   ஈ) லகூன் கபனாஸ், பனாம
   உ) போர்ட் ஹம்மென்ஹியல் ரிசோர்ட், யாழ்ப்பாணம்
   ஊ) லேக் ப்ரொன் ரிசோர்ட், கந்தளாய்
   எ) தம்பகொலபதுன பில்கிரிம்ஸ் ரெஸ்ட்- யாழ்ப்பாணம்

2. உணவு விடுதிகள்
   அ) லைட் ஹவுஸ் கலே- கொழும்பு கோட்ஜ்
   ஆ) கலப் ஹவுஸ், உஸ்வத்தகெயாவ

3. வரவேற்பு மண்டபங்கள்
   அ) வரவேற்பு மண்டபம், புனேவ
   ஆ) வரவேற்பு மண்டபம், ரன்மிஹித்தென்ன
   இ) வரவேற்பு மண்டபம், தங்காலை
4. நீர்த்தடாக நிலையம், கிரிந்த

*ஆ. இத் தொழில் முயற்சிகளை ஸ்தாபித்தமைக்கான குறிக்கோள்கள் கீழே தரப்பட்டுள்ளன:*

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

1. *இலங்கை கடற்படை அதிகாரிகளாக பணியாற்றுகின்ற அதிகாரிகள் மற்றும் அவர்களுடைய உறவினர்கள் அவர்களது விடுமுறையினைக் கழிக்கின்றபோது, பொழுதுபோக்கு சுற்றுலாக்கள் அல்லது வேறு தேவைகளின் நிமித்தம் செல்லும்போது அவர்கள் தங்குவதற்கு வசதியான இடங்களை குறைந்தளவான மற்றும் சலுகையான விலையில் ஏற்படுத்திக் கொடுத்தல்.*
2. *கடற்படை அதிகாரிகள், மாலுமிகள், அவர்களுடைய குடும்பங்கள் மற்றும் உறவினர்கள் பல்வகையான உணவுகள், வேறுபட்ட சுவையுள்ள சமையல்கள் மற்றும் வித்தியாசமான உணவுகள் என்பனவற்றை குறைந்தளவான மற்றும் சலுகையான விலையில் பெற்றுக்கொள்வதனை இயலுமானதாக்கல்.*
3. *இலங்கை கடற்படையின் உறுப்பினர்களுக்கான ஒரு நலன்புரி சேவையாக, அவர்களின் திருமண வைபவங்கள், குடும்ப கொண்டாட்டங்கள், ஒன்றுகூடல்கள், கருத்தரங்குகள், கூட்டங்கள் மற்றும் அனைத்து வகையான உத்தியோபகபூர்வ அல்லது தனிப்பட்ட குழு நிகழ்வுகள் என்பனவற்றை நியாயமான விலையில் நடாத்துதல்*
4. *1, 2 மற்றும் 3 இல் கூறப்பட்டுள்ள அனைத்து வசதிகளையும் ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரிகளுக்கும் வழங்குதல்.*
5. *உணவு பரிமாறும் உதவியாளர்கள் மற்றும் சமையல் உதவியாளர்கள் என்போர் பயணத்தை உள்ளடக்காத மற்றும் வேறுபட்ட சூழலில் பணி சார்ந்த நடைமுறை அனுபவங்களைப் பெறறுக் கொள்ளும் பொருட்டு மாலிமா விருந்தோம்பல் சேவை நிறுவனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.*
6. *கடற்படை அதிகாரிகள் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் அவர்களுக்கு பயன்படக்கூடிய ஹோட்டல் தொழில் தொடர்பான பல விதமான திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு உதவுதல்.*
7. *இலங்கை கடற்படையின் மாலிமா விருந்தோம்பல் சேவைகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பணம், கடற்படை அதிகாரிகளின் நலன்புரி சேவைகளுக்காக, குறிப்பாக பணியின்போது இறந்த, காணாமல்போன அல்லது அங்கவீனமானதால் பணி நீக்கப்பட்ட கடற்படை அதிகாரிகளுக்காகவும் தற்போதுள்ள தொழில்முயற்சிகளை புதுப்பிப்பதற்காகவும் மாத்திரமே பயன்படுத்தப்பட்டன. அத்துடன் எவ்வித இறுதி கணக்கோ அல்லது நிதி அறிக்கையோ தயாரிக்கப்படவில்லை.*
8. *மேலும், இச்சேவையானது தற்போது பணியாற்றுகின்ற கடற்படை அதிகாரிகளை ஊக்கப்படுத்தும் நோக்குடனும், ஓய்வு பெற்ற அதிகாரிகளை அக்கறையுடன் பராமரிக்கும் நோக்குடனுமே தொடர்ச்சியாக இயங்கி வருகின்றது.*
9. *எவ்வாறெனினும், இத்தகைய வசதிகள் பணியாற்றுகின்ற மற்றும் ஓய்வு பெற்ற கடற்படை அதிகாரிகள், அவர்களின் குடும்பங்கள், நெருங்கிய உறவினர்களுக்கு மாத்திரமே கிடைக்கக்கூடியதாக உள்ளது என்பதுடன் இச்சேவைகளை பொது மக்கள் அணுகுதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.*

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

இலங்கை விமானப் படையானது, 16.06.2018 எனத் திகதியிடப்பட்ட கடிதத்தினூடாக பின்வரும் தகவல்களை மேன்முறையீட்டாளருக்கு வழங்கியுள்ளது,

அ) '..........இலங்கை விமானப் படையினால் நடாத்தப்படுகின்ற கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் உணவு விடுதிகளின் பட்டியல்''

| ***செயற்திட்டத்தின் பெயர்*** | ***அமைவிடம்*** | ***குறிப்பிட்ட தொழில் முயற்சியை நடாத்தும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ள அமைப்பு*** |
|---|---|---|
| *ஈகல்ஸ் லேக்சைட் பென்குவட் என்ட் கன்வென்ஷன் மண்டபம்* | *அத்திடியா-இரத்மலானை* | *SLAF Base Rma* |
| *ஈகல்ஸ் லகூன் வியூவ் பென்குவெட் மண்டபம்* | *கட்டுநாயக்க* | *SLAF Base Kat* |
| *மார்பிள் பீச் கடற்படை உல்லாச போக்கிடம்* | *வெள்ளமணல்-சீனா-பே* | *SLAF Academy Cby* |
| *ஈகல்ஸ் கோல்ப் லின்க்ஸ்* | *க்லபன்பரக்-சீனா-பே* | *SLAF Academy Cby* |
| *ஈகல்ஸ் ஹெரிடேஜ் கோல்ப் க்லப்* | *அனுராதபுரம்* | *SLAF Bas Anu* |
| *ஈகல்ஸ் கெபே* | *வீரவில* | *SLAFStnWla* |
| *கட்டலினா கிரில் உணவு விடுதி* | *கொக்கல* | *SLAFStnKgl* |
| *ஈகல்ஸ் கட்டலினா கோல்ப் க்லப்* | *கொக்கல* | *SLAFStnKgl* |

27

ஆ). வியாபார நிறுவனங்களின் பட்டியல்

| ***செயற்திட்டத்தின் பெயர்*** | ***அமைவிடம்*** | ***குறிப்பிட்ட தொழில் முயற்சியை நடாத்தும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ள அமைப்பு*** |
|---|---|---|
| *ஹெலிடுவர்ஸ்* | *கொழும்பு/இரத்மலானை* | *SLAF Base Rma* |
| *ஸ்கை பெட் மிருக வைத்தியசாலை* | *பொரளை* | *SLAFStnCbo* |
| *சிப்பர்ஸ் சிகை மற்றும் அழகு நிலையம்* | *பொரளை* | *SLAFStnCbo* |

இவ்விளக்கத்தின்போது, பகிரங்க அதிகார சபையானது (இலங்கை இராணுவம்), மேன்முறையீட்டாளரின் தகவல் கோரிக்கையின் இலக்கம் II (4) இனால் கோரப்பட்டத் தகவல்களை உள்ளடக்கிய, 09.07.2018 எனத் திகதியிடப்பட்ட ஒரு கடிதத்தினை ஆணைக்குழுவிற்கு கையளித்தது. இலக்கம் II (4) இனால் பின்வரும் தகவல் கோரப்பட்டிருந்தது.

4. இராணுவ பணிப்பாளர் குழுமத்தின் நலன்புரி சேவைக்கு பொறுப்புடைய மற்றும்/அல்லது அவர்களால் அல்லது அவர்களுக்கு கீழ் பேணப்படுகின்ற,பொது மக்களுக்கு உணவு விநியோகம் செய்கின்ற கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், மையங்கள் மற்றும் உணவகங்கள் மற்றும் அதுபோன்றனவற்றின் முழுமையான பட்டியல்

பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது (09.07.2018 எனத் திகதியிடப்பட்டு ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட கடிதத்தின்படி);

"இலங்கை இராணுவத்தின் நலன்புரி சபையானது 08 நலன்புரி கடைகளை கட்டுப்படுத்துகின்றது. அவற்றின் பெயர்கள், அமைவிடங்கள் என்பன கீழே பட்டியல்படுத்தப்பட்டுள்ளன,"

இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவில்

| ***இல:*** | ***கடை*** | ***விலாசம்*** | ***தொலைபேசி இலக்கம்*** |
|---|---|---|---|
| *01.* | *நலன்புரி கடை-கொழும்பு* | *நலன்புரி கடை, புடானி கெபிடல் கட்டிடம், இல. 149, பொல்ஹேங்கொட, கொழும்பு-05* | *011 2514983* |
| *02.* | *நலன்புரி கடை - பானகொட* | *நலன்புரி கடை, இராணுவ காலனி, பனாகொட, ஹோமாகம* | *011 2892212* |
| *03.* | *நலன்புரி கடை – தியத்தலாவ* | *நலன்புரி கடை, அசேமு (சென்ட்ரல்) இராணுவ முகாம், தியத்தலாவ* | *057 2227100* |
| *04.* | *நலன்புரி கடை – பல்லேகல* | *நலன்புரி கடை, திகனபர, பல்லேகல, குண்டசாலை* | *081 2424151* |
| *05.* | *நலன்புரி கடை – புஸ்ஸ* | *நலன்புரி கடை, 58th பட்டாலியன் தலைமையகம், இராணுவ முகாம், புஸ்ஸ* | *091 2267786* |
| *06.* | *நலன்புரி கடை - அனுராதபுரம்* | *பட்டாலியன் தலைமையகம்,* | *025 2226203* |

| | | | |
|---|---|---|---|
| | | *இராணுவ முகாம், ரணசெவபுர, அனுராதபுரம்* | |
| *07.* | *நலன்புரி கடை – மின்னேரியா* | *நலன்புரி கடை, மினபே தலைமையகம், இராணுவ முகாம், மின்னேரியா* | *027 2245411* |
| *08.* | *நலன்புரி கடை – அம்பாறை* | *நலன்புரி கடை, சண்டை பயிற்சி பாடசாலை, இராணுவ முகாம், அம்பாறை* | *063 2224148* |

மேற்குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கிய 09.07.2018 எனத் திகதியிடப்பட்ட குறிப்பிட்ட கடிதம் மேன்முறையீட்டாளருக்கு கையளிக்கப்பட்டது.

இலக்கம் I இன் கீழ் கோரப்பட்டத் தகவல்கள் தொடர்பில் பார்க்கின்றபோது, இலங்கை கடற்படை மற்றும் இலங்கை விமானப்படை என்பன முறையே 05.06.2018 மற்றும் 14.06.2018 எனத் திகதியிடப்பட்ட கடிதங்களினூடாக குறிப்பிட்டத் தகவல்களை வழங்கியுள்ளது. பகிரங்க அதிகாரசபையானது (இலங்கை இராணுவம்), குறிப்பிட்ட தகவல்களை அதாவது பகிரங்க அதிகார சபையால் நடாத்தப்படுகின்ற விருந்தோம்பல் நிறுவனங்கள் / தொழில்முயற்சிகளின் பட்டியலை இலங்கை கடற்படை மற்றும் இலங்கை விமானப்படை என்பனவற்றால் வழங்கப்பட்ட அதே முறையில் வெளியிடுவதாக இணங்கியுள்ளது.

இம்மேன்முறையீடானது 09.10.2018 அன்று கேட்கப்படும் அடுத்த விளக்கத்திற்காக இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றது.

*****

**திலக் ரஞ்சித் சில்வா எதிர். இலங்கை பொலிஸ் தலைமையகம்**

*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு (நேரடியாக/ அந்நபரினூடாக) /142/2018- 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 32(1) இன் கீழான கட்டளை மற்றும் 2016 ஆம் ஆண்டு தகவல் உரிமைக்கான விதிகளின் (கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறை) 28 ஆம் விதிக்கு கீழான நடபடிமுறை பதிவு*
*(மேன்முறையீடானது 09.05.2018 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வமான சந்திப்பின் ஒரு அங்கமாகக் கேட்கப்பட்டது)*

**தலைவர்:** திரு. மஹிந்த கம்மம்பில

**ஆணைக்குழு உறுப்பினர்கள்:** செல்வி. கிஷாலி பின்ரோ ஜயவர்தன
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்
திரு. எஸ். ஜி. புஞ்சிஹேவா
நீதிபதி ரோஹினி வெல்கம

**வருகை தந்தவர்கள்:** பணிப்பாளர் நாயகம் திரு. பியதிஸ்ஸ ரணசிங்க
**மேன்முறையீட்டாளர்:** திரு. திலக் ரஞ்சித் சில்வா
**அறிவித்தல் வழங்கப்பட்ட நபர்:** குறித்தளிக்கப்பட்ட அலுவலர், இலங்கை பொலிஸ் தலைமையகம்

**தோன்றல் / பிரதிநிதித்துவப்படுத்தப்படல்**: மேன்முறையீட்டாளர்- திரு. திலக் ரஞ்சித் சில்வா
பகிரங்க அதிகார சபை- வருகை தரவில்லை

| | |
|---|---|
| **தகவல் உரிமைக்கான கோரிக்கை பதியப்பட்டது** | 21.11.2017 (27.11.2017 அனுப்பப்பட்டது) |
| **தகவல் அலுவலர் பதிலளித்தது** | பதிலளிக்கவில்லை |
| **குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடம் முதலாவது மேன்முறையீடு பதியப்பட்டது** | 30.12.2017 |
| **குறித்தளிக்கப்பட்ட அலுவலர் பதிலளித்தது** | பதிலளிக்கவில்லை |
| **தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு பதியப்பட்டது** | 09.01.2018 |

**சுருக்கமான நிகழ்வு பின்னணி**:

மேன்முறையீட்டாளர் 21.11.2017 என திகதியிடப்பட்டத் தகவல் கோரிக்கையொன்றின் மூலமாக, 13.02.2017 அன்று மட்டக்களப்பு-பொலன்னறுவை வீதியில் அமைந்துள்ள ருகுணுகெத சந்தியில் இடம்பெற்ற விபத்து தொடர்பாகப் பின்வரும் தகவல்களைக் கோரியுள்ளார்.

1. விபத்து நிகழ்ந்த இடம் மற்றும் விபத்து இடம்பெற்ற முறை ஆகியவைப் பதிவு செய்யப்பட்டுள்ள செப்பமற்ற குறிப்புக்கள் (Rough notes) மற்றும் விசாரணை அறிக்கை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்டப் பிரதிகள்.
2. லொறியின் சாரதி அல்லது/மற்றும் அவரது உதவியாளர் கைதுசெய்யப்பட்டத் திகதி மற்றும் நேரம் என்பன பதிவு செய்யப்பட்டுள்ள குறிப்புத்தாளின் உறுதிப்படுத்தப்பட்டப் பிரதிகள்.
3. மருத்துவ அறிக்கையொன்றினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, லொறியின் சாரதி மாவட்ட மருத்துவ அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்ட நேரம் பதிவாகியுள்ள குறிப்புத்தாளின் உறுதிப்படுத்தப்பட்டப் பிரதிகள்
4. லொறி சாரதியின் மருத்துவ அறிக்கை உள்ளடங்கலாக G.H.T பிரதியின் · உறுதிப்படுத்தப்பட்டப் பிரதிகள்
5. குற்றஞ்சாட்டப்பட்ட லொறி சாரதியினை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியமை மற்றும் சாரதி நீதிமன்றத்தின் முன் தோன்றிய வேறு சந்தர்ப்பங்கள் என்பன பதிவு செய்யப்பட்டுள்ள குறிப்புத்தாளின் உறுதிப்படுத்தப்பட்டப் பிரதிகள்
6. 14.02.2017 அன்று பொலன்னறுவை வைத்தியசாலையில் இடம்பெற்ற பிரேத பரிசோதனை அறிக்கை குறிப்புக்களின் உறுதிப்படுத்தப்பட்டப் பிரதிகள்
7. மோட்டார் சைக்கிள் மற்றும் லொறி தொடர்பாக, “தகவல் சமர்ப்பிப்பு புத்தகத்தில்” (Production Book) மேற்கொள்ளப்பட்டுள்ள பதிவுகளின் உறுதிப்படுத்தப்பட்டப் பிரதிகள்
8. குறிப்பிட்ட விசாரணைத் தொடர்பில் வாகன பரிசோதகரால் செய்யப்பட்ட விசாரணை அறிக்கை
9. அன்றைய தினத்தில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகளினால் அவர்களுடைய கையடக்க குறிப்பு புத்தகங்களில் பதியப்பட்ட குறிப்புக்களின் உறுதிப்படுத்தப்பட்டப் பிரதிகள்
10. அன்றைய தினத்தில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகள், விசாரணைகளுக்கு பின்பு அன்றைய நாளுக்கான கடமையிலிருந்து ஓய்வு பெற்ற நேரங்கள்
11. வழங்கப்பட்டத் திகதி மற்றும் இலக்கம் என்பவற்றை உள்ளடக்கிய லொறி சாரதியின் தற்காலிக வாகன அனுமதிப் பத்திரத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
12. சம்பவம் தொடர்பாக பொலிஸாரினால் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் பிரதிகள்

தகவல் அலுவலரிடமிருந்து எவ்விதமான பதில்களும் கிடைக்கவில்லை என்பதனால் மேன்முறையீட்டாளர், 30.12.2017 அன்று குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீடு செய்தார். குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடமிருந்து எவ்விதமான பதில்களும் கிடைக்கவில்லை என்பதனால் மேன்முறையீட்டாளர், 09.01.2018 என திகதியிடப்பட்ட கடிதமொன்றினூடாக ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்தார்.

**விளக்கத்தின் போது தோன்றிய விடயங்கள்:** 2017 பெப்ரவரி 3 ஆம் திகதி வர்த்தமானியிலிடப்பட்ட (வர்த்தமானி இல 2004/66) ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகளில் 20 ஆவது விதியின் கீழ், மேன்முறையீட்டு விளக்கத்திற்கு வருகைதரும்படி பகிரங்க அதிகார சபைக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தபோதிலும் பகிரங்க அதிகார சபை சமூகமளிக்கவில்லை.

ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்ததனைத் தொடர்ந்து, குறிப்பிட்ட பகிரங்க அதிகாரசபையின் தகவல் அலுவலர், 22.11.2017 எனத் திகதியிடப்பட்ட தனது தகவல் கோரிக்கைக்கு 17.01.2018 அன்று பதிலளித்திருந்தார் என மேன்முறையீட்டாளர் தெரிவித்திருந்தார். தகவல் கோரிக்கையின் 1,2,4.6,7,8 மற்றும் 11 ஆம் விடயப்பொருட்கள் தொடர்பில் வழங்கப்பட்டத் தகவல்கள் தொடர்பில் தாம் திருப்தியடைவதாக மேன்முறையீட்டாளர் தெரிவித்தார். தகவல்

கோரிக்கையின் 3, 5 மற்றும் 10 ஆம் விடயப்பொருட்கள் தொடர்பில் பகிரங்க அதிகார சபையினால் வழங்கப்பட்டத் தகவல்கள் பூரணமானவையல்ல என்பதுடன் அவை தவறாக வழிநடத்தக்கூடிய தகவல்களாகும் என மேன்முறையீட்டாளர் கூறினார். மேலும், தகவல் கோரிக்கையின் 9 மற்றும் 12 ஆம் விடயப்பொருட்கள் தொடர்பில் பகிரங்க அதிகார சபை தகவல்களை வழங்கத் தவறியுள்ளது எனவும் மேன்முறையீட்டாளர் தெரிவித்தார்.

மேன்முறையீட்டாளரால் கோரப்பட்டத் தகவலானது 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 5 (1) (ஓ) இன் கீழ் மறுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட பகிரங்க அதிகார சபையானது 08.05.2018 எனத் திகதியிடப்பட்ட கடிதத்தினூடாக ஆணைக்குழுவிற்கு அறிவித்தது. இக்கடிதமானது தொலைநகலினூடாக அனுப்பப்பட்டிருந்ததுடன் அதன் பிரதியொன்று மேன்முறையீட்டாளருக்கும் அனுப்பப்பட்டிருந்தது. கோரப்பட்டுள்ள குறிப்பிட்டத் தகவல்களுடன் தொடர்புடைய விசாரணைகளில் குற்றஞ்சாட்டப்பட்ட சாரதிக்கு எதிராக, மானம்பிடிய நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது என பகிரங்க அதிகார சபை அறிவித்தது. மேலும், குறிப்பிட்ட விடயம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும்பொருட்டு, குறிப்பிட்ட விடயம் தொடர்பாக பகிரங்க அதிகார சபையால் பேணப்பட்டுவந்த 3 கோப்புக்களையும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பும்படி நீதவான் 23.04.2018 ஆம் திகதியன்று உத்தரவிட்டுள்ளதாக பகிரங்க அதிகார சபை தெரிவித்தது. ஆகவே, மேன்முறையீட்டாளரால் கோரப்பட்டத் தகவல்களை வழங்குகின்றமையானது, நீதிமன்ற நடபடிமுறைகளின் பக்கச்சார்பற்றத் தன்மைக்கு ஊறு விளைவிக்கும் என்பதுடன் அதனை எதிர்மறையாகப் பாதிக்குமென பகிரங்க அதிகார சபை கருதியது.

இதனைத் தொடர்ந்து, தற்போது ஆணைக்குழுவின் முன்னிலையில் மேன்முறையீட்டுக்காக கொண்டுவரப்பட்டிருக்கும் இக்கோரிக்கைக்கு பதிலளிக்கப்படாததனைப் போலவே, குறிப்பிட்ட இவ்விசாரணைத் தொடர்பாக 29.12.2017, 05.03.2018 மற்றும் 16.04.2018 ஆகிய திகதிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த தகவலுக்கானக் கோரிக்கைகளுக்கும் பதிலளிக்கப்படவில்லை என்ற நிகழ்வினை மேன்முறையீட்டாளர் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

**ஆணை**

இத்தருணத்திலே, 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டம் (இச் சட்டம்) மற்றும் 2017 பெப்ரவரி 3 ஆம் திகதி வர்த்தமானியிலிடப்பட்ட (வர்த்தமானி இல 2004/66) தகவல் உரிமைக்கான ஒழுங்குவிதிகள் என்பவற்றால் ஆக்கப்பட்ட முறையான நடபடிமுறைகளைப் பின்பற்றுவதற்கு குறிப்பிட்ட பகிரங்க அதிகார சபை தவறியுள்ளது என்பது நிரூபணமாகின்றது.

இச்சட்டத்தின்கீழ் மற்றும் 2017 பெப்ரவரி 3 ஆம் திகதி வர்த்தமானியிலிடப்பட்ட (வர்த்தமானி இல 2004/66) ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகளின்கீழ், மேன்முறையீட்டு விளக்கத்திற்கு வருகைதரும்படி பகிரங்க அதிகார சபைக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தபோதிலும், முதலாவது சந்தர்ப்பத்தில் குறித்தளிக்கப்பட்ட அலுவலர் ஆணைக்குழுவின் முன்னர் பிரசன்னமாவதற்கு அல்லது அவர் சார்பில் வேறொரு பிரதிநிதியை அனுப்புவதற்கு தவறியுள்ளார். அவ்வாறு வருகைதர தவறியமைக்கான காரணங்கள் குறித்த விளக்கத்தினை பகிரங்க அதிகார சபை அளிக்கவில்லை. இது இச்சட்டத்தின் பிரிவு 39 (1)(இ) இன் கீழ் மற்றும் அதற்கமைவாக குற்றமாவதுடன், அப்பிரிவிற்கமைய குறிப்பான சில சட்ட விளைவுகளைத் தோற்றுவிக்கின்றது.

இத்தகைய சந்தர்ப்பமொன்றில், பிரிவு 39(4) இற்கு அமைவாகப் பொருத்தமான நீதிமன்றத்தில் வழக்குத்தொடுப்பதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மேலும் பிரிவு 39 ஆனது,

அக்குற்றத்திற்குரிய தண்டனையாக இரண்டு வருட காலப்பகுதிக்கு மேற்படாத சிறை தண்டனை அல்லது தண்டப்பணம் அல்லது இவ்விரண்டும் வழங்கப்படலாம் என கூறுகின்றது.

குறிப்பிட்ட பகிரங்க அதிகார சபையானது கோரப்பட்டுள்ளத் தகவலை, தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 5 (1) (ஓ) இன் கீழ் மறுத்துள்ளது. பிரிவு 5 (1) (ஓ) ஆனது பின்வருமாறு கூறுகின்றது:

"…அத்தகையத் தகவலின் வெளிவிடுகையானது, நீதிமன்ற அவமதிப்பாக உள்ளவிடத்து அல்லது நீதிமன்றத்தின் அதிகாரத்தையும் பாரபட்சமின்மையையும் பேணுவதற்குப் பங்கம் விளைவிப்பதாக உள்ளவிடத்து…"

இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கம் எதிர் மக்கள் வங்கி (30.01.2018 நாளிற்கான தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவின் நடவடிக்கைகள்) என்ற வழக்கில், கோரப்படுகின்ற தகவலுக்கான கோரிக்கையானது பிரிவு 5(1) இல் கூறப்பட்டுள்ள காரணங்களுக்காக மாத்திரமே மறுக்கப்படலாம் என்பதுடன், இம்மறுப்பானது பிரிவு 5(4) இல் கூறப்பட்டுள்ள பொது அக்கறை என்ற விடயத்திற்கு உட்பட்டதாக அமைய வேண்டும் என ஆணைக்குழு குறித்து காட்டியிருந்தது. பிரிவு 5(4) ஆனது, தகவலின் வெளிவிடுகையின் பகிரங்க அக்கறை அதனது வெளிவிடுகையிலிருந்து விளையும் தீங்கை விஞ்சியிருக்குமிடத்து, அத்தகையத் தகவலுக்கானக் கோரிக்கை மறுக்கப்படக்கூடாது என கூறுகின்றது.

பிரிவு 5(1)(ஓ) இன் அடிப்படையில் தகவலுக்கான மறுப்பினை நியாயப்படுத்த வேண்டுமாயின், நீதிமன்ற அவமதிப்பினை ஏற்படுத்துவதற்கு அல்லது நீதிமன்றத்தின் அதிகாரம் மற்றும் பாரபட்சமின்மையின் பேணுகைக்கு பங்கம் விளைவிப்பதற்கு குறிப்பிட்ட தலையீடு காரணமாய் அமைவதற்கான நிச்சயமற்ற சாத்தியப்பாடுகள் உள்ளன என கூறுவதற்கு மாறாக அவ்வாறு அமைவதற்கான உண்மையான ஆபத்து நிலவுகின்றது என நிரூபிக்கப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் பிரிவு 5(1)(ஓ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்கினை, அச்சட்டத்தின் அடிப்படையாக அமைந்துள்ள 'அதிகபட்ச பகிரங்க வெளிவிடுகை' என்ற கோட்பாட்டுடன் மதிப்பிடுகின்றபோது, குறுகிய முறையில் பொருட்கோடல் செய்யப்படவேண்டிய பிரிவு 5(1) இன் விதிவிலக்குகளுக்கு எதிராக தகவலுக்கான உரிமை என்ற முதனிலை கோட்பாட்டினைப் பிரயோகிக்க வேண்டும் என ஆணைக்குழு கருதுகின்றது.

இது தொடர்பாக பகிரங்க அதிகார சபையினால் முன்வைக்கப்பட்ட சமர்ப்பிப்புக்கள், கோரப்பட்டுள்ளத் தகவல் மற்றும் அத்தகவலின் வெளிவிடுகை நீதிமன்றத்தின் அதிகாரம் மற்றும் பாரபட்சமின்மைக்கு உண்மையான ஆபத்தினை ஏற்படுத்தி, தீங்கினை விளைவிக்கக்கூடிய முறை என்பவற்றிற்கிடையிலான தொடர்பினை ஸ்தாபிப்பதற்கு தவறியுள்ளது.

ஆகவே மேற்கூறப்பட்ட சந்தர்ப்பங்களின் அடிப்படையில், கோரப்பட்டத் தகவலுக்கான பகிரங்க அதிகார சபையின் மறுப்பினை மேலும் திட்டவட்டமானதாக நிரூபிக்குமாறு குறிப்பிட்ட அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது. அத்துடன் அடுத்த விளக்கத்திற்கென வழங்கப்பட்டிருக்கும் நாளன்று குறிப்பிட்ட பகிரங்க அதிகார சபையானது ஆணைக்குழுவின் பரிசீலனைக்கென தேவைப்படுத்தப்பட்டுள்ள ஆவணங்களுடன் ஆணைக்குழு முன்னிலையில் தவறாது பிரசன்னமாக வேண்டுமெனவும் பணிக்கப்படுகின்றது.

மேன்முறையீடு ஒத்திவைக்கப்படுகின்றது.
**விளக்கத்திற்கான அடுத்த திகதி: 30.05.2018**
*****

*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு (நேரடியாக அந்நபரினூடாக) /142/2018 (மேன்முறையீடானது 30.05.2018 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ சந்திப்பின் ஒரு அங்கமாகக் கேட்கப்பட்டது)*

*2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 32(1) இன் கீழான கட்டளை மற்றும் 2016 ஆம் ஆண்டு தகவல் உரிமைக்கான விதிகளின் (கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறை) 28 ஆம் விதிக்கு கீழான நடபடிறை பதிவு*

**தலைவர்:** திரு. மஹிந்த கம்மம்பில

**ஆணைக்குழு உறுப்பினர்கள்**: செல்வி. கிஷாலி பின்ரோ ஜயவர்தன
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்
திரு. எஸ். ஜி. புஞ்சிஹேவா
நீதிபதி ரோஹினி வெல்கம

**வருகை தந்தவர்கள்:** பணிப்பாளர் நாயகம் திரு. பியதிஸ்ஸ ரணசிங்க
**மேன்முறையீட்டாளர்**: திரு. திலக் ரஞ்சித் சில்வா
**அறிவித்தல் வழங்கப்பட்ட நபர்**: குறித்தளிக்கப்பட்ட அலுவலர், இலங்கை பொலிஸ் தலைமையகம்

**தோன்றல் / பிரதிநிதித்துவப்படுத்தப்படல்**: மேன்முறையீட்டாளர்- திரு. திலக் ரஞ்சித் சில்வா
பகிரங்க அதிகார சபை- K.A.S.W. குமாரஜீவ (பொறுப்பதிகாரி, சட்ட பிரிவு)

**விளக்கத்தின் போது தோன்றிய விடயங்கள்:**

09.05.2018 அன்று வழங்கப்பட்ட ஆணைக்கு அமைவாக, மேன்முறையீட்டாளரினால் கோரப்பட்டத் தகவல்கள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன என பகிரங்க அதிகார சபையின் சட்டப் பிரிவிற்கான பொறுப்பதிகாரி உறுதிப்படுத்தினார்.

எவ்வாறெனினும், தகவல் கோரிக்கையின் 5, 9, 10 மற்றும் 12 ஆகிய இலக்கங்களின் கீழ் கோரப்பட்டத் தகவல்கள் தனக்கு வழங்கப்படவில்லை என மேன்முறையீட்டாளர் தெரிவித்தார். இதற்கு பதிலளித்த பகிரங்க அதிகார சபையானது, கோரப்பட்டுள்ள தகவல்களில், பகிரங்க அதிகார சபையின் பதிவேடுகளில் உள்ள தகவல்களை மேன்முறையீட்டாளருக்கு வழங்க முடியும் எனவும், அதில் பகிரங்க அதிகார சபைக்கு எவ்வித சிக்கல்களும் இல்லையெனவும் தெரிவித்தது.

குற்றஞ்சாட்டப்பட்ட லொறி சாரதியினை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியமை மற்றும் சாரதி நீதிமன்றத்தின் முன் தோன்றிய வேறு சந்தர்ப்பங்கள் என்பன பதிவு செய்யப்பட்டுள்ள குறிப்புத்தாளின் உறுதிப்படுத்தப்பட்டப் பிரதிகள், அன்றைய தினத்தில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகளினால் அவர்களுடைய கையடக்க குறிப்பு புத்தகங்களில் பதியப்பட்ட குறிப்புக்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள், அன்றைய தினத்தில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகள், விசாரணைகளுக்கு பின்பு அன்றைய நாளுக்கான கடமையிலிருந்து ஓய்வு பெற்ற நேரங்கள் மற்றும் சம்பவம் தொடர்பாக பொலிஸாரினால் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் பிரதிகள் என்பன உள்ளடங்கலாக மேன்முறையீட்டாளரினால்

கோரப்பட்டத் தகவல்களுக்கானப் பதில்களை அளிக்குமாறு பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது.

**ஆணை**:

மேற்குறிப்பிட்டத் தகவல்களை ஆணைக்குழுவிற்கான முகப்புக் கடிதத்தின் பிரதியொன்றுடன், இந்நாளிலிருந்து இரண்டு வார காலப்பகுதிக்குள் மேன்முறையீட்டாளருக்கு வழங்குமாறு பகிரங்க அதிகார சபைக்கு பணிக்கப்படுகின்றது.

பணிக்கப்பட்டமைக்கு அமைவாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதனை நிச்சயப்படுத்திக்கொள்ளும்பொருட்டு இவ்விடயமானது 17.07.2018 அன்று குறிப்பீட்டிற்காக எடுத்துக்கொள்ளப்படும்.

மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு அமைவாக, மேன்முறையீடு நிறைவு பெறுகின்றது.

*****

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டம்*

---

*(2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2016, ஓகத்து மாதம் 05 ஆம் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 54.00*** ***தபாற் செலவு : ரூபா 20.00***

## 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டம்

[*2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ 4/2015*

**தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமைக்கு ஏற்பாடுசெய்வதற்கும்; அணுக்கம் மறுக்கப்படக்கூடிய ஏதுக்களைக் குறித்துரைப்பதற்கும்; தகவலுக்கான உரிமை ஆணைக் குழுவினைத் தாபிப்பதற்கும்; தகவல் அலுவலர்களின் நியமனத்திற்கும்; தகவலைப் பெறுவதற்கான நடவடிக்கை முறைகளைத் தருவதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.**

அரசியலமைப்பு அதன் 14அ என்னும் உறுப்புரையில் தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமையை உத்தரவாதம் செய்வதுடன், தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமைக்குப் பயன்கொடுப்பதன்மூலம் பகிரங்க அதிகாரசபைகளின் வெளிப் படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் பண்பாட்டைப் பேணிவளர்த்து அதன் மூலம் இலங்கை மக்கள் ஊழலை எதிர்த்துநிற்றல் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் நல்லாட்சியை மேம்படுத்துதல் ஊடாக முழுமையாகப் பங்கேற்கக் கூடியதும் நாட்டின் பொது வாழ்வில் தீவிரமாகப் பங்கேற்கக் கூடியதுமாகவிருக்கும் ஒரு தேவைப்பாடு உளதாதலால்; *முன்னுரை.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** (1) இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப்பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும்.*

(2) இப்பிரிவினதும், பாகம் IV இனதும் பிரிவுகள் 23, 36, 40, 41, 42, 43 மற்றும் 44 என்பவற்றினதும் ஏற்பாடுகள், அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி இச்சட்டம் தொடர்பில் சான்றிதழ் எத்தேதியன்று புறக்குறிப்பிடப்பட்டுள்ளதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2-PL 009844 - 1,061 (2016/03)

*(3)* இச்சட்டத்தின் மற்றெல்லாப் பிரிவுகளினதும் ஏற்பாடுகள், அத்தகைய பகிரங்க அதிகாரசபைகளின் அல்லது பகிரங்க அதிகாரசபைகளின் வகுதிகள் தொடர்பில் மற்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் அமைச்சரால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதிகளின்மீது நடைமுறைக்கு வருதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அவ்வாறு விதித்துரைக்கப்பட்ட திகதிகள் மேலே (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட உறுதிப்படுத்தலின் ஆகக்குறைந்தது ஆறு மாதங்களின் பின்னராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் அனைத்து ஏற்பாடுகளும் அத்தகைய உறுதிப்படுத்தலின் ஓராண்டிற்கு பிந்தாமல் அனைத்து பகிரங்க அதிகாரசபைகளுக்கும் ஏற்புடைமையாதல் வேண்டும்.

*பயனுறு அமுலாக்கலை உறுதிப்படுத்தும் பொறுப்பு.*

**2**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பயனுறு அமுலாக்கலை உறுதிப்படுத்துவது வெகுஜன தொடர்பு ஊடகம் என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் பொறுப்பாதல் வேண்டும்.

## பாகம் I

### சட்ட ஏற்பாடுகளின் ஏற்புடைமை

*தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமை.*

**3**. *(1)* இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, பிரசை ஒவ்வொருவரும், ஒரு பகிரங்க அதிகாரசபையின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கின்ற தகவலைப்பெற அணுகுதலுக்கானஉரிமையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*(2)* இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பாராளுமன்றத்தின் தத்துவங்கள், சிறப்புரிமைகள் மற்றும் செயன்முறைகளை மதிப்புக்குறைப்பனவாக இருத்தலாகாது.

*இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வேறு எழுத்திலான சட்டத்தை மேலோங்கி நிற்றல்.*

**4**. இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் பயனுறுவதாதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க, இச்சட்டத்தினதும் அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு உள்ள விடயத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

## பாகம் II

### தகவலைப்பெற அணுகுதலுக்கான மறுப்பு

*எப்போது அணுகுதலுக்கான உரிமை மறுக்கப்படலாம்.*

**5.** *(1)* இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக,-

(அ) தகவலானது, பாரிய பகிரங்க அக்கறை அத்தகைய தகவலின் வெளிவிடுகையை நீதிமுறைப்படுத்தினாலொழிய அல்லது சம்பந்தப்பட்ட ஆள் அத்தகைய வெளிவிடுகைக்கு எழுத்தில் சம்மதமளித்திருந்தாலொழிய, ஏதேனும் பகிரங்க தொழிற்பாடு அல்லது அக்கறைக்கு தொடர்பல்லாததாகவுள்ள அல்லது தனியாளின் அந்தரங்கத் தன்மையின் அனுமதிக்கப்படாத வரம்புமீறலைச் செய்யக்கூடிய தனிப்பட்ட தகவலின் வெளிவிடு கையுடன் தொடர்புறுகின்றவிடத்து;

(ஆ) அத்தகைய தகவலின் வெளிவிடுகையானது-

(i) அரசின் பாதுகாப்பை அல்லது அதன் ஆள்புல இறைமையை அல்லது தேசிய பந்தோபஸ்தை பாதிக்கக்கூடியதாக இருக்குமிடத்து;

(ii) அத்தகைய தகவல் இரகசியமாகத் தரப்பட்டு அல்லது அதிலிருந்து பெறப்பட்டு உள்ளவிடத்து, ஏதேனும் அரசுடனான அல்லது சர்வதேச சட்டத்தின்கீழ் சர்வதேச உடன்படிக்கைகள் அல்லது கடப்பாடுகள் தொடர்பில் இலங்கையின் உறவுகளுக்கு பாரதூரமாக பாதகமாகவிருக்குமிடத்து அல்லது அவ்வாறிருக்கும் சாத்தியமுள்ளவிடத்து;

(இ) அத்தகைய தகவலின் வெளிவிடுகையானது,

(i) நாணயமாற்று விகிதங்கள் அல்லது கரைகடந்த நாணயமாற்றுக் கொடுக்கல் வாங்கல்களின் கட்டுப்பாடு;

(ii) வங்கித் தொழில் அல்லது கொடுகடன் ஒழுங்கு படுத்துகை;

(iii) வரிவிதிப்பு;

(iv) பண்டங்கள் சேவைகளின் விலைகளதும், வாடகைகளதும் வேறு செலவுகளதும் அத்துடன் கூலிகள், சம்பளங்கள் மற்றும் வேறு வருமானங்களின் ஸ்திரத்தன்மை, கட்டுப்பாடு மற்றும் சீர்படுத்துகை; அல்லது

(v) கரைகடந்த வியாபார உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளுதல்,

தொடர்பிலான அரசாங்க அல்லது நிதிசார் கொள்கைகளை மாற்றுவதற்கான அல்லது தொடர்வதற்கான காலத்திற்கு முந்தியதான முடிபுகளை வெளியிடுவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரதூரமான பங்கத்தை விளைவிக்குமிடத்து;

(ஈ) பாரிய பொதுமக்கள் அக்கறை அத்தகைய தகவலின் வெளிவிடுகையை அனுமதிக்கின்றதென பகிரங்க அதிகாரசபை திருப்திப்பட்டாலொழிய, 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படும் வர்த்தக அந்தரங்கம், வியாபார இரகசியம் அல்லது புலமைச் சொத்து உட்பட தகவலின் வெளிவிடுகையானது மூன்றாம் திறத்தவரொருவரின் போட்டி நிலைக்கு தீங்குவிளைவிக்குமாக உள்ளவிடத்து;

(உ) தகவலானது, எவரேனும் ஆள் அத்தகைய வெளிவிடுகைக்கு எழுத்தில் சம்மதமளித்திருந்தாலொழிய, அத்தகைய ஆள் தொடர்பான எவையேனும் மருத்துவப் பதிவேடுகளின் வெளிவிடுகைக்கு இட்டுச் செல்லக்கூடியவிடத்து;

(ஊ) சட்டத்துறை தலைமையதிபதிக்கும் அல்லது அவரின் கடமைகளை புரிகையில் சட்டத்துறை தலைமையதிபதிக்கு உதவுகின்ற எவரேனும் அலுவலருக்கும் பகிரங்க அலுவலரொருவருக்கும் இடையிலான ஏதேனும் தொடர்பாடல் உட்பட ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் வெளிவிடப்படுவதற்கு அனுமதிக்கப்படாத

உயர்தொழிலர் ஒருவருக்கும் அத்தகைய உயர் தொழிலர் எப்பகிரங்க அதிகாரி ஒருவருக்கு சேவையை வழங்குகின்றாரோ அப்பகிரங்க அதிகாரியொருவருக்கும் இடையிலான ஏதேனும் தொடர்பாடலை தகவல் கொண்டமைந்திருக்குமிடத்து;

(எ) ஒரு நம்பக உறவு நிலைத்திருக்கும் காரணத்தால் தகவலானது அந்தரங்கமாக வைத்திருக்கத் தேவைப் படுத்தப்படுமிடத்து;

(ஏ) அத்தகைய தகவலின் வெளிவிடுகையானது:-

(i) ஏதேனும் குற்றத்தைத் தடுப்பதை அல்லது துப்புத்துலக்குவதை அல்லது தவறாளிகளை கைப்பற்றுவதை அல்லது அவருக்கெதிராக குற்ற வழக்குத் தொடுப்பதை பாதகமாகப் பங்கப்படுத்தக் கூடியவிடத்து; அல்லது

(ii) சட்ட நடைமுறைப்படுத்துகை அல்லது தேசிய பாதுகாப்பு தொடர்பான தகவலின் அந்தரங்க மூலகமொன்றின் அடையாளத்தை ஆய்ந்தறியப்படு வதற்கு வெளிக்காட்டுமிடத்து;

(ஐ) 29(2)(இ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, தகவலானது, மூன்றாம் தரப்பினரால் சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகாரசபைக்கு அந்தரங்கமாக வழங்கப் பட்டிருந்து அத்துடன் அம்மூன்றாம் தரப்பு அதனை வெளிவிடுவதற்குச் சம்மதமளிக்காதவிடத்து;

(ஒ) அத்தகைய தகவலின் வெளிவிடுகையானது, நீதிமன்ற அவமதிப்பாக உள்ளவிடத்து அல்லது நீதித்துறையின் அதிகாரத்தையும் பாரபட்சமின்மையையும் பேணு வதற்குப் பங்கம் விளைவிப்பதாக உள்ளவிடத்து;

(ஓ) அத்தகைய தகவலின் வெளிவிடுகையானது, பாராளுமன்றத்தின் அல்லது சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக மாகாணசபையொன்றின் சிறப்புரிமைகளின் மீறலாக உள்ளவிடத்து;

(ஓள) தகவலின் வெளிவிடுகையானது, பரீட்சைத் திணைக்களத்தால் அல்லது உயர்கல்வி நிறுவனத்தால் நடாத்தப்படுவதாகவுள்ள பரீட்சையொன்றின் சீரியநிலைக்கு தீங்காக உள்ளவிடத்து,

(க) எந்த அமைச்சரவைக் குறிப்பறிக்கையொன்று தொடர்பாக முடிபொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லையோ அந்த அமைச்சரவைக் குறிப்பறிக்கையினதாக தகவலானது உள்ளவிடத்து ; அல்லது

(ங) தகவலானது, அந்தரங்கமானதாக வைத்திருக்கப்படுவதற்கு இயைபான தேர்தல் சட்டங்களின்மூலம் தேவைப்படுத்தப்பட்டதும் தேர்தல்கள் ஆணையாளரினால் நடாத்தப்பட்டதுமான தேர்தலொன்று தொடர்பானதாக உள்ளவிடத்து,

தகவலைப்பெற அணுகுதலுக்கான இச்சட்டத்தின் கீழான வேண்டுகோளொன்று மறுக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், கோரப்பட்ட தகவல் பத்து ஆண்டுகளுக்கு மேல் பழைமையானதாக இருப்பின், (அ), (ஆ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ) மற்றும் (ஒ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதுக்கள் தவிர்ந்த, அதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதுக்களுள் எதனதும்மீதும் தகவலுக்கான கோரிக்கையொன்று மறுக்கப்படுதலாகாது.

(3) இப்பிரிவின் (1)(இ)(V) உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் ஏதேனும் கடல்கடந்த வியாபார உடன்படிக்கை தொடர்பிலான ஏதேனும் தகவலானது, பேரம்பேசுதல்கள் பத்தாண்டுகள் கழிந்த பின்னர்கூட முடிவடையாதிருக்குமிடத்து, வெளிவிடுதலாகாது.

(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், தகவலுக்கான கோரிக்கையொன்று, தகவலின் வெளிவிடுகையின் பகிரங்க அக்கறை அதனது வெளிவிடுகையிலிருந்து விளையும் தீங்கை விஞ்சியிருக்குமிடத்து, மறுக்கப்படுதலாகாது.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் வெளிவிடுகையிலிருந்து விலக்களிக் கப்பட்ட ஏதேனும் தகவலைப்பெற அணுகுதலை அளிப்பதுடன் தொடர்புடைய ஒரு பிரச்சினை தொடர்பில் தகவல் அலுவலர், ஆணைக்குழுவின் மதியுரையை நாடிப்பெறலாமென்பதுடன் ஆணைக்குழுவானது இயலுமானளவு விரைவானதாக பதினான்கு நாட்களினுள் ஏதேனும் பட்சத்தில், அதன் மதியுரையினை வழங்கலாம்.

குறித்த சில சந்தர்ப்பங்களில் வேறு பிரித்தல்.

**6**. ஐந்தாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதுக்கள் எதனதும்மீது தகவலுக்கான கோரிக்கையொன்று மறுக்கப்படுமிடத்து, வெளிவிடுகையிலிருந்து விலக்கப்பட்ட தகவலைக் கொண்டுள்ள ஏதேனும் பாகத்திலிருந்து நியாயமாக வேறு பிரிக்கக்கூடியதும் அப்பிரிவின்கீழ் வெளிவிடுகையிலிருந்து விலக்களிக்கப்படாத ஏதேனும் தகவலைக் கொண்டுள்ள ஏதேனும் பதிவேட்டின் அல்லது ஆவணத்தின் அப்பாகத்துக்கு எவ்வாறாயினும், அணுக்கம் அளிக்கப்படலாம்.

## பாகம் III

### அமைச்சர்களதும் பகிரங்க அதிகாரசபைகளதும் கடமைகள்

பகிரங்க அதிகாரசபைகள் அவற்றின் பதிவேடுகளை பேணிக்காத்தல்.

**7**. (1) ஒவ்வொரு பகிரங்க அதிகாரசபையும் இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகத் தகவலைப் பெற அணுகுதலுக்கான உரிமையை வசதிப்படுத்தும் வகையில் அதன் எல்லா பதிவேடுகளையும் செயன்முறைத் தேவைப்பாடுகளுக்கிசை வானவாறு அத்தகையவிதமாகவும் அத்தகைய வடிவத்திலும் உரியவாறு அட்டவணைப்படுத்தியும் குறியெண்ணிட்டும் பேணுதல் அதன் கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அதனது கடப்பாடுகளை புரிவதில், ஒவ்வொரு பகிரங்க அதிகாரசபையும் 14(ஏ) ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் தரப்பட்ட ஏதேனும் பணிப்புடன் இணங்கி யொழுகுதல் வேண்டும்.

(3) ஒவ்வோர் அதிகாரசபையாலும் பேணப்படுகின்ற எல்லா பதிவேடுகளும்–

(அ) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று ஏலவே உளதாம் அப்பதிவேடுகளின் விடயத்தில், இச்சட்டம்

நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பத்து ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு; அத்துடன்

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் திறக்கப்படும் புதிய பதிவேடுகளின் விடயத்தில், அத்தகைய பதிவேடு திறக்கப்பட்ட தேதியிலிருந்து பன்னிரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு,

காத்து வரப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் கோரிக்கை பற்றிய எவ்விடயப்பொருளாகவுள்ளதோ அவ்விடயப்பொருளின் பதிவு அல்லது தகவலெதுவும் அத்தகைய கோரிக்கை அல்லது ஏதேனும் மேன்முறையீடு அல்லது அத்தகைய கோரிக்கை தொடர்பிலான நீதிமுறை நடவடிக்கை முடிவுறாதிருக்கும்போது அழிக்கப்படுதலாகாது.

(5) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எதுஎவ்வாறிருப்பினும், பகிரங்க அதிகாரசபை ஒவ்வொன்றும் வளங்களின் கிடைப்பனவுக்கமைய, நியாயமான காலமொன்றினுள் இலத்திரனியல் வடிவத்தில் எல்லா அதனது பதிவேடுகளையும் காத்துவர முயற்சித்தல் வேண்டும்.

ஓர் அறிக்கையை வெளியிடுவதற்கான அமைச்சர்களின் கடமை.

**8.** (1) இச்சட்டத்தின் 3ஆம் பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமையைப் பிரசையொருவர் பிரயோகிக்க இயலச்செய்யக்கூடியவாறாக ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட வேண்டிய அத்தகைய படிவத்தில் ஓர் அறிக்கையை ஒவ்வோர் ஆண்டும் முறையே யூன் முப்பதாம் திகதிக்கும் டிசெம்பர் முப்பத்தோராம் திகதிக்கும் முன்னராக ஆண்டுக்கு இருதடவை ஆண்டுதோறும் வெளியிடுவது, எவ்வமைச்சருக்கு ஏதேனும் விடயம் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அவ்வொவ்வோர் அமைச்சரது கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான அறிக்கை பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்–

(அ) அத்தகைய அமைச்சரின் அமைச்சினதும் அவ்வாறு குறித்தொதுக்கப்பட்ட பணிகளுக்குள் அமையும் சகல

பகிரங்க அதிகாரசபைகளினதும் ஒழுங்கமைப்பு, பணிகள், தொழிற்பாடுகள் அத்துடன் கடமைகள் தொடர்பான விபரங்கள்;

(ஆ) பந்தி (அ)வில் குறித்துரைக்கப்படும் அமைச்சினதும் பகிரங்க அதிகாரசபைகளுடனும் சம்பந்தப்படுகின்ற பின்வரும் விபரங்கள்:-

(i) அலுவலர்களதும் ஊழியர்களதும் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் அத்துடன் அவர்களது முடிவெடுக்கும் செயல்முறையில் அவர்களால் பின்பற்றப்படும் அவ்வவ் நடவடிக்கைமுறைகளும்;

(ii) அவர்களது பணிகளை நிறைவேற்றுவதிலும் அவர்களது கடமைகளைப் புரிவதிலும், அவர்களது தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும் இடப்பட்ட நியமங்கள்;

(iii) அலுவலர்களாலும் ஊழியர்களாலும் அவர்களது பணிகளை நிறைவேற்றுகையில், அவர்களது கடமைகளைப் புரிகையில் அத்துடன் அவர்களது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் பயன்படுத்தப்படும் விதிகள், ஒழுங்குவிதிகள், அறிவுறுத்துகைகள், கையேடுகள் வேறேதேனும் வகுதியினவான பதிவேடுகள்;

(iv) தகவலைப் பெறுவதற்கு பிரசைகளுக்குக் கிடைப்பனவான வசதிகளின் விபரங்கள்;

(v) எல்லாத் திட்டங்கள், முன்மொழிவு செய்யப்பட்ட செலவினங்கள் மற்றும் செய்யப்பட்ட பணக்கொடுத்தல்கள் மீதான அறிக்கைகளின் விபரங்களைக் குறிப்பிடுகின்ற ஒதுக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டம்;

(vi) நியமிக்கப்பட்டுள்ள தகவல் அலுவலர் அல்லது அலுவலர்களின் பெயர், பதவிப்பெயர் அத்துடன் வேறும் விபரங்கள்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து ஆறு மாதங்களுள் (2) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்படும் தகவலை உள்ளடக்கிய அறிக்கையொன்றை அமைச்சர் ஒவ்வொருவரினாலும் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வடிவத்தில் வெளியிடுவது அத்தகைய ஒவ்வோர் அமைச்சரதும் கடமையாதல் வேண்டும்.

(4) ஓராம் (2)ஆம் மற்றும் (3)ஆம் உட்பிரிவிலும் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கைகள்:-

(அ) அரசகரும மொழிகளில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், இலத்திரனியல் வடிவத்தில் கிடைக்கச் செய்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) பொதுமக்களின் பரிசோதனைக்கு கிடைக்கச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன் அவற்றின் பிரதிகள் ஆணைக் குழுவால் தீர்மானிக்கப்பட வேண்டிய அத்தகைய கட்டணக் கொடுப்பனவின் மீது பிரஜை ஒருவருக்கு வழங்கவும்படலாம்.

ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அமைச்சருக்கான ஏதேனும் குறிப்பீடு, அரசியலமைப்பின் அத்தியாயம் XVIIஅ இன்கீழ் தாபிக்கப்பட்ட மாகாணசபையொன்றின் அமைச்சருக்கான குறிப்பீடொன்றை உள்ளடக்குதலும் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

செயற் திட்டங்களின் தொடங்குகை பற்றி பொது மக்களுக்கு அறிவிப்பதற்கான அமைச்சர்களது கடமை.

**9**. (1) (அ). ஏதேனும் செய்திட்டத்தைத் தொடங்குவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னராக, அத்தகைய செய்திட்டம் சம்பந்தமான விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அவ் வமைச்சர், பொதுவில் பொதுமக்களுக்கும் அத்துடன் அத்தகைய செய்திட்டத்தால் பாதிக்கப்படும் சாத்தியம் கொண்ட எவரேனும் குறிப்பான ஆட்களுக்கும் அறிவிக்கும் தேதியன்றுள்ளவாறாக அமைச்சரிடம் கிடைக்கப்பெற்றுள்ள செய்திட்டம் தொடர்பான எல்லாத் தகவல்களையும் அறிவித்தல் அவரது கடமையாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அவசரமான கருத்திட்டமொன்றின் விடயத்தில், அத்தகைய கருத்திட்டம் தொடங்கப்படுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் தகவல் வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அவசரத்துக்கான காரணங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(ஆ) ஆணைக்குழுவானது, (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் அறிவித்தல் வழங்கப்படவேண்டிய முறையைக் குறித்துரைக்கின்ற வழிகாட்டிநெறிகளைவழங்குதல் வேண்டும்.

(2) (அ) ஓர் அமைச்சர், பிரசையொருவரால் அவர் சார்பில் செய்யப்படும் எழுத்திலான கோரிக்கையின்மீது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒரு செய்திட்டம் பற்றிய அன்றுள்ளபடியாக்கப்பட்ட தகவல்களை, அச்செய்திட்டத்தின் அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்துகைக் காலப்பகுதி முழுவதும் அவருக்கு கிடைக்கப்பெற தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) அந்நோக்கத்துக்கென ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட வேண்டிய அத்தகைய கட்டணக் கொடுப்பனவின்மீது தகவலானது கிடைக்கப்பெறச்செய்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, ''செய்திட்டம்'' என்பது அதன் விடயதானத்தின் பெறுமதி:-

(அ) வெளிநாட்டு நிதியளிப்புச் செய்திட்டத்தின் விடயத்தில் ஒரு இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலரை விஞ்சும்; அத்துடன்

(ஆ) உள்ளூர் நிதியளிப்புச் செய்திட்டத்தின் விடயத்தில் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சும்,

ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அமைச்சருக்கான ஏதேனும் குறிப்பீடு, அரசியலமைப்பின் அத்தியாயம் XVIIஅ இன்கீழ் தாபிக்கப்பட்ட

மாகாணசபையொன்றின் அமைச்சருக்கான குறிப்பீடொன்றை உள்ளடக்குதலும் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்துகின்றது.

பகிரங்க அதிகாரசபை அறிக்கைகள் முதலியவற்றை சமர்ப்பிப்பதற் கான கடமை.

**10.** பகிரங்க அதிகாரசபை ஒவ்வொன்றும் பின்வரும் தகவலைக் கொடுத்துதவுகின்ற ஆணைக்குழுவுக்கான ஆண்டறிக்கைகளை, அறிக்கையானது எவ்வாண்டு தொடர்பானதோ அவ்வாண்டை உடனடுத்துப் பின்வரும் ஆண்டின் திசெம்பர் முப்பத்தோராம் நாளுக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அவ் வறிக்கை அதனது அலுவலகத்திலும் அதன் அலுவலகமுறையான இணையத்தளத்திலும் பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்படுதல் வேண்டும்–

(அ) ஆண்டுக்காலத்தின் போது பெறப்பட்ட கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கையும் தகவல் சமர்ப்பிக்கப்பட்டதும் மறுக்கப்பட்டதும்;

(ஆ) ஆண்டுக்காலத்தின்போது சேகரிக்கப்பட்ட கட்டணங் களின் தொகை;

(இ) 5 ஆம் பிரிவின்கீழ் மறுக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை;

(ஈ) ஆணைக்குழுவின் பணிப்பில் தகவல் வழங்கப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை;

(உ) வெளிப்படைத்தன்மை விடயத்தின் பயனுறுதித் தன்மையை சீரமைப்பதற்கான ஏதேனும் யோசனைகள்;

(ஊ) தகவலை அறிவிப்பதற்கு மறுப்பதிலிருந்தான மேன்முறையீடுகளின் எண்ணிக்கை ;

(எ) பதிவேடுகளைப் பேணுதல், முகாமை செய்தல் மற்றும் அழித்தல் தொடர்பான செயல்முறைகள் ; அத்துடன்

(ஏ) 8 ஆம் பிரிவின்கீழான அதன் செயற்பாடுகள்;

### பாகம் IV

### *தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவை தாபித்தல்*

*தகவலுக்கான உரிமை ஆணைக் குழுவைத் தாபித்தல்.*

**11.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக தகவலுக்கான உரிமை ஆணைக்குழு என அழைக்கப்படும் ஒரு குழு (இச்சட்டத்தில் "ஆணைக்குழு" எனக்குறிப்பீடு செய்யப்படும்) தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர் கொண்டு இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையும் கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாதல் வேண்டும் என்பதுடன் அது அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயர்கொண்டு வழக்குத் தொடரலாம் அத்துடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

*ஆணைக் குழுவின் அமைப்பு.*

**12.** (1) ஆணைக்குழுவானது, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரைமீது, சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து ஆட்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும். அத்தகைய விதப்புரைகளைச் செய்கையில், அரசியலமைப்புப் பேரவை, பின்வரும் ஒழுங்கமைப்புக்கள் அல்லது ஒழுங்கமைப்பின் வகைகள் ஒவ்வொன்றினாலும் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஓராளை விதந்துரைத்தல் வேண்டும்.

(அ) இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் திறமைவாய்ந்த சட்டத்தரணியொருவரை அல்லது சட்டம்சார் கல்விமானொருவரை , சட்டத்தரணிகள் மற்றும் சட்டம்சார் கல்வியாளர்களுடனான கலந்தாலோசனையில் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும் ;

(ஆ) வெளியீட்டாளர்கள், பதிப்பாசிரியர்கள் மற்றும் ஊடக ஆட்களின் ஒழுங்கமைப்புக்கள்; அத்துடன்

(இ) வேறு சிவில் சமூக ஒழுங்கமைப்புக்கள்.

(2) (அ) ஓராம் உட்பிரிவின்கீழான விதப்புரைகளைச் செய்கையில், அரசியலமைப்புப் பேரவையானது, விதந்துரைக்கப்படுகின்ற ஆட்கள்-

(i) சட்டம், ஆட்சி, பொது நிர்வாகம், சமூக சேவைகள், ஊடகத்துறை, அறிவியல் மற்றும் தொழினுட்பவியல் அல்லது முகாமைத்துவம் என்ற துறைகளில் அறிவு, அனுபவம் மற்றும் திறமையைப் பறைசாற்றி பகிரங்க வாழ்வில் தமக்கெனச் சிறந்த நிலையை ஏற்படுத்திக்கொண்ட ஆட்களென;

(ii) பாராளுமன்ற, ஏதேனும் மாகாணசபை அல்லது உள்ளூரதிகார சபை உறுப்பினர்கள் அல்லாத ஆட்களென;

(iii) ஏதேனும் பகிரங்க அல்லது நீதிசார் பதவியை அல்லது வேறேதேனும் இலாபமீட்டும் பதவியை வகிக்காத ஆட்களென;

(iv) ஏதேனும் அரசியற் கட்சியுடன் சம்பந்தப்படாத ஆட்களென; அல்லது

(v) ஏதேனும் தொழிலை கொண்டு நடாத்தாதவர்கள் அல்லது ஏதேனும் உயர்தொழிலை புரியாத ஆட்களென,

உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) அரசியலமைப்புப் பேரவையினால் கவனத்துட்கொள்ளப் படுவதற்கு ஆட்களைப்பெயர்குறித்து நியமிப்பதில் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒழுங்கமைப்புக்கள், பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆட்கள் இதன்கண் குறித்துரைக்கப்பட்ட கட்டளைக்கற்களை ஈடுசெய்கின்றனரென உறுதிப்படுத்துதல் வேண்டும். இதன்கண் தரப்பட்டுள்ள கட்டளைக்கற்களை நியமத்தர்கள் ஈடுசெய்வதில்லையென அரசியலமைப்புப் பேரவை அபிப்பிராயப்படும் பட்சத்தில், புதிய பெயர் குறித்த நியமனங்கள் கோரப்படுதல் வேண்டும்.

(3) அரசியலமைப்புப் பேரவையானது, (1) ஆம் உட்பிரிவின் கீழான அதன் விதப்புரைகளை, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து அல்லது ஆணைக்குழுவில் வெற்றிடமொன்று ஏற்படுகின்ற தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் செய்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட ஒழுங்கமைப்புக்களுள் எவையும் அல்லது அவை எல்லாம் அத்தகைய காலப்பகுதியினுள் பெயர்நியமனங்களைச் செய்யத் தவறும்பட்சத்தில், அரசியலமைப்புப் பேரவை, சொல்லப்பட்ட காலப்பகுதி முடிவுற்றபின்னர் அதன் சொந்த விதப்புரைகளைச் செய்தல் வேண்டும். எவையேனும் பெயர் நியமனங்கள் நிராகரிக்கப்படும் பட்சத்தில், நிராகரிப்பிலிருந்து இரு வாரங்களினுள் ஏற்றுக்கொள்ளத்தக்க பெயர்நியமனங்கள் எவையும் மீளச்சமர்ப்பிக்கப்படாவிடின், அரசியலமைப்புப் பேரவை அதன் சொந்தப் பெயர்நியமனங்களைச் செய்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் அத்தகைய பதவியை வகிக்கையில், பாராளுமன்ற, ஏதேனும் மாகாணசபை அல்லது உள்ளூரதிகாரசபை உறுப்பினரொருவராக வருமிடத்து அல்லது ஏதேனும் பகிரங்க அல்லது நீதிசார் பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து அல்லது ஏதேனும் அரசியற்கட்சியின் பதவிதாங்குநராக வருமிடத்து, அத்தகைய உறுப்பினர் அத்தகைய நியமனத்தின்மீது ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இருப்பதிலிருந்து இல்லாதொழிதல் வேண்டும்.

(5) சனாதிபதி, அதனது தவிசாளராக இருப்பதற்கென ஆணைக் குழுவிற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(6) ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஐந்தாண்டு காலப்பகுதி யொன்றிற்கு பதவி வகித்தல் வேண்டும்.

(7) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் இச்சட்டத்தின்கீழ் வெளிவிடப்படமுடியாத ஏதேனும் தகவலை வெளிவிடுதலாகாது.

(8) இச்சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகள் ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அதனது கூட்டங்கள் நடாத்து தலுக்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் அலுவலர்களதும் தொழிலாளர் களதும் நியமனம்.

**13.** (1) ஆணைக்குழுவானது,

(அ) ஆணைக்குழுவின் பிரதான நிருவாக அலுவலராக இருக்க வேண்டிய பணிப்பாளர் தலைமையதிபதியொரு வரையும்;

(ஆ) அது அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்கள் மற்றும் வேறு ஊழியர்களையும்,

நியமித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி ஆணைக்குழுவின் அலுவல் களின் பொதுவான மேற்பார்வை, பணிப்பு மற்றும் முகாமைக்குப் பொறுப்பாக இருப்பதுடன், ஆணைக்குழுவின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் மீதான ஒழுக்காற்றுக் கட்டுப் பாட்டை பிரயோகித்தலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் பணிப்பாளர் தலைமையதிபதியும் அலுவலர்களும் வேறு ஊழியர்களும் ஆணைக் குழுவால் தீர்மானிக்கப்படவேண்டிய அத்தகைய சேவை நியதி நிபந்தனைகளுக்கு அமைந்தவராதல் வேண்டுமென்பதுடன், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந் தாலோசனையுடன் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதலும் வேண்டும்.

ஆணைக் குழுவின் கடமைகளும் பணிகளும்.

**14.** ஆணைக்குழுவின் கடமைகளும் பணிகளும் பின்வருவன வாயிருத்தல் வேண்டும்–

(அ) பகிரங்க அதிகாரசபைகள்மீது இச்சட்டத்தால் இடப்பட்ட கடமைகள் நிறைவேற்றப்படுவதை கண்காணிப்பதும் உரியவாறு இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்து வதும்;

(ஆ) ஒரு பொதுத் தன்மையதான அத்துடன் ஏதேனும் ஒரு குறிப்பான பகிரங்க அதிகாரசபைக்குப் பணிக்கப்பட்ட தான ஆகிய இருதன்மைய சீர்திருத்தத்துக்கு விதப்புரை களைச் செய்வதும்;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பகிரங்க அதிகார சபைகளால் வெளிவிடப்படும் தகவலுக்காக அவைகளால் அறவிடப்படவேண்டிய கட்டணங்களைத் தீர்மானிப் பதற்கு நியாயத்தின் அடிப்படையில் வழிகாட்டி நெறிகளை வழங்குவதும் ;

(ஈ) ஒரு கட்டணக் கொடுப்பனவின்றி தகவல் அலுவல ரொருவரால் தகவல் வழங்கப்படக்கூடிய சந்தர்ப்பங் களைத் தீர்மானிப்பதும் ;

(உ) தகவல் வழங்குதல் தொடர்பில் உயிர்ப்பான வெளிவிடு கைக் கோட்பாடுமீது அடிப்படையான கட்டண அட்டவணையை தீர்மானிப்பதும் ;

(ஊ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பயனுறு நடைமுறைப் படுத்தல்மீது பகிரங்க அலுவலர்களுடன் ஒத்துழைப்பதும் அல்லது அவர்களுக்கான பயிற்சிச் செயற்பாடுகளை மேற்கொள்வதும் ;

(எ) இச்சட்டத்தின் தேவைப்பாடுகளையும் அதன்கீழ் தனியாளின் உரிமைகளையும் பிரசித்தப்படுத்துவதும் ;

(ஏ) பகிரங்க அதிகாரசபைகளுக்கென முறையான பதிவேட்டு முகாமைக்கான வழிகாட்டிநெறிகளை வழங்குதலும்.

*ஆணைக் குழுவின் தத்துவங்கள்.*

**15.** இச்சட்டத்தின்கீழ் அதனது கடமைகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கும் அதனது பணிகளைப் புரியும் நோக்கத்திற்குமென ஆணைக்குழு பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) விசாரணைகளை நடாத்துவதும் அதன் முன் தோன்று மாறு எவரேனும் ஆளை தேவைப்படுத்துவதும் ;

(ஆ) சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின்மீது அத்தகைய ஆளை பரீட்சிப்பதும் அவசியமானவிடத்து, அவ்வாளின் உடைமையிலுள்ள ஏதேனும் தகவலை முன்வைக்கும்படி அவ்வாளைத் தேவைப்படுத்துவதும்ஆயின், 5 ஆம் பிரிவின்கீழ் வெளிவிடுகையிலிருந்து விலக்களிக்கப்பட்ட தகவல் இரகசியமாக பரீட்சிக்கப்படுதல் வேண்டும் ;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பகிரங்க அதிகார சபையொன்றினால் மறுக்கப்படும் ஏதேனும் தகவலுட்பட பகிரங்க அதிகாரசபையொன்றினால் வைத்திருக்கப்படும் ஏதேனும் தகவலை சோதனை செய்தலும் ;

(ஈ) குறித்தவொரு படிவத்தில் தகவலை வழங்குவதற்கு பகிரங்க அதிகாரசபையொன்றை பணித்தலும் ;

(உ) 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, பொதுமக்களிட மிருந்து அதிகாரசபையொன்றினால் நிறுத்திவைக்கப் பட்ட ஏதேனும் தகவலை வெளியிடும்படி பகிரங்க அதிகாரசபைக்குப் பணித்தலும் ;

(ஊ) 32 ஆம் பிரிவின்கீழ் எவரேனும் இடருறும் ஆளினால் அதற்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீடுகளை கேட்டுத் தீர்மானித்தலும் ; அத்துடன்

(எ) அந்நேரத்தில் கோரப்பட்டு வழங்கப்படாதுள்ள ஏதேனும் தகவல் காரணமாக பிரசையொருவரிடமிருந்து அறவிடப் பட்ட கட்டணங்களை திருப்பிக்கொடுக்கும்படி பகிரங்க அதிகாரசபைக்கு அல்லது எவரேனும் இயைபான தகவல் அலுவலருக்கு பணித்தலும்.

ஆணைக் குழுவின் நிதியம்.

**16.** (1) ஆணைக்குழு அதனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத் தல் வேண்டும், அதனுள் பின்வருவன வரவிலிடப்படுதல் வேண்டும்–

(அ) ஆணைக்குழுவின் உபயோகத்திற்கென பாராளு மன்றத் தினால் காலத்திற்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடிய வாறான எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஆ) இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியேயோ எத்தன்மைத்தான ஏதேனும் வளங்களிலிருந்தான நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக் கொடைகள்.

(2) ஏதேனும் பணம் (1) (ஆ) என்னும் உட்பிரிவின்கீழ் நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக் கொடைகள் என்ற வழியால் பெறப்படுமிடத்து, கிடைக்கக்கூடியதாக செய்யப்பட்ட அத்தகைய நன்கொடை, கொடை அல்லது மானியக்கொடையின் மூலம் மற்றும் அதற்கான நோக்கம் பகிரங்கப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவால் அதன் தத்துவங்களைப் பிரயோகிப் பதிலும் கடமைகளைப் புரிவதிலும் பணிகளை நிறைவேற்றுவதிலும் உறப்படும் செலவுகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*நிதியாண்டும் கணக்காய்வும்.*

**17.** (1) ஆணைக்குழுவின் நிதியாண்டானது, பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது வருமானம் மற்றும் செலவினங்கள் அத்துடன் ஆணைக்குழுவின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய தகுந்த கணக்குப் புத்தகங்களைப் பேணச்செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்க கூட்டுத்தாபனங்களின் கணக்குகளது கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடு கள் ஆணைக்குழுவின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் II ஆம் பாகம் ஏற்புடைத்தாதல்.*

**18.** 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் ஆணைக்குழுவின் நிதிக்கட்டுப்பாட்டுக்கும் கணக்குகளுக்கும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் முதலியவர்கள் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்.*

**19.** ஆணைக்குழுவின் உறுப்பினர்களும் அலுவலர்களும் மற்றெல்லா ஊழியர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங் களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன் இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவால் நடாத்தப்படும் ஒவ்வொரு விசாரணையும் 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத் தெல்லைக்குள் ஒரு நீதிமுறை நடவடிக்கையாகக் கருதப்படுதலும் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் ஏற்புடைமை.

**20.** (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல் லைக்குள் ஆணைக்குழுவானது ஓர் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்குத் தொடர்தலில் உறப்பட்ட செலவுகள்.

**21.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டுநடாத்தும் நோக் கத்திற்கென நன்நோக்குடன் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக கருதப்பட்ட ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னால் அத்தகைய ஆளினால் அல்லது ஆளுக்கெதிராக கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்குத் தொடர்தலில் அவ் வாளினால் உறப்பட்ட எவையேனும் செலவினங்கள், அத்தகைய செயல் அல்லது செய்யாமை நன்நோக்குடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளிப்பின், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சி அல்லது குற்றவழக்குத் தொடர்தலில் அவரால் அறவிடப் பட்டாலொழிய, ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும்.

நடவடிக்கைமுறை தேவைப்பாடுகள் பிரசுரிக்கப்படுதல்.

**22.** ஆணைக்குழுவானது, அது தாபிக்கப்பட்டதிலிருந்து ஆறு மாதங்களுள் ஆணைக்குழுவுக்கு 32ஆம் பிரிவின்கீழ் மேன் முறையீடுகள் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைமுறைத் தேவைப் பாடுகளை அமைத்துருவாக்கி அதற்குப் போதிய பிரசித்தம் அளித்தல் வேண்டும்.

## பாகம் V

## தகவல் அலுவலர்களின் நியமனமும் தகவலுக்கு அணுக்கம் பெறுதற்கான நடவடிக்கைமுறையும்

தகவல் அலுவலர் களையும் குறித் தளிக்கப்பட்ட அலுவலர் களையும் நியமித்தல்.

**23.** (1) (அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயனளிக்கும் நோக்கத்துக்காக, ஒவ்வொரு பகிரங்க அதிகாரசபையும், இச்சட்டம் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து மூன்று மாதங்களுள், அத்தகைய பகிரங்க அதிகாரசபையின் தகவல் அலுவலர்களாக ஒன்றோ பலவோவான அலுவலர்களையும் மேன்முறையீட்டை கேட்பதற்கென குறித்தளிக்கப்பட்ட ஒரு அலுவலரையும் நியமித்தல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ)வின் கீழ் ஒரு தகவல் அலுவலர் நியமிக்கப்படும் அத்தகைய காலம்வரை, ஒரு பகிரங்க அதிகாரசபையின் தலைவர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அத்தகைய பகிரங்க அதிகாரசபையின் தகவல் அலுவலராக கருதப்படுதல் வேண்டும்.

(2) எந்த பகிரங்க அதிகாரசபைக்கு அதன் தகவல் அலுவல ராக ஒரு தகவல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளாரோ அந்த பகிரங்க அதிகாரசபைக்குச் செய்யப்படும் தகவலுக்கான கோரிக்கையைக் கையாளுதல் வேண்டுமென்பதுடன், தகவல் பெறுவதற்கு அத்தகைய கோரிக்கையைச் செய்யும் எவரேனும் பிரசைக்கு அவசியமான எல்லா உதவியையும் அவர் வழங்கு தலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அவர் மீது சுமத்தப்பட்ட கடமையை தகுந்தவாறு புரிவதற்கு அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறு வேறெவரேனும் அலுவலரின் உதவியை தகவல் அலுவலர் நாடிப் பெறலாம் என்பதுடன், அத்தகைய எவரேனும் அலுவலரி டமிருந்து உதவி நாடப்படுமிடத்து, கோரப்படும் உதவியை அளித்தல் அத்தகைய அலுவலரின் கடமையாதலும் வேண்டும்.

*தகவலைப் பெறுவதற்கான நடவடிக்கைமுறை.*

**24.** (1) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தகவலைப் பெற விரும்பும் எவரேனும் பிரசை தோதான தகவல் அலுவலருக்கு கோரப்படும் தகவல் பற்றிய விபரங்களை குறித்துரைக்கின்ற எழுத்திலான ஒரு கோரிக்கையைச் செய்தல் வேண்டும்:

ஆயின், இவ்வுட்பிரிவின்கீழ் ஒரு கோரிக்கையைச் செய்யும் எவரேனும் பிரசை அத்தகைய கோரிக்கையை ஏதேனும் காரணத் தினால் எழுத்தில் செய்யவியலாதிருக்குமிடத்து, அவர் வாய் மூலம் கோரிக்கையைச் செய்ய உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன் அப்பிரசை சார்பில் அத்தகைய கோரிக்கையை எழுத்திலிடுதல் தோதான தகவல் அலுவலரின் கடமையாதலும் வேண்டும்.

(2) பிரசையொருவர்-

(அ) பகிரங்க அதிகாரசபையொன்றுக்கு கோரிக்கை யொன்றை செய்யவிரும்புமிடத்து; அல்லது

(ஆ) பகிரங்க அதிகார சபையொன்றுக்கு இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாத கோரிக்கை யொன்றைச் செய்துள்ளவிடத்து,

தோதான தகவல் அலுவலர் இச்சட்டத்திற்கு இணங்கியொழுகு கின்ற முறை ஒன்றில் கோரிக்கையை செய்வதற்கு இலவசமாக அப்பிரசைக்கு உதவுவதற்கு எல்லா அவசியமான நடவடிக்கை களையும் எடுத்தல் வேண்டும்.

(3) கோரிக்கையொன்று கிடைக்கப்பெற்றதன் மேல், தகவல் அலுவலர் ஒருவர் பிரசைக்கு கோரிக்கையின் எழுத்திலான ஏற்பொன்றை உடனடியாகக் கொடுத்தல் வேண்டும்.

(4) தகவல் அலுவலர் ஒருவர் கோரிக்கையொன்றை விடுக்கின்ற பிரசைக்கு உடனடியாக பதிலளிப்பொன்றை வழங்க இயலுமாக விருப்பதுடன் அத்தகைய பதிலளிப்பானது கோரிக் கையாளருக்கு திருப்தியானதாக இருப்பின், தகவல் அலுவலர் கோரிக்கை பதிவொன்றையும் அதற்கான பதிலளிப்பையும் செய்து வைத்திருத்தல் வேண்டும்.

(5) தகவலுக்கென கோரிக்கையொன்றை செய்கின்ற பிரசையொருவர்:

(அ) தகவலை இனங்காணச் செய்வதற்கு தகவல் அலுவ லரை இயலச்செய்ய நியாயமாக அவசியமாக இருக்கக் கூடியவாறான கோரப்பட்ட தகவல் சம்பந்தமான அத்தகைய விபரங்களை வழங்குதல் வேண்டும்;

(ஆ) வடிவத்தின் தன்மையையும் எந்த மொழியில் அணுகுதலைப்பெற விரும்புகின்றாரோ அந்த மொழி யையும் பிரசை அடையாளம் காணுதல் வேண்டும்;

(இ) தகவல் ஆளொருவரின் உயிர் அல்லது சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு அவசியமாகவிருக்கக்கூடியதென பிரசையினால் நம்புகின்றவிடத்து, நம்பிக்கைக்கான அடிப்படை உட்பட அதன் பயன்பட கூற்றொன்றையும் உள்ளடக்குதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அவரைத் தொடர்பு கொள்வதற்கு அவசியமாக விருக்கக்கூடிய தகவல் தவிர, தகவலைத் தேவைப் படுத்துவதற்கான ஏதேனும் காரணம் அல்லது வேறு ஏதேனும் தனிப்பட்ட விபரங்களை கொடுக்கும்படி தேவைப்படுத்தப்படுதல் ஆகாது.

(6) இப்பிரிவின் நோக்கத்துக்காக-

"எழுத்திலிடுதல்" என்பது இலத்திரன் வழிமுறையூடாக எழுதுதலையும் உள்ளடக்கும்; அத்துடன்

"தோதான தகவல் அலுவலர்" என்பது எப்பகிரங்க அதிகார சபையிடம் தகவல் கோரப்படுகின்றதோ அப்பகிரங்க அதிகாரசபைக்கு நியமிக்கப்பட்ட தகவல் அலுவலர் எனப் பொருளாகும்.

*24ஆம் பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைமீதான முடிபு.*

**25**. (1) ஒரு தகவல் அலுவலர் இயன்றளவு விரைவாக, எச்சந்தர்ப்பத்திலும் 24ஆம் பிரிவின்கீழான கோரிக்கை ஒன்றின் பெறுகையின் பதின்நான்கு வேலை நாட்களுக்குள் 14 (உ) என்னும் பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட கட்டண அட்டவணைக்கு இணங்க தீர்மானிக்கப்பட்ட கட்டணம் ஒன்றின் கொடுப்பனவின் மீது கோரப்பட்ட தகவலை ஒன்றில் வழங்குவதற்கு அல்லது இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் ஏதுக்களின் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றின் மீது வேண்டுகோளை நிராகரிப்பதற்கு முடிபு ஒன்றை எடுத்தல் வேண்டும் என்பதுடன் கோரிக்கை விடுத்த பிரசைக்கு அத்தகைய முடிபை உடனடுத்து அறிவித்தலும் வேண்டும்.

(2) முடிபு ஒன்று கோரப்பட்ட தகவலை வழங்குவதற்கு செய்யப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய தகவலுக்கான அணுக்கம் அத்தகைய முடிபு எடுக்கப்பட்டதிலிருந்து பதின்நான்கு நாட்களினுள் அளிக்கப்படுதல் வேண்டும்.

(3) தகவலுக்கான கோரிக்கையானது, ஒரு பிரசையின் உயிர் மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்துடன் சம்மந்தப்படுகின்றவிடத்து, அதற்கான பதிலளிப்பு கோரிக்கை கிடைக்கப்பெற்றதிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குள் செய்யப்படுதல் வேண்டும்.

*(4) ஓராம் உட்பிரிவின்கீழ் கட்டணம் ஒன்றின் கொடுப்பனவிற் கென செய்யப்படும் தேவைப்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழு, எச்சூழ்நிலைகளில் தகவல் கட்டணம் ஒன்றின் கொடுப்பனவின்றி தகவல் அலுவலர் ஒருவரால் வழங்கப் படலாமோ அச்சூழ்நிலைகளை தீர்மானிக்கலாம்.*

*(5) (அ) கோரிக்கையானது பதிவேடுகளின் பாரிய எண்ணிக்கை ஒன்றிற்கெனவும் பதின்நான்கு நாட்களினுள் தகவல் வழங்குதலானது சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகாரசபையின் தொழிற்பாடுகளுடன் நியாயமற்றமுறையில் தலையிடுவதாக இருக்குமென வும் இருப்பின் ; அல்லது*

*(ஆ) கோரிக்கையானது, தகவல் அலுவலரது அதே அலுவலகம் உள்ள அதே பட்டினத்தில், நகரத்தில் அல்லது அமைவிடத்தில் அமைந்திராத பகிரங்க அதிகாரசபையின் அலுவலகத்தில் பதிவேடுகளின் தேடுகையை அல்லது பதிவேடுகளின் சேகரிப்பை தேவைப்படுத்தி அது பதின்நான்கு நாட்களுக்குள் நியாயமாக முடிவுறுத்தப்படவியலாதிருப்பின்,*

*தகவலைப் பெற அணுகுதலை வழங்குவதற்கென (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பதின்நான்கு நாட்கள் காலப்பகுதி இருபத்தொரு நாட்களுக்கு மேற்படாத மேலுமொரு காலப்பகுதி ஒன்றிற்கு நீடிக்கப்படலாம்.*

*(6) தகவலை வழங்குவதற்கான காலப்பகுதி ஒன்று (5)ஆம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் சூழ்நிலைகளி னால் நீடிக்கப்பட வேண்டியிருக்குமிடத்து, தகவல் அலுவலர் சாத்தியமானவரை இயலுமான அளவு, ஆனால் எச்சந்தர்ப் பத்திலும் பதின்நான்கு நாட்களுக்குள், பின்வரும் காரணங்களை தருகின்ற அத்தகைய நிகழ்வினை சம்பந்தப்பட்ட ஆளுக்கு அறிவித்தல் வேண்டும்:-*

*(அ) நீடிப்பு காலம்; அத்துடன்*

*(ஆ) நீடிப்புக்கான காரணங்கள்.*

(7) ஆறாம் உட்பிரிவின்கீழ் தரப்பட்ட காரணங்களுடன் திருப் திப்படாத பிரசையொருவர் குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீடு ஒன்றை முன்வைக்கலாம்.

**26.** (1) பகிரங்க அதிகாரசபை ஒவ்வொன்றும் பின்வருவன வற்றை குறித்துரைக்கின்ற அறிவித்தல் ஒன்றை அலுவலக வளவுகளினுள் துலாம்பரமான இடமொன்றிலும் அத்தகைய பகிரங்க அதிகாரசபை ஏதேனுமிருப்பின் அதன் இணையத் தளத்தின்மீதும் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்– *தகவல் அலுவலர்கள் மற்றும் விதிக்கப்பட வேண்டிய கட்டணங்கள் பற்றிய விபரங்களை பகிரங்க அதிகாரசபை வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.*

(அ) ஆணைக்குழுவையும் ஆணைக்குழு உறுப்பினர்களையும் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்;

(ஆ) தகவல் அலுவலரினை தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்;

(இ) குறித்தளிக்கப்பட்ட அலுவலரை தொடர்பு கொள்வதற் கான விபரங்கள்;

(ஈ) அத்தகைய பகிரங்க அதிகாரசபையிடமிருந்து ஏதேனும் தகவலை பெறுவதற்கென விதிக்கப்பட வேண்டிய கட்ட ணங்கள்.

(2) உட்பிரிவு (1) (ஈ) இல் குறிப்பீடு செய்யப்படும் கட்டணம் 14 (உ) என்னும் பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் அமைத்துரு வாக்கப்பட்ட கட்டண அட்டவணைக்கிணங்க தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**27.** (1) தகவலுக்கான கோரிக்கையொன்றை அனுமதிக்க முடிபு செய்யப்படுகின்றவிடத்து, அத்தகைய தகவலானது, தகவல் அலுவலர், கோரப்பட்ட வடிவத்தில் தகவல் வழங்குகின்றமை இயைபான எவ்வாவணம் அல்லது பதிவேடு தொடர்பாக கோரிக்கைவிடப்பட்டதோ அவ்வாவணத்தின் அல்லது பதிவேட்டின் ஏமத்துக்கும், காத்துப்பேணுகைக்கும் குந்தகம் விளைவிக்காதெனக் கருதினாலொழிய, எந்த வடிவத்தில் அது கோரப்பட்டுள்ளதோ அவ்வடிவத்தில் வழங்கப்படுதல் வேண்டும். *தகவல் கொடுக்கப்படும் விதம்.*

*(2)* ஒரு தகவல் அலுவலர் கோரப்பட்ட விதமாக தகவலை வழங்கவியலாதவராக உள்ளவிடத்து, அத்தகைய கோரிக்கை யுடன் இணங்கியொழுகுவதை வசதிப்படுத்தவும் தகவலுக்கான அணுக் கத்தை வழங்குவதன் தோதான மாற்றீடான வழிவகைகளைத் தீர்மானிப்பதற்கும் பிரசைக்கு இயலுமான எல்லா உதவியையும் அளித்தல் அத்தகைய அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

*(3)* ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, தகவலுக் கான எப்பிரசையினது கோரிக்கை அனுமதிக்கப்பட்டிருக் கின்றதோ அப்பிரசை:-

(அ) இயைபான வேலை, ஆவணங்கள், பதிவேடுகளை பரீட்சிப்பதற்கும்;

(ஆ) ஆவணங்கள் அல்லது பதிவேடுகளின் குறிப்புகளை அல்லது பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகளை சான்றுறுதிப் படுத்தப்பட்ட பிரதிகளை எடுப்பதற்கும்;

(இ) பொருட்களின் சான்றுறுதிப்படுத்தப்பட்ட மாதிரிகளை எடுப்பதற்கும்;

(ஈ) இறுவட்டு, நெகிழ்வட்டு, நாடாக்கள், ஒளிப்பட தட்டு அல்லது வேறு ஏதேனும் இலத்திரனியல் முறை அல்லது அத்தகைய தகவல் கணணியின் அல்லது வேறு ஏதேனும் உபகரணத்தில் களஞ்சியப்படுத்தப்படுமிடத்து, முழுமையான அச்சுப்பிரதிகளின் வடிவத்தில் தகவலைப் பெறுவதற்கும்,

உரித்துடையவராதல் வேண்டும்.

கோரிக்கை ஒன்றின் மறுப்புத் தெரிவிக்கப்படுதல்.

***28***. தகவலுக்கான கோரிக்கையொன்று தகவல் அலுவலரால் மறுக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய அலுவலர், கோரிக்கையை விடுத்த பிரசைக்கு 25(1) ஆம் பிரிவின்கீழ் அனுப்பவேண்டிய தொடர்பாடலில் பின்வரும் தகவல்களைக் குறித்துரைத்தல் வேண்டும்:-

(அ) அத்தகைய கோரிக்கை மறுக்கப்பட்டதற்கான ஏதுக்கள்; அத்துடன்

(ஆ) எக்காலப்பகுதியினுள் மற்றும் யாருக்கெதிராக அத்தகைய மறுப்புக்கெதிராக மேன்முறையீடு இச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் செய்யப்படலாம்.

கோரப்பட்ட தகவல் ஒரு மூன்றாம் தரப்பினரால் வழங்கப் படுமிடத்து.

**29.** (1) தகவலை வெளிவிடும்படி எவரேனும் பிரசையினால் ஒரு தகவல் அலுவலருக்கு செய்யப்பட்ட கோரிக்கையொன்று ஒரு மூன்றாம் தரப்பினர் தொடர்பானதாக அல்லது அம்மூன்றாம் தரப்பினரால் வழங்கப்பட்டதாக உள்ளவிடத்து அத்துடன் மூன்றாம் தரப்பினரால் வழங்கப்பட்ட அத்தகைய தகவல் வழங்கப்பட்ட நேரத்தில் அத்தகவல் அந்தரங்கமானதாகக் கணிக்கப்பட்டுள்ள விடத்து, தகவல் அலுவலர், அத்தகைய கோரிக்கையைப் பெற்றுக் கொண்டதிலிருந்து ஒரு வாரத்தினுள், அத்தகைய மூன்றாம் தரப்பினரை எழுத்தில் வழங்கப்படும் அறிவித்தல்மூலம் அத்தகைய வெளிவிடுகை சார்பாக அல்லது எதிராக அவ்வறிவித்தல் கிடைத்து ஏழு நாட்களுள் அவரது எடுத்துரைப்பைச் செய்யும்படி அழைத்தல் வேண்டும்.

(2) ஒரு தகவல் அலுவலர், ஒரு மூன்றாம் தரப்பினர் தொடர்பான அல்லது அவரால் வழங்கப்பட்ட தகவலை வெளியிடுதற்காக செய்யப்பட்ட ஏதேனும் கோரிக்கைமீது அவரது முடிபை எடுக்கையில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய மூன்றாம் தரப்பினரால் செய்யப்பட்ட எடுத்துரைப்புகளை கவனத்திற் கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய மூன்றாம் தரப்பினர்–

(அ) அறிவித்தலுக்கு பதிலளிக்காதவிடத்து, தேவைப்படுத் தப்பட்ட தகவலை வெளிவிடுதல் வேண்டும்;

(ஆ) அறிவித்தலுக்கு பதிலளிக்குமிடத்தும் கோரப்பட்ட தகவலை வெளியிட உடன்படுமிடத்தும்,அத்தகைய தகவலை வெளிவிடுதல் வேண்டும்;

(இ) அறிவித்தலுக்கு பதிலளிக்குமிடத்தும் கோரப்பட்ட தகவலை வெளியிட மறுக்குமிடத்தும், கோரப்பட்ட தகவலுக்கான அணுகுதலுக்கு மறுத்தல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், ஆணைக்குழுவானது கோரிக்கை விடுக்கின்ற பிரசையினால் அது சார்பில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது, அதனது வெளிவிடுகைக் கெதிராக அத்தகைய மூன்றாம்தரப்பினரினால் எழுப் பப்பட்ட ஏதேனும் ஆட்சேபனைகள் எது எவ்வாறிருப் பினும், சம்பந்தப்பட்ட தகவலின் வெளிவிடுகையானது தகவலின் வெளிவிடுகையில் பகிரங்க அக்கறையை விஞ்சியிருக்குமிடத்து வினாவிலுள்ள தகவலின் வெளி விடுகைக்கு பணிக்கலாம்.

துடர்ச்சி அல்லது குற்றவழக்குத் தொடர்தலி லிருந்தான விலக்களிப்பு.

**30.** குடியியலிலோ அல்லது குற்றவியலிலோ எந்த பொறுப்புடைமை எதனையும், இச்சட்டத்தின்கீழ் தகவல் அலுவலருக்கு விதிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவம் அல்லது பணிகளின் பிரயோகம் அல்லது புரிகையில் அத்தகைய அலுவலரால் நன்நோக்கில் செய்யப்பட்ட எதற்காகவும் ஏதேனும் அத்தகைய பகிரங்க அதிகாரசபையுடன் அல்லது எவரேனும் தகவல் அலுவலருடன் அல்லது ஏதேனும் அத்தகைய பகிரங்க அதிகாரசபையின் வேறு எவரேனும் அலுவலருடன் இணைந்தாதலாகாது.

## பாகம் VI

### மறுப்புக்களுக்கெதிரான மேன்முறையீடுகள்

ஒரு கோரிக்கையின் நிராகரிப்புக் கெதிரான மேன்முறை யீடுகள்.

**31.** (1) பின்வருவனவற்றின் விளைவாக, இன்னலுற்ற எவரேனும் ஆள்–

(அ) தகவலுக்கெனச் செய்யப்பட்ட கோரிக்கையொன்றை ஏற்க மறுத்தல்;

(ஆ) அத்தகைய தகவல் 5 ஆம் பிரிவின்கீழ் அளிக்கப்படு வதிலிருந்து விலக்களிக்கப்பட்டதென்ற ஏது மீது தகவலுக்கான அணுக்கம் தர மறுத்தல்;

(இ) இச்சட்டத்தினால் குறித்துரைக்கப்படும் நேரவரையறை யுடன் இணங்கியொழுகாமை;

(ஈ) பூர்த்தியற்ற, தவறாக இட்டுச் செல்லும் அல்லது பொய்யான தகவலின் அளிப்பு;

(உ) மேன்மிகையான கட்டணங்கள் விதித்தல் ;

(ஊ) கோரப்பட்ட வடிவத்தில் தகவல் வழங்குவதற்கு தகவல் அலுவலரின் மறுப்பு; அல்லது

(எ) தகவலுக்கான அணுகுதலைக் கொண்டிருப்பதிலிருந்து அத்தகைய பிரசையைத் தடுப்பதற்கு தகவலானது உருக்குலைக்கப்பட்டுள்ளது, அழிவடையச் செய்யப் பட்டுள்ளது அல்லது தவறாக இடச்செய்யப்பட்டுள்ளது என நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ள கோருகின்ற பிரசை,

விடயத்துக்கேற்ப, மறுப்பு, செயல் அல்லது எவ் ஏதுக்கள் மீது மேன்முறையீடு நடாத்தப்படுகின்றதோ அந்த ஏதுக்களின் அறிய வந்த தேதியிலிருந்து பதின்நான்கு நாட்களுள் குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீட்டைச் செய்யலாம் :

ஆயின் எவ்வாறாயினும், பெயர்குறிக்கப்பட்ட அலுவலர் மேன்முறையீட்டினை உரிய நேரத்தில் கோப்பிடுவதற்கு அவருடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணத்தினால் மேன் முறையீட்டாளர் தடுக்கப்பட்டுள்ளார் என அவர் திருப்திப்படின், பதினான்கு நாட்களைக்கொண்ட காலப்பகுதி முடிவடைந்த பின்னர் மேன்முறையீட்டை அனுமதிக்கலாம்;

(2) குறித்தளிக்கப்பட்ட ஆள் எச்சந்தர்ப்பத்திலும் மூன்று வேலை நாட்களுள் மேன்முறையீட்டை செய்கின்ற பிரசைக்கு மேன்முறை யீட்டின் ஏற்பின்மீது பற்றுச் சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் மீதான முடிபு, மேன்முறையீடு பெறப்பட்டதிலிருந்து மூன்று வாரங் களினுள் குறித்தளிக்கப்பட்ட அலுவலரால் செய்யப்படுதல் வேண்டு மென்பதுடன் முடிபுக்கான குறித்த ஏதுக்கள் உட்பட சொல்லப்பட்ட முடிபுக்கான காரணங்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் பிரசையொருவரின் உரிமை ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதற்கான அவரது உரிமையைப் பங்கப்படுத்தாது இருத்தல் வேண்டும்.

(5) குறித்தளிக்கப்பட்ட அலுவலர், நியாயமான காரணம் அத்தகைய மேன்முறையீட்டை செய்கின்ற பிரசையினால் (1) ஆம் உட்பிரிவினால் குறித்துரைக்கப்படும் காலப்பகுதியொன்றினுள் மேன்முறையீடொன்றை சமர்ப்பிக்க தவறுகை தரப்படுமிடத்து, அத்தகைய காலதாமதம் எது எவ்வாறிருப்பினும் மேன்முறையீட்டை அவரது தற்றுணிபில் கேட்கலாம்.

ஆணைக் குழுவுக்கு மேன் முறை யீடுகள்.

**32.** (1) (அ) 31(1)ஆம் பிரிவின்கீழ் மேன்முறையீட்டில் செய்யப் பட்ட முடிபினால் இன்னலுற்ற எவரேனும் ஆள் அத்தகைய முடிபு அறிவிக்கப்பட்டு இரு மாதங்களுள் ; அல்லது

(ஆ) 31(3)ஆம் பிரிவின்கீழ் முடிபை அளிப்பதற்குக் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின் மீது ஒரு முடிபைப் பெறத்தவறுவதன் மூலம் இன்னலுற்ற எவரேனும் ஆள் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட காலம் முடிவடைந்த இரண்டு மாதத்திற்குள்,

விடயத்துக்கேற்ப, அந்த முடிபுக்கு அல்லது தவறுகைக்கு எதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாமென்பதுடன் ஆணைக்குழுவானது, அத்தகைய மேன்முறையீடு பெறப்பட்டு முப்பது நாட்களுள் எந்த முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய் யப்பட்டதோ அம்முடிபை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது எதிர்மாறாக்கலாம் என்பதுடன் அவசியமான நடவடிக் கைக்கென தோதான தகவல் அலுவலருக்கு அத்தகைய கோரிக் கையை மீள அனுப்பலாம்.

(2) ஆணைக்குழுவானது மேன்முறையீட்டுக் காலத்தினுள் மேன்முறையீட்டை கோப்பிடுவதிலிருந்து தனது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணமொன்றினால் மேன்முறையீட்டாளர் தடுக்கப்பட்டார் என திருப்திப்படின், ஆணைக்குழு இரண்டு மாதகாலப்பகுதியின் காலாவதியின் பின்னரான மேன்முறை யீட்டை அனுமதிக்கலாம்.

(3) ஆணைக்குழுவானது, மேன்முறையீட்டாளர், தகவல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகாரசபைக்கு எழுத்தில் அதனது முடிபுக்கான காரணங்களைத் தருதல் வேண்டும்.

(4) மேன்முறையீட்டில், எண்பிக்கும் பொறுப்பான, அது கோரிக்கையொன்றை செய்முறைப்படுத்துதலில் இச்சட்டத்துடன் இணங்கியொழுகுவதாக செயலாற்றியது எனக் காட்டுவதற்கு பகிரங்க அதிகாரசபை மீதானதாதல் வேண்டும்.

**33.** இன்னலுற்ற தரப்பினர் விடயத்திற்கேற்ப, 31 ஆம் பிரிவு அல்லது 32 ஆம் பிரிவின் கீழான மேன்முறையீடொன்றை செய்வதற்கு ஏதேனும் ஏதுவின் காரணமாக இயலாதுள்ளவிடத்து, அத்தகைய மேன்முறையீடு அதனை செய்ய விரும்புகின்ற இன்னலுற்ற ஆளினால் எழுத்தில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் செய்யப்படலாம்.

*இன்னலுற்ற ஒரு தரப்பினரின் சார்பாக மேன்முறையீடு செய்யப்படலாம்.*

**34.** (1) முப்பத்துஇரண்டாம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஆணைக்குழுவின் முடிபினால் இன்னலுறப்பட்ட பிரசையொருவர் எத்தேதியில் அத்தகைய முடிபு அத்தகைய பிரசைக்கு அறிவிக்கப்பட்டதோ அத்தேதியிலிருந்து ஒருமாதத்தினுள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

*மேன்முறையீட்டு நீதிமன்றத் துக்கான மேன்முறையீடுகள்.*

(2) இப்பிரிவின் கீழ் மேன்முறையீடுகள் தொடர்பில் அரசியலமைப்பின் 136ஆம் உறுப்புரையின்கீழ் விதிகள் ஆக்கப்படும் வரை மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மீளாய்வு என்ற வழி வகை மூலம் விண்ணப்பமொன்று தொடர்பில் அவ்வுறுப்புரையின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் மேன்முறையீடு ஒவ்வொன்று தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் VII

### பொதுவானவை

**35.** ஏதேனும் வழியில் எவரேனும் ஆளைப்பாதிக்கின்ற முடிபொன்றைத் தருகின்ற ஏதேனும் பகிரங்க அதிகாரசபையின் அலுவலர் ஒவ்வொருவரும் சம்பந்தப்பட்ட ஆளினால் அது சார்பில் செய்யப்பட்ட கோரிக்கை மீது அத்தகைய முடிபுக்கு வருவதற்கான காரணங்களை எழுத்தில் அவ்வாளுக்கு வெளிவிடுவதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

*முடிபொன்றுக்கான காரணங்களை வெளிவிடுவ தற்கான கடமை.*

**36.** இச்சட்டத்திலுள்ள எதுவும், தகவலுக்கான அணுகுதலைத் தருவதை அல்லது தகவலை வெளியிடுவதிலிருந்து தகவலை வைத்திருப்பவரை தடுப்பதற்கு அல்லது பின்தள்ளுவதற்கு, அல்லது சட்டத்தின் உரிய இணங்கியொழுகுதலில் வழங்கப் படக்கூடிய தகவலை வெளியிடுவதிலிருந்தும் பெறுவதிலிருந்தும் எவரேனும் ஆளை தடுப்பதற்கு எண்ணப்படுவதில்லை.

*இச்சட்டத்திலுள்ள எதுவும் தகவல் வெளியிடப்படு வதிலிருந்து தடுப்பதோ பின்தள்ளுவதோ ஆகாது.*

ஆணைக்குழு அதனது தொழிற் பாடுகள் பற்றிய அறிக்கையொன் றைத் தயாரித்தல்.

**37.** (1) ஆணைக்குழு, அது அவசியமானதெனக் கருதக்கூடிய வாறான அந்த இடைவெளியில் அதனது தொழிற்பாடுகளின் அறிக்கையொன்றை தயாரிக்கப்படுவதற்குச் செய்வித்தல் வேண்டும், எவ்வாறாயினும், அது ஒவ்வொரு நிதியாண்டிலும் ஆகக் குறைந்தது ஓர் அறிக்கையை தயாரித்தல் வேண்டும். ஆணைக்குழு பாராளுமன்றத்தின் முன்னால் இடப்படுவதற்கு அத்தகைய அறிக்கை ஒவ்வொன்றினதும் பிரதியொன்றை கொடுத்தல் வேண்டுமென்பதுடன் அதன் பிரதியொன்று சனாதிபதிக்கும் அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் பிரதியொன்று பாராளுமன்றத்தின் முன் அது இடப்பட்டதிலிருந்து இரண்டு வாரத்தினுள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் பொதுமக்கள் பரீட்சிப்புக்கென கிடைக்கக்கூடியதாக செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் சாத்தியமானபோதிலெல்லாம் அதன் பிரதியொன்று அதனது வெப் தளத்தில் கிடைக்கக்கூடியதாக செய்யப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழு தோதான ஒழுக்காற்று அதிகாரிக்கு அறிவித்தல்.

**38.** (1) (அ) எவரேனும் தகவல் அலுவலர் -

(i) எவரேனும் பிரஜையிடமிருந்து தகவலுக் கான விண்ணப்பமொன்றை பெறுவதற்கு வேண்டுமென்று மறுக்கின்றவிடத்து;

(ii) அத்தகைய மறுப்புக்கான காரணங்களைத் தராமல் தகவலுக்கெனச் செய்யப்பட்ட கோரிக்கையொன்றை வேண்டுமென்று மறுக்கின்றவிடத்து;

(iii) 14(உ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டண அட்டவணையின் மீறுகையில் வேண்டுமென்று மேன்மிகை யான கட்டணங்களை எடுத்துரைக்கின்ற விடத்து; அல்லது

(iv) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கோரிக்கையொன்றை செய்முறைப் படுத்துவதற்கு வேண்டுமென்று வேறு வகையாக தவறுமிடத்து ; அல்லது

(ஆ) (i) எவரேனும் குறித்தளிக்கப்பட்ட அலுவலர், இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏது தவிர்ந்த ஏதேனும் ஏது மீது செய்யப்பட்ட மேன்முறையீடொன்றை 31ஆம் பிரிவின் கீழ் வேண்டுமென்று மறுக்கின்றவிடத்து;

(ii) அத்தகைய தீர்மானம் எடுப்பதெற்கென 31(3) ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின் மீதான முடிபொன்றை ஆக்குவதற்கு ஏதேனும் நியாயமான காரணமின்றி வேண்டுமென்று தவறியவிடத்து,

ஆணைக்குழு தோதான ஒழுக்காற்று அதிகாரசபையின் கவனத்திற்கு விடயத்தை கொண்டு வருதல் வேண்டும்.

(2) இயைபான ஒழுக்காற்று அதிகாரசபை, அத்தகைய ஒழுக்காற்று அதிகாரசபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகளை ஆணைக்குழுவிற்கு ஒரு மாத காலப்பகுதியினுள் அறிவித்தல் வேண்டும்.

**39.** (1) (அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட தகவலை வழங்குவதற்கு வேண்டுமென்று மறுக்கின்ற அல்லது சரியற்ற, பூர்த்தியற்ற அல்லது சரியானதற்ற தகவலை எண்ணத்துடன் ஏற்பாடு செய்கின்ற; தவறுகள்.

(ஆ) அவரது கட்டுக்காப்பிலுள்ள தகவலை அல்லது அவர் தனது நீதி, தொழில் அல்லது பகிரங்க பணியின் புரிகையில் அணுகுதலை அல்லது அறிவைக்கொண்டுள்ள தகவலை வேண்டுமென்று அழிக்கின்ற, செல்லுபடியற்ற தாக்குகின்ற, மாற்றுகின்ற அல்லது மொத்தமாக அல்லது பகுதியளவில் ஒழிக்கின்ற;

(இ) ஆணைக்குழுவினால் அவ்வாறு செய்வதற்கு தேவைப்படுத்தப்படும் போது ஆணைக்குழு முன்னால் தோன்றுவதற்கு தவறுகின்ற அல்லது மறுக்கின்ற;

(ஈ) ஆணைக்குழுமுன் தோன்றுவதுடன் ஆணைக்குழுவினால் பரீட்சிக்கப்படுவதற்கு அல்லது அவ்வாளின் உடைமையில் அல்லது தத்துவத்திலுள்ள ஏதேனும் தகவலை சமர்ப்பிக்க தவறுகின்ற அல்லது மறுக்கின்ற அல்லது சத்தியத்தின்கீழ் அல்லது உறுதி யுரையின்கீழ் பொய்யான தகவலை வேண்டு மென்று வழங்குகின்ற;

(உ) ஆணைக்குழுவின் முடிபொன்றுடன் இணங்கி யொழுகுவதற்கு அல்லது அதற்கு பயன் கொடுக்கத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற;

(ஊ) இச்சட்டத்தினால் ஆணைக்குழு அல்லது அத்தகைய அலுவலர் அல்லது ஊழியருக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தின் பிரயோகத்தில், ஆணைக்குழுவை அல்லது எவரேனும் அலுவலரை அல்லது ஆணைக் குழுவின் ஊழியரை எதிர்க்கின்ற அல்லது தடுக்கின்ற;

(எ) இச்சட்டத்தின் 12(7) ஆம் பிரிவின் ஏற்பாடு களை மீறி ஏதேனும் தகவலை வெளிவிடு கின்ற,

எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றவ ராதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவரினாலான சுருக்க முறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன் றுக்கு அல்லது இரண்டாண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியொன் றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) இருபத்திமூன்றாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் தகவல் அலுவலர் ஒருவரால் எவரேனும் அலுவலரின் உதவி நாடப்பட்டிருந்து நியாயமான காரணமின்றி அத்தகைய உதவியை வழங்குவதற்கு தவறுகின்ற எவரேனும் அலுவலர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரினாலான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு பொறுப்பாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (1)ஆம் அல்லது (2)ஆம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடுசெய்யப்படும் தவறொன்றின் புரிகைக்கென விதிக்கப் படும் குற்றப்பணமொன்று அவ்வாறு செய்வதற்கு தத்துவ மளிக்கப்பட்ட இயைபான அதிகாரியினால் அத்தகைய அலுவல ருக்கு எதிராக எடுக்கப்படவேண்டிய ஒழுக்காற்று நடவடிக்கைக்கு மேலதிகமானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதனைத் தரம் குறைப்பதாதலாகாது.

(4) இச்சட்டத்தின்கீழான குற்ற வழக்கொன்று ஆணைக் குழுவினால் தொடுக்கப்படுதல் வேண்டும்.

**40.** ஏதேனும் பகிரங்க அதிகாரசபையின் அலுவலர் ஒருவர் அல்லது ஊழியர் ஒருவராக இருப்பதன் பயனாக, எந்த ஏதேனும் சட்ட அல்லது வேறு கடப்பாடுகளுக்கு அவ்வாள் அமைவாக உள்ளாரோ அந்த சட்ட அல்லது வேறு கடப்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், அதிகாரசபை ஒன்றில் எந்த அலுவலர் அல்லது ஊழியர் எவரும் இச்சட்டத்தின்கீழ் விடுவிக்கப்படுவதற்கு அல்லது வெளியிடப்படுவதற்கு அனுமதிக்கப்படும் ஏதேனும் தகவலை விடுவித்தல் அல்லது வெளியிடுதலுக்காக ஏதேனும் தண்டனை ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது வேறு வகையாக உட்பட்டவராதல் ஆகாது.

*பகிரங்க அதிகாரசபையின் ஊழியரொருவரினால் தகவலின் விடுவிப்பு அல்லது வெளிவிடுகை.*

**41.** (1) அமைச்சர் ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனை யுடன் விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுக்கும் நோக்கில் ஆக்கப்படவேண்டிய அவசியமான ஒழுங்குவிதிகள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

*ஒழுங்கு விதிகள்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்கு விதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் உடனடுத்து அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று அவ்வாறு ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

விதிகள்.

**42.** (1) ஆணைக்குழு பின்வரும் எவையேனும் கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்:-

(அ) எப்படிவத்திலும் எம்முறையிலும் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யப்படுதல்;

(ஆ) விசாரணைகளை நடாத்துவதற்கான நடவடிக்கை முறை;

(இ) தகவல் வழங்குவது தொடர்பில் செலுத்தற்படற்பாலதான கட்டணங்கள் ;

(ஈ) 10ஆம் பிரிவின்கீழ் தயாரிக்கப்படவேண்டிய அறிக்கைகளின் வடிவம்.

(2) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி எதுவும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய அங்கீகாரத்துக்கான அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும்வரை பயன்கொண்டதாதல் ஆகாது.

"உள்ளூரதிகாரசபை" என்பது, ஒரு மாநகரசபை, நகரசபை, மாகாணசபை அல்லது பிரதேச சபை எனப் பொருளாகுமென்பதுடன் அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட தத்துவங்களுக்கும், கடமைகளுக்கும், பணிகளுக்கும் நேரொத்தவையான அல்லது ஒத்தவையான தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;

"அரசாங்கசார்பற்ற ஒழுங்கமைப்பு" என்பது தன்னிச்சை அடிப்படையில் ஆட்கள் குழுவொன்றினால் உருவாக்கப்பட்டதும் அரசாங்க அல்லது சர்வதேச ஒழுங்கமைப்புக்களிலிருந்து நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் நிதிகளைப் பெறுகின்றதும் அத்துடன் அரசாங்க சார்பற்ற தன்மை கொண்டதுமான ஏதேனும் ஒழுங்கமைப்பு எனப் பொருள்படும்;

"பகிரங்க அதிகாரசபை" என்பது-

(அ) அரசாங்கத்தின் ஓர் அமைச்சு;

(ஆ) பந்தி (உ) வில் குறித்துரைக்கப்பட்ட அந்தளவிற்கு தவிர 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் தவிர்ந்த அரசியலமைப் பினால் அல்லது அரசியலமைப்பின்கீழ், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அல்லது மாகாண சபையொன்றின் நியதிச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் குழு அல்லது பதவி;

(இ) ஓர் அரசாங்கத் திணைக்களம்;

(ஈ) ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம்;

(உ) எந்தக் கம்பெனியில், அரசு அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது அரசும் பகிரங்கக் கூட்டுத்தாபனமும் பங்குகளின் இருபத்தைந்து சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை ஒன்றாக வைத்திருக்கின்றனவோ அல்லது வேறுவகையில் கட்டுப்படுத்துகின்ற அக்கறையைக் கொண்டுள்ளனவோ, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அந்தக் கம்பெனியொன்று;

(ஊ) ஓர் உள்ளூரதிகாரசபை;

(எ) அரசாங்கத்திடமிருந்து அல்லது அதன் முகவராண்மையிடமிருந்து அல்லது உள்ளூர் சபையொன்றிடமிருந்து ஒப்பந்தம், பங்காண்மை உடன்படிக்கை அல்லது உரிமமொன்றின் கீழ் நியதிச்சட்ட அல்லது பகிரங்க பணி அல்லது ஒரு நியதிச்சட்ட அல்லது பகிரங்கச் சேவை நிறைவேற்றுகின்ற தனியாள் அமைப்பு அல்லது ஒழுங்கமைப்பொன்று, ஆனால் நியதிச்சட்ட அல்லது பகிரங்க பணி நியதிச்சட்ட அல்லது பகிரங்க சேவையினால் உள்ளீர்க்கப்படும் தொழிற்பாடுகளின் அந்தளவிற்கு மட்டும்;

(ஏ) ஒரு மாகாணசபையால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் திணைக்களம் அல்லது வேறு அதிகாரசபை அல்லது நிறுவனம்;

(ஐ) நாடப்படும் தகவல் பொதுமக்களுக்கு அளிக்கப் படும் சேவையுடன் தொடர்புறும் அந்தளவிற்கு பொதுமக்களுக்கு சேவையை வழங்குகின்ற அரசாங்கத்தினால் அல்லது ஏதேனும் திணைக் களத்தினால் பொருளளவில் நிதியளிக்கப்படு கின்ற அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகள் அல்லது மாகாணசபையொன்றினால் அல்லது வெளி நாட்டு அரசாங்கம் ஒன்றினால் அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட வேறு அதிகாரசபை;

(ஒ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கப்படுகின்ற, அங்கீகரிக்கப்படுகின்ற அல்லது உரிமமளிக்கப்படுகின்ற அல்லது அரசினால் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது ஒரு மாகாணசபையின் நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்டமுறை யான குழுவினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்தொழில் நிறுவனங்கள் உள்ளடங்கலாக உயர்கல்வி நிறுவனங்கள் ;

(ஓ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கப்படுகின்ற, அல்லது உரிமமளிக்கப்படுகின்ற அல்லது அரசினால் அத்துடன் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது ஒரு மாகாணசபையின் நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்டமுறை யான குழுவினால் முழுமையாக அல்லது அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட வாழ்க்கைத்தொழில் அல்லது தொழில்நுட்பக் கல்வியை வழங்குகின்ற நிறுவனங்கள் உள்ளடங்கலாக தனியார் கல்வி நிறுவனங்கள்;

(ஔ) நீதி நிருவாகத்திற்கென உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட எல்லா நீதிமன்றங்கள், நியாயசபைகள் மற்றும் நிறுவனங்கள்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

**44.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை** *(பிரிவு 12 (8) )*

**ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தொடர்பான ஏற்பாடுகள்**

(1) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர்-

(அ) சனாதிபதிக்கு முகவரியிட்ட எழுத்திலான கடிதத்தின் மூலம் முன்னரே அவர் பதவி விலகுமிடத்து ;

(ஆ) சனாதிபதியினால் பதவியிலிருந்து பதவி நீக்கப்படுமிடத்து;

(இ) நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்ற விடத்து ;

(ஈ) ஆணைக்குழுவின் முன்னரான அனுமதியைப் பெற்றிருந் தாலன்றி, அதன் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களிற்கு அவர் சமூகமளிக்காமையினால் பதவி வறிதாக்கப்பட்டிருப்பதாக கருதப்படுகின்றவிடத்து; அல்லது

(உ) பதவிக்காலத்தின் போது அவருடைய பதவிக் கடமைக்கு வெளியே ஏதேனும் தொழிலில் ஈடுபடுகின்றவிடத்து,

அத்தகைய உறுப்பினர் உறுப்பினர் ஒருவராக இருப்பதிலிருந்து இல்லா தொழிதல் வேண்டும்.

(2) சனாதிபதி ஆனவர் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது,

(அ) அத்தகைய உறுப்பினர் ஏதேனும் உடற் பலவீனம் அல்லது சித்த சுவாதினம் அற்ற நிலை காரணமாக அவருடைய கடமைகளை நிரந்தரமாக நிறைவேற்ற இயலாதவராக வருமிடத்து ;

(ஆ) அத்தகைய உறுப்பினர் ஒழுக்கக்கேடு என்றடிப்படைமீது அவரது கடமைகளை நிறைவேற்ற பொருத்தமற்றவராக இருக்குமிடத்து; அல்லது

(இ) அத்தகைய உறுப்பினர் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து,

ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரை பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) தவிசாளர் அல்லது ஆணைக்குழுவின் வேறு எவரேனும் உறுப்பினர் சனாதிபதிக்கு அதன் சார்பில் முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அத்தகைய பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் பதவிவிலகலானது சனாதிபதியின் எழுத்திலான கடிதத்தின் மூலம் அதனது ஏற்புடைமைத் தேதியிலிருந்து பயனுறுவதாதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரின் பதவி வெற்றிடமாகவரும் பட்சத்தில், சனாதிபதி, 12(1) ஆம் பிரிவில் தரப்பட்டவாறாக அதே நடவடிக்கைமுறையைப் பின்பற்றி வேறொரு ஆளை, எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவியை முடிவுறாதெஞ்சியுள்ள காலத்திற்கென அத்தகைய பதவியை வகிப்பதற்கென நியமித்தல் வேண்டும்.

(5)(அ)ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர், சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக அவரது கடமையை தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராக இருக்குமிடத்து, சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது, அவர் இல்லாத காலத்தின் போது அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கென வேறொரு ஆளை நியமிக்கலாம்.

(ஆ)ஆணைக்குழுவின் தவிசாளர், சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக அவரது கடமையை தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராக இருக்குமிடத்து, சனாதிபதி அவர் இல்லாத காலத்தின் போது அத்தகைய தவிசாளரின் இடத்தில் செயலாற்றுவதற்கென ஆணைக்குழுவின் வேறொரு உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(6) ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் தீர்மானிக்கப்பட வேண்டியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(7)(அ)ஆணைக்குழுவானது குறைந்த பட்சம் ஒவ்வொரு மாதத்திற்கு ஒரு தடவை அல்லது அவசியமாகக்கூடியவாறு அடிக்கடி கூடுதல் வேண்டும்.

(ஆ) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான நடப்பெண் மூன்று உறுப்பினர்கள் ஆதல் வேண்டும்.

(இ)ஆணைக்குழுவின் தவிசாளர், அதன் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் சமுகமளிக்காவிடில், சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் தம்மிடையேயிருந்து அத்தகைய கூட்டத்திற்கு தலைமைதாங்குவதற்கென உறுப்பினர் ஒருவரை தெரிவு செய்தல் வேண்டும்.

(ஈ)ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு தலைமைதாங்கும் தவிசாளர் அல்லது ஆள், அவரது வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ)ஆணைக்குழுவானது அதனது கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களின் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் தொடர்பாக நடவடிக்கை முறைகளை ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.

(8) ஆணைக்குழுவின் இலச்சினையானது,

(அ) ஆணைக்குழுவினால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்படுகின்ற வாறு இருத்தல் வேண்டும்;

(ஆ) ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(இ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(ஈ) ஆணைக்குழுவின் அனுமதியுடன் தவிசாளர் மற்றும் அத்தகைய ஆணைக்குழுவின் வேறு ஒரு உறுப்பினரும் முன்னிலையில் அன்றி ஏதேனும் ஆவணத்தில் அல்லது சாசனத்தில் பொறிக்கப் படலாகாது. அவ்விருவரும் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அத்தகைய ஆவணம் அல்லது சாசனத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

(ஈ)ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு தலைமைதாங்கும் தவிசாளர் அல்லது ஆள், அவரது வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ)ஆணைக்குழுவானது அதனது கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களின் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் தொடர்பாக நடவடிக்கை முறைகளை ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.

(8) ஆணைக்குழுவின் இலச்சினையானது,

(அ) ஆணைக்குழுவினால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்படுகின்ற வாறு இருத்தல் வேண்டும்;

(ஆ) ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(இ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(ஈ) ஆணைக்குழுவின் அனுமதியுடன் தவிசாளர் மற்றும் அத்தகைய ஆணைக்குழுவின் வேறு ஒரு உறுப்பினரும் முன்னிலையில் அன்றி ஏதேனும் ஆவணத்தில் அல்லது சாசனத்தில் பொறிக்கப் படலாகாது. அவ்விருவரும் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அத்தகைய ஆவணம் அல்லது சாசனத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

(ஈ)ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு தலைமைதாங்கும் தவிசாளர் அல்லது ஆள், அவரது வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ)ஆணைக்குழுவானது அதனது கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களின் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் தொடர்பாக நடவடிக்கை முறைகளை ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.

(8) ஆணைக்குழுவின் இலச்சினையானது,

(அ) ஆணைக்குழுவினால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்படுகின்ற வாறு இருத்தல் வேண்டும்;

(ஆ) ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(இ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(ஈ) ஆணைக்குழுவின் அனுமதியுடன் தவிசாளர் மற்றும் அத்தகைய ஆணைக்குழுவின் வேறு ஒரு உறுப்பினரும் முன்னிலையில் அன்றி ஏதேனும் ஆவணத்தில் அல்லது சாசனத்தில் பொறிக்கப் படலாகாது. அவ்விருவரும் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அத்தகைய ஆவணம் அல்லது சாசனத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

பின்னிணைப்பு 1

**மேன்முறையீட்டின் வடிவம்**

**தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடு**

தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு,

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

மேன்முறையீட்டுப் படிவம்

1. மேன்முறையீடு செய்பவரின் பெயர்:-..........................................................................
2. முகவரி:-..........................................................................
3. தொலைபேசி இலக்கம் (ஏதேனும் இருப்பின்) :-..........................................................................
4. மின்னஞ்சல் முகவரி (ஏதேனும் இருப்பின்) :..........................................................................
5. அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் (ஏதேனும் இருப்பின்) :-..........................................................................
6. சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகார சபையின் பெயர்:-..........................................................................
7. சம்பந்தப்பட்ட தகவல் அலுவலரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் (ஏதேனும் இருப்பின்) :-..........................................................................
8. தகவல் அலுவலரிடம் வேண்டுகோள் விடுத்த திகதியும் பதிவிலக்கமும்:-

   ..........................................................................

   (வேண்டுகோள் பிரதியை இணைக்கவும்)
9. தகவல் அலுவலரிடமிருந்து உங்களுக்கு ஒரு பதில் கிடைத்ததா? ஆம் / இல்லை:-

   ............................................

   (ஆம் எனில், பதிலின் பிரதியை இணைக்கவும்)
10. தகவல் அலுவலரிடமிருந்து தீர்மானம் கிடைத்த திகதி:-..........................................................................
11. எந்த குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு எதிராக மேன்முறையீடு மேற்கொள்ளப்படுகின்றதோ அவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்:-

    ..........................................................................
12. குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடம் மேன்முறையீடு மேற்கொண்ட திகதியும் மேன்முறையீட்டு இலக்கமும்:-..........................................................................
13. குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடமிருந்து தங்களுக்கு ஒரு பதில் கிடைத்ததா? ஆம் /இல்லை:-........................

    (ஆம் எனில் தீர்மானத்தின் ஒரு பிரதியை இணைக்கவும்)
14. குறித்தளிக்கப்பட்ட அதிகார சபையிடமிருந்து தீர்மானம் கிடைத்த திகதி:-

    ..................................................................
15. மேன்முறையீட்டுக்கான அடிப்படை:-

    ..........................................................................................................................................................................

    ..........................................................................................................................................................................

    ..........................................................................................................................................................................

.............................................................................................................................................................................................

.............................................................................................................................................................................................

.............................................................................................................................................................................................

.............................................................................................................................................................................................

.............................................................................................................................................................................................

.............................................................................................................................................................................................

.............................................................................................................................................................................................

.............................................................................................................................................................................................

.............................................................................................................................................................................................

16. மேன்மிறையீட்டில் கோரப்பட்ட தகவல் (விபரங்கள், காலப்பகுதி மற்றும் விடயம்):- ..............................................
17. கோரப்பட்ட தீர்மானம்:-.....................................................................................
18. மேன்முறையீடு குறித்த காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்படாவிடின், தாமதத்திற்கான காரணம் (பிரிவு 32(2)):-.............................................
19. இதே கருமம் தொடர்பாக ஆணைக்குழுவிடம் முன்னர் ஏதேனும் மேன்முறையீடு கோரப்பட்டதா?
20. வேறு ஏதேனும் தகவல் (தகவலுக்கான கோரிக்கை ஒரு பிரசையின் வாழ்க்கை மற்றும் சொந்தச் சுதந்திரம் தொடர்பானதா என்பது உள்ளடங்களாக):-...................................
21. இணைக்கப்பட்ட ஆவணங்களின் பட்டியல்:-....................................................

திகதி:.............................................

ஒப்பம்:..........................................

**RTI 01**

தகவலுக்கான கோரிக்கையை மேற்கொள்வதற்கு இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்தல் ஒரு கட்டாயமான தேவைப்பாடு அல்ல என்பதையும் கோரப்பட்ட தகவல்களை அடையாளம் காண்பதற்கு அவசியமான தகவல்களுடன் ஏதேனும் எழுத்திலான கடிதம், மின்னஞ்சல் அல்லது வாய்மொழி மூலமான கோரிக்கை போதுமானது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

**தகவல்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்**

தகவல் அலுவலர்,

**01.** கோரிக்கையாளரின் பெயர் - .......................................................

**02.** முகவரி – .................................

**03.** தொலைபேசி இல. (ஏதேனும் இருப்பின்) -..............................

**04.** மின்னஞ்சல் முகவரி (ஏதேனும் இருப்பின்) - ...................

**05.** கோரப்படும் தகவல்கள் பற்றிய விபரங்கள் (போதிய இடம் காணப்படாவிடில் வேறு தாளில் இணைக்கவும்

I. குறித்த பகிரங்க அதிகாரசபை ....................................

II. கோரப்படும் தகவல்கள் ..................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

III. தகவல் கோரப்படும் குறித்த காலப்பகுதி (பொருத்தமாயின்) .................

**06.** தகவல் கோரப்படும் விதம்(தேவையற்றதை வெட்டிவிடவும்)–

i. சம்பந்தப்பட்ட வேலையை, ஆவணங்களை, பதிவுகளைப் பரிசோதித்தல்

ii. ஆவணங்கள் அல்லது பதிவுகளிலிருந்து குறிப்பெழுதுதல், பிரித்தெடுத்தல் அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்

iii. பொருட்களின் சான்றுப்படுத்தப்பட்ட மாதிரிகளைப் பெறுதல்

iv. அத்தகைய தகவல் ஒரு கணனியில் அல்லது ஏதேனும் வேறு சாதனத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பின், தகவலைப் பெறுவது CD/DVD/ஊடக களஞ்சியம் / பதிவு நாடாக்கள் / வீடியோ கெசற்றுகள் / ஏதேனும் வேறு இலத்திரனியல் வடிவம் /அச்சுப் பிரதிகள்

**07.** வேண்டுகோளை மேற்கொள்பவர் தகவலைப் பெற விரும்பும் மொழி -...........................

**08.** கோரப்படும் தகவல் பிரஜை ஒருவரின் வாழ்க்கை அல்லது சொந்தச் சுதந்திரம் தொடர்பானதா? (ஆம்/இல்லை)

ஆம் எனில், நம்பிக்கைக்கான காரணத்தைத் தருக. -

...............................................................................................................

..........................................................................................................................................................

**09.** வேறு ஏதேனும் விபரங்கள்- .........................................................

**10.** சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன (ஏதேனும் இருப்பின்)

I. ................................

II. .................................

III. .................................

**11.** கோரிக்யையாளர் ஓர் இலங்கைப் பிரஜையா? (ஆம்/இல்லை)

திகதி: -

ஒப்பம்:-

**RTI 02**

**ஏற்பு**

திரு./திருமதி/செல்வி ............................................ பதிவிலக்கம்: ......

கோரிக்கை கிடைத்த திகதி: .........

2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமை சட்டத்தின் பிரிவு 24(3)இன் கீழ் தங்களின் ……………………… ஆம் திகதிய பின்வரும் தகவலைக் கோரும் தகவல் கோரிக்கை கிடைக்கப்பெற்றுள்ளதை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.
கோரப்படும் தகவல்: ...............................................

தங்கள் கோரிக்கை பற்றிய எமது தீர்மானம் 14 நாட்களுக்குள் தங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

மேலும் தகவல்களுக்கு, வேலை நேரங்களில் பின்வரும் அலுவலருடன் தொடர்புகொள்ளவும். தொடர்புகொள்ளும்போது உங்கள் கோரிக்கை தொடர்பாக வழங்கப்பட்டுள்ள பதிவிலக்கத்தைக் குறிப்பிடவும்.

தகவல் அலுவலரின் பெயர்: .................................
பதவி: ...............................................

திகதி: .............
அலுவலகம்: ............
தொலைபேசி இலக்கம்: : ...................
மின்னஞ்சல்: ........................

**RTI 03**

## தகவல் கோரிக்கைகள் பதிவு

| பதிவு இல. | விண்ணப்பித்த திகதி | கோரிக்கையாளரின் பெயரும் முகவரியும் | தொலை. இல. | தகவலின் வகை (சுருக்கமாக) | சட்டத்தின் பி. 27(3)இன் கீழ் தகவல் கோரும் விதம் | கடிதம் கிடைத்த திகதி | தீர்மான கடிதத்தின் திகதி | கட்டணம் | தகவல் வழங்கிய திகதி | தகவல் மறுக்கப்படின் RTI படிவம் 05இன் திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

**RTI 04**

## தகவல் வழங்குவதற்கான தீர்மானம்

கோரிக்கையின் பதிவு இலக்கம்:- ....................
கோரிக்கை கிடைத்த திகதி: ............................
பகிரங்க அதிகார சபையின் பெயர்: .................

01. தங்களின் …………………ஆம் திகதிய …………………ஆம் பதிவிலக்கத்தைக் கொண்ட விண்ணப்பத்தின் மூலம் சட்டத்தின் பிரிவு 25(1)இற்கு இணங்க கோரப்பட்ட தகவலை / தகவலின் ஒரு பகுதியை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். (தகவலின் ஒரு பகுதியை மாத்திரம் வழங்குவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பின், தகவல் அதற்கான காரணங்களை விபரமாகவும் பிரிவு 5இன் எந்த வாசகத்தின் / வாசகங்களின் கீழ் விதிவிலக்கு மேற்கொள்ளப்பட்டது என்பதையும் விளக்குதல் வேண்டும்)

02. கீழே விபரிக்கப்பட்ட காரணங்களினால் RTI சட்டத்தின் பிரிவு 5(…..) இன் கீழ் தகவலின் பின்வரும் பகுதிகள் விலக்களிக்கப்பட்டவையாகக் கருதப்படுவதால் அவற்றை வழங்காமல் இருப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்:
...................................................................................................

03. தகவல்களை வழங்குவதற்காக அதற்கு அவசியமான கட்டணம் ரூபா. …………….வை காசாக, வங்கி உண்டியலாக அல்லது கொடுப்பனவுக் கட்டளையாக அல்லது தபால் கட்டளையாக அல்லது தபால் முத்திரையாக எமது அலுவலகத்தில் செலுத்தவும்.

04. கோரப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி 14 நாட்களுக்குள் தகவல்களை நாம் வழங்குவோம். தகவலை வழங்குவதற்கான காலப்பகுதிக்கு ஏதேனும் நீடிப்பு தேவைப்படின், அதையும் அதே காலப்பகுதியினுள் நாம் (காரணங்களுடன்) தெரிவிப்போம்.

05. 4 ஆவது பந்தியில் குறிப்பிட்டவாறு தேவையான தகவல்கள் உங்களுக்கு கிடைக்காவிடின் அந்தக் காலம் முடிவடைந்து இரண்டு வாரங்களுக்குள் உங்களுக்கு கீழ்க் குறிப்பிட்ட பெயர் விலாசமுடைய அலுவலரிற்கு RTI10 விண்ணப்பப் படிவத்தின் மூலம் அல்லது கடிதத்தின் மூலம் மேன்முறையீடு செய்யலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

குறித்தளிக்கப்பட்ட அலுவலர்-

பெயர்: ........
பதவி:.............
முகவரி: .............
தொடர்புகொள்ளுவதற்கான விபரங்கள் ......................

தங்கள் உண்மையுள்ள,

......................
தகவல் அலுவலர் (ஒப்பம்)
பெயரும் பதவியும்

திகதி :

**RTI 05**

### தகவல் கோரிக்கை நிராகரிப்பு

பதிவிலக்கம்:-....................
கோரிக்கை கிடைத்த திகதி: .....................
பகிரங்க அதிகார சபை: ............................

தங்களின் ………………….ஆம் திகதிய ……………………….ஆம் இலக்க தகவலுக்கான கோரிக்கை சட்டத்தின் பிரிவு 5……….இன் பிரகாரம் விலக்களிக்கப்பட்டுள்ளதால் / தகவல் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளதால் / அல்லது அது எம்மிடம், எமது கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இல்லாத காரணத்தினால் அதனை நிராகரிப்பதற்குத் தீர்மானித்துள்ளோம் என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல் ஏற்கனவே வெளியிடப்பட்டிருப்பின் அதனை நீங்கள் ……………………………இல் பெற முடியும்.
மேலே உள்ள வாசகத்தை / வாசகங்களை நம்புவதற்கான தீர்மானத்தை நியாயப்படுத்தும் காரணங்கள்:
I. ..............................................................................................................................................

.....................................................................................................................................................

II. ...........................................................................................................................................

.....................................................................................................................................................

(தேவைக்கேற்றவாறு மேலதிகமாக இடத்தை அல்லது மேலதிக பக்கங்களைச் சேர்க்கவும்)

நீங்கள் சட்டத்தின் பிரிவு 31(1) அல்லது 25(7)இன் கீழ் இந்தத் தீர்மானத்துக்கு எதிராக அல்லது சட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட கால வரையறைக்கு இணங்கி ஒழுகவில்லை என்னும் அடிப்படையில் பின்வரும் அலுவரிடம் 14 நாட்களினுள் மேன்முறையீடொன்றை மேற்கொள்ளலாம். இந்நோக்கத்திற்காக நீங்கள் RTI 10 படிவத்தைப் பயன்படுத்தலாம். எனினும், இந்தப் படிவம் கட்டாயமானதல்ல. படிவத்தில் கோரப்பட்டுள்ள தகவல்களை நீங்கள் வழங்கினால் போதுமானது.

குறித்தளிக்கப்பட்ட அலுவலர்-

பெயர்: ........
பதவி:.............
முகவரி: .............
மின்னஞ்சல்: ......................

தங்கள் உண்மையுள்ள,

......................
தகவல் அலுவலர் (ஒப்பம்)
பெயரும் பதவியும்

திகதி:-

**RTI 06**

திரு. /திருமதி/ செல்வி. .....................

பதிவிலக்கம்:-................
கோரிக்கை கிடைத்த திகதி: .....................
பகிரங்க அதிகார சபை: .............................

**தகவல்களை வழங்குவதற்கான கால எல்லை நீடிப்பு**

நாம் உங்களுக்கு அனுப்பிய ……………….ஆம் திகதிய RTI 04 தொடர்பாக,

தங்கள் …………………….ஆம் திகதிய …………………..ஆம் பதிவிலக்கத்தைக்கொண்ட விண்ணப்பத்தின் ஊடாக கோரிய தகவல்களை வழங்குவதற்கு நாம் தீர்மானித்தபோதிலும், கீழே தரப்படும் காரணங்களால் எமது ஆரம்பக் கடிதத்தில் விதித்துரைக்கப்பட்ட 14 நாட்களினுள் எம்மால் தகவல்களை வழங்க முடியாதுள்ளதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம். எனவே, நாம் தகவல்களை வழங்குவதற்கான காலப்பகுதியை …………………. (முடிவுத் திகதி) வரை நீடிக்கின்றோம்.

நீடிப்புக்கான காரணம் / காரணங்கள்:-
.....................................................................................................................................................
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

இந்த நீடிப்பு தொடர்பாக நீங்கள் திருப்தியடையாவிட்டால், நீங்கள் பின்வரும் அலுவலருக்கு 14 நாட்டிகளினுள் மேன்முறையீடு செய்யலாம்.

குறித்தளிக்கப்பட்ட அலுவலர்-

பெயர்: ........
பதவி:............
முகவரி: ............

தங்கள் உண்மையுள்ள,

......................
தகவல் அலுவலர் (ஒப்பம்)
பெயரும் பதவியும்
தொடர்பு விபரங்கள் (தொலைபேசி மற்றும் மின்னஞ்சல்)

**RTI 07**

திரு. /திருமதி/ செல்வி. .....................

பதிவிலக்கம்:-................
கோரிக்கை கிடைத்த திகதி: .....................
பகிரங்க அதிகார சபை: .............................

**2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமை சட்டத்துக்கு இணங்க**

தாங்கள் ………………… (தகவல் வழங்கிய திகதி) ஆம் திகதி எமக்கு வழங்கிய அந்தரங்கத் தகவல் தொடர்பாக ………………ஆம் திகதி அந்தத் தகவலை / தகவலின் ஒரு பகுதியை வழங்குமாறு கோரிக்கை ஒன்று எமக்குக் கிடைத்துள்ளது.

**கோரப்பட்ட தகவல்**

………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………

கோரப்பட்ட தகவலை / தகவலின் ஒரு பகுதியை வழங்குவதற்கு தாங்கள் உடன்படுகின்றீர்களா இல்லையா என்பதை தயவு செய்து 7 நாட்களுக்குள் எமக்கு எழுத்தில் அறியத்தரவும். தகவலின் ஒரு பகுதியை மாத்திரம் வெளியிடுவதற்கு தாங்கள் உடன்படின், தகவலின் எந்தப் பகுதியை வெளியிடக்கூடாது என விரும்புகின்றீர்கள் என்பதை அத்தகைய தகவல் ஏன் வெளியிடப்படக் கூடாது என்பதற்கான விபரமான விளக்கத்துடன் தெளிவாக எமக்கு அறிவிக்கவும்.

தங்கள் தீர்மானம் 7 நாட்களினுள் எனக்குத் தெரிவிக்கப்படாவிடின், சட்டத்தின் பிரிவு 29(2)இன் கீழ் கோரப்பட்ட தகவலை நாம் வழங்குவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கோரப்பட்ட தகவல் முழுவதையும் அல்லது தகவலின் ஒரு பகுதியை வெளியிடுவதற்கான தங்கள் ஆட்சேபனையைப் பொருட்படுத்தாது,தகவலைக் கோருபவரினால் மேற்கொள்ளப்படும் மேன்முறையீட்டின் அடிப்படையில் வெளிப்படுத்தாமையின் தனிப்பட்ட கரிசனையை விட தகவலை வெளியிடுதல் முக்கியமானது எனRTI ஆணைக்குழுதீர்மானிப்பின், இறுதியில், கோரப்பட்ட தகவலை வெளியிடுமாறு அது எம்மைப் பணிக்கலாம் என்பதை தயைகூர்ந்து கவனத்தில் கொள்ளவும்.

.......................... (ஒப்பம்)
தகவல் அலுவலர்
பெயரும் பதவியும்

தொலைபேசி இலக்கம்: ...................
மின்னஞ்சல்: ........................

**RTI 08**

திரு. /திருமதி/ செல்வி. .....................

மேன்முறையீட்டு இல.: ......................
கோரிக்கை கிடைத்த திகதி: .....................
பகிரங்க அதிகார சபை: .............................

**2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமை சட்டத்திற்கிணங்க**

தங்கள் மேன்முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

தங்களின் ……………………ஆம் பதிவிலக்கத்தைக் கொண்ட தகவலுக்கான கோரிக்கை தொடர்பாக தகவல் அலுவலரின் தீர்மானத்துக்கு எதிரான சட்டத்தின் பிரிவு 31(1)இன் கீழ் தங்களால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடு எமக்குக் கிடைத்துள்ளது.

உங்கள் மேன்முறையீடு,………………….ஆம் திகதிய ………………….. பதிவிலக்கத்தைக் கொண்ட மேன்முறையீடாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக, ஒரு மேன்முறையீடு தொடர்பான தீர்மானம் மேன்முறையீடு கிடைக்கப்பெற்று 3 வாரங்களினுள் மேற்கொள்ளப்படும் எனக் கூறும் சட்டத்தின் 31(3)ஆம் பிரிவின்பால் தங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றோம்.

விசாரணைக்காக தாங்கள் சமுகமளித்தல் அவசியம் எனக் கருதினால், தாங்கள் சமுகமளிப்பதற்கான நேரத்தையும் திகதியையும் நான் அறியத்தருவேன்.

இதன் பின்னர், இந்த மேன்முறையீடு தொடர்பாக எம்முடன் தொடர்புகொள்ளும்போது அல்லது மேலும் விபரங்களை வழங்கும்போது மேலே தரப்பட்ட மேன்முறையீட்டு இலக்கத்தைக் குறிப்பிடவும்.

தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்)
குறித்தளிக்கப்பட்ட அலுவலர் (பெயரும் பதவியும்)
தொலைபேசி இலக்கம்: ...................
மின்னஞ்சல்: ........................

**RTI 09**

**2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமை சட்டத்திற்கிணங்க**

**மேன்முறையீட்டுப் பதிவு**

| மேன் முறை யீட்டு இல. | மேன்முறை யீட்டுத் திகதி | மேன்முறை யீட்டாளரின் பெயரும் முகவரியும் | தொலை பேசி இல. | மேன்முறை யீடு ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதி | முதலாவது மேன்முறையீட்டின் பதிவிலக்கம் | காரணங்கள் | காரணங்களை வழங்கும் கடிதத் தின் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

**RTI 10**

**குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கான மேன்முறையீடு**

குறித்தளிக்கப்பட்ட அலுவலர்,

...............................................................

....................................................................

பகிரங்க அதிகார சபை:......................

**மேன்முறையீட்டுப் படிவம்**

O1. மேன்முறையீட்டாளரின் பெயர்: ......................................

02. முகவரி: .........................

03. தொலைபேசி இலக்கம் (ஏதேனும் இருப்பின்) : ................................

04. மின்னஞ்சல் முகவரி (ஏதேனும் இருப்பின்): ......................................

05. தகவல் அலுவலரிடம் கோரிக்கை மேற்கொள்ளப்பட்ட திகதியும் பதிவிலக்கமும்: ............................................

06. தகவல் அலுவலரிடமிருந்து தங்களுக்கு ஒரு பதில் கிடைத்ததா? ஆம் / இல்லை: .................

(ஆம் எனில், தங்களிடம் ஒரு பிரதி இருப்பின் அதனை இணைக்கவும்; இன்றேல், பதிலின் விபரங்களை வழஙங்கவும்)

07. மேன்முறையீட்டுக்கான அடிப்படை:

i. தகவலுக்காக கோரிய விண்ணப்பத்தை தகவல் அலுவலர் மறுத்தல்
ii. பிரிவு 5இன் கீழ் அத்தகைய தகவல் வழங்குவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது என்னும் அடிப்படையில் தகவல் அலுவலர் தகவலை அணுகுவதற்கு மறுத்தல்
iii. சட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட கால வரையறைக்கு இணங்கி ஒழுகாமை
iv. தகவல் அலுவலர் பூர்த்தியற்ற, தவறாக இட்டுச் செல்லும் அல்லது பொய்யான தகவலை வழங்கியுள்ளார்
v. தகவல் அலுவலர் மேன்மிகையான கட்டணத்தை விதித்துள்ளார்
vi. தகவல் அலுவலர் தகவலை கோரப்பட்ட வடிவத்தில் வழங்குவதற்கு மறுத்தல்
vii. கோரிக்கையாளர் தகவலை அணுகுவதைத் தவிர்ப்பதற்காக தகவல் உருக்குலைக்கப்பட்டுள்ளது, அழிவடையச் செய்யப்பட்டுள்ளது அல்லது தவறாக இடப்பட்டுள்ளது என நம்புவதற்கு நியாயமான ஏதுக்களை தகவலைக் கோருபவர் கொண்டிருத்தல்
viii. 14 நாற்கள் முடிவடைந்து மேலதிக காலம் வேண்டுவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

விபரங்கள்:

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

08. கோரப்பட்ட தகவல் பற்றிய சுருக்கமான விபரம்: ............................

09.குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மேன்முறையீடு மேற்கொள்ளப்படாவிடின், தாமதித்திற்கான காரணம் [பிரிவு. 31(5)]:

10. ஏதேனும் வேறு விபரங்கள்: ..........................

திகதி: ................................................

ஒப்பம்:

**RTI 11**

## கோரிக்கைகளை நிராகரித்தல் பதிவு

| பதிவு இல. | விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | RTI 05இன் திகதி | குறித்தளிக்கப்பட்ட அலுவலரின் தீர்மானம் | நிராகரிக்கப்பட்ட திகதியும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையும் | 2ஆம் மேன்முறையீட்டின் மீதான RTI ஆ.குழுவின் தீர்மானம் | நடவடிக்கையும் திகதியும் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

**RTI 12**

## தகவல் அலுவலர்களின் விபரம்

| திணைக்களத்தின் பெயரும் அலுவலகமும் | தகவல் அலுவலரின்/ குறித்தளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் | பதவி | உத்தியோகபூர்வ முகவரி | தொலைபேசி இல. |
|---|---|---|---|---|
| | | | | |

…………………………………………
நிறுவனத் தலைவர் (அலுவலரின் பெயர்)
இலச்சினை


තොරතුරු දැනගැනීමේ අයිතිවාසිකම සම්බන්ධයෙන් ඔබට අවශ්‍ය ඕනෑම තොරතුරක් පිළිබඳව සහය වීමට අප සූදානම්!

ක්ෂණික ඇමතුම්

## තොරතුරු සහය මධ්‍යස්ථානය

**011-30 30 463**

(සතියේ දිනයන්හි පෙ.ව. 9.00 සිට ප.ව. 5.00 දක්වා)




தகவல் அறியும் உரிமை பற்றி உங்களுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் தொடர்பாகவும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு நாங்கள் தயார் !

உடனடித் தொடர்புகளுக்கு

## தகவலுக்கான உதவிப் பணியகம்

**011-30 30 463**

(வாரநாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 5.00 மணி வரை)

CPA
Centre for Policy Alternatives
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

ISBN 978-955-4746-95-4